தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1979 ஏப்ரல் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) இரங்கற் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. அப்பாவுத் தேவர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. அப்பாவுத் தேவர் அவர்கள் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. அப்பாவுத் தேவர் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம், சாலியமங்கலம் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அன்னார் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

(2) வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

சேலம் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் எழுத்தர்களது சம்பளம்.

* குறுகிய கால வினா எண் 53— திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச்சங்கங்களில் பணிபுரியும் எழுத்தர்கள் அனைவருக்கும் ஒரே சீரான சம்பள விகிதம் தேவையென கடந்த ஆறு மாத காலமாகக் கோரிக்கை வைக்கப்பட்டு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதுபற்றி என்ன முடிவெடுக்கப்பெற்றது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) எல்லாச்சங்கங்களுக்கும் பொதுவாக என்று இல்லாமல் ஒவ்வொரு சங்கத்தின் ஊழியர்களின் சம்பள விகிதங்களை அதனதன் நிதி நிலைக்கேற்ப மாற்றியமைப்பது பற்றி பரிசீலிக்கப்படுமென்று சேலம் மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நிதி நிலைக்கு ஏற்றவாறு எனபதைவிட மாநில ரீதியிலே கூட்டுறவுச் சங்கங்களிலே பணிபுரியக்கூடிய எழுத்தர்களுக்கு ஒரே சீரான சம்பளத்தைக்கொடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராம நாணயச் சங்கம் என்பது சட்ட ரீதியாக, சுதந்திரமாக இயங்கக்கூடிய தனிப்பட்ட அமைப்பு. அதே நேரத்தில் அங்கே துணை விதிகள் இருக்கின்றன. அந்தச் சங்கங்கள்தான் அந்த நிதி ஆதாரங்களைக் கவனிக்க வேண்டிய காரணத்தாலே அந்தப் பணியாளர்களுடைய ஊதியங்களை அவர்கள்தான் நிர்ணயிக்க வேண்டிய அந்தப் பிரத்யேகமான கடமை இருக்கிற காரணத்தால் அந்த நிலைமையை உருவாக்க முடியாத நிலையில் அரசு இருக்கிறது.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு இணங்க கணக்கிட்டுப் பார்த்தால் ஒவ்வொரு சங்கத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஒவ்வொருவிதமான சம்பளத்தைப் பெறுகிறார்கள், குறிப்பாக பல இடங்களில் 80 ரூபாய், 100 ரூபாய், 150 ரூபாய் என்ற அடிப்படையில்

[1973 ஏப்ரல் 24]

சம்பளம் பெறுகிறார்கள், அந்த நிலையை வைத்துக் கொண்டால் அச் சங்கத்தின் பணி செம்மையாக நடைபெறாது. ஆகவே, மாநில அளவில் முடியவில்லை என்று சொன்னாலும், மாவட்ட அளவில் மத்திய வங்கி லாபகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த லாபத்தைக் கணக்கிட்டு அந்த ஊழியர்களுடைய சம்பளத்தை நிர்ணயிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை முறையில் அணுகினால் கிராம கூட்டுறவு நாணயச் சங்கத்தினுடைய தனித்தன்மை சிதறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கு ஏற்பவும், அந்தந்தச் சங்கங்களில் இருக்கக் கூடிய துணை விதிகளுக்கு ஏற்பவும் அங்கு பணிபுரியக் கூடிய ஊழியர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகம் முழுவதிலும் கிராம கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக் கூடிய ஊழியர்களுக்கு ஒரே மாதிரியான, ஒரே சீரான வகையில் சம்பள விகிதத்தை நிர்ணயிப்பதற்கு அரசு பரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே உறுப்பினர் கேள்வியில் இதற்கு விடை இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. கோதண்டராமன அவர்களுடைய கருத்தோடு ஒட்டித்தான் நீங்களும் கேட்டிருக்கிறீர்கள்........

திரு. மு. அம்பிகாபதி: அவர்களுடைய கருத்தும் என்னுடைய கருத்தும்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொன்னதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நினைத்துத்தான் சொன்னேன்.

திரு. மு. அம்பிகாபதி: திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய கருத்தும் என்னுடைய கருத்தும் ஒன்றாகத்தான் இருக்க முடியும். நாங்கள் இருவருமே ஒரே ஜாதி.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய கருத்து, திரு. அம்பிகாபதி அவர்களுடைய கருத்து, கூட்டுறவுத் துறை அமைச்சருடைய கருத்து, தமிழக

அரசினுடைய கருத்து இவைகள் எல்லாம் உழைக்கும் வர்க்கத்தின ருடைய கருத்து என்ற முறையில் ஒரே கருத்தாகத் தான் இருக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு. செ. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூட்டுறவுச்சொசைட்டிகளில் பை-லா இருப்பதாகச்சொன்னார்கள். ஆனால் பாநிலம் முழுவதற்கும் பொருந்தக் கூடிய வகையில் ஒட்டு மொத்தமாக ஒரு மாடல் பைலாவைப் போடலாம். அதன் மூலம் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்து, நல்ல (ஃப்ளரிஷிங்) வளமுள்ள கூட்டுறவு சங்கங்களில் வேண்டு மென்றால் ஊதியம் அதிகமாகக் கொடுக்கலாம். ஆகவே இந்த அடிப்படையில் ஒரு குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு கிருஷ்ணன அவர்கள் சொன்னது போல் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு குறைந்த பட்சம் 250 என்றும், உயர்ந்த பட்சம் 500 வரையிலும் அவர் களுக்குக் கொடுக்கலாம் என்று ஏற்கெனவே விதி இருக்கிறது. அதே நேரத்தில் அந்தந்தச் சங்கங்களுக்குப் போதுமான அளவில் இருக் கின்ற நிதி ஆதாரத்தையும் பொறுத்து ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவேண்டும் என்று அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட கூட்டுறவு கிராம நாணயச்சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை 4—2—79 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னாலும், அரசிடமும் தெரிவித்திருக்கிறார்கள். 4—2—79 ல் உண்ணாவிரதம் இருந்தார்கள். இந்த சங்கங்களில் எல்லாம் இதுவரை தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது. இதன் காரண மாக இந்த சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் எழுத் தர்களுக்கும் நல்ல முறையில் ஊதியம் கொடுக்கக்கூடிய முறையில் லாபம் கிடைக்கவில்லை. காரணம் நல்ல முறையில் கடன் வழங்கப்படவில்லை. கடன் வசூலும் சரியாக நடைபெறவில்லை. எங்கள் பகுதியில் இன்னும் இரண்டொரு சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெறவில்லை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சி. பழனிமுத்து : தேர்தலை தள்வாப்பட்டி கூட்டுறவுச் சங்கம் நடத்த வேண்டும் என்று இரண்டு மாதமாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னும் தேர்தல் நடத்தவில்லை.

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனையை அரசு எடுத்துக் கொண்டு விரைவில் தேர்தல்களை நடத்த ஆவன செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு 250 ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற ஆலோசனையை சொல்லியிருப்பதாக சொன்னார்கள். வெறும் ஆலோசனை மட்டும் கூறுவதால் எந்த விதமான பிரயோசனமும் இல்லை. 100 ரூபாய்க்கும் குறைவாக பல சங்கங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறது. ஆகவே எந்த வகையிலும் குறைந்த பட்சம் 250 ரூபாய் ஊதியமாக கொடுக்கவேண்டும் என்று மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் வருமானம் வளரும் போது, பணியாளர்களுடைய ஊதிய உயர்வும் வளரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதோடு அந்த வருமானம் பெருகுவதற்கு அங்கே இருக்கின்ற ஊழியர்களும் மற்றவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச்சங்கங்களில் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். இப்படி நியமனம் செய்யும்போது, எம்ப்லாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து லிஸ்ட் பெற்று எந்தப் பணியாளர்கள், நியமிக்கப்படுகிறார்கள். பிரசிடெண்ட் எந்தெந்தப்பணியாளர்களை நியமிக்கின்றார்கள், அவர்களுக்கு எந்தெந்த பணியாளர்களை நியமிக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, ஒரு பக்கம் 250 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை ஊதியம் கொடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. அதே நேரத்தில் நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் கொடுத்து வருகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றக் கூடியவர்கள் கூட்டுறவு டிரெயினிங் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். பலர் கிராஜுயட்டாகவும் இருக்கிறார்கள். ஆகவே இவர்களுக்கு குறைந்த பட்சம் ரெகுலர் எம்ப்ளாயிஸ்களுக்கு கொடுக்கப்படு

கின்ற ஊதியத்தின் அடிப்படையில், நிதி ஆதாரத்தைப் பார்க்காமல் குறைந்தது 250 ரூபாயாவது அவர்களுடைய தேவையின் அடிப்படையில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல் அவர்களுடைய ஊதிய நிர்ணயத்தை அங்கே இருக்கின்ற துணை விதியிலே தனித் தன்மை இருக்கின்ற காரணத்தினால், அந்த அடிப்படையிலே தான் இந்த ஊதிய நிர்ணயம் செய்யப் படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன.

கலைவாணர் அரங்கம்.

குறுகிய கால வினா எண் 54— திரு. கே. பண்ணை சேதுராம் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலைவாணர் அரங்கத்தில் கடந்த 1976-ம் ஆண்டுக்கு முன் அதன் ஆண்டு வரவு செலவு எவ்வளவு? 1976-க்குப்பின் அதன் வரவு செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கலைவாணர் அரங்கத்தில் 1976-ம் ஆண்டுக்கு முன்னும் பின்னும் அதன் ஆண்டு வரவு செலவு கீழே தரப்பட்டுள்ளது.

நிதி ஆண்டு.		வரவு.	செலவு.
		ரூ.	ரூ.
1974-75	..	3,02,096·00	2,96,537·00
1975-76	..	3,92,642·00	3,45,389·00
1976-77	..	4,94,716·00	5,41,520·00
1977-78	..	6,05,166·00	5,95,608·00
1978-79	..	7,46,789·00	4,85,693·00

1979 ஏப்ரல் 24]

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரைக்கும் படிப்படியாக வரவு அதிகமாகிக் கொண்டு வந்திருக்கின்றது. 1974ஆம் ஆண்டு 1975 ஆம் ஆண்டுகளில் இந்த வரவு மூன்று இலட்சம் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்? அதோடு, இந்திப் படங்களோ அல்லது இந்தி நிகழ்ச்சிகளோ இந்த கலை அரங்கில் நடத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1974, 1975 ஆண்டுகளில் ஏன் வரவு குறைந்திருக்கின்றது என்ற காரணத்தை இந்த அரசு சொல்ல முடியாது. அதற்குப்பிறகு தான் நிர்வாகத்தைச் சீரமைக்கின்றமுறையிலே சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. கட்டணமும் மாற்றப்பட்டிருக்கிறது. அதனால் கடந்த ஆண்டு ரூ. 7,46,789 வரவு வந்திருக்கிறது. ரூ. 4,85,693 செலவுஏற்பட்டு லாபத்தை அடைந்திருக்கிறது. அதைத் தவிர, இந்தி படங்கள் முன்னாலே திரையிட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது இந்தி படங்களுக்கு திரையிட நிறைய அரங்குகள் இருக்கின்ற காரணத்தாலும், இது குழந்தைகள் திரைப்படத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், கூடுமானவரை முதலில் தமிழ்ப் படங்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்ற நிகழ்ச்சிகள், இந்தி நிகழ்ச்சியா, தமிழ் நிகழ்ச்சியா என்றில்லாமல், எல்லா சமூக நிகழ்ச்சிகளையும் நிகழ்த்துகின்ற முறையிலே ஒதுக்கப்படுகின்றது.

வடாற்காடு மாவட்டத்தில் காகித தொழிற்சாலை.

*வினா எண். 784— திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப்பகுதியில் விளைகின்ற மூங்கிலை மூலப் பொருளாகக் கொண்டு ஒரு காகித தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால், ஜவ்வாது மலையில் ஏராளமாகக்கிடைக்கின்ற மூங்கிலைக் கொண்டு பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே. ஜவ்வாது மலையில் ஆண்டு ஒன்றுக்கு 1,000 டன் மூங்கில் தான் கிடைக்கின்றது, அது காகித ஆலை நிறுவுவதற்குப் போதாது, மேலும். ஜவ்வாது மலையில் கிடைக்கும் மூங்கில் மிகவும் குறைந்து விட்டதால், அந்த மலையில் மூங்கில் வெட்டுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது, ஆகவே, இதை வைத்து தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு சாத்தியம் இல்லை,

Declaring Maraimmalai Nagar as industrially backward area.

* Q. No. 785 –Thiru K. ABDUL LATHEEF ; Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Maraimalai Nagar near Madras has been declared as industrially backward area; and

(b) if so, the details there of?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) & (ஆ) மத்திய அரசால் மறைமலை நகர் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படவில்லை, ஆனால் மாநில அரசு தொழிலில் பின்தங்கிய பகுதிகளுக்கு அளிக்கப்படும் கீழ்க்கண்ட சலுகைகளை மறைமலை நகரில் தொடங்கப் பெறும் தொழில்களுக்கு அளிக்கின்றது :—

(1) வட்டியில்லா விற்பனை வரிக்கடன்,

(2) தண்ணீர் உரிமைக் கட்டணத்தில் சலுகை,

(3) மின்சக்தி கட்டணச் சலுகை,

(4) சிப்காட்டால் வழங்கப்படும் சலுகை கடன்கள்,

Issue of pattas in Ayyanambakkam Village

*Q. No. 786—Thiru SALAEM M. ARUMUGAM ; Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(a) whether the Housing Colony for Harijans initiated by the Rotary Club of Madras at Ayyanambakkam Village near Thiruverkadu in Chengalpattu district has been withheld for non-issue of pattas: and

(b) if so, the details thereof?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : (அ) இல்லை,

(ஆ) இவ் வினா' எழாது.

திரு. சி. கோவிந்தராசன் : அயனம்பாக்கம் என்ற இடத்தில் அரிமா சங்கத்தின் மூலம் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1978 ஜனவரி மாதம் 7 ஆம் தேதி மாவட்ட கலெக்டர் தலைமை வகித்து ஆளுநர் அவர்களால் பவுண்டேஷன் ஸ்டோன் போடப்பட்டிருக்கிறது, $4\frac{1}{2}$ ஏக்கர் நிலம்; அரிசனங்கள் அதற்கு அப்ளை பண்ணியிருக்கிறார்கள், அவர்களுக்கு நிலத்தை அசைன் பண்ணாத காரணத்தால் ஸ்டேட் பாங்கு லோன் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அது குறித்த வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்த நிலத்தை அவர்களுக்கு அசைன் பண்ண அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : யாருக்கு நிலத்தைக் கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றி சிபாரிசு செய்கிறபோது ஒரு குடும்பம் என்று சொல்லுகிறபோது ஐந்து உறுப்பினர்கள் உள்ளது. அவர்களுடைய மொத்த வருமானம் வருஷத்திற்கு 2,400 ரூபாய்க்குமேல் போகக் கூடாது, ஐந்து பேருக்கு மேல் உள்ள குடும்பத்தில் வருஷ வருமானம் 3,000 ரூபாய்க்குமேல் போகக்கூடாது. ஆகையால் இலவசமாகக் கொடுப்பதா கொடுக்கக் கூடாதா என்பதை முடிவு செய்ய வருமான விவரங்கள் கிடைக்கவில்லை. விவரம் கிடைத்தவுடன் அவர்களுக்குக் கொடுப்பது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

வணிகவரி பற்றிய கைவார் குழுவின் அறிக்கை.

* வினா எண். 787 — திரு. எஸ்.ஜே. இராமசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வணிகவரி சம்பந்தமாய் வரி விதிப்பில் மாறுதல் செய்யவோ வரி விதிப்பில் கூடுதல் செய்யவோ திரு. கைவார் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டத்தில் ரிப்போர்ட் அரசுக்கு வந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் சட்டப்பேரவை முன் வைக்கப்படுமா?

[1979 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : (அ) ஆம்,

(ஆ) இல்லை, கைவார் கமிட்டி அறிக்கையின் நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன,

திரு. க. மருதாசலம் : கைவார் தலைமையில் அமைக்கப் பட்ட குழு எந்த ஆண்டில் அமைக்கப்பட்டது? அந்தக் குழுவில் யார் யார் இருக்கிறார்கள்? அதனுடைய ரிப்போர்ட்டை ஏன் அரசுக்குத் தரவில்லை,

மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம் : கைவார் கமிட்டி அறிக்கை தரப்பட்டு விட்டது. அதிலே எஸ்.ஆர். கெய்வார். சேர்மன் உறுப்பினர்களாக எஸ்.பி. சீனிவாசன். ஐ.ஏ.எஸ்., என், கிருஷ்ணசாமி. ஐ. பி. எஸ்,. ஏ. ஆர். தாமோதரன், கே. மாயாண்டி ஆகியோர் இருந்தனர்,

தூத்துக்குடி கிடங்கில் சங்குகள் இருப்பு,

*வினா எண். 788—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தூத்துக்குடி அரசு சங்கு கிடங்கில் எவ்வளவு சங்குகள் விற்கப்படாமல் தேங்கிக் கிடக்கிறது?

(ஆ) நடப்பாண்டில் இதுவரை விற்கப்பட்ட சங்குகளின் விலை மதிப்பு எவ்வளவு?

(இ) விற்கப்படாத சங்குகளை விற்பனை செய்ய அரசு எடுத்துள்ள முயற்சி யாது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) தூத்துக்குடி அரசு சங்கு கிடங்கில். 31-3-1978-ம் தேதியன்று 19,93,303 சங்குகள் தேங்கிக் கிடந்தன,

(ஆ) நடப்பாண்டில். 28-2-1979 முடிய விற்கப்பட்ட சங்குகள் மொத்தம் 13,23,494. அவைகளின் மதிப்பு ரூ. 24,58,124.77,

(இ) தூத்துக்குடி ஸ்ரீமுருகன் சங்குத் தொழிற்சாலைக்கு மாதந்தோறும் 15,000 சங்குகள் விற்பனை செய்யப்படுகிறது. இந்து சமய ஆலயங்களுக்கு அவ்வப்போது அவைகளின் தேவை களின் பேரில் சங்குகள் விற்பனை செய்யப்படுகிறது. தவிர, பொது ஏலத்தில் விற்க, தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம்

1979 ஏப்ரல் 24]

செய்தும், முக்கிய சங்கு வியாபாரிகளுக்கு நேரடியாக தகவல்கள் அளித்தும் சங்குகளை விற்பனை செய்ய முயற்சிகள் செய்யப் படுகிறது,

திரு. ந. தனசேகரன் : விற்கப்பட்ட சங்குகள் போக மீத முள்ள சங்குகள் தரமாக இருக்கின்றனவா? தரமாக இல்லாத காரணத்தால்தான் வியாபாரிகள் வரவில்லை என்று சொல்லப் படுகிறது. அப்படி இருக்கும் காரணத்தால் 'ஆக்ஷன் சேல்' என்ற முறையைப் பயன்படுத்தி பழைய சங்குகளைக் கழித்து விட்டு இப்போது பிடிக்கும் புதிய சங்குகள் தரமாக இருக்கும் காரணத்தால் அதை இருப்பில் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : விற்பனை செய் யும்போது தரம் பிரித்துத்தான் விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு தரத்திற்கும் ஏற்ப தனிப்பட்ட முறையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆகவே, வாங்குபவர்கள் தரத் தைப் பார்த்துத்தான் வாங்குகிறார்கள்.

திரு. செ. சிவசாமி : தூத்துக்குடி கொடவுனில் இருந்து பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சங்குகள் கடத்தப்பட்டு புதிதாக அந்த இடத்தில் நல்ல சங்குகளுக்குப் பதிலாக சொத் தை ஓட்டைச் சங்குகளை வைத்திருப்பதாகக் கேள்வி. உண்மை நிலைமை என்ன?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விப்படுகிறோம் என்று சொல்வதைவிட தவறு நடந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டு வார்களானால் நான் பலமுறை இந்த மன்றத்திலே சொல்லியிருக் கிறேன். தவறு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். கேள்விப்படுகிறோம் என்று சொல்வதை வைத்துக் கொண்டு எப்படி நடவடிக்கை எடுக்கமுடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள்.

திரு. ந. தனசேகரன் : தலைவர் அவர்களே, மீதம் இருக்கிற சங்குகளைக் கழிப்பதற்காக நடவடிக்கை எடுத்து அரசு ஏலம் விடுமா என்று நான் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. அப்படிக் கழிப்பதன் மூல மாகத்தான் இப்போதுள்ள உருப்படியான சங்குகளை இருப்பில் வைக்க முடியும். இப்போது பிடிக்கின்ற சங்குகளை கம்ப்ரஸர்கள் வைத்துப் பிடிக்கின்ற முறையை அரசு கொண்டுவர ஆவன செய்யுமா? சங்கு தொழிற்சாலையை அரசின் தரப்பிலே ஏற்படுத்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, கம்ப்ரஸர்களை வைத்து சங்கு குளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அதைப்பற்றி அரசு இப்போது ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. தரத்தைப் பற்றிப் பேசினார்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஒவ்வொரு தரத்திற்கும் ஒவ்வொரு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. சில குறைந்த தரம் உள்ள சங்குகளைக் கோடவுன்களில் தேக்கி வைத்துவிட்டு நல்ல சங்குகளை விற்பனை செய்வது என்றால் குறைந்த தரம் உள்ள சங்குகளை-சங்கு குளிப்பவர்களின் நலன் கருதி வாங்குகிற காரணத்தினாலே துறைக்குப் பெருத்த நட்டம் ஏற்படலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இப்போது பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சங்குகள் தமிழ்நாட்டில் ஒரு சில வியாபாரிகளிடம் மட்டுமே விற்பனை செய்யப்படுவதாக அறிகிறேன். ஈழை நாடுகளிலே அரசாங்கம் ஒரு தனி கம்பெனியை உருவாக்கி சங்கு வாங்குகிறார்கள்—அங்கே இதற்கு கிராக்கி அதிகமாக இருக்கின்ற காரணத்தால்—விற்பனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இரண்டாவதாக, இங்கே கைப்பற்றப்பட்ட வலம்புரி சங்கின் விலை என்ன? அது எங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, இங்கே கைப்பற்றப்பட்ட அந்த வலம்புரிச் சங்கு மிகப் பத்திரமாக இருக்கிறது. அதைக்கூட நம்முடைய அமைச்சரவை கூட்டம் நடைபெறுகின்ற மண்டபத்திலே வைக்கலாமா என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டு இருக்கிறோம். ஆகவே அது பத்திரமாகத்தான் இருக்கிறது. சில கம்பெனிகளுக்கு மட்டும் தான் விற்பனை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். யாருக்கு விற்றாலும் டெண்டர்கேட்டுத்தான் விற்பனை செய்யப்படுகிறது, அரேபியா போன்ற நாடுகளுக்கு ஏன் விற்கக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். மேற்கு வங்காளத்திலே இதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது. அவர்களுக்குத் தேவையான சங்குகளையே நம்மால் சில நேரங்களிலே கொடுக்க முடியவில்லை.

உணவுப் பொருள்களின் விலை.

*வினா எண். 789—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திடீரென்று உணவுப் பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: (அ) அறுவடை இல்லாத காலத்தில், அத்தியாவசியப் பண்டங்களின் சில்லரை விலைகள் சற்று உயர்ந்து காணப்படுவது இயல்பு. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போது வெளிச்சந்தையில் புளி, பருப்பு வகைகள் ஆகியவற்றைத் தவிர, மற்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் குறைந்து காணப்படுகின்றன.

(ஆ) பருப்பு வகைகள், புளி ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்ய நாம் பிற மாநிலங்களையே நம்பியிருக்கிறோம். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகள் மூலம் மக்களுக்கு வழங்குவதற்காக தமிழ்நாடு உணவுப்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச்சங்கங்களும், பருப்பு, புளி ஆகியவற்றை வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாநில மத்திய பட்ஜெட்டுக்குப் பிறகு மார்ச் முதல் கொண்டு திடீரென்று 5 சதவீதம் விலைவாசி உயர்ந்துள்ளது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதன் காரணமாகத்தான் காய்கறிகள் முதல்கொண்டு சகலவிதமான உணவுப் பொருட்களுடைய விலைவாசிகளும் உயர்ந்துவிட்டிருக்கின்றன, ஹோட்டல்களில் டிபன், சாப்பாடு எல்லாவிதமான பொருட்களின் விலைகளையும் உயர்த்திவிட்டார்கள். அதைப் பற்றி அமைச்சர் அவர்களேகூட வருத்தப்பட்டுப் பேசினார்கள். விலைவாசிகளை உயர்த்தியிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் என்.ஜி.ஓக்களும் ஆசிரியர்களும் மற்றவர்களும் போராடுகிறார்கள். ஆகவே விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுத்தது உண்டா? எடுக்கப் போகிறார்களா? இல்லை எடுத்திருக்கிறோம் விரைவில் அது தீர்க்கப்படும் என்று சொல்லாமல் திட்டவட்டமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியுமா 2

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீண்ட கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் கேட்பதற்கு நீங்கள் அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, நீண்ட பதிலையும் சொல்ல வேண்டிய இக்கட்டான நிலையிலே நான் இருக்கிறேன். விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா, அல்லது எடுக்கப்போகிறதா, அல்லது எடுக்கும், என்று தட்டிக்கழிக்குமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் வெளியிலே அரசியல் மேடைகளிலே பேச வேண்டியதை, இந்த மன்றத்திலே பேசுகிறார் என்றுதான் நான் கருதுகிறேன். இன்றைய தினம் விலைவாசிகள் எவ்வளவோ கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன இதற்கு முந்தைய ஆண்டுகளில் உள்ள புள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் திருப்பிப் பார்ப்பார்களானால், பல்வேறு அத்தியாவசியப் பண்டங்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், உடனே, அது அரசாங்கத்தினுடைய முயற்சியால் அல்ல, விளைச்சல் அதிகமாகி விட்டது. ஆகவேதான், விலைவாசி குறைந்திருக்கிறது என்கின்றவாதத்திற்குக்கூட அவர்கள் வருவார்கள். இன்றையதினம் அரிசி விலை குறைந்திருக்கிறது. இன்னும், மற்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் கடந்த ஆண்டு, அல்லது அதற்கு முந்தைய ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஓரளவு குறைந்திருக்கிறது என்பது உண்மை. அரசின் முயற்சிகள் காரணமாகத்தான் அந்த விலைகள் குறைநதிருக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

சில பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது எனறால், அவைகள் இங்கே உற்பத்தி செய்யப்படுவதில்லை. உதாரணத்திற்கு, புளி, பருப்பு வகைகள் விலை இன்றையதினம் உயர்ந்திருக்கிறது. இந்த மாநில மக்களுடைய முழு தேவைக்கேற்றவாறு இந்த மாநிலத்திலே அந்தப் பண்டங்கள் விளைவதில்லை. பிற மாநிலங்களிலேயிருந்து நாம் வாங்கி விற்பனை செய்ய வேண்டிய நிலையிலே இருக்கிறோம். புளியைப் பொறுத்தமட்டில், இந்த மாநிலத்திற்குத் தேவைப்படும் அளவிலே, மிகவும் குறைந்த அளவுதான் இங்கே விளைகிறது. ; கர்நாடக மாநிலத்திலேயிருந்து, குறிப்பாக, தும்கூர் போன்ற பகுதிகளிலேயிருந்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது ; ஆந்திர மாநிலத்திலேயிருந்து வாங்க வேண்டிய நிலைமையிருக்கிறது.

ஏன், வாங்கிவிற்கவில்லையென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பார்களானால், கடந்த ஆண்டு ஆந்திர மாநிலத்திலே, வீசிய புயலின் காரணமாக, விளைச்சல் குறைவாகஇருந்தது. ஆகவே, அங்கேயும் விலை கூடுதலாக இருக்கிறது. பருப்பு போன்ற பண்டங்கள் வட மாநிலங்களிலேயிருந்து வருகின்றன. இதனால், சந்தை நிலவரத்திற்கேற்ப நாம் வாங்கி விற்க வேண்டிய நிலையிருக்கிற காரணத்தால்தான் விலை ஏறியிருக்கிறதே தவிர, கட்டுப்படுத்த எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை யென்பது சரியல்ல ; தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதுதான் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விதான் பெரியதாகக் கேட்க அனுமதி தந்தேன் என்றால், பதில் கூடவா பெரியதாக அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும் ?

திரு. வீ. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது விலைவாசியை ரொம்பக் கட்டுப்படுத்தி இருப்பதாகவும் சொன்னார்கள். நான் கேட்கிறேன், மண்ணெண்ணெய் விஷயத்திலே இன்றையதினம் எந்த அளவுக்கு மக்கள் அவதிப்படுகிறார்கள் ? இந்தியன் ஆயில் கம்பெனி, இதுவரை எந்த அளவு கொடுத்து வந்ததோ, அந்த அளவு

1979 ஏப்ரல் 24]

கொடுக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், அமைச்சர் அவர்கள் பொறுப்பிலுள்ள சிவில் சப்ளைஸ் இலாகா, பாதி எண்ணெயை வினியோகம் செய்து விட்டு, பாதியைப் பதுக்கி வைக்கிறார்கள்—பதுக்கல் என்று சொல்லவில்லை. தேக்கி வைக்கிறார்கள். இதனால் பொது மக்கள் அவதிப்படுவதோடு, நமக்குக் கிடைக்க வேண்டிய எண்ணெயே கிடைக்காத அளவு அமைச்சரவர்கள் செய்கிறார்கள் என்று ஏன் சொல்லக்கூடாது? ஆகவே, முழுக்க, முழுக்க, வினியோகம் செய்யக்கூடிய அளவுக்குச் செய்ய வேண்டுமென்பது மட்டுமல்ல, இதன் விளைவாக சென்ற மாதம் குடும்பம், குடும்பமாகத் தற்கொலை செய்து கொண்டு, மாண்டு வருகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைப் போக்கக்கூடிய வகையில், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதோடு, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இருக்கிறதே, அதைத் தடுக்க என்ன முயற்சி செய்வார்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர் நீண்ட நேரம் கேள்வி கேட்பதற்கு அனுமதி கொடுத்து விட்டு, என்னை நீண்ட நேரம் பதில் சொல்லக் கூடாது என்று சொல்வது உண்மையிலே எனக்கு வருத்தத்தைத் தருகிறது. அதுவும் கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகள் இருக்கக் கூடாது என்று இருக்கிறது. நான் உண்மையிலே மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு சொல்லத்தான் இருக்கிறார்கள் சிவில் சப்ளைஸ் மூலமாக, இன்றையதினம், வினியோகம் செய்யப்படுகிறது; சென்னையிலே நூற்றுக்கணக்கான கடைகள் மூலமாக வினியோகம் செய்யப்படுகிறது. அன்றாடம் என்ன நடக்கிறது என்பதை அதிகாரிகள் எந்த நாளும், எந்த நேரமும் கவனித்துக் கொண்டு இருக்க முடியாது, அமைச்சரும் கவனிக்க முடியாது. ஆகவே, தவறுகள் நடக்கும்போது, அந்தக் குற்றங்களைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிறது.

(முற்பகல் 9-30)

அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரத்தோடு கொண்டு வரப்படுமேயானால் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற உத்தரவாதத்தை நான் பலமுறை தந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் மண்ணெண்ணெய் வினியோகத்தில் தவறு நடைபெறுகிறது என்று மட்டும் சொல்லாமல், பதுக்கப்படுகிறது, மண்ணெண்ணெய் கொடுக்கப்படாமல் மறைத்து வைக்கப்படுகிறது என்று மட்டும் சொல்லாமல், தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஊழியர்கள் வேலை செய்யும் கடைகளில் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன என்று நிரூபிப்பார்களேயானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். குறிப்பிட்டு சென்னையில் எந்த சிவில் சப்ளை கார்ப்பரேஷனைச் சேர்ந்த

எந்த கடைகளில் பதுக்கல் செய்கிறார்கள், அளவு குறைவாகக் கொடுக்கிறார்கள் என்று சொல்வார்களேயானால் நான் நிச்சய மாக நடவடிக்கை எடுப்பேன். இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த கூத்தகுடி சண்முகம் அவர்கள் கூட என்னிடம் நேற்று ஒரு புகாரைக் கொடுத்தார்கள். அளவு போட்டிருக்கிறது ஆனால் ரசீதியிலே விலை இல்லை என்று சொன்னார்கள். நான் உடனே இன்று மாலைக்குள் அந்த கடைக்காரர் மீது நடவடிக்கை எடுத்து லைசென்ஸ் பறிக்கப்படும் என்று சொல்லி கொடுக்க வேண்டிய மண்ணெண்ணெயை வேறு கடையில் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்வதாக, அதை இன்று மாலைக் குள் செய்து முடிப்பதாக உத்திரவாதத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.

பொதுவாக தவறுகள் நடக்கிறது என்று தெரிவிப்ப தற்குப் பதிலாக இன்னென்ன கடைகளில் இன்னென்ன தவறுகள் நடக்கின்றன என்று தெரிவித்தால் அவர்களுக்கும் நல்லது. ஆட்சி நடத்துபவர்களுக்கும் நல்லது, அனு பவிக்கின்ற பொதுமக்களுக்கும் நல்லது என்று எடுத்துச் சொல்லி மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டிற்கு மாநில அரசு காரணம் அல்ல, அதற்கான முழு பொறுப்பும் மத்திய அரசைச் சார்ந்தது, அண்மையில் நாகர்கோவிலில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது பிரதம மந்திரி அவர்கள் ஒத்துக்கொண்டி ருக்கிறார்கள் என்பதையும் அந்தக் கேள்விக்குப் பதிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மண் ணெண்ணெய் குறைவுக்கு மாநில அரசு காரணம் அல்ல மத்திய அரசுதான் காரணம் என்பது சரி. ஆனால் வினியோகம் பண்ணுகிற பொறுப்பு மாநில அரசைச் சேர்ந்தது தானே, அதைச் சரியாகச் செய்கிறார்களா என்றுதான் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் பிரச்னையைப் பொறுத்த வரையில் இந்த அவையில் ஒரு மணி நேரம் விவாதம் நடந்திருக் கிறது. பதில் அளிக்கையில் பேசியிருக்கிறேன். இதுபற்றி தீர் மானம் கொண்டு வந்தபோதுகூட அதைப் பற்றி பேசியிருக் கிறேன். மண்ணெண்ணெய் வினியோகம் அரசினுடைய கண் காணிப்புக்கு வருகிறது என்றால் முழு வினியோகமும் இந்த அரசினுடைய பொறுப்பில் இருக்க வேண்டும். மத்திய அர சாங்கம் பொறுப்பெடுத்துக்கொண்டு ஐ.ஓ.சி., எச்.பி., பி.பி. போன்ற பெட்ரோலியம் நிறுவனங்களுக்கு அவர்கள் இங்கே லைசென்சுகள் தருகிறார்கள். அவர்கள் மொத்த வியாபாரி

1979 ஏப்ரல் 24]

களுக்கு கொடுக்கிறார்கள். மொத்த வியாபாரிகள சில்லரை வியாபாரிகளுக்கு, அவர்களே அந்த வியாபாரிகளையும் நிர்ணயம் செய்து கொடுக்கிறார்கள். மாநில அரசுக்கு லைசென்சு கொடுக்கிற உரிமைதான் இருக்கிறது. விநியோகம் செய்கிற உரிமை எங்களுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து குரல் கொடுக்காதீர்கள். நிறைய உறுப்பினர்கள் கையைத் தூக்கியிருக்கிறார்கள். கேள்வி கேட்க விரும்புகிறவர்கள் கையை மட்டும் தூக்கினால் போதும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்து வர வேண்டிய சில பொருள்களின் விலைதான் சற்று ஏறியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால் மற்ற பொருள்களின் விலையைப் பொறுத்தவரையில் குறைந்திருக்கிறது என்று தானே பொருள். சமீபத்தில் மத்திய அரசு பட்ஜெட்டில் 688 கோடி ரூபாய்க்கு வரி போட்டதன் விளைவாக விலைவாசி எல்லாப் பொருள்களுக்கும் ஏறியிருக்கிறது. காஸ்ட் ஆப் லிவிங் இன்டெக்ஸ் உயர்ந்திருக்கிறது. மத்திய சர்க்கார் பார்லிமெண்டிலேயே அட்மிட் பண்ணியிருக்கிற போது, இந்தியா பூராவும் அந்த பட்ஜெட்டரி லெவீஸ்பிரைஸ் இன்கிரீஸில் கொண்டு விட்டிருக்கிறது என்கிறபோது தமிழ்நாட்டிலே மட்டும் அப்படி இல்லை என்று கூறுகிறார்களா, இல்லை என்று சொன்னால் எந்த அளவுக்கு அவருடைய கணிப்பு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்திய சர்க்காராலே இப்பொழுது புதிதாகப் போடப்பட்டிருக்கிற வரிகளாலே சில அத்தியாவசிய பண்டங்களின் மீது வரிப் போடப்பட்டு விலைவாசிகள் ஏறியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். நான் அவர்களுக்கு திரும்பவும் சொல்லிக் கொள்வது

என்னவென்றால் கடந்த ஆண்டு இருந்த விலைவாசியையும், அதற்கு முந்திய ஆண்டு இருந்த விலைவாசிகளையும் இப்பொழுது இருக்கிற விலைவாசியையும் ஒப்பிட்டுப்பாருங்கள். இந்த மாநிலத்திற்குள்ளேயே உற்பத்தி செய்யப்படுகிற அத்தியாவசிய பண்டங்களின் விலை ஓரளவிற்கு குறைந்திருக்கிறது என்பது புரியும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், விவசாயிகளுக்கு மிகவும் அத்தியாவசிமான டீசல் கிடைப்பது இல்லை. எங்கே பார்த்தாலும் தட்டுப்பாடாக இருக்கிறது. அதைச் சீர்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது விலைவாசியைப் பொறுத்த கேள்வி. இந்தக் கேள்வி எங்கேயோ போய், அத்தியாவசியப் பண்டங்களில் இருந்து மண்ணெண்ணெய்க்குப் போய் இப்போது டீசலுக்கு வந்து குதித்து இருக்கிறது. டீசலைப் பொறுத்த வரையில் தட்டுப்பாடு இருப்பதற்கான காரணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இப்போது மத்திய அரசாங்கம் கடந்த ஆண்டு எவ்வளவு டீசல் கொடுத்தார்களோ அந்த அளவிற்குத் தான் டீசல் கொடுக்கிறார்கள். ஆண்டுக்கு 12 சத வீதம் அவர்கள் கூட்டி டீசல் கொடுக்க வேண்டும். அதாவது, முந்திய ஆண்டு இந்த மாதத்தில் எந்த அளவிற்கு டீசல் கொடுத்தார்களோ, அதற்கு 12 சத வீதம் கூட்டி இந்த மாதம் இந்த ஆண்டில் டீசல் கொடுக்க வேண்டும். ஆனால், இந்த ஆண்டு 12 சதவீதம் கூட்டிக் கொடுக்கவில்லை. கடந்த ஆண்டு இந்த மாதத்தில் எவ்வளவு .கொடுத்தார்களோ அவ்வளவுதான் இந்த மாதம் இந்த ஆண்டில் கொடுத்து இருக்கிறார்கள். டீசல் அளவு குறையாமல் கொடுத்தாலும் வழக்கமாகக் கொடுக்கும் அளவிற்கு இப்போது கொடுக்கவில்லை என்று தமிழக அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டியிருக்கிறது. இன்னொன்று, மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தால் பம்ப்செட் வைத்து மின்சாரம் செய்கிறவர்களும் இந்த டீசல் வேண்டும் என்று கேட்கிற காரணத்தால் சிறிது டீசல் அவர்களுக்

1979 ஏப்ரல் 24]

கும் கொடுத்த காரணத்தால், தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இவற்றையெல்லாம் சமாளிக்கும் முயற்சியை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது.

Information Centre at Tamil Nadu House, New Delhi.

*Q. No. 790—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(a) whether the Government propose to open an information Centre at Tamil Nadu House in New Delhi; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஆர், எம். வீரப்பன் :

(அ) & (ஆ) : புது டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் ஒரு நூலகம் அமைக்கலாம் என்ற கருத்து வெளியிடப்பட்டது. ஆனால், அரசு அந்தக் கருத்தினை இன்னும் பரிசீலிக்கவில்லை.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் என்னென்ன தமிழ் செய்தித்தாள்கள் வைக்கப்படுகின்றன? அங்கே இருக்கும் இரண்டு வாகனங்கள் அங்கே செல்லும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுவது இல்லை. எப்போதும் அதிகாரிகளிடத்தில் தான் இருக்கிறது. நானே அனுபவப்பட்டு இருக்கிறேன். அதனால் தான் கேட்கிறேன். இப்படி அதிகாரிகளின் ஆட்சி அங்கே நடந்து கொண்டு இருக்கிறது. இது தமிழ்நாடு அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? வாகனங்கள் மன்ற உறுப்பினர்கள் பயன்படுத்த கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் விரிவாகப் பதில் சொல்வார்கள்.

[1979 ஏப்ரல் 24

திருத்தணி சுப்ரமணிய சுவாமி கோவில்.

* வினா எண். 791— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி சுப்ரமணிய சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நகைகளில் மோசடி செய்யப் பட்டதாக அரசுக்கு அண்மையில் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) சென்ற வருடம் ஏப்ரல் மாதம், முன்னாள் அறங்காவலர் ஒருவரிடமிருந்து புகார் ஒன்று அரசுக்கு வந்தது.

(ஆ) வந்த புகார் குறித்து விசாரணை செய்ய அரசு முடிவெடுத்து, விசாரணையை வருவாய் வாரிய உறுப்பினர் ஒருவரிடம் ஒப்படைத்திருக்கிறது. தேவைப்பட்ட சாட்சிகளை விசாரிக்கவும், சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலிக்கவும் அவருக்கு சட்ட ரீதியாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழக ஆலயங்களில் இருக்கும் ஆபரணங்கள் பண்டைய வரலாற்றையும், கலாசாரத்தையும் நமக்கு உணர்த்தும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. திருத்தணி கோவிலுக்கு ஏற்பட்ட கதி மற்ற கோவில்களில் உள்ள நகைகளுக்கு ஏற்படாமல் தடுக்க அரசு என்ன வழிவகைகளைக் கையாண்டு வருகிறது? ஒவ்வொரு கோவில்களில் உள்ள ஆபரணங்களையும் நகைகளையும் போட்டோ எடுத்து அதன் ஒரு நகலை அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்திலும், மற்ற ஒன்றை கோவிலிலும் வைத்து, அதன் மூலம் அந்த நகைகளைப் பாதுகாக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்து சமய அறநிலையத் துறை மானிய விவாதத்தின்போது கூர்ந்து கவனித்து இருந்தால் இதற்கு விடை அப்போதே கிடைத்து இருக்கும். அப்போதே அது பற்றித் தெரிவித்தேன். ஆலயங்களில் உள்ள ஆபரணங்கள், சிலைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கத்தக்க வகையில் வழிவகைகளை இந்த அரசு முறையாக அமல் நடத்திக் கொண்டு இருக்கிறது. திருத்தணியில் நடைபெற்றதுபோல் என்று சொல்லியிருக்கிறார்கள். திருத்தணியில் என்ன நடைபெற்றது என்பதற்கு விசாரணை

1979 ஏப்ரல் 24]

போடப்பட்டு இருக்கிறது. அந்த விசாரணை முடிந்து, முடிவு தெரிகிற வரையில் அங்கே என்ன நடந்தது என்று குற்றஞ்சாட்டுவது அவ்வளவு சரியாக இருக்காது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே திருத்தணி சுப்பிரமணியசுவாமி கோவிலில் நகைகளில் மோசடி செய்யப்பட்டதாகக் கேள்வி கேட்கப்பட்டு இருக்கிறது. அங்கே நிர்வாக அதிகாரியாக இருந்தவர் அந்த நகைகளை இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அனுமதி பெறாமலேயே உருக்கியதாகவும் சொல்கிறார்கள். அப்படி ஒருவரையும் கேட்காமலேயே அவர் செய்த அந்தச செய்கைக்கு ஏன் துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவுதான், விசாரணைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் விசாரணை செய்து கொண்டு இருக்கிறார். விசாரணையில் இருக்கும் ஒரு விஷயம் பற்றி கேள்வி கேட்பதும், பதில் சொல்வதும் அவ்வளவு உகந்ததாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, திருத்தணி கோவிலில் நகை மோசடி செய்யப்பட்டதைப்போல தமிழ்நாட்டில் வேறு எந்தெந்த கோவில்களில் மோசடி செய்யப்பட்டிருக்கிறது? பைம்பொழில் குமாரசாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த தங்க நகைகள் காணாமல் போய் விட்டதாக நிர்வாக அதிகாரி புகார் செய்திருக்கிறாரா? அரசுக்கு அதுபற்றிய தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் முன்னால் சொல்லியதைப்போல 'திருத்தணி கோவிலில் நகை மோசடி நடைபெற்றதை போல, திருத்தணி கோவிலில் மோசடி செய்யப்பட்டதைப் போல, என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அது விசாரணையில் இருக்கிற விவகாரம் என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன், விசாரணை முடிவு தெரிந்த பின்னால்தான் என்ன நடந்தது என்பது தெரியும். பைம்பொழில் ஆலயத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே ஏதாவது நடைபெற்றிருந்தால் குறிப்பாகச் சுட்டிக் காட்டினால் அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1979 ஏப்ரல் 24

வட ஆற்காடு மாவட்டத்தில் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்.

* வினா எண். 792— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி களில் தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

(இ) அதுபற்றி எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ) மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்யும் பொழுது வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து பணிமூப்பின் அடிப்படையில் பிற மாவட்டங்களுக்கு சிலர் மாற்றம் செய்யப்பட்டனர். அதனால் ஏற்பட்ட காலி இடங்களுக்கு பிற மாவட்டத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்ட சில தலைமை ஆசிரியர்கள பணியேற்காததாலும், சிலர் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு அவர்கள் பணியில் சேராததாலும் சில பணியிடங்கள் காலியாக உள்ளன. தற்பொழுது அந்தந்தப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களில் பணிமூப்பின்படி மூத்தவர்கள் தலைமை ஆசிரியர்கள் பொறுப்பில் இருந்து பணியாற்றி வருகின்றனர்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இப்படித் தலைமை ஆசிரியர்களை நியமனம் செய்யும் போது அந்தப் பணிக்கு அவர்கள் வராமல் இருப்பதற்குக் காரணம் வெகு தூரத்திலுள்ளவர்களை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ளவர்களை கூட நியமனம் செய்கிறார்கள், வடாற்காடு மாவட்டம் அல்லது அதற்கு அருகாமையிலுள்ளவர்களை நியமனம் செய்தால் அவர்கள் அந்தப் பணிகளை ஏற்றுக்கொள்வார்கள். வெகு தூரத்திலுள்ளவர்களை நியமனம் செய்வதால் தலைமை ஆசிரியர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்கள் கூட வராமல் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் இந்த நிலைமை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டம் அல்லது சுற்று வட்டாரத்திலிருந்து மட்டும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்போது தலைமை ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கிற பள்ளிகளில் உடனடியாக அவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களை நியமிக்கும்போது மாநிலம் முழுவதிலிருந்தும் பணி மூப்பின் அடிப்படையில் நியமிக்க வேண்டியிருப்பதால் இந்தப் பிரச்சனை ஏற்படுகிறது. பணி மூப்பின் அடிப்படையில்தான் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டியிருக்கிறது. தற்போது அரசு கல்விதுறை அதிகாரிகளுக்குச் சொலலியிருக்கிற யோசனை, கூடியவரையில் பக்கத்து மாவட்டங்களில் நியமிக்க வேண்டும் ; அதிலும் குறிப்பாக தூரமாக இருந்தால் அப்படிப்பட்ட இடங்களில் ஜூனியர்களைப் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது அந்தப் பதவீ உயர்வு தர முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம் ஏ.' விங்க், பி. விங்க்' இரண்டையும் இணைத்திருக்கிற உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். ஆகையால் பதவி உயர்வுக்குத் தடை இருக்கிறது என்றாலும் பணி மூப்பின் அடிப்படையில் தலைமை ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நெமிலி கிராம உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்.

*வினா எண் 793— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், நெமிலி கிராமத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளியில் 1975–76-ல் தலைமை ஆசிரியர் சம்பள பட்டுவாடாவில் அரசை மோசடி செய்து பணம் பெற்று கையாடல் செய்து எடுத்துச் செல்லப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை மோசடி செய்யப்பட்டது ?

(இ) அந்த ஆசிரியர் தற்போது பணியில் இருக்கிறாரா அல்லது வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ளாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 1975 மே மாதம் முதல் சூலை 1977 முடிய ரூ. 19,172 கையாடல் செய்யப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(இ) தற்காலித பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

[1979 ஏப்ரல் 24

மணம்பூண்டி ஊராட்சியில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி.

* வினா எண் 794—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், மணம்பூண்டி ஊராட்சியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல் நிலைத் தொட்டி கட்டப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் குடிதண்ணீர் வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) மேற்படி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள மேல் நிலைத் தொட்டியின் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— (அ) ஆம்.

(ஆ) ரூ. 34,000.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை விபத்து.

*வினா எண் 795—திரு. ம. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் தேதி அன்று நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் விபத்து நடந்ததில் மரணமடைந்தோர் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் குடும்பத்திற்கு உதவ அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) நெல்லிக்குப்பம் இ. ஐ. டி. பாரி (இந்தியா) லிட். சர்க்கரை ஆலையில் 1979-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் தேதியில் நடைபெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

(ஆ) சென்னை தொழிலாளர் துணை ஆணையர்-2 மற்றும் தொழிலாளர்களின் நட்ட ஈட்டு கூடுதல் ஆணையரிடம், தொழிலாளர் காலஞ்சென்ற திரு. பொன்னுசாமியின் குடும்பத்தினருக்கு நட்ட ஈட்டுத் தொகையாக நிர்வாகத்தினர் ரூ. 23,100-ஐ செலுத்தியுள்ளனர். மேற்பார்வையாளர் காலஞ் சென்ற திரு. சச்சிதானந்தத்தின் ஊதியம் ரூ. 1,000-க்கு மேற்படுவதால். தொழிலாளர்களின் நட்ட ஈட்டுச் சட்டத்தின்படி நட்டஈடு வழங்க இயலாததால் அவரது குடும்பத்தினருடன் இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டில் பொதுவாக தொழிற்சாலைகளில் விபத்துக்களும், மரணங்களும் அதிகமாகி இருக்கிறது என்பதை தொழில் துறை மானியக் கோரிக்கைக் குறிப்புகளில் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் வரும் ஆண்டுகளில் இப்படிபட்ட விபத்துக்கள் தவிர்க்கப்பட எத்தகைய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, 500 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு வேலை செய்யும் தொழிற்சாலைகளில் சேஃப்டி கவுன்சில் என்று வைக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி ஃபேக்டரி இன்ஸ்பெக்டர்ஸ் இன்ஸ்பெக்ஷன் செய்கிறார்கள். எங்கெங்கு விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று அவர்கள் பார்க்கிறார்கள். தொழிற்சங்கத் தலைவர்களும் அதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த விபத்து ஏற்பட்ட உடனே சட்ட மன்றத்தில் நான் கிளப்பியபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய சூப்பிரண்டெண்டிங் இன்ஸ்பெக்டர் ஃபேக்டரிக்குச் சென்று விசாரணை நடத்தி வருகிறார் என்று. அந்த விசாரணையின் முடிவு என்ன ஆயிற்று என்பதை அறிய விரும்புகிறேன்?

அடுத்து சூபர்வைசர் சச்சிதானந்தம் ஒர்க்மேன்ஸ் காம்பென்சேஷன் ஆக்டின் கீழ் வராத காரணத்தால் உயிரிழந்த பிறகும் கூட அவருக்கு உரிய தொகை கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகையால் சட்டத்தின் விதிகள் ஒரு பக்கம் இருந்தாலும் இப்படிப்பட்ட விபத்து நேர்ந்துவிட்ட காரணத்தா அதிலே மேனேஜ்மெண்ட் பொறுப்பு என்ற காரணத்தால் அதி தொகை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்ப அறிய விரும்புகிறேன்?

[1979 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் காஞ்சிபுரம் மேற்பார்வை ஆய்வாளரிடம் இருந்து இன்னும் புலன் விசாரணையினுடைய ரிப்போர்ட் வந்து சேரவில்லை. ஆனால் அந்தத் தொழிலாளரின் குடும்பத்தினருக்கு அதிகத் தொகை கிடைப்பது பற்றி அந்தத் தொழிற்சங்கத் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேனேஜ்மெண்டுடன் பேச்சு வார்த்தை நடத்தி எவ்வளவு அதிகமாக வாங்கிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக வாங்கிக் கொடுக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். அத்தோடு அரசு தரப்பிலேயும் அவர்கள் என்ன உதவியை எதிர்பார்க்கிறார்களோ அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை ஓட்டேரிக் கால்வாய் தூர் எடுப்புப் பணி.

*வினா எண். 796—திரு. சு. பாலன் : மாண்புமிகு வேளாண்மைத் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பி அண்டு சி மில் மத்தியில் ஓடும் ஓட்டேரி கால்வாய் மண் நிரம்பிவிட்டதால் சாதாரண மழை பெய்தாலும் சுற்றிலும் உள்ள பகுதிகளிலும் மழை நீர் தேங்கி வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க அதில் தூர் வாரி இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

ஆம். ஓட்டேரி நல்லாவை அதன் தலைவாயிலிலிருந்து கடைசி வரை சீரமைக்க ரூ. 12·30 இலட்ச ரூபாய் மதிப்பீடு கொண்ட திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வேலை நடைபெற்று வருகிறது.

மாரங்கியரில் தென்பெண்ணை நதிக்கு தடுப்புச் சுவர்

* வினா எண். 797—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்கா மாரங்கியர் கிராமத்தில் தென்பெண்ணை நதிக்கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் உத்தேசம் உண்டா ?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தென் பெண்ணையின் வலது கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் ஏற்கெனவே கட்டப் பட்டுள்ளன. 1977-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் அவை பழுதடைந்தன. அவற்றை சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நீலகிரியில் மலர்க்காட்சி, பழக்காட்சி.

* வினா எண். 798—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊட்டியில் நடைபெறும் மலர்க்காட்சி, குன்னூரில் நடைபெறும் பழக்காட்சி ஆகிய நிகழ்ச்சிகளை அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவரவர்களே, ஊட்டியில் நடைபெறுகின்ற மலர்க் காட்சி, குன்னூரில் நடைபெறும் பழக்காட்சி ஆகிய இரண்டையும் அரசின் சார்பிலே எடுத்து நடத்துகின்ற உத்தேசம் இந்த ஆண்டு முதல்தான் அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இதற்கு முன்பு யார் அதனை நடத்தினார்கள்? அவ்வாறு தனியார்கள் நடத்துகின்ற போது தவறுகள் நடந்திருக்கின்றது என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, கடந்த 1978-ம் ஆண்டு வரையிலும் நீலகிரி விவசாய தோட்டக்கலை சங்கத்தினர் ஆண்டுதோறும் அந்த மலர்க்காட்சியையும், பழக்காட்சியையும் நடத்தி வந்தனர். ஒவ்வொரு ஆண்டிலும் ஏறத்தாழ மலர்க்காட்சி நடத்தியதன் மூலமாக 40 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக இலாபம் கிடைத்துள்ளது. பழக் காட்சி நடத்தியதன் மூலமாக ஏறத்தாழ 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரம் ரூபாய் வரையிலும் அவர்களுக்கு இலாபம் கிடைத்திருக் கிறது. இந்த ஆண்டிலே இருந்து அவற்றை அரசே எடுத்துக் கொள்ளலாமா என்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கடந்த ஆண்டு 1978லே மலர்க்காட்சியைத் திறந்து வைத்த நேரத்தில், மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கு வருகின்ற வருமானம் தனிப்பட்ட ஒரு ஸ்தாபனத்திற்குச் செல் கிறதே, அந்தப் பணத்தை அரசாங்கத்திற்கு வருகின்ற சூழ் நிலையை உருவாக்கக் கூடாதா என்ற கருத்தினைத் தெரிவித்

[1979 ஏப்ரல் 24

தார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இந்த மலர்க் காட்சியையும், பழக்காட்சியையும் நாமே எடுத்து நடத்தலாமா என்று அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

(முற்பகல் 9—50.)

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மலர்க் கண்காட்சிக்கு வருடம் ஒன்றுக்கு எத்தனை பேர்கள் பார்வையாளர்களாக வருகிறார்கள்? கொடைக்கானலில் இந்த மலர்க் கண்காட்சியை நடத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, வருடம் ஒன்றுக்கு ஏறத்தாழ 60,000 பேர்கள் அந்த மலர்க் கண்காட்சியைக் காண வந்திருக்கிறார்கள். பழக் கண்காட்சிக்கு ஏறக்குறைய 12,000-க்கு மேற்பட்டவர்கள் வந்திருக்கிறார்கள். கொடைக்கானலைப் பொறுத்த வரையில் இது போன்ற மலர்க் கண்காட்சி, பழக் கண்காட்சியை ஏற்படுத்தலாமா என்பதை அரசு இனிமேல் பரிசீலனை செய்யும்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, நீலகிரி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் நடத்துவதைபோல், எங்களுடைய வட ஆற்காட்டில் உள்ள ஏலகிரி மலையிலும், சேலத்தில் உள்ள ஏற்காடு மலையிலும் இப்பேர்ப்பட்ட மலர்க் கண்காட்சி,பழக் கண்காட்சிகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏலகிரி மலையிலும், ஏற்காடு மலையிலும் நடத்துவதற்கு, சுற்றுலா பயணிகள் வரக் கூடிய ஸ்தலமாக இருக்குமா என்று ஆராய்ந்து பார்த்து, பிறகு முடிவு எடுக்க முடியும். ஆகவே, அதைப் பார்த்து இதற்கு விடை பின்னால் சொல்கிறேன்.

கிழக்கு இராமநாதபுரத்தில் பனைத் தொழில்கள்.

*வினா எண். 799— திரு. வ.மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கோடிக்கணக்கான பனைமரங்களிலிருந்து கிடைக்கும் மூலப் பொருள்களை உபயோகப்படுத்தும் வகையில் குடிசைத் தொழில் ஏற்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் ஏதேனும் உள்ளதா?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வ. மு. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்தக் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு வங்கியின் மூலம் கடன் பெற்றுத் தர முடியுமா? எத்தனை பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன? அவைகள் எங்கெங்கே என்று சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இப்போது நாம் பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு கடனாகவும், மான்யமாகவும் வங்கியின் மூலமாகவும், கதர் கைத் தொழில் வாரியத்தின் மூலமாகவும் கொடுத்துக் கொண்டு வருகிறோம். உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தை வேறு எங்கெங்கே வைத்திருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். 1977–78ம் ஆண்டு கிட்டத்தட்ட 36 சங்கங்களுக்கு உதவியும், 41 இடங்களில் நிதி உதவிக்கான திட்டங்களை வைத்திருக்கிறோம். அது நீண்ட பட்டியலாக இருக்கிறது. மொத்தம் 77 சங்கங்களுக்குக் கூடுதல் உதவியும் பயிற்சியும் அளித்து வருகிறோம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பனைப் பொருள்களில் இருந்து கிடைக்கும் மூலப் பொருள்கள், அதாவது நுங்கு கெட்டுப் போகாமல் 3 மாதங்கள் வரை வைத்துக்கொள்ள முடியும் என்று மதுரை யூனிவர்சிடியில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படி 3 மாதங்களுக்கு கெட்டுப் போகாமல் வைத்துக் கொள்ளும் முறை கண்டுபிடிக்கப்பட்டால் வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய தன்மையை உண்டாக்க முடியும். அதனால் வருவாயைப் பெருக்க முடியும். ஆகவே, அந்த நுங்கை கெட்டுப் போகாமல் வைத்துக் கொள்வதற்கு ஏதாவது முறை இருக்கிறதா என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பனை நுங்கைப் பாதுகாத்து வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்று அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அது கிடைக்காத காலங்களில், அதைத் திரும்பவும் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்று பனைத் தொழிலாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வழிவகைகளை அரசு செய்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, ஒரு 3 மாத காலம் வரை அந்த நுங்கு கெட்டுப் போகாமல் வைத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. மேலும் நீண்டகாலத்திற்கு வைக்கலாமா என்பதைக் கண்டுபிடிக்க இப்

[* 304—306-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

போது ஆராய்ச்சி செய்து வருகிறோம். நிச்சயமாக அந்த நுங்கை பாதுகாத்து வெளிநாடுகளுக்கு அனுப்பவும், கிடைக்காத காலங்களில் அதைத் திரும்பவும் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதில் அந்தப் பனைத் தொழிலாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க அரசு வழி செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஞானசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் மற்ற எல்லா மாவட்டங்களிலும் உள்ள இந்தப் பனைத் தொழிலாளர்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்வதற்கு இந்த புது முறை ஏன் விஸ்தரிக்கப்படவில்லை என்பதை தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இது மாநில அளவில் இருக்கக் கூடிய பனைத் தொழில்கள் கூட்டுறவு மையத்தின் மூலமாக இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது. விவசாயப் பல்கலை கழகம், மற்ற பல்கலைக் கழகங்கள் மூலமாக அந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். நுங்கு 3 மாதங்கள் வரை கெடாமல் பாதுகாக்க முடியும் என்று ஆராய்ச்சியின் மூலம் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் கூடுதலாக 6 மாதம், 9 மாதம் வரை வைத்துக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றியும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. பிறகு எங்கெங்கே இந்தப் பனைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் அவர்களிடமிருந்து இந்த நுங்கை வாங்கி அவர்களுக்கு கூடுதல் விலை கிடைப்பதற்கான முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, சுமார் 87 சங்கங்களுக்கு நிதி உதவி செய்திருப்பதாக—மாநிலம் முழுவதிற்குமாக—அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ரீதியான விவரம் என்ன என்பதையும், மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்பதையும் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பனையோலையிலிருந்து முடைகிற பாய், மற்றும் பனைப் பொருட்களிலிருந்து உப தொழில்களை ஆரம்பிக்க எல்லா மாவட்டங்களுக்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. மூலக் கேள்வி முகவை மாவட்டத்தைப் பற்றி கேட்டிருப்பதால் இந்த விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. வட ஆற்காடு மற்றும் பிற மாவட்டங்களைப்பற்றியெல்லாம் விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விவரங்களை தெரிவிக்கலாம்.

1979 ஏப்ரல் 24]

பால் பெருக்குத் திட்டங்களுக்கு மத்திய உதவி.

* வினா எண். 800— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79-ல் பால் வளத்தைப் பெருக்கவும் பால்வள நிறுவன மேம்பாட்டிற்காகவும் மத்திய அரசிடம் மாநில அரசு நிதி உதவி கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை* அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது,

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பால்வளத்தைப் பெருக்குவதற்காக அரசு பல திட்டங்களைப் போட்டிருப்பதாக பதிலில் சொல்லப்பட்டிருக்கிறது. அரசு செய்கின்ற உதவிகள் எல்லாம் சரியான முறையில் பயன் அளிக்காமல் இருப்பதற்குக் காரணம் இந்தச் சங்கங்களில் எல்லாம் 70-ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் நடத்தாமல் இருப்பதுதான். இப்போதும் பழைய படியேதான் இருந்து கொண்டிருக்கிறது. பால் உற்பத்தி ஒன்றியங்களில் எல்லாம் ஸ்பெஷல் ஆபீஸர் என்கின்ற தனி அதிகாரிகள்தான் இருந்து வருகிறார்கள். இவையெல்லாம் ஜனநாயக முறையில் நடைபெறவில்லை. இதன் காரணமாக இந்தச் சங்கங்கள் எல்லாம் சீரழிந்து கிடக்கின்றன. ஆகவே, எதிர்காலத்தில் ஜனநாயக முறையில், ஸ்தாபன ரீதியாக இல்லாமல் இருப்பதால் பல கெட்ட பெயர் ஏற்படுகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே கேள்வியை இப்படி நீட்டிக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: ஆகவே இந்த பால் கூட்டுறவு சங்கங்களில் எல்லாம் உடனடியாக தேர்தல்களை நடத்தி, பால் உற்பத்தி யூனியன்களில் இருக்கின்ற ஸ்பெஷல் ஆபீஸர்களை நீக்கிவிட்டு அங்கும் உரிய முறையில் தேர்தலை நடத்துவதற்கு அரசு உடனடியாக ஏற்பாடு செய்வார்களா?

[* 306—311-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பால் பெருக்கு இரண்டாவது திட்டத்தின்கீழ் 8 மாவட்டங்களில் பால் உற்பத்தி ஒன்றியங்கள் அமைக்க வேண்டும் என்று முயற்சி செய்து இப்போது 7 மாவட்டங்களில் ஒன்றியங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. மீதமுள்ள இடங்களில் இதை அமைப்பதற்காக ஃசீப்-ப்ரமோட்டர் என்று ஒருவரைப்போட்டு இதற்கான வழிவகை செய்து கொண்டிருக்கிறார்கள். பழைய முறையிலேயே சப்ளை யூனியன்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டிருக்கிறார்கள். இந்த யூனியன்கள் தனி அதிகாரிகளின் நிர் வாகத்தில்தான் இருந்துகொண்டு வருகிறது. அதற்கெல்லாம் உரிய காலத்தில் தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களால் இந்த யூனியன்நடத்தப் படுவதற்கான சூழ்நிலைகள் விரைவில் ஏற்படுத்தப்படும். பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த ஒன்றியங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. முன்னால் உள்ள யூனியன்கள் அப்படியே இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில் இப்போது ஒரு இலட்சம் லிட்டர் பால் அதிக மாக உற்பத்தி செய்கிறோம். மேலும், 3 இலட்சம் லிட்டர் பால் அதிகமாக உற்பத்தி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு இருக் கிறோம். ஆகவே, உற்பத்தி எந்த விதத்திலும் பாதிக்கப்பட வில்லை. மேலும், ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தி நிர் வாகத்தை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் பால் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு கிடைக்கின்ற பாலிலிருந்து பால்கோவா தயார் செய்து வெளி மாநிலங்களுக் கெல்லாம், இந்தியா முழுவதற்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் டூப்ளிகேட் பால்கோவா தயார் செய்து விற்றுக் கொண்டும் இருக் கிறார்கள். ஆகவே, இதை அரசாங்கமே ஏற்றெடுத்து பால் கோவா தயாரித்து, வெளி மாநிலத்திற்கு அனுப்புவதற்கு ஏற் பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப் பினர் தாமரைக்கனி அவர்கள் திருவில்லிபுத்தூரில் தயாரிக்கப் படுகின்ற பால்கோவா தான் சிறந்தது என்று சொல்லுகிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி சங்கரன்கோவிலில் தயாரிக்கப் படுகின்ற பால்கோவா தான் அனைத்து இந்தியாவிலேயே சிறந்த பால்கோவா என்று கருதப்பட்டு அங்கிருந்துதான் நமது பால்வள நிறுவனமும் வாங்கி விற்பனை செய்து கொண்டிருக்கிறது. திருவில்லிபுத்தூரில் தயாரிக்கப்படும் பால்கோவாதான் சிறந்தது என்றால் அதையும் பால்வள நிறுவனம் வாங்கி அனைத்திந்தியா

1979 ஏப்ரல் 24]

விலுள்ள எல்லா மாநிலங்களுக்கும், முடிந்தால் வெளிநாடுகளுக்கும் பால்வள நிறுவனம் மூலமாக அனுப்ப ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண். 801—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் கழிவு நீர்வெளியே போக குழாய்கள், சாக்கடை வசதிகள் சீரழிந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை சீரமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கழிவுநீர் வெளியே செல்ல தற்போது பெருமளவிற்கு சாக்கடை வசதிகள் செய்யப்பட்டு அவை நகராட்சி சாக்கடைக் குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது நிலைமை சீரமைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பெரிய ஆஸ்பத்திரியாக இருக்கக்கூடிய இந்தக் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீண்ட பல வருடங்களாகவே பி.டபிள்யூ. டிபார்ட்மெண்ட் சார்பில் பழுது பார்க்கப்படாமல், சாக்கடை வசதி ஒழுங்காக இல்லாத காரணத்தினால், அங்கே வரக்கூடியவர்கள் சுகாதாரம் கெட்டிருக்கின்றது என்று சொல்லியும், நானும் நேரடியாக ரிப்போர்ட் சொல்லியும் ரிப்பேர் செய்யப்படாமல் இருந்தது. அமைச்சர் அவர்கள் இப்போது ரிப்பேர் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இருந்தாலும், அமைச்சர் அவர்கள் இந்த ஆஸ்பத்திரியை நேரடியாக ஒரு தரம் பார்த்து, அது இன்றைக்கும் சரியில்லை என்று சொல்வதால், இதிலே, விசேஷ கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் கழிவு நீரைப் பொறுத்த வரையில் அடைப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று அங்கிருந்து குற்றச்சாட்டுக்களும், புகார்களும் வந்தன. அதற்குப் பிறகு பொதுப் பணித் துறையில் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, பெருமளவிற்கு சாக்கடை வசதி செய்யப்பட்டு, இன்றைக்கு அது நகராட்சி சாக்கடையோடு இணைக்கப்பட்டு, இன்றைக்கு நிலைமை சீராக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நகராட்சியினுடைய சாக்கடையோடு, இந்த ஆஸ்பத்திரியின் கழிவு நீர் செல்லும் சாக்கடையை இணைத்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்திலே தான் இந்தத் தகராறே இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில், விசாரித்த வகையில், ஆஸ்பத்திரியினுடைய குழாய் கீழாகவும், நகராட்சி சாக்கடையினுடைய குழாய் போகும் பாதை கொஞ்சம் மேலேயும் இருப்பதால், இந்தத் தண்ணீர் வடிந்து போகாமல், தேங்கி, இந்தத் தகராறு ஏற்படுகின்றது என்று சொல்லப்படுகிறது. அப்பேர்ப்பட்ட நிலைமை இருந்தால், அதுவும் சரி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட அந்த கழிவு நீர்க் குழாயை ரிப்பேர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது அந்தத் தண்ணீர் சரியாக, ஒழுங்காகப் போவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கோவை மருத்துவமனையிலே கழிவு நீரை அப்புறப்படுத்துவதற்கும், அல்லது நோயாளிகளுக்குத் தேவையான குடி தண்ணீரை காலாகாலத்தில் ஒழுங்காக அளிப்பதற்கும் தேவையான ஏற்பாடு இல்லாத காரணத்தினால், கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கு மாறாக, பொதுப்பணித் துறையின் கீழ் இந்த நிர்வாகம் இருக்கின்ற காரணத்தினால், பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டு, காலாகாலத்தில் இந்த ஏற்பாடுகளை முறையாகச் செய்வதற்கு முடியாமல் இருக்கின்றது. இதை நிவர்த்திப்பதற்கு விசேஷ ஏற்பாடு செய்யப்படுமா ?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மருத்துவமனை கட்டிடங்கள் அல்லது இது போன்ற பிரச்னைகளைச் சீரமைக்கும் பணி பொதுப்பணித் துறையின் கீழ் இருக்கின்றது என்பதையும், அதனால் பல்வேறு இடையூறுகள் இருக்கின்றன என்பதையும் இந்த அரசு உணர்ந்து, இந்த இடையூறுகளைக் களைவதற்காக வழிவகைகளைச் செய்வதற்கான தன்மைகளை இன்றைக்கு பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது.

சென்னை நகரில் கொசு ஒழிப்பு.

*வினா எண் 802—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கொசுத் தொல்லையை ஒழிக்க ஏதேனும் தனித் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: கொசு ஒழிப்புத் திட்டம், தேசிய யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம், மற்றும் நகர்ப்புற மலேரியா திட்டத்தின் கீழ் சென்னை நகரில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. மேற் கூறிய திட்டங்களின்கீழ் கீழ்க்கண்ட சிறப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகிறது :—

(1) வளர்ந்த நிலையிலுள்ள கொசுக்களை ஒழிக்க ரூபாய் " 1,30,000 செலவில் 25 மிஸ்ட்பிளோயர்களும் " 25 " ஸ்விங் பாக்ஸ் கருவிகளும் " வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(2) கழிவு நீர் பண்ணை, நீர் நிலைகளில் கொசுவை ஒழிக்க பவர் டில்லர்கள் பயன்படுத்தப்படுகிறது.

(3) கழிவு நீர் குழாய்களை சுத்தம் செய்ய தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) 1978–79-ல் மழை நீர் வடிகால் கட்டுவதற்கு ரூபாய் 39.80 இலட்சமும், கழிவு நீர் வடிகால் கட்டுவதற்கு ரூபாய் 14.70 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) கம்பூசியா என்ற வகை மீன்களை வளர்த்து, கிணறு கள், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் விடும் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : வேலையில்லாத் திண்டாட்டத்தை வறுமையைத்தான் ஒழிக்க முடியவில்லை. இந்தக் கொசுவை யாவது ஒழித்து ஏழை எளிய மக்கள் இரவில் நிம்மதியாகத் தூங்க வழிவகை செய்யப்படுமா? ஜாபர் ஜெட் விமானம் மாதிரி ராத்திரி கொசு பறக்கிறது. அந்தக் கொசுவை ஒழிக்க திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அரசு தீட்டுகின்ற திட்டங்களோடு மாண்புமிகு உறுப்பினர் போன்ற வர்களும், பொதுமக்களும் ஒத்துழைப்புத் தந்து இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்களானால் கொசுவை ஒழிப்ப தில் நாம் வெற்றி காணமுடியும்.

திரு. க. இரா. சின்னராசு : கொசுக் கொல்லி மருந்து அடிக்கிறார்கள். கொசு ஒன்று கூடச் சாவதில்லை. பெரிதாக வளர்ந்து பறக்கிறது. ஆகவே, புதிதாக ஆராய்ச்சி செய்து புதிய கொசுக் கொல்லி மருந்தைக் கண்டுபிடிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் ஏற்கனவே பயன் படுத்தி வந்த கொசு மருந்துகளின் தீவிரத்தை எதிர்க்கும் ஆற்றலை அந்தக் கொசுக்கள் பெற்றுவிட்ட காரணத்தால் இன்றைக்கு அந்த மருந்துகளை மாற்றி அடிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : கொசுவை ஒழிக்க திட்டம் வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு கொசு ஈ போல் பெரிதாக வளர்ந்து கொண்டே போகிறது. சானிடரி ஓர்க்கர்ஸ் இரண்டு மூன்று பேர் வேலை செய்யக் கூடிய இடத்தில் ஒருவர் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை இருப்பதால் இத்தகைய நிலைமை இருக்கிறது. ஆகவே, சானிடரி ஓர்க்கர்சின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி கொசுவை ஒழிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : சானிடரி ஓர்க்கர்ஸ் என்று சொல்லக்கூடிய சுகாதாரப் பணியாளர்கள் எந்தெந்த இடங்களில் குறைவான அளவில் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தேவையான அளவு நியமிப்பதற்கான நடவடிக்கை களை அரசு பரிசீலித்து வருகிறது.

1979 ஏப்ரல் 24]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இப்போது இருக்கின்ற மருந்துகள் தரம் குறைந்திருக்கின்றது. ஆகவேதான் பூச்சி கொல்லி மருந்துகள் பூச்சிகளைக் கொல்லுவதில்லை. கொசு மருந்துகள் கொசுவைக் கொல்லுவதில்லை. ஆகவே, மருந்துகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து 'எபக்டிவ்' ஆன மருந்தைக் கண்டு பிடித்து கொசுக்களை ஒழிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பல்வேறு மருந்துகளைப் பயன்படுத்திய காரணத்தால் அந்தக் கொசுக்கள் மருந்தின் சக்தியைத் தாங்குகின்ற அளவுக்கு வளர்ந்து அவை தன்னுடைய சாவைத் தடுத்துக்கொள்கின்றன. ஆகவே, அந்தக் கொசுக்களைக் கொல்ல ஆற்றல் மிகுந்த மருந்துகளை அரசு தேர்ந்தெடுத்து பயன்படுத்தி கொசுவை ஒழிக்க எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

மணிமுத்தாறு நகரியப் பகுதிக்கு மருத்துவமனை.

*வினா எண் 803—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மணிமுத்தாறு டவுன்ஷிப் ஏரியாவில் அரசு மருத்துவமனை ஒன்று ஆரம்பிக்கு மாறு டவுன்ஷிப் அரசைக் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஏற்கனவே, அந்த டவுன்ஷிப் மீட்டிங்கில் இப்படி ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரசு எந்த நிபந்தனை போட்டாலும் அதை நிறைவேற்றத் தயாராக இருப்பதாகத் தீர்மானம் போட்டிருக்கிறது. அதற்கான இடத்தைக் கொடுப்பதாகத் தீர்மானம் போட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் அரசுக்கு வந்ததா ? அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் உடனடியாக மருத்துவமனையை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, டவுன்ஷிபில் போடப்பட்ட எந்த விதத் தீர்மானமும் அரசினுடைய பரிசிலனைக்கு இதுவரையில் வரவில்லை. அந்த டவுன்ஷிப் நிறைவேற்றிய தீர்மானத்தை அரசுக்கு அனுப்புமானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அந்த டவுன்ஷிப்பில் தீர்மானத்தை நானே எழுதி மருத்துவ இலாகா டைரக்டரிடம் நேரடியாகக் கொடுத்திருக்கிறேன், ஆகவே அதை அரசு பெற்றிருக்கிறதா ? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அது டவுன்ஷிப்பினுடைய அலுவலரிடமிருந்து முறைப்படி வந்தாக வேண்டும்.

திரு. செ. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி டவுன்ஷிப்பிலே கிட்டத்தட்ட நாள்தோறும் 5 ஆயிரம் பேர்கள் புளோட்டிங் பாபுலேஷன் என்ற முறையிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது வேறு. அதற்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

(ஆ) உறுக்குறியிடாத வினாக்கள்.

குளித்தலை அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

வினா 751—திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தின் முன்புறமுள்ள ஓடுகள் கடந்த ஏழு ஆண்டுகளாகப் பிரிந்து கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப் பள்ளிக்கு அண்மையில் மராமத்துப்பணி மேற்கொள்ளப்பட்டு அது முடிவடையும் தறுவாயில் உள்ளது,

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வடாற்காடு மாவட்ட ஒன்றியங்களில் மேநீர் தொட்டிகள்.

வினா 752—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியங்களில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் மேநீர் தொட்டிகள் செப்பனிட்டும் செயல்படாமல் ரிப்பேரில் உள்ளவை எத்தனை

(ஆ) மேலும் மதிப்பீடு போட்டத் திட்டத்தில் உள்ள மேநீர் தொட்டிகள் பிரசர் டாங்கிகள் எத்தனை செயல்படுத்தப் படாமல் உள்ளன, யூனியன் வாரிமாக?

விடை—

(அ) 4.

(ஆ) மேநீர் தொட்டிகள்.

திமிரி		6
திருவண்ணாமலை		1
கீழ்பென்னாத்தூர்		1

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு.

வினா 753—திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க சிறு தொழில்கள் துவங்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்புபவர்கட்கு வியாபாரக் கடன் வசதி அளிக்கும் திட்டத்தின் கீழ் தலா ரூ. 3,000 வீதம் 51 பேர்கட்டு வணிகக் கடன் கொடுத்து மொத்தம் ரூ. 1,53,000 முதலீட்டில் திருவரங்குளம் வட்டார வளர்ச்சி பகுதியில் ஒரு தீப்பெட்டி தொழிற்சாலை ஏற்கடுத்த புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த திட்டம் இன்னும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரீசீலனையில் உள்ளது. இதைத் தவிர, புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் கிராமத்திலேயே இலங்கையிலிருந்து திரும்பிய 18 குடும்பங்கள் அகதிகள் மறுவாழ்வு வங்கி மூலம் நிதி பெற்று, தீப்பெட்டித் தொழிலில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 24]

ஈடுபட்டு, அவர்களாகவே அத்தொழிலை நடத்தி முழுப்பலனை யும் அவர்களே பெறக்கூடிய அளவில், ஒரு திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

சேலம்-கும்பகோணம் விரைவுப் பேருந்துப்பணி.

வினா 754—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

சேலத்திற்கும் கும்பகோணத்திற்கும் இடையே ஆத்தூர், பெரம்பலூர், அரியலூர், ஜெயம்கொண்டம், அனைத்துரை வழியாக விரைவு வண்டி விடக்கோரும் பொதுமக்கள் கோரிக்கை யின் மீது அரசின் முடிவு என்ன?

விடை—

பொதுமக்களின் கோரிக்கை பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினால் பரிசீலிக்கப்பட்டு இத்திடத்தில் மீண்டும் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22.ந் தேதி முதல் விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட்டன. இத்திடத்தில் போதுமான வருவாய் கிடைக்காததால் 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 2-ந் தேதி முதல் தற்காலிகமாக பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. இத்திடத்தை ஈரோடு வரை நீட்டிப்ப தற்கான சாத்தியக்கூறு பற்றி பல்லவன் போக்குவரத்துக் கழகம் பரிசீலித்து வருகிறது.

சிதம்பரம் பகுதியில் மினி பஸ்கள்.

வினா 755—திரு. ஏ. ராமலிங்கம்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் பகுதியில் பேருந்துகள் செல்ல முடியாத சாலைகளில் மினி பஸ்கள் விட அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை—

ஆம், இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமங்கலம், உசிலம்பட்டி நகரங்களுக்கு வைகையிலிருந்து குடிதண்ணீர் வழங்கல்.

வினா 756—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலம், உசிலம்பட்டி நகரங்களுக்கு, வைகை நதியில் இருந்து குடிதண்ணீர் கொண்டுவரும திட்டம் எந்நிலையில் உள்ளது ?

விடை—

இத்திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திருவண்ணாமலையில் மின்துறை அலுவலகக் கட்டிடங்கள்.

வினா 757—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகரத்தில் மின்சாரத்துறையை சேர்ந்த அலுவலகங்கள் எத்தனை வாடகை கட்டிடங்களில் உள்ளன ?

(ஆ) ஆண்டுக்கு எவ்வளவு வாடகை தரப்படுகிறது ?

(இ) போதிய புதிய கட்டிடங்கள் கட்டித்தர எடுக்கப் பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) எட்டு.

(ஆ) ரூ. 46,380.

(இ) பொருளாதார நெருக்கடி காரணமாக மின்வாரிய அலுவலசங்களுக்குச் சொத்தக் கட்டிடங்களை கட்டுவதில்லை என்று மின்சார வாரியம் முடிவெடுத்துள்ளது ஆயினும், திருவண்ணாமலையில் சொந்தமாகக் கட்டிடங்கள் கட்டுவது குறித்து மின் வாரியம் ஆலோசித்து வருகிறது.

1979 ஏப்ரல் 24]

வயலூர் அச்சுதமங்கலம் சாலைப் பணி

வினா 758— திரு. இரா. இராசமாணிக்கம் —மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் வயலூர்—அச்சுதமங்கலம் சாலைக்கு கிராமச் சாலை திட்டத்தில் கப்பி போடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்.

விடை—(அ) ஆம்.

(ஆ) இச்சாலை மேம்பாட்டுப் பணி நிதி நிலைக்கேற்றாற் போல் விரைவில் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

வல்லம் கிராமத்தில் புறம்போக்கு நிலங்கள் ஒப்படை.

வினா 759— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் — மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி வட்டம், வல்லம் கிராமத்தில் ஓடை புறம்போக்கில் வீட்டு மனைப்பட்டா கோரி மனு வந்துள்ளதா.

(ஆ) ஆம் எனில், அதை நத்தம் புறம்போக்காக மாற்றி வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் உத்தேசமுண்டா.

விடை—(அ) ஆம்.

(ஆ) வல்லம் கிராமத்தில் சர்வே நம்பர் 90/1 ஓடை புறம்போக்கு நிலத்தை நத்தமாக வகை மாற்றம் செய்து தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டு மனை வழங்குவது பற்றிய செயற்குறிப்பு தென்னாற்காடு மாவட்ட வருவாய் அலுவலரிடம் பரிசீலனையில் உள்ளது.

[1979 ஏப்ரல் 24

ஆளியாறு வால்பாறை குறுக்குப்பாதை.

வினா 760—திரு. ஆ. நடராசன்—மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் ஆளியாற்றிலிருந்து வால்பாறைக்கு வெளோனி எஸ்டேட் வழியாக குறுக்குப்பாதை போடும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—மேற்கண்ட குறுக்குப்பாதை போடும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. மைய சாலைத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யும்போது, இந்த குறுக்குப் பாதை போடும் திட்டம் குறித்து பரிசீலிக்கலாம்.

பாவூர்சத்திரத்தில் துணைப் பதிவாளர் அலுவலகக் கட்டிடம்.

வினா 761—திரு. எம். எம். ஏ. ரசாக்—மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் பாவூர்சத்திரத்தில் சப் ரிஜிஸ்த்தரார் அலுவலகத்திற்கு அரசாங்க புறம்போக்கு இடத்தில் புதிய கட்டிடம் கட்ட அரசு உத்திரவு பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டிடப் பணிகள் ஆரம்பிப்பதில் கால தாமதத்திற்குக் காரணம் என்ன?

விடை—ஆம். கட்டிடம் கட்டத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு புறம்போக்கு நிலம், தனியார் ஒருவரது ஆக்கிரமிப்பில் உள்ளது. மேல் நடவடிக்கை குறித்து அரசு வருவாய் வாரியத்துடன் கலந்து பரிசீலனை செய்து வருகிறது.

மேல் இடையாளத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 762—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்—மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்தில், மேல் இடையாளத்திலிருந்து எத்தனை பேர்களிடமிருந்து பம்பு செட்டுக்கு மின் இணைப்பு கோரி மனு வந்துள்ளது?

1979 ஏப்ரல் 24]

(ஆ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை— (அ) 1—7—1978 வரை 34 மனுக்கள்.

(ஆ) இவற்றுள் 21 மனுக்கள் ஏற்கெனவே மின் வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்ற திட்டத்தைச் சார்ந்தவை. மீதமுள்ள 13 மனுக்கள் ஆய்வு நிலையில் உள்ளன.

தமிழ்நாட்டில் சத்துணவு தயாரிக்கும் திட்டம்.

வினா 763—திரு. மா. மணிமாறன்—மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சத்துணவு தயாரிக்கும திட்டம் ஏதேனும் செயற்பட்டு வருகிறதா!

(ஆ) இல்லை எனில், ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை—(அ) தமிழ்நாட்டில் சத்துணவு தயாரிக்கும் திட்டம் ஏதும் தற்போது செயல்படவில்லை.

(ஆ) உலக வங்கி உதவியுடன் சத்துணவு அதிகரிப்புத் திட்டத்தின் கீழ், சத்துள்ள உணவு தயாரிக்கப்படும் திட்டம் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

விவசாய சங்கங்களில் நிலுவையில் உள்ள கெடு கடந்த கடன்கள்.

வினா 764—திரு. மா. மணிமாறன்—மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் விவசாயக் கூட்டுறவு சங்கங்களில் கெடு கடந்த கடன் தற்போது எவ்வளவு உள்ளது?

விடை—தமிழ்நாட்டில் விவசாயக் கூட்டுறவு சங்கங்களில் கெடு கடந்த கடன் 30—6—1978 வரை ரூ. 68·55 கோடி அளவிற்கு உள்ளது.

[1979 ஏப்ரல் 24

திரு மணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள பாலம்.

வினா 765—திரு. மெ. ஆண்டி அம்பலம்—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் ஊராட்சி ஒன்றியம், சமுத்திராபட்டிக்கு கீழ்ப்புறம் திண்டுக்கல்—காரைக்குடி ஹைவேஸ் ரோட்டில் திருமணி முத்தாற்றின் குறுக்கே உள்ள பாலம் மழைக்காலத்தில் சேதமடைந்து போக்குவரத்து பாதிக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில்,மேற்படி பாலத்தை உயரமாக அமைக்கும் திட்டம் உள்ளதா

விடை—(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடுகிற சாலையில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே ஒரு உயர்மட்ட பாலம் கட்ட சுமார் ரூ.6 இலட்சம் தேவைப்படும். இப் பால வேலை இனி வரும் திட்ட காலங்களில் "மாநில சாலைகள் திட்டத்தின்,, கீழ் நிதி நிலைமை மற்றும் வேலையின் முக்கியத்துவம் இவற்றிற்கேற்ப எடுத்துச் செயலாற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சமூக நல ஊழியர்கள்.

வினா 766—திரு.மு. அம்பிகாபதி—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 ம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்த சமூக நல ஊழியர்களுக்கு ரேடியோ பழுது பார்க்கும் பயிற்சி அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், இவர்களுக்கு அப்பயிற்சிக்கு ஒத்த பதவி உயர்வுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளதா?

விடை—(அ) ஆம்.

(ஆ) பயிற்சி பெறறவர்க்ளில் தகுதி வாய்ந்தவர்களை ரேடியோ மெக்கானிக்குகளாக் பதவி உயர்வு கொடுக்கும் கருத்து ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 24]

வந்தவாசி வட்டத்தில் அரிசனங்களுக்கு இலவச வீடுகள்

வினா 767—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி வட்டத்தில் அரிசனங்களுக்கு இலவச வீடு எத்தனை கட்டி கொடுக்கப்பட்டது?

(ஆ) அவற்றுள் தற்போது இடிந்த நிலையில் உள்ளவை எத்தனை?

(இ) இதற்கான காரணம் கண்டறியப்பட்டதா?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) வடாற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் அரிசனங்களுக்கு 353 வீடுகள் கட்டித் தரப்பட்டன.

(ஆ) அவற்றுள் தற்போது இடிந்த நிலையில் உள்ளவை ஏதும் இல்லை.

(இ) மற்றும் (ஈ) : வினாக்கள் எழவில்லை.

நடமாடும் நூலகங்கள்

வினா 768—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் நடமாடும் நூலகங்கள் எத்தனை, எங்கெங்கு இயங்கி வருகின்றன?

[1979 ஏப்ரல் 24

விடை—

நமது மாநிலத்தில் மொத்தம் 38 நடமாடும் நூலகங்கள் கீழ்க்கண்ட நூலக ஆணைக் குழுக்களில் இயங்கி வருகின்றன :—

பேருந்து மூலம். (1)		மிதி வண்டி மூலம். (2)	
கோயம்புத்தூர்	5	செங்கல்பட்டு	1
சென்னை	2	தருமபுரி	5
மதுரை	1	சென்னை	7
திருநெல்வேலி	1	(மாவட்ட மைய நூலகம், சென்னை—5 : கன்னிமாரா பொது நூலகம்—2.)	
		சேலம்	16
	9		29

கூடலையாத்தூரில் வெள்ளத் தடுப்புச் சுவர்

வினா 769—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், கூடலையாத்தூரில் மணிமுத்தாறு, வெள்ளாறு சேருமிடத்தில் கரை அரிப்பினைத் தடுக்க தடுப்புச் சுவர் எழுப்பும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆற்றின் கரையைப் பலப்படுத்தவும், மண் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்குமான மதிப்பீடு தல அலுவலர்களால் தயாரிக்கப்படுகிறது.

உதகமண்டலம் அண்ணா கலையரங்கம்.

வினா 770—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் அண்ணா கலையரங்கத்தில் திருமணம் போன்ற தனியார் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறதா?

விடை—

ஆம். 11-3-1972 முதல் 26-7-78 வரை 110 தனியார் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இவற்றுள் இரண்டு முறையே 6-6-74, 19-1-75 நடைபெற்ற திருமண நிகழ்ச்சிகள் ஆகும்.

அட்டுப்பாயில் கிராமத்தில் வீடுகள் கட்டும் திட்டம்.

வினா 771—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தாலுகா, அட்டுப்பாயில் கிராமத்தில் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலம் புதியதாக வீடுகள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டு விட்டனவா?

விடை—

இல்லை.

அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட்ட கடன் மனுக்கள் அனைத்தும் பரிந்துரைக்காக வீட்டு வசதி-கூட்டுறவுப் பதிவாளரின் பரிசீலனையில் உள்ளன.

இலக்கிய பத்திரிகைகள் வெளியிடுவோருக்குக் கடனுதவி.

வினா 772—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறிய அளவிலான இலக்கிய பத்திரிகைகளுக்கு கடனுதவி அளிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—

இல்லை.

[1979 ஏப்ரல் 24

நாட்டு எருவுக்கு கட்டணம் வசூல்.

வினா 773—திரு. கே. உச்சி : மாண்புமிகு செய்தி அற நிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியைச் சேர்ந்த வாழைத் தோட்டம் சிரியூர் பகுதிகளிலிருந்து விவசாயத்திற் காக எடுத்துச் செல்லும் நாட்டு எருவுக்கு கட்டணம் வசூல் செய் யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், ஒரு லாரி லோடுக்கு எவ்வளவு கட்ட ணம் வசூலிக்கப்படுகிறது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒரு லாரி பாரத்திற்கு ரூ. 30 (முப்பது ரூபாய்) வீதம் வசூலிக்கப்படுகிறது.

திருச்செந்தூர் அரிசனங்களுக்கு மனைப் பட்டாக்கள்.

வினா 774—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியில் அரிசன மக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கேட்டு வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது ?

(இ) ஆய்வில் உள்ளவை எத்தனை ?

விடை—

(அ) 1977–78-ல் திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியில் அரிசன மக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கேட்டு 53 மனுக்கள் வந்துள்ளன.

1979 ஏப்ரல் 24]

(ஆ) அதில் 7 பேருக்கு விட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.

(இ) மீதமுள்ள 46 மனுக்கள் ஆய்வில் உள்ளன.

திருச்செந்தூர் தொகுதியில் கிராமக் குடிநீர்த் திட்டங்கள்.

வினா 775—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது?

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளது?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியில் இதுவரை 120 கிராமங்களில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு பயனளிக்கின்றன.

(ஆ) மேலும் 6 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள் ஆய்வில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

பாரசீக வளைகுடா நாடுகளில் வேலைவாய்ப்புகள்.

வினா 776—திரு. எஸ். கணேசன்; மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரசீக வளைகுடா நாடுகளில் வேலை வாங்கித் தருவதாக கூறி மோசடி செய்ததற்காக 1977–78 ஆம் ஆண்டு எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(ஆ) அவர்களின் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) 1977–78 ஆம் ஆண்டு (7—9—1978 வரை) 22 பேர் கைது செய்யப்பட்டனர்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கைது செய்யப்பட்ட இரண்டு நபர்கள் மீது 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அனைத்தும் காவல் துறையின் புலன் விசாரணையில் உள்ளது.

சென்னை நகரில் 19 நபர்கள் மீது 9 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளது. அதில் 5 வழக்குகள் காவல் துறையின் புலன் விசாரணையிலும், 4 வழக்குகள் நீதிமன்ற விசாரணையிலும் உள்ளன.

சேலம் மாவட்டத்தில் ஒரு நபர் நீதிமன்றத்தில் சரணாகதி ஆனார். இவர் மீது இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ஒரு வழக்கு நீதிமன்ற விசாரணையிலும், ஒரு வழக்கு காவல்துறை விசாரணையிலும் உள்ளது.

வீராணம் ஏரிப்பாசனம்.

வினா 777—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரிப் பாசனத்தை மேற்கே சோழவரம் வரை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

காலங்குடியிருப்பு அரசு மருத்துவமனை.

வினா 778—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், உடன்குடி காலங்குடியிருப்பு அரசு மருத் துவமனையில் புதிய கட்டிடங்கள் கட்டவும் படுக்கைகளின் எண் ணிக்கையை அதிகப்படுத்தவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

1979 ஏப்ரல் 24]

விடை—

இல்லை.

உலகங்காத்தான் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கல்.

வினா 779—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், உலகங்காத்தான் கிராமப் பொதுமக்களிடமிருந்து குடிநீர் வசதி வேண்டி அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

ராஜகிருஷ்ணபுரத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தல்.

வினா 780—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ராதாபுரம் தொகுதியிலுள்ள ஊலவிஞ்சிபுரம் ஊராட்சியில் உள்ள இராஜகிருஷ்ணபுரம் என்கின்ற மாடம்பிள்ளை தர்மம் என்ற ஊரில் மழை வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டாமல் அடிக்கடி இடையூறுகள் ஏற்படுவதாக புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மேல் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எனினும், ரூபாய் 25,000 மதிப்பீட்டில் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் இதைச் செய்ய நடவடிக்கையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

சேலத்தில் உள்ள வள்ளுவர் சிலை பராமரிப்பு.

வினா 781—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்தில் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் சிலை யாருடைய பராமரிப்பில் உள்ளது ?

விடை—

சேலம் தமிழ் சங்கத்தாரால் பராமரிப்பில் இருந்து வருகிறது.

ஆத்தூர் வட்டத்தில் மினி பஸ் போக்குவரத்து

வினா 782—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்காவில் மினி பஸ் போக்குவரத்து விட அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் விடப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நன்னிலம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு விளையாடும் இடம்.

வினா 783—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசு உயர்நிலைப் பள்ளியின் விளையாடும் இடம் வயலாக இருப்பதைத் தூர்ப்பதற்கு அரசிடம் ஏதேனும் முறையீடு வந்ததா ?

(ஆ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1979 ஏப்ரல் 24]

விடை—

(அ) அரசிடம் முறையீடு எதுவும் இதுநாள் வரை வர வில்லை.

(ஆ) இப்பொருள் பற்றி பள்ளிக் கல்வி இயக்குநரால் கருத்துரு பெறப்பட்டு கடந்த ஆண்டு ஒதுக்கீடு இல்லாதபடியால் அனுமதி உத்தரவு வழங்க இயலவில்லை. எனினும், தற்போது திரும்பவும் மேற்படி பள்ளிக்கு மேற்கண்ட பணிக்கும், விளையாட்டு மைதானத்தைச் சுற்றி முள் வேலி அமைப்பதற்கும், விளையாட்டு பொருள்களை வைக்க ஒரு சிறிய கட்டிடம் கட்டுவதற்கும் சேர்த்து தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலர் இரண்டு லட்ச ரூபாய்க்கு மதிப்பீடு ஒன்றினை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைத்துள்ளார். இது வரும் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டினைப் பொருத்து எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

மடத்துக்குளம் குடிநீர் திட்டம்.

வினா 784—திரு. கு. ரமணி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலை தாலுக்கா மடத்துக்குளம் பேரூராட்சியினரால் குடிநீர் திட்ட ஆய்வுக்காக ரூ. 22,000 செலுத்தப் பட்டும் மேல் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்து வருவது உண்மையா ?

(ஆ) எவ்வளவு காலமாக இது கவனிக்கப்படாமல் விடப் பட்டுள்ளது ?

(இ) தற்போது அத்திட்டம் என்ன நிலையில் உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

(இ) மடத்துக்குளம் பேரூராட்சி குடிநீர் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தொழிற் கடன்கள்.

வினா 785—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி: மாண்பு மிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு ஆரம்பித்துள்ள சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1973–74 முடிய எத்தனை தொழிற்சாலை களுக்கு எத்தனை கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக் கிறது ?

(ஆ) அவற்றில் இதுவரை திரும்ப வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிறுதொழில்கள் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நிதியாண்டு 1973-74 முடிய 1,783 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 6.63 கோடி ரூபாய் கடனாக வழங்கப் பட்டிருக்கிறது. அவற்றில் இதுவரை 1.78 கோடி ரூபாய் திரும்ப வசூலிக்கப்பட்டுள்ளது.

Standing Committee on Education.

Q. 786—THIRU SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Education be pleased to state: Whether any official of the State Government has been nominated by the Central Government to serve on the Standing Committee on Education for Rural Development ?

விடை.—

ஆம். டாக்டர் கே. வெங்கடசுப்பிரமணியம், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் இயக்குநர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி மன்றம் அக்குழுவில் ஒரு உறுப்பினராக உள்ளார்.

Vanjivakkam and Thirumudivakkam Panchayats.

Q. 787—THIRU SALEM M ARUMUGAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) Whether the reconstitution of Vanjivakkam and Thirumudivakkam Panchayats has been ordered to be postponed to November 1978; and

(b) If so, the details thereof ?

விடை.—

(அ) மற்றும் (ஆ) வஞ்சிவாக்கம் ஊராட்சியை மீண்டும் அமைப்பது 1–5–1979 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. திருமுடிவாக்கம் ஊராட்சியை கலைக்க அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டுள்ள ரிட் மனு நிலுவையில் இருக்கிறது.

Houses for Harijans in Senthangadu Village.

Q. 788—THIRU K. ABDUL LATHEEF : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the steps taken by the Government to complete the construction of houses for Harijans at Senthangadu village in Pattukkottai taluk in Thanjavur district.

விடை.—

இதுபற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Houses for Harijans at Balasamudram.

Q. 789—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) Whether representations have been received from the inhabitants of Balasamudram area in Palani taluk in Madurai district requesting construction of houses for Harijans in recent years ; and

(*b*) the action taken thereon ?

விடை—

(அ) மதுரை மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் பகுதியிலுள்ள அரிசன மக்களிடமிருந்து வீட்டு வசதி வேண்டி மார்ச்சு 1978-ல் கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

(ஆ) அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிப்பது குறித்தும் கிராமங்களைத் தேர்ந்தெடுப்பது பரிசீலனையில் உள்ளது.

Extraction of Turpentine.

Q. 790—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(*a*) Whether any factory for the extraction of Turpentine oil is functioning in this State in the Public and private sectors; and

(*b*) If so, the details thereof ?

விடை.—

(அ) தமிழகத்தில் பொதுத் துறையிலோ, தனியார் துறையிலோ டர்பன்டைன் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை,

Key Village Centre at Pallady.

Q. 791—THIRU K. ABDUL LATHEEF: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(*a*) whether there are proposals under the examination of the Government to start a Key Village Centre at Pallady in Thuckalay Panchayat Union in Kanyakumari district ; and

(*b*) If so, the details thereof ?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Veterinary Hospital at Ambasamudram.

Q. 792—THIRU K. ABDUL LATHEEF: Will the Hon. the Minister for Social Welfare be pleased to State—

(*a*) Whether the agriculturists of Ambasamudram Constitutency have made any representation to the authorities during 1977–78 against the shifting of the Veterinary Hospital; and

(*b*) If so, the action taken thereon.

விடை.—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

Rajapalayam breed of dogs.

Q. 793—THIRU K. ABDUL LATHEEF: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) Whether the Government are aware that the famous Rajapalayam breed of dogs are getting extinct ; and

(*b*) If so, the steps taken thereon ?

விடை.—

(அ) இராஜபாளையம் நாய் இனம் முழுவதும் அழிந்து விடவில்லை. சிறிய அளவில் இருந்து வருகிறது.

(ஆ) நாய் வளர்க்கும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

Agricultural Officers with training Overseas.

Q. 794—THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) the details of the officers working in the Directorate of Agriculture who have had training overseas ;

(*b*) the subjects in which they had training ; and

(*c*) the steps taken to utilise their training ?

விடை.—

ஒரு விவர அறிக்கை * சட்டப் பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

Research of medicinal use of betel leaves.

Q. 795—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for health be pleased to state—

(*a*) Whether any research has been made in this state in recent times with the medicinal use of betel leaves ; and

(*b*) If so, the details thereof ?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

* 312-322-ம் பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

Handicapped persons to the posts of Judicial Officers.

Q. 796—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Law be pleased to state :

(*a*) the number of handicapped persons posted as Judicial Officers in this State as at present ; and

(*b*) the steps taken to provide large representation to them ?

விடை.—

(அ) எவரும் இல்லை.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

Masks to workmen engaged in the sewege operations.

Q. 797—THIRU C. MANICKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether Masks are provided by the Local Bodies to workmen engaged in the sewage operations ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) if not, what steps are being taken to provide such Masks ?

விடை.—

(அ) உள்ளாட்சி நிறுவனங்களில் வடிகால்களில் பணி புரியும் துப்புரவு பணியாளர்களுக்கு முகமூடி வழங்கப்படுவதில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(இ) துப்புரவு தொழிலாளர்கள் பாதாள சாக்கடையினுள் இறங்குமுன் சாக்கடையின் இருபுறங்களிலும் உள்ள மூடிகள் திறக்கப்பட்டு காற்று வசதி ஏற்படுத்தப்படுகிறது.

Improvements to Alangayam big lake.

Q. 798—THIRU C. MANICKAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) Whether the Government have examined the Alangayam big lake Improvement scheme:

(b) If so, the details thereof ; and

(c) The benefit likely to accrue to the people due to this scheme ?

விடை.—

(அ) முதல் (இ) வரை—ஆலங்காயம் பெரிய ஏரிக்கு ஒரு வரவு கால்வாய் வெட்டி தண்ணீர் விட ஆய்வு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது சரியாக தண்ணீர் பெறாத 2.49 ஏக்கர் மட்டுமே இத்திட்டத்தினால் பாசனப்பயன் பெறும் என அறியப்பட்டதால் இத்திட்டத்தை செயலாக்குவது கைவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆலங்காயம் பெரிய ஏரியை தூர் வாரி புனரமைக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பின் மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக இத்திட்டமும் கைவிடப் பட்டது.

இத்திட்டத்தினால் கூடுதலாக கிடைக்கப்பெறும் உணவு உற்பத்தி சொற்பமேயாகும்.

Civic amenities in Jawahar Nagar area.

Q. 799—THIRU N. KITTAPPA: Will the Hon the Minister for Local Administration be pleased to state—

(a) Whether the Jawahar Nagar Welfare Association in Madras City-82 has been representing to the Madras Corporation about the lack of amenities in the area for many years;

(b) If so, the details of the representation ; and

(c) The details of the action taken on them.

1979 ஏப்ரல் 24]

விடை.—

(அ), (ஆ)&(இ)—சாலைகள், தெரு விளக்குகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதிகளை இச்சங்கம் கோரியுள்ளது. மழைநீர் வடிகால் அமைப்பதற்கும், குடிதண்ணீர் அளிக்கவும் தக்க நடவடிக்கைகளை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. மற்ற வசதிகள் அளிக்கப்பட்டுவிட்டன.

Corbonite stones in Koratti Village.

Q. 800—Thiru N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether the Geological administration of the State Government has found out the existance of Corbonite rocks at Koratti near Thiruppathur in North Arcot district ; and

(*b*) If so, the details there of ?

விடை.—

(அ) & (ஆ)—கார்போனைட்டைச் சேர்ந்த குழுக்கற்கள் வடஆற்காடு மாவட்டத்தில் கொரட்டி அருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரும்பு சத்து நிறைந்த மெக்னீசிய கார்பனேட்டும், கால்சியம் கார்பனேட்டும் இந்த கார்போனைட் குழு கற்களைச் சேர்ந்தவை. அவை பைராக்சினைட், சயனைட் என்ற மற்ற கற்களோடு சேர்ந்து காணப்படுகின்றன. இந்த கார்போனைட் கற்கள் 2,000 கி. மீட்டர் நீளமும், 30-ல் இருந்து 200 மீட்டர் அகலமும் உள்ள நிலப்பரப்பில் காணப்படுகின்றன. கார்போனைட்டில் உள்ள மேக்னடைட், சிர்கான் போன்ற தாதுக்கள் மிகவும் குறைந்த அளவிலேயே இருப்பதால் இவைகளை வெட்டியெடுப்பது இலாபகரமாயிருக்காது எனக் கருதப்படுகிறது.

Collection of sand from Madras Beach.

Q. 801—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) Whether the Collection of sand from the Beach in Madras in lorries and trucks drawn by bulls from Ennore till Thiruvanmiyoor has been banned by the Madras Corporation ; and

(b) the details thereof ?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

அரூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,

வினா 802—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் பின்புறமுள்ள நிலத்தை விளையாட்டு மைதானத்திற்குப் பெற்றுக் கொடுக்கவும், பள்ளியைச் சுற்றிச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்கவும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

இல்லை. ஆனால் அரூர் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு நிலம் பெறுவதற்கும், சுற்றுச்சுவர் கட்டுவதற்குமான முயற்சிகளை பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் மேற் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடாற்காடு மாவட்ட நீர்ப்பாசன மாநாடு.

வினா 803—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஜூன் 28, 29 தேதிகளில் வேலூரில் நடைபெற்ற வட ஆற்காடு மாவட்ட நீர்ப்பாசன மாநாட்டில் எடுத்த முடி வின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்க திட்டமிடப் பட்டுள்ளது ?

(ஆ) அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நீர்ப்பாசன மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஆய்வு செய்யப்படும்.

1979 ஏப்ரல் 24]

அய்ரேணிபுரம் குடிநீர்த் திட்டம்.

வினா 804—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் அய்ரேணிபுரம் என்னுமிடத்தில் உள்ள குடிநீர் திட்டம் பழுதடைந்துள்ளது. இதை சரி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

சரி செய்யப்பட்டு, இயங்கும் நிலையில் உள்ளது.

பனைத் தொழிலில் ஈடுபடும்போது விபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி.

வினா 805—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் 1971 முதல் 1977 டிசம்பர் 20 வரை பனை விபத்து ஏற்பட்டு விபத்து நிதி கோரி எத்தனை மனுக்கள் வந்துள்ளன?

(ஆ) எத்தனை பேருக்கு விபத்து நிதி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) விபத்து நிதி கோரி வந்த மனுக்கள் .. 160

(ஆ) விபத்து நிதி வழங்கப்பட்டவர் 117

வாலையாறு சோதனைச் சாவடி.

வினா 806—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோவை மாவட்டம் வாலையாறு சோதனை சாவடி அருகே 100 மூட்டை அரிசி ஏற்றிச் சென்ற லாரி பிடிபட்டதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்டவர்கள் லாரியில் பிடிக்கப்பட்ட அரிசி முழுவதையும் கோவையிலேயே விற்க ஒப்புக்கொண்டதால், மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டில் பேக்டரி லே-ஆப்.

வினா 807—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரூர் வட்டம், தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டில் பேக்டரி 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் தேதி முதல் லே-ஆப் விட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு லே-ஆப் ஊதியம் கொடுக்கப்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம். ஆனால் 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24-ம் நாளன்று லே-ஆப் நீக்கப்பட்டு வேலை துவங்கப்பட்டது.

(ஆ) இத்தொழிற்சாலை 1969-ம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண நிறுவனங்கள் சிறப்பு விதிகள் சட்டத்தின் கீழ் விடுவிப்பு நிறுவனமாக 1978-ம் ஆண்டு அக்டோபர் 16-ம் தேதியிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. இக்காலவரையறை மேலும் 1979-ம் ஆண்டு அக்டோபர் 15-ம் நாள் வரை நீடிக்கப் பட்டுள்ளது. இச்சட்டத்தின் விதிகளின்படி, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் 'லே-ஆப்' ஊதியம் அளித்தல் பற்றிய ஷரத்து 5-ஏ பாகத்திலிருந்தும் பிரிவு 33-சி ஷரத்திலிருந்தும் இந்நிறுவனத்திற்கு அரசு விலக்களித்துள்ளது. எனவே, நிர்வாகத்தினர் லே-ஆப் காலத்திற்குரிய ஊதியம் கொடுக்க வேண்டியதில்லை. நல்லெண்ண அடிப்படையிலும் தொழிலாளர்களின் சிரமத்தை தணிக்கும் பொருட்டும் நிர்வாகம் 1978 ஜூன் மாதம் பாதிக்கப்பட்ட தொழிலாளர் களுக்கு முன் பணமாக தலா ரூ. 100 முதல் ரூ. 300 வரை கொடுத்துள்ளது.

1979 ஏப்ரல் 24]

திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 808—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலூகாவில் கும்பகோணம் பூந்தோட்டம் சாலையிலிருந்து தெற்கே எரவாஞ்சேரி அருகே மணவாளநல்லூர் பகுதியில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சென்னை மருத்துவமனையில் முடக்குவாத நோய்க்கு அறுவை சிகிச்சை.

வினா 809—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் முடக்குவாத நோய்க்கு அறுவை சிகிச்சை மூலம் குணமாக்கப்பட்டு வரும் புதியமுறை கையாளப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அம்முறையினை விரிவுபடுத்த அரசு ஆலோசித்து வருகின்றதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

[1979 ஏப்ரல் 24

நரிக்குறவர் குடும்பத்திற்கு புறம்போக்கு நிலம் ஒப்படை.

வினா 810 திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சந்திரப்பட்டி தரப்பு வெள்ளக்கல்லில் குடியிருத்தப்பட்ட 147 நரிக்குறவர் குடும்பங்களுக்கு மேற்படி தரப்பு சர்வே எண். 113-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலம் அந்த நரிக்குறவர் குடும்பத்திற்கு அடமானம் செய்யப்பட்டதா?

விடை—

ஆம்.

சிட்லிங் மலைப் பகுதியில் உள்ள துவக்கப்பள்ளி.

வினா 811 திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், சிட்லிங் மலைவாசி மாணவர்கள் பயிலும் துவக்கப்பள்ளியை உயர் துவக்கப்பள்ளியாக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

அரூர் வட்டம், சிட்லிங் தண்டாவில் மலைவாசி மாணவர்களுக்கென்று தனியாக துவக்கப்பள்ளி ஏதும் இல்லை. அங்கு பிற்பட்டோர் நலத்துறையால் நடத்தப்பட்ட உறையுள் துவக்கப்பள்ளி ஒன்றை உறையுள் உயர்துவக்கப்பள்ளியாக உயர்த்தி 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு குடியிருப்புகள்.

வினா 812 திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டும் செயல் திட்டம் உள்ளதா—

விடை—

ஆம். படிப்படியாக நிறைவேற்றப்படுகிறது.

1979 ஏப்ரல் 24]

அரிசனங்களுக்கு வழங்கப்பெற்ற தொழிற் கடன்கள்.

வினா 813—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977–78ஆம் ஆண்டில் அரிசனங்களுக்கு தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

1977–78ஆம் ஆண்டில் அரிசனங்களுக்குத் தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் 1,316 நபர்களுக்கு, ரூ. 10,75,740 வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பெற்ற மாணவர்கள்.

வினா 814—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரியில் 1978–79 ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் சேர்க்கையில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர், முன்னேறிய வகுப்பு மாணவர்கள் எத்தனை பேர், பிற மாநில மாணவர்கள் எத்தனை பேர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள்?

விடை—

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரியில் 1978-79 ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் சேர்க்கையில்:—

1. தாழ்த்தப்பட்ட மாணவர்கள்—	
அட்டவணையில் கண்ட வகுப்பினர்	177
அட்டவணையில் கண்ட பழங்குடியினர் ..	5
2. பிற்பட்ட மாணவர்கள்	601
3. முன்னேறிய வகுப்பினர்	202
	985
வெளி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் ..	30
	1,015
4. பிற மாநில மாணவர்கள்	66*

(*985 மாணவர்களில் உள்ளடங்கியது.)

புறம்போக்கு நிலங்களில் உப்பு உற்பத்தி களங்கள் அமைக்க அனுமதி.

வினா 815 திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தூத்துக்குடி பஞ்சாயத்து யூனியன் முத்தையாபுரம் முள்ளக்காடு பகுதியை ஒட்டிய பொதுப்பணித்துறைக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களில் அரிசன உப்புத் தொழிலாளர்கள் உப்பு உற்பத்தி களம் அமைத்து தொழில் நடத்துவதற்கு அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இவ்விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

நகரசபைகளின் கணக்குகள் தணிக்கை.

வினா 816—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1975 முதல் 1976–77 முடிய வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வேலூர் நகரசபை உட்பட அனைத்து நகரசபைகளின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1975–76 ஆம் ஆண்டு தணிக்கைகள் எல்லா நகர சபைகளிலும் அவ்வாண்டு இறுதிக்குள் முடிந்துவிட்டன. 1976–77 ஆம் ஆண்டு தணிக்கைகள் 1977 ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில்தான் செய்யப்பட்டன.

1979 ஏப்ரல் 24]

பண்ணந்தூர்— அரசம்பட்டி பாதையில் தரைப்பாலம்.

வினா 817—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் தென் பெண்ணையாற்றின் குறுக்கே பண்ணந்தூர்—அரசம்பட்டி பாதையில் ஓர் தரைப்பாலம் (Low Bridge) போடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) எப்போது அமலுக்கு வரும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Fire accident at Kumaran Market, Coimbatore

Q. No. 818— THIRU N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether there was fire at Municipal Kumaran Daily Market in Coimbatore about the 12th August, 1978 ; and

(b) if so, the details therof ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் அன்று இரவு சுமார் 11-50 மணியளவில் கோவை நகரிலுள்ள தியாகி குமரன் அங்காடியில் தற்செயலாக தீ விபத்து ஏற்பட்டு 65 நிரந்தரக் கடைகளும், 175 தற்காலிகக் கடைகளும் தீக்கிரையாயின. இதனால் சுமார் ரூபாய் 4,21,055 மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்தன. இதில் சுமார் ரூபாய் 2,60,055 மதிப்புள்ள தனியார் சொத்துக்களும், ரூபாய் 1,61,000 மதிப்புள்ள நகரசபை சொத்துக்களும் அடங்குகின்றன.

[1979 ஏப்ரல் 24

கோவை மருத்துவக் கல்லூரி பெண் பயிற்சி மருத்துவர் விடுதி

வினா 819—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பெண்கள் பயிற்சி மருத்துவர் விடுதியில் இட நெருக்கடியால் ஒரு அறையில் ஐந்தும், அதற்கு மேலும் தங்கியிருந்து கஷ்டப் படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இட நெருக்கடி தீர்க்க என்ன துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பெண்கள் பயிற்சி மருத்துவ விடுதியில் 15 அறைகள் உள்ளன. அவற்றில் ஒரு அறைக்கு 3 பெண்கள் பயிற்சி மருத்துவர்கள் வசதியாக தங்குவதற்கு வசதி செய்யப் பட்டுள்ளது.

பின்னவாசல் கிராமத்தில் அரிசன நலப்பள்ளி.

வினா 820—திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணித் தொகுதி பின்னவாசல் கிராமத்தில் அரிசன நலப்பள்ளி தொடங்க அரசின் அனுமதி கோரப்பட் டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அனுமதி வழங்கப்படும்.

விடை—

(அ) பேராவூரணித் தொகுதி பின்னவாசல் கிராமத்தில் அரிசன நலப்பள்ளி தொடங்க அரசின் அனுமதி கோரப்பட வில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

1979 ஏப்ரல் 24]

'' தாமரை சிங்கம் சுருட்டு '' தொழிற்சாலைத் தொழிலாளர்கள்.

வினா 821—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி பணக்குடியிலுள்ள '' தாமரை சிங்கம் சுருட்டு '' தொழிற்சாலை அடைக்கப்பட்டுள்ளதால் அத்தொழிற்சாலை தொழிலாளர்களது சேமநல நிதிக்குரிய தொகை வழங்கப்பட அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை—

1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் நாளிலிருந்து திருநெல்வேலி மாவட்டம் பணக்குடியிலுள்ள '' தாமரை சிங்கம் சுருட்டு '' தொழிற்சாலை (திருவாளர்கள் எஸ். என். தங்கசாமி மற்றும் சகோதரர்கள்) மூடப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையில் வேலை பார்த்த தொழிலாளர்களிடமிருந்து அவர்களின் வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் கேட்டோ அல்லது முழுத்தொகையைக்கேட்டோ விண்ணப்பங்கள் சென்னை மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையாள ருக்கு ஏதும் வரவில்லை. அவைகள் வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

குணமங்கலத்திலுள்ள மேல்நிலை நீர்த் தொட்டி

வினா 822—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் குணமங்கலம் மேல்நிலை நீர்த்தொட்டி எத்தனை மாதங்களாக இயங்கவில்லை.

(ஆ) அதற்கான காரணம் யாது ?

விடை—

(அ) 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ஆம் தேதி வரை.

(ஆ) மேல் நீர்த் தேக்க இரும்புத்தொட்டி மற்றும் மோட் டார் பம்பு செட் பழுது அடைந்திருந்ததால் செயல்படாமல் இருந்தது. தற்போது இயங்கி வருகிறது.

காட்டுமன்னார்குடி ஒன்றியத்தில் குழாய்க் கிணறுகள்.

வினா 823—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் காட்டுமன்னார்குடி ஒன்றியத்தில் 1978-79-ம் ஆண்டில் இதுவரை எத்தனை குழாய் கிணறுகள் இறக்கப்பட்டன ?

(ஆ) அவற்றுள், ஒன்றியம் மூலம் எத்தனை? குடிநீர் வாரியத்தின் மூலம் எத்தனை ?

(இ) ஒவ்வொன்றுக்கும் ஆன செலவு எவ்வளவு ?

விடை—

(அ) 12.

(ஆ) யாவும் குடிநீர் வடிகால் வாரியம் மூலம்தான்.

(இ) விவரம் பின்வருமாறு :—

வரிசை எண்ணும், குடியிருப்பு கிராமத்தின் பெயரும்.		குழாய் கிணறுகளுக்கான செலவு. (ரூபாய்.)
1	வேட்டுவாய்க்கால் அரிசன காலனி ..	4,320
2	ஸ்ரீபுதூர் அரிசன காலனி	3,480
3	டி. மாடபுரம் அரிசன காலனி	42,855
4	டி. மாடபுரம் (தெற்கு)	44,271
5	வெங்கடேசபுரம் (தெற்கு)	44,271
6	மனவெளி	7,995
7	மேற்குகருணா நல்லூர்	54,430
8	புதுக்குப்பம் பள்ளிக்கூடம்	32,600
9	ஸ்ரீசாத்தமங்கலம்	27,416
10	கொரப்பு	26,100
11	நடுக்கஞ்சங்கொல்லை (கிராமம்) ..	10,725
12	நடுக்கஞ்சங்கொல்லை அரிசன காலனி ..	3,083
	மொத்தம் ..	3,01,546

1979 ஏப்ரல் 24]

கூட்டுறவு கடன் சங்கங்களை ஒருங்கிணைத்தல்.

வினா 824—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள நிலவளவங்கி, கூட்டுறவு நாணய சங்கங்கள், கூட்டுறவு விவசாய வங்கிகள் இம்மூன்றையும் ஒருங்கிணைத்து விவசாயிகளுக்கு கடன் வழங்க ஒரே அமைப்பாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை:—

(அ) & (ஆ) இந்திய ரிசர்வ் வங்கியினால் நியமிக்கப்பட்ட குழுவின் குறுகியகால, நீண்டகால கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் பரிந்துரையினை, ஆராய்ந்து தமிழ்நாட்டில் அவ்வாறு ஒருங்கிணைக்கத் தேவையில்லை என அரசு முடிவு செய்துள்ளது.

கிருஷ்ணகிரி நகரில் குடிசை மாற்று வாரியப் பணிகள்.

வினா 825—திரு க. இரா. சின்னராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி நகரிலுள்ள பழைய ரயில்வே நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து குடிசைகள் போட்டுள்ளதை மாற்றி குடிசைமாற்று வாரியத்தின்கீழ் வீடு கட்டும் திட்டத்திற்கு மதிப்பீடு போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை:—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

[1979 ஏப்ரல் 24

நீலகிரி மாவட்டத்தில் இ.எஸ். ஐ. மருத்துவ மனைகள்.

வினா 826—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

நீலகிரி மாவட்டத்தில் தோட்ட தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

விடை :—

இல்லை.

Dam at Sanjeevarayan Koil Pallam.

Q. 827 Thiru K. APPUNU GOUNDER : Will the Hon. The Minister for Agriculture be pleasd to state—

(a) Whether there is any proposal to construct a dam on the Sanjeevarayan Koil Pallam near Papparapatti in Dharmapuri taluk, Dharmapuri district;

(b) the estimate thereof ;

(c) when it will be implemented ; and

(d) the expected acreage that can be irrigated by that dam?

விடை :—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியின் அருகேயுள்ள சஞ்சீவராயன் கோயில் பள்ளத்தின் குறுக்கே சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஒரு அணைகட்டும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. முதல் நிலை ஆய்விற்குப் பிறகு இத் திட்டம் சிக்கனமில்லாத திட்டமாக இருப்பது தெரியவந்தது. எனவே இத் திட்டம் நடுத்தர நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

(ஆ), (இ) & (ஈ) ஆய்வு முடிந்த பிறகே, இந்த விவரங்கள் தெரியவரும்.

1979 ஏப்ரல் 24]

Thumbalahalli Dam.

Q. 828 Thiru K. APPUNU GOUNDER : Will the Hon'ble Minister for Agriculture and Irrigation be pleased to state:

(a) Whether the construction of Thumbalahalli dam Palacode taluk, Dharmapuri district is under consideration by Government?

(b) if it is, the estimated cost for the dam :

(c) when it will be taken up; and

(d) the acreage that can be irrigated by the proposed dam?

விடை :—

(அ) & (ஆ) ரூ. 112.70 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள இத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(இ) இத் திட்டம் உடனடியாக செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படும்.

(ஈ) புதிதாக 2184 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பதும் 326 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதிப்படுத்துவதும் 96 ஏக்கர் நிலங்களுக்கு இடையறாத பாசன வசதி அளிப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

Degree Course in zoology in the Dharmapuri Arts College.

Q. 829 Thiru K. APPUNU GOUNDER : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the year from which the bachelors Degree course zoology was started in Government Arts college at Dharmapuri; and

(b) whether adequate number of professors are available in that Department and the number of posts of profossors still vacant?

விடை:—

(அ) 1976-77-ம் ஆண்டில் :

(ஆ) தற்போது விலங்கியல் துறையில் ஒரு பேராசிரியர் பதவியும், நான்கு உதவி பேராசிரியர் பதவிகளும், ஒரு விளக்குநர் பதவியும் உள்ளன. எப் பதவியும் காலியாக இல்லை.

Dam across Nogavathi River.

Q. 830 Thiru K. APPUNU GOUNDER : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether there is any proposal to construct a dam across Nagavathi River in Arakasanahalli panchayat, pennagaram panchayat Union, Dharmapuri District:

(b) the estimated cost thereof; and

(c) when it will be taken up?

விடை:—

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தின் மதிப்பீடு செலவு ரூ. 174 இலட்சமாகும்.

(இ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர், கைத்தறி, விற்பனை நிலையங்கள்.

வினா 831—திரு. த. புஸ்பராஜு : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்ளுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் எத்தனை கதர், கைத்தறி விற்பனை நிலையங்கள் உள்ளன?

(ஆ) மேலும் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை:—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில், தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் துறைக்குச் சொந்தமான மூன்று கதர் அங்காடிகள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன—

(1) புதுக்கோட்டை.

(2) அறந்தாங்கி.

(3) ஆலங்குடி.

1979 ஏப்ரல் 24]

இதே மாவட்டத்தில் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) மூன்று விற்பனை நிலையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன :—

(1) புதுக்கோட்டை.

(2) அறந்தாங்கி.

(3) கீரனூர்.

(ஆ) இம்மாவட்டத்தில் மேலும் கதர் மற்றும் கைத்தறி விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

நன்னிலம் வட்டத்தில் வழங்கப்பெற்ற வீட்டுமனைப் பட்டாக்கள்.

வினா 832—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் வட்டத்தில் 1976-க்குப் பிறகு எத்தனை வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) வேண்டுகோள் வரப்பட்டு பட்டா வழங்காமல் உள்ள மனுக்கள் எத்தனை ?

விடை— (அ) 1—1—1976 முதல் 30–11–1978 முடிய 1,590 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

(ஆ) 30—11—1978 அன்று வரை 49 மனுககள் நிலுவையில் உள்ளன.

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர் இல்லம், நன்னிலம்

வினா 833—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தாழ்த்தப்பட்ட மாணவர் இல்லத்தில் தங்கும மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டி அரசிற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா ?

[1979 ஏப்ரல் 24

விடை —

ஆம். இக்கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் எழுப்பியுள்ளார். நன்னிலத்தில் இயங்கி வரும் மாணவர் விடுதியின் தேவையும், எண்ணிக்கையும், மேல் நிலைப்பள்ளிகள் தொடங்கியதால் அதிகரிக்குமாயின், அவ் விடுதியின் மாணவர் எண்ணிக்கையை உயர்த்த குறிப்புரைகள் அனுப்புமாறு மாவட்ட அரிசன நல அலுவலர் கேட்கப்பட்டுள்ளார்.

கொங்கராய நல்லூர் அரிசனங்களுக்கு நிலப்பட்டாக்கள்.

வினா 834—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம் வட்டம், கொங்கராயநல்லூரில் ஏழை அரிசனங்களால் சாகுபடி செய்து வரும் புறம்போக்கு நிலத்தை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை —இல்லை.

மருத்துவமனைகளில் உள் நோயாளிகள் உணவுக்காகும் செலவு.

வினா 835—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு மருத்துவமனைகளில் உள் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்ட உணவுச் செலவுக்கான தொகை எவ்வளவு ?

(ஆ) 1977-ம் ஆண்டு அளிக்கப்பட்ட உணவுச் செலவுக்கான தொகை எவ்வளவு ?

விடை —

(அ) 1967–68-ம் ஆண்டு அதாவது 1967-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1968-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31–ம் நாள் வரையிலான காலத்திற்கு மருத்துவ மனைகளில் உள் நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கிய வகையில் ரூ. 160.63 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 1977–78-ம் ஆண்டிற்கு, அதாவது 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ம் நாள் முதல் 1978–ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் நாள் வரையிலான காலத்திற்கு ரூ. 318.50 இலட்சம் இவ்வகையில் செலவு செய்யப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 24]

அர்ஜுனா நதிக்கு தடுப்புச் சுவர்

வினா 836—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தைச் சேர்ந்த, களத்தூர் கிராமத்தில் உள்ள ஒரு பகுதியான கீழப்பட்டி அர்ஜுனா நதி தண்ணீரால் பாதிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியத்தைச் சேர்ந்த களத்தூர் கிராமத்தில் உள்ள கிழப்பட்டி, கிராம மக்களிடம் உறுதிப்படுத்தப்பட்டதில், கடந்த 50 ஆண்டுகளில் அர்ஜுன நதி வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆனால், 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ம் நாள் இந்த கிராமம் அர்ஜுன நதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது.

(ஆ) எதிர்காலத்தில் இதுபோன்ற வெள்ளச் சேதங்கள் ஏற்படா வண்ணம் தடுக்க இயலுமா என்பது குறித்து பொதுப் பணித் துறையினரால் ஆராயப்பட்டு வருகின்றது.

வினா 837—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, தூசக்கப்பட்டி கிராமத்திற்குள் அர்ச்சுனா நதி தண்ணீர் வருவதால் அங்கு ஒரு தடுப்புச் சுவர் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை —

(அ) ஆம்.

(ஆ) ரூ. 12,500-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பொதுப் பணித்துறையின் ஆய்வில் உள்ளது.

[1979 ஏப்ரல் 24

வத்திராயிருப்பு ஒன்றியச் சாலைகளில் ஆக்கிரமிப்பு.

வினா 838—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்ராயிருப்பு ஒன்றியத்தைச் சேர்ந்த சேதுநாராயணபுரம், மீனாட்சிபுரம், அர்ச்சுனாபுரம், கல்யாணபுரம் ஆகிய ஊர்களுக்கு செல்லும் ஒன்றிய ரோட்டை, பட்டா நிலத்துக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருப்பத்தூர் அருகே அறிஞர் அண்ணா நகரில் வீட்டுமனைப் பட்டாக்கள்.

வினா 839—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து சேலம் செல்லும் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா நகரில் உள்ள எததனை வீடுகளுக்கான மனைப் பட்டாக்கள் இன்னும் வழங்கப்படவில்லை?

(ஆ) இவை எப்போது வழங்கப்படும்?

விடை—

(அ) 16.

(ஆ) இந்த 16 வீட்டு மனைகள், சர்வே எண் 340-1-ல் உள்ளன. இந்த நிலம் 'நெடுஞ்சாலை ஓரம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளது. திருவண்ணாமலை செல்லும் சாலையை விரிவுபடுத்த இந்நிலம் தேவைப்படுவதால், வீட்டு மனை பட்டா வழங்க இயலாது.

1979 ஏப்ரல் 24]

ஆலங்காயத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா 840—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆலங்காயத்திலுள்ள வேலைவாய்ப்பு நிலையத்தை, திருப்பத்தூருக்கு மாற்ற உத்தேசமுண்டா?

(ஆ) எப்போது இதை நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வடக்கு கோடைமேல் அழகியன் கால்வாயில் லைனிங்வேலை

வினா 841—திரு. சு. முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் நீர்த்தேக்கம், தாம்பரபரணி நதியின் ஆரம்பத்தில் உள்ள வடக்கு கோடைமேல் அழகியன் கால்வாயில் லைனிங் வேலை செய்வதற்கான ஆய்வு வேலைகள் முடிவு பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாவை ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கோடைமேல் அழகியன் கால்வாயில் மைல் 2—3—330-லிருந்து 2—3—330 வரை லைனிங் செய்வதற்கான ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த வேலையின் மதிப்புத் தொகை ரூ. 1,50,000.

[1979 ஏப்ரல் 24

கீரமங்கலத்தில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி

வினா 842—திரு. த. புஸ்பாராஜு : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சியில் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்கும் அரசு செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) 1978-79-ல் புதுக்கோட்டை மாவட்டக் கல்வி அலுவலகத்தில் கீரமங்கலம் பேரூராட்சியில் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தக்கோரும் மனு பெறப்பட்டு புதிய உயர்நிலைப் பள்ளிக்கென 5 ஏக்கர் நிலமும் பள்ளிக் கட்டிட பங்குத் தொகையாக ரூ. 12,500-ம் பள்ளி பராமரிப்புத் தொகையான ரூ. 10,000-மும் கட்டி மனுவினை உரிய படிவத்தில் அனுப்ப வேண்டும் என பதில் அனுப்பப்பட்டது. மேற்படி கோரிக்கை உரிய படிவத்தில் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து இன்னும் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்படின் மேற்படி பள்ளி துவங்குவது குறித்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வில்லுனி ஆற்றின் குறுக்கே அணை

வினா 843—திரு. த. புஸ்பராஜு : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலூகா, குளமங்கலம் கிராமத்தில் வில்லுனி ஆற்றின் (காட்டாறு) குறுக்கே அணை ஒன்று கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

1979 ஏப்ரல் 24]

விடை—

(அ) மற்றும் (ஆ) : இத்திட்டத்திற்குரிய ரூ. 3.50 லட்சத்திற்கான மதிப்பீடு உள்ளூர் அலுவலர்களின் ஆய்விலுள்ளது. இத்திட்டத்தில் செயல்படுத்துதல் மூலம் 307.93 ஏக்கர் பாசன நிலங்கள் உறுதியான பாசனம் பெறும். இதை தவிர, 27.31 ஏக்கர் பாசன வசதி விடுபட்ட (Gap) நிலங்கள் பாசனத்திற்கு உகந்த நிலங்களாக்கப்படும். கூடுதல் உணவு உற்பத்தி 175.8 டன்களாகும். ஒரு டன்னின் உணவு உற்பத்தியின் விலை சுமார் ரூ. 1,991 ஆகும்.

Milk Powder Unit at Madurai

Q. 844—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) whether the milk powder manufacturing unit at Madurai has commenced production;

(b) if so, whether the milk powder has been marketted in this State; and

(c) the details thereof ?

விடை—

(அ) ஆம். 16-3-75-லிருந்து இயங்கி கிறது.

(ஆ) ஆம்.

(இ) தமிழ்நாட்டிலும் வெளி மாநிலங்களிலும் பால்பொடி விற்பனை செய்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வருடம்.	தமிழ்நாட்டில் (டன்கள்).	வெளி மாநிலங்களில் (டன்கள்).
1975–76	34.1	..
1976–77	464.7	..
1977–78	391.2	744.5
1978–79 (நவம்பர் 78 முடிய)	175.0	30.0
மொத்தம் ..	1,065.0	774.5

பால்பொடியானது 500 கிராம் அட்டைப் பெட்டிகளிலும் 20 கிலோ மற்றும் 25 கிலோ எடை அளவுகளில் பைகளிலும் கீழ்க்கண்ட விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

	கொழுப்பு நீக்கப்பட்ட பால்தூள்.	கொழுப்பு நிறைந்த பால்தூள்.	
	ரூ.	ரூ.	
500 கிராம்	9.40	9.64	(வரி தனி)
25 கிலோ	419.90	..	
20 கிலோ	..	386.98	(வரி தனி)

Madhavaram Milk Project

Q. 845—THIRU SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) whether there was a strike at the Madhavaram Milk Supply Corporation in Madras about the 24th October 1978;

(*b*) the details thereof; and

(*c*) the details of the steps taken to secure adequate milk suppy to the consumers in such times ?

விடை—

(அ) ஆம். 24-10-1978 அன்று இரவு 9 மணியிலிருந்து திடீரென எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தொழிலாளர்கள் சட்ட விரோதமான வேலை நிறுத்தம் செய்தார்கள்.

(ஆ) 24-10-1978 அன்று இரவு சுமார் 9 மணிக்கு திரு. சி. கே. மாதவன் தலைமையிலான தமிழ்நாடு பால்வள நிறுவன தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 8.33 சதவீதம் குறைந்தபட்ச மிகை ஊதியம் (போனஸ்) போதாது என்றும், கூடுதலான அளவு மிகை ஊதியம் வேண்டும் என்றும் கோரிக்கை எழுப்பி சட்ட விரோத வேலை நிறுத்தம் செய்தனர்.

வேலைக்கு குந்தகம் ஏற்பட்டதாலும் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றதாலும் காவல் துறையினரின் உதவி நாடப்பட்டது. அதன்படி, மேற்கண்ட சட்ட விரோத வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்பட்ட 154 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

1979 ஏப்ரல் 24]

மேற்படி வேலை நிறுத்தம் தொழில் தகராறு சட்டத்துக்குப் புறம்பானது. அது சட்ட விரோத வேலை நிறுத்தம். எனவே, சம்பள பட்டுவாடா சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு 25-10-78 அன்று நடந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களுக்கு அன்றைய தினம் ஊதியம் இல்லை என்றும், மேலும் சம்பள பட்டுவாடா சட்டத்தின்படி, சட்டவிரோத வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக ஒரு நாள் சம்பளம் பிடிக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டு அம்முடிவுகள் அமுல்படுத்தப்பட்டன.

(இ) அவ்வாறான சமயங்களில் பாதுகாப்பு படையினரின் (Home guards) உதவியை நாடி பெரும்பாலான பகுதியில் பால் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் தினக்கூலி ஆட்களை நியமித்தும் பண்ணையில் வேலையைத் தொடர்ந்து செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பால் விநியோகம் தடைபெறாமல் நடைபெற்றது.

Course in management for College Principals.

Q. 846—Thiru SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Directorate of Education has organised a course in Management for College Principals at Trichy during the 23rd October 1978; and

(b) if so, the details thereof ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அக்டோபர் 23, 24, 25 தேதிகளில் திருச்சியில் கல்லூரி முதல்வர்களுக்கு, கல்வி சம்பந்தமான திட்டங்கள் குறித்தும், நிர்வாகம் குறித்தும், கல்லூரிக் கல்வி இயக்ககம் ஒரு புத்தறிவுப் பயிற்சி (Orientation Programme) நடத்தியது.

இப்பயிற்சி புதுதில்லியிலுள்ள தேசிய கல்வி திட்ட மற்றும் நிருவாக அலுவலர் கல்லூரியுடன் (in Collaboration with the National Staff College for Educational Planners and Administrators, New-Delhi) இணைந்து நடத்தப்பட்டது. மேற்படி புதுதில்லி கல்லூரியிலிருந்து டாக்டர் சௌடிரி என்னும் ஒரு கல்வி வல்லுநர் வந்திருந்தார். மூன்று நாட்களும் அவர் பயிற்சியில் தக்க விரிவுரைகளை அளித்தார். வடாற்காடு, தென்னாற்காடு,

தஞ்சை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 22 அரசு மற்றும் தனியார் ஆடவர் கல்லூரி முதல்வர்கள் கலந்து கொண்டனர். மகளிர் கல்லூரி முதல்வர்களுக்கு பயிற்சி முகாம் தனியே நடத்தப்பட்டது.

திருவில்லிபுத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலை.

வினா 847—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, திருவில்லிபுத்தூர் நகரில் உள்ள ர. 1369 திருவில்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலை கடந்த 8 வருட காலமாக நட்டத்தில் இயங்கி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

விடை—

(அ) திருவில்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலை 1970–71 முதல் 1977–78 முடிய உள்ள எட்டு கூட்டுறவு ஆண்டுகளில் 1975–76 ஆம் ஆண்டில் மட்டும் ரூ. 46,234·24 லாபம் ஈட்டி அதற்கு முந்திய ஆண்டு வரை ஏற்பட்ட நஷ்டமான ரூ. 3,19,244·66 அய் ரூ. 2,72,990·42 ஆகக் குறைத்தது.

(ஆ) பண்டகசாலையின் வியாபாரத்தை விருத்தி செய்து இழப்பை ஈடு செய்வதற்காக ஒரு மக்கள் அங்காடி துவக்குவதற்கு அப்பண்டகசாலைக்கு ரூ. 14,000 நிதி உதவி அனுமதிக்கப் பட்டு அதில் ரூ. 13,000 கொடுக்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள ரூ. 1,000 எழுத்தர் மானியம் விரைவில் வழங்கப்பட இருக்கிற பண்டகசாலை நட்டத்தில் வேலை செய்வதற்கான காரணம் சரக்கு இருப்பில் ஏற்பட்ட குறைவுதான் என்று தெரிவிக்கப் படுகிறது. மேற்படி சரக்கு இருப்புக் கணக்கு குறைவிற்கு யார் பொறுப்பு என்று நிர்ணயித்து அவர்களிடம் அதை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இராமநாதபுரம் மண்டல இணைப் பதிவாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்,

1979 ஏப்ரல் 24]

முடிகொண்டான் தனியார் உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞானக் கூடம், கருவிகளுக்கு மானியம்.

வினா 848— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் ஒன்றியம் முடிகொண்டான் தனியார் உயர் நிலைப் பள்ளியிடமிருந்து விஞ்ஞான கூடம் கட்டவும், கருவிகள் பெறவும் மானியம் கோரி வேண்டுகோள் வரப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாயூரம் நகராட்சியில் சாலை பராமரிப்புக்கான செலவு.

வினா 849— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் ஆண்டில் சாலை பராமரிப்புக்காக மாயூரம் நகராட்சியில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த வேலைகளுக்கு ?

விடை—

(அ) மற்றும் (ஆ)—

	ரூபாய்.
1. பெரும் வேலைகள் (Major Road works) ..	1,43,101
2. சிறு வேலைகள் (Minor Road works)	2,60,873
3. வெள்ள நிவாரண வேலைகள் ..	3,332
மொத்தம் ..	4,07,306

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 24

மதுரை மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டுள்ளோர்.

வினா 850—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சியை முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தற்போது மொத்தம் எத்தனை பேர் பதிவுசெய்துள்ளனர் ?

(ஆ) அவர்களில் பெண்கள் எத்தனை பேர்கள் ?

விடை—

(அ) மற்றும் (ஆ)—

1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ந் தேதியன்றைய நிலவரப்படி கீழ்க்கண்ட பல்வேறு வகை ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர் :

ஆசிரியர் வகை.	மொத்தம்.	பெண்கள்.
(1)	(2)	(3)
1. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ..	198	167
2. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ..	1,846	977
3. பி.டி., பி.இட். (பட்டதாரி) ஆசிரியர்கள்	916	588
4. தமிழாசிரியர்கள்	396	264
5. உடற்பயிற்சி ஆசிரியர்கள் ..	297	117
6. ஓவிய ஆசிரியர்கள்	48	12
7. கைத்தொழில் ஆசிரியர்கள் ..	449	346
மொத்தம் ..	4,150	2,471

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்,]

(3) தகவல் கோரல்.

பேரவைச் செயலர் குறித்து

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, மிக முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர். மேலவையினுடைய செயலாளர் திரு, ராமசாமி இந்த அவையின் செயலாளராகவும் பணியாற்றுகிறார், ஆகவே. ஒரே செயலாளர் இரண்டு இடங்களிலும் பணியாற்றுகிறாரே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கேயும் இருக்கலாம், இங்கேயும் இருக்கலாம். இடைக்கால ஏற்பாடுதான் இது. ஒரே இரண்டிடத்திலும் செயலாளர் செயல்படலாம், அதிலே ஒன்றும் தவறு இல்லை.

(4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) கிண்டி இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள் கைது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ''கிண்டியிலுள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தில் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12-ம் நாள் முதல் அமைதியான முறையில் இயக்கம் நடத்திக் கொண்டிருக்கும்போது நேற்று 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ம் நாளன்று சுமார் 34 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்று கேட்டு திரு. சி. கோவிந்தராசன், திரு. ரா. கிருஷ்ணன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியம் வாய்ந்தது என்பதைப்பற்றிச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் திரு. சி. கோவிந்தராசன்.

*திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் அதேபோல மற்ற பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் ஊதியம்

மற்றும் பஞ்சப்படி ஒரு புள்ளிக்கு 1·30 பைசாவிலிருந்து அதிகமாக உயர்த்தப்பட வேண்டுமென்று கோரிக்கைகளை 1978-ம் ஆண்டில் இந்தியாவிலுள்ள பொதுத் துறையைச் சேர்ந்த ஊழியர்கள் வைத்து அது சம்பந்தமாக மத்திய அரசு முடியாது என்று சொல்லி அதற்குப் பிறகு அவர்கள் பொது நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் எல்லாம் 1978 ஆம் ஆண்டிலே ஜூன் மாதத்திலே வேலை நிறுத்தம் நடத்த இருந்தார்கள்''. இதற்குப் பிறகு மத்திய அரசைச் சேர்ந்த நிதியமைச்சர், தொழிலாளர் நலத் துறை அமைச்சர், பெட்ரோலியம் அமைச்சர், தொழில் அமைச்சர் ஆகியோர் சேர்ந்து தொழிற்சங்க வாதிகளோடு பேசி சுமுகமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம், ஊதிய உயர்வுக்கு ஏற்பாடு செய்வோம் என்று சொல்லி வேலை நிறுத்தத்தைக் கைவிடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அதன் காரணமாக அவர்கள் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் தேதி நடத்துவதாக இருந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லி இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தினார்கள். அந்தத் தொழிற்சங்கம் அதைத்தான் கோரியது. அதை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையிலே அமைதியான முறையிலே அவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். மத்திய அரசு கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசை வலியுறுத்துவதற்குப் பதிலாக மாநில அரசு திடீரென்று தொழிற்சாலைக்குள்ளே சென்று அமைதியான முறையிலே உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்த தொழிலாளர்களையும், சங்க நிர்வாகிகளையும் 34 பேர்களை கைது செய்திருக்கிறது. தொழிற்சாலைக்குள் சென்று முக்கியமானவர்களை கைது செய்து இருக்கிறார்கள்.

இங்கே முக்கியமான இயந்திரங்கள் இருக்கின்றன. தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தால் என்ன ஆகும் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களை கைது செய்யப் பயன்படுத்தப்பட்ட சட்டம் என்ன என்றால் பிரிட்டிஷார் காலத்திலே கையாளப்பட்ட சட்டம். தேசிய இயக்கத்தால் வெறுத்து ஒதுக்கித் தள்ளப்பட்ட சட்டம் கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் ஆக்ட்டின் செக்ஷன் 7-ஏ-யின் கீழ் கைது செய்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின்படி கைது செய்து பூந்தமல்லி கோர்ட்டுக்கு கொண்டு போயிருக்கிறார்கள். நான்பெயிலபிள் அபன்ஸ் என்ற முறையிலே போட்டிருக்கிறார்கள். கோர்ட்டிலே கேட்டால் எப்.ஐ.ஆர். வரவில்லை என்று சொல்கிறார்கள். போலீஸார் அனுப்பி விட்டோம் என்று சொல்கிறார்கள். கட்டே தவறி விட்டது என்று சொல்கிறார்கள். அவர்களை இப்படி அலைக்கழிப்பு செய்து கொண்டிருக்கிற

நிலைமை தான் இருந்து கொண்டு இருக்கிறது. சுமுகமாக அதைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவர்களை நான்—பெயிலபிள் அபன்ஸ் என்ற முறையிலே போட்டு கைது செய்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அது முறையாகாது, சரியும் ஆகாது, இந்தக் காரணத்தினால் இன்றைக்கு இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் மட்டுமல்ல மற்ற பொதுத் துறை நிறுவனங்களும் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம், நெய்வேலியில் உள்ள நிறுவனங்களில் வேலை பார்க்கக்கூடிய தொழிலாளர்கள் மத்திய அரசு ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே வேலை நிறுத்தம் இப்படிப்பட்ட எல்லா நிறுவனங்களிலும் பரவும் நிலை உள்ளது. ஆகவே அதை நிறைவேற்றுவதற்கு வழிவகை காணக்கூடிய முறையிலே அதைப்பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் பரங்கிமலைக் காவல் நிலைய எல்லைக்குள் இருக்கிறது. இந்த நிறுவனத்தில் 425 நிறுவன அலுவலர்கள் உட்பட 1,980 பேர்கள் வேலை செய்கிறார்கள். சி.ஐ.டி.யு-வைச் சார்ந்த இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் தொழிலாளர் சங்கம் என்ற ஒரு தொழிற்சங்கமும், தி.மு.க-வைச் சார்ந்த இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் பொதுத் தொழிலாளர் சங்கம் என்ற ஒரு தொழிற்சங்கமும் ஆக இரு சங்கங்கள் இருக்கின்றன. நிறுவன அலுவலர்களுக்காக தனியே ஒரு சங்கம் இருக்கிறது. சி. ஐ. டி. யு. சங்கத்தில் ஆயிரம் பேர்களும், தி. மு. க. சங்கத்தில் 355 பேர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

சம்பளத்தை மாற்றியமைக்கக் கோரி, சி. ஐ. டி. யு. சங்கத்தைச் சார்ந்தவர்கள் 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ம் நாளிலேயிருந்து, உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்கிறார்கள். தி.மு.க. சங்கத்தைச் சார்ந்தவர்கள் 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ம் நாளிலேயிருந்து அந்த வேலை நிறுத்தத்தில் சேர்ந்தார்கள். நிறுவன அலுவலக ஊழியர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 14-ம் நாளிலேயிருந்து அந்த வேலை நிறுத்தத்தில் சேர்ந்தார்கள். சி.ஐ.டி.யு. வைச் சார்ந்த வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள், சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் நிர்வாக அலுவலர்களைத் தடுத்தும் தாக்கியும் வந்தார்கள். 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ம் நாளன்று அலுவலகக் கண்காணிப்பாளர் தபால் நிலையத்தில் இருந்து தபால்களை எடுத்துக் கொண்டு தொழிற்சாலைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபொழுது அர்ச்சுனன் என்பவரும் மற்றும் சிலரும் அவரைத் தாக்கினார்கள்,

இதன் காரணமாக, பரங்கி மலைக் காவல் நிலையத்தில், இ. பி. கோ. 147 மற்றும் 349 பிரிவுகளின் கீழ், குற்ற எண் 525/79-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ம் நாளன்று காலை 9-30 மணியிலிருந்து 12-30 மணிவரை. சி. ஐ. டி. யூ.-வைச் சார்ந்த நந்தகோபால் என்ற தொழிலாளரும் மற்றும் 33 தொழிலாளர்களும் சுமார் 15 தொழில் நுட்ப உதவியாளர்களை 'கெரோ' செய்தனர். இதன் பேரில் அந்த 34 பேர்களும் கைது செய்யப்பட்டு, பரங்கிமலை காவல் நிலையத்தில், இ. பி. கோ. 147, 342, 586 பிரிவுகளின் கீழும், Criminal Law Amendment Act 7 (i) (a)-ன் கீழும், குற்ற எண். 530/79-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நிலைமை அமைதியாக இருக்கிறது.

எனவே, இது குறித்து விவாதிக்க, பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

(ஆ) பல்வேறு மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களின் விவசாயப் பெருங்குடி மக்கள் கைது செய்யப் பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு—

திரு. டி. பி. எம். பெரியசாமி.

திரு. செ. சதாசிவம்.

திரு. நா. சுந்தரராஜ்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.

திரு. என். வரதராஜன்.

திரு. ரா. கிருஷ்ணன்.

திரு. ரா. உமாநாத்.

திரு. சோ. அழகர்சாமி.

திரு. பொ. உத்திராபதி.

திரு. செ. சிவசாமி,

திரு. ஜே. ஜேம்ஸ்.

1979 ஏப்ரல் 24] [பேரவைத் தலைவர்]

திரு. எம். ஏ. லத்தீப்.

திரு. மு. அம்பிகாபதி.

திரு. ரா. மார்க்கபந்து.

திரு. ப. சந்திரன்.

திரு. சி. கோவிந்தராசன்.

திரு. வி. கே. கோதண்டராமன்.

திரு. கு. ரமணி.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

திரு, ஒ. சோ. வேலுச்சாமி.

திரு. அ. சுவாமிதாஸ்.

திரு. ர. ஜெபமணி.

திரு. பொ. விஜயராகவன்.

ஆகிய 25 பேர்கள் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்.

திரு. நா. சுந்தரராஜ்: பாயின்ட் ஆஃப் ஆர்டர். இதிலே, வெறும் கைது மட்டும்தான் இருக்கிறது. ஆனால், இன்றைய தினம் கடைசியாகக் கொடுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே துப்பாக்கிச் சூடு குறித்தும் இருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைக்குக் கொடுத்ததை நான் எடுத்திருக்கிறேன். அதை ஒட்டி, இன்றைக்கு நீங்கள் பேசிக் கொள்ளலாம். இது ஒன்றும் பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

ஆகவே, இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—20)

திரு. டி. பி. எம். பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 20 பேர்களுக்கு மேல் பேசவிருக்கிறார்கள், அதனால் எவ்வளவு சுருக்கமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்லவும்.

திரு. டி. பி. எம். பெரியசாமி : நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவசாயிகள் பிரச்னை காரணமாக 21 ஆம் தேதியும், 22 ஆம் தேதியும் விவசாயிகளின் பிரதிநிதிகளை அங்கீகரிக்கிற தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு கிராமங்களில் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 23 ஆம் தேதி நடைபெற்ற பந்தில் நேற்றையதினம் மாவட்ட நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் துப்பாக்கிச்சூடு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அந்த வன்முறைச் செயல்களுக்கு யார் காரணம், அதற்கு மூல காரணம் என்ன என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். விவசாயிகள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி பல ஆண்டுகாலமாக அரசுக்கு அவர்கள் கோரிக்கைகள் கொடுத்து வலியுறுத்தி வந்தார்கள். அந்த கோரிக்கைகள் இதுவரையில் எடுக்கப்படவில்லை, அரசுக்கு என்னவோ கால தாமதம் ஆகிறது. அதை விரைவில் செய்யாமல் அரசு ஏனோ காலதாமதத்தை கைக்கொள்கிறது.

விவசாயிகள் மத்தியில் இருக்கக்கூடிய ஏழ்மையை, இல்லாமையை பயன்படுத்தி குறிப்பிட்ட ஒரு சாரார், குறிப்பாக நாராயணசாமி நாயுடு என்பவர் விவசாயிகளிடம் இருக்கிற ஏழ்மையையும், இல்லாமையையும் பயன்படுத்தி, இந்த அளவு அந்த மக்களை தவறான பாதைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார் என்பதை நான் சொல்லிக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அவர் ஆங்காங்கு பேசுகிறபோது அந்த விவசாயப் பெருமக்களை, அவர்களின் உள்ளத்தை, உணர்வை தூண்டிவிடக்கூடிய அளவுக்கு அவர்பேச்சுக்கள் விளங்கிவருகிறது என்பதை இந்த அமைச்சர் அவையும், அரசும் உணர்ந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்றையதினம் நடைபெறுகிற பந்த், வாகைக்குளத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டின் கண்டனத்தை ஒட்டியே நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு ஏன் நடைபெற்றது என்று எண்ணிப்பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். வாகைக்குளம் பக்கத்தில் இருக்கிறது, பூளாங்காரி என்னுமிடத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு அந்த நாராயணசாமி நாயுடு, விவசாயிகள் தாங்கள் கட்ட வேண்டிய வரியை வசூலிப்பதற்காக வருகிற அதிகாரிகளிடத்தில், கூட்டுறவுத்துறையில், கடன் பாக்கிக்காக வசூலிக்க வருகிற அதிகாரிகளிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறுவதற்கு பதிலாக, விவசாயிகளின் தலைவர் என்று விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிற அந்த நாராயணசாமி நாயுடு, வருகிற அதிகாரிகளின் தலையைச் சீவுங்கள், கையை வெட்டுங்கள் என்கிற முறையில் அவர்களை வன்முறையில் தூண்டிவிடுகிறார். அதைப்பற்றி அரசுக்குச் சொல்ல வேண்டிய அதிகாரிகள் சொன்னார்களோ, சொல்லவில்லையோ தெரியவில்லை. அந்த வாகைக்குள வட்ட மக்களின் மன நிலையை அரசுக்குச் சொல்லாத கார

ணத்தினால்தான் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அதைத் தொடர்ந்து அங்கே நடைபெற்ற பந்தின் விளைவாக துப்பாக்கிச் சூடுகளும், அந்தத் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பந்த் நடைபெற்று அந்த பந்த்தின் காரணமாக இன்று இத்தகைய துப்பாக்கிச் சூடுகளும், காவல் துறையைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிற சம்பவமும் நடைபெற்றிருக்கிறது. அந்தக் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சிக்கு யார் காரணம் என்பதை கண்டு பிடித்தாக வேண்டும். வன்முறைக்கு யார் தூண்டினார்கள் என்பதை கண்டு பிடித்தாக வேண்டும்.

இன்றைய தினம் நாராயணசாமி நாயுடு அவர்கள் பேசுகிற போது தான் பந்தை வித்டிரா பண்ணுகிற போது சில சமூக விரோதிகள் அந்த சப்-இன்ஸ்பெக்டரை கொலை செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். உண்மையிலேயே ஒரு இயக்கம் நடத்துவதற்கு தகுதி வாய்ந்த தலைவராக இருந்தால் இப்படிப்பட்ட வன்முறைகளை தூண்டிவிடும் அளவிலே பேச மாட்டார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட சமூக விரோதியை, தங்கள் ஏழ்மையை, இல்லாமையை, அறியாமையை பயன்படுத்துகிற அந்த நாராயணசாமி நாயுடுவை நம்பிக்கொண்டு நமது விவசாய பெருமக்கள் அந்த இயக்கத்தில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த இயக்கத்தில் சேர்வதற்கு காரணம் வாங்கிய கடனை கட்ட வேண்டிய கட்டாய நிலைமை. வரிகட்ட முடியாத நிலைமை. உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு நியாயமானவிலை கிடைக்கவில்லை. இவைகளையெல்லாம் அரசு முன்னதாகவே கவனித்து காலதாமதம் செய்யாமல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்குமேயானால் இது போன்ற அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்க முடியாது. இப்பொழுது தமிழகத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டார் என்ற நிகழ்ச்சிக்கு சமூக விரோதிகள் காரணம் என்று அந்த நாராயணசாமி நாயுடு சொல்லி தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார். இப்படிப்பட்ட ஒரு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள், மணியாகிவிட்டது.

திரு. டி. பி. எம். பெரியசாமி: எனவே, இப்படிப்பட்ட தேசவிரோத சமூக விரோத கொள்கைகளை யார் கைக் கொண்டிருக்கிறார்கள், யார் விவசாயிகளை வன்முறையில் தூண்டுகிறார்கள், விவசாயிகளுடைய நியாயமான தேவைகள் என்ன என்பதைபற்றியெல்லாம் அரசு சிந்திக்கவேண்டும், மக்கள் சிந்திக்க வேண்டும். எனவே, இது பற்றி தமிழகத்தில் நிலவும் பதட்ட நிலை பற்றி விரிவாக விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழ் நாட்டில் பல பகுதிகளில் பந்த் என்ற பெயராலே விவசாயிகள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஒரு இடத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். மற்றொரு பகுதியில் துப்பாக்கிச் சூட்டினால் விவசாயி ஒருவர் செத்து இருக்கிறார். இது எப்படி நடக்கிறது, ஏன் நடைபெறுகிறது என்பதைப் பற்றி அரசு சிந்தித்துப் பார்த்ததா என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. விவசாயிகள் ஒரு அமைதியற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். அரசு அதற்கு தீர்வு காணவில்லை. அதற்கு எப்படியாவது அரசை வற்புறுத்த வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு விவசாயியிடத்திலும் இருக்கிறது. அந்த எண்ணத்தை அரசு புரிந்து கொண்டு காலத்தில் தீர்த்து வைக்காததன் விளைவு தான் இந்தமாதிரி சம்பவங்கள் நடப்பதற்கு காரணம் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்த பந்தை நடத்திய விவசாய சங்கம் இந்த நாட்டில் இருக்கும் அரசியல்வாதிகள் எல்லாம் மோசமானவர்கள் என்று பேசக்கூடியவர்களிடத்தில் இருக்கிறது. இந்த பந்தை நடத்தும் விவசாய சங்கம், நாட்டிலே இருக்கிற மற்ற விவசாயச் சங்கங்களின் தலைவர்களைக் கலந்து கொண்டு இந்த பந்தை நடத்தவில்லை. எத்தனையோ விவசாய சங்கங்கள் இருந்தாலும் அவற்றைக் கலந்து கொள்ளவில்லை. அரசியல் வாதிகள் ஒரு நன்மையும் செய்ய மாட்டார்கள், நான் தான் உங்களுக்கு கண்கண்ட கடவுளாக இருந்து கொண்டு இருக்கிறேன், என் பின்னால் வாருங்கள், அரசு அதிகாரிகளைக் கண்டால் வெட்டு, குத்து என்று இம்மாதிரி பேசுவதற்கு ஒரு அமைப்பு ஏற்படுவதற்கு அரசுதான் காரணம். அரசு காலத்தோடு தக்க நடவடிக்கை எடுத்து இருந்தால் விவசாயிகள் அந்தப் பக்கம் போய் இருக்க மாட்டார்கள். எத்தனையோ விவசாயச் சங்கங்கள், சி.பி.ஐ., சி.பி.எம்., காங்கிரஸ் என்று பல்வேறு கட்சிகள் விவசாய சங்கங்கள் வைத்து இருக்கின்றன. அவைகளையெல்லாம் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அவர் அந்த விவசாயிகளிடத்தில் சொல்வது, நீங்கள் எதுவுமே அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டாம். இம்மாதிரி மோசமான நிலை வளர்வதற்கு, வளரவிடுவதற்கு அரசுதான் காரணம் எனபது என்னுடைய குற்றச்சாட்டு.

காலத்தோடு இந்த அரசு அதற்குத் தீர்வு கண்டு இருந்தால் இந்த மாதிரி ஏற்பட்டு இருக்காது. எத்தனையோ சங்கங்கள் இருந்தாலும், விவசாயிகள் மத்தியில் தங்களுக்கு எந்த அளவிற்குச் செல்வாக்கு இருக்கிறது என்பதை காட்டத்தான் இந்த பந்த் இப்போது நடத்தியிருக்கிறார்கள். 4 ஆம் தேதி வாகைக்குளத்தில் நடந்ததற்கு 20 நாள் கழித்து, 23 ஆம் தேதி ஏன் பந்த் நடத்த வேண்டும். விவசாயிகள் மத்தியில் ஏராளமான சங்கடங்கள் இருக்கின்றன. கடன் தொல்லை, மின்சாரப் பற்றாக்குறை,

1979 ஏப்ரல் 24] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

டீசல் கிடைக்காதது என்று இப்படி விவசாயிகள் மத்தியில் ஏராள மான பிரச்னைகள் இருக்கின்றன. அந்தக் கடன் தொல்லைகளில் இருந்து மீள முடியாமல் அந்த விவசாயிகள் தத்தளித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பிரச்னைகளுக்கு அரசு ஏன் துரிதமான தீர்வு காணவில்லை? உயர்மட்டக்குழு போட்டு இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த உயர்மட்டக் குழுவோடு உட் கார்ந்து விவாதித்து, இதற்கு ஒரு விரைவான முடிவை அரசு எடுத்து இருந்தால் இந்தப் பிரச்னை இந்த அளவிற்கு வளர்ந்து இருக்காது. ஏன் அதை அரசு செய்யவில்லை என்பதை என் னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுடைய போராட் டம் நியாயமானது. அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதும் நியாயமானது. அந்த நிலையை அரசு உணர்ந்து இருக்க வேண்டும். மேலும், அரசியல் வாதிகள் நம்மை கவனிக்க மாட்டார்கள்போல் இருக்கிறது என்ற எண்ணம் விவசாயிகள் மத்தியில் விழுந்து விட்டது. அதனால் தான் இம்மாதிரி சம்பவங் கள் நடந்து இருக்கின்றன. விவசாயிகள் வன்முறையில் செல்ல மாட்டார்கள். ஆனால் இந்த முறையில் அவர்கள் வன்முறையில் சென்றதால் ஒரு எஸ்.ஐ. கொல்லப்பட்டு இருக்கிறார். அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. விவசாயிகள் பிரச் னையை நியாயமான முறையில் கவனித்து இருந்தால் இந்தமாதிரி போய் இருக்க மாட்டார்கள். அவர்களுடைய உணர்வுகளை தூண்டிவிட்டு இருக்கிறார்கள். அதனுடைய விளைவுகள்தான் இவை. ஆகவே, இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாக அரசு இதற்கு முடிவு காண வேண்டும். இந்தப் பிரச்னையில் தீர்வு காண வேண்டும். ஆகவே, அது குறித்து விரிவாக விவா திக்க, பல்வேறு அம்சங்களை அது குறித்து எடுத்துச் சொல்ல இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. ரா. உமாநாத்: அவைத் தலைவரவர்களே, 5,000-க்கு மேற்பட்டவர்கள் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரால் கைது செய்யப்பட்டிருப்பதையும், நேற்று 5 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி உள்ளதையும், பல இடங்களில் கண்ணீர் புகை வெடிக்கப்பட்டதையும், குண்டாந்தடியடி நடைபெற்றதை யும் எங்கள் கட்சியின் சார்பில் வன்மையாக நான் கண்டிக்கிறேன்.

துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதால் ஒரு இளைஞர் இறந்திருக்கிறார். அது மிகவும் வருந்தத்தக்க ஒன்று. துப்பாக் கிப் பிரயோகம் தொடர்பாக நடைபெற்ற மோதல்களின் விளை வாக ஒரு சப் இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டிருக்கிறார், அதுவும் வருந்தத்தக்கது. சில பிரச்சனைகள் வரும்போது ஆயிரக்கணக்கானவர்களை கைது செய்வது, தடியால் அடிப்பது. துப்பாக்கியால் சுடுவது என்பது சமீபகாலத்தில் நமது அரசின்,

வழக்கமாகிவிட்டது. விவசாயிகள் ஊர்வலம் வந்து, கடைகளை அடைக்கச் சொல்வதில் என்ன தப்பு? அடைக்கச் சொன்னால் அவர்கள் அடைத்துவிட்டுப் போகிறார்கள். அப்படியானால் அந்த ஒரு நாளில் பிரச்சனை முடிந்துவிடும். அப்படி பிரச்சனை தீர்ந்து விட்டால், இத்தனை சாவு, விபத்துக்களைத் தவிர்த்து இருக்கலாம் அல்லவா? அதை இந்த அரசு உணரவில்லை என்பது இந்த விவகாரத்திலிருந்து தெரிகிறது.

விவசாயிகள் மத்தியில் ஒரு கொந்தளிப்பை மீண்டும் ஏற்படுத்தக் கூடிய சம்பவமாக இது இருக்கிறது. வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு. அதற்கு கண்டனம் தெரிவிக்க நடத்தப்பட்ட பந்த் இது. ஏழை விவசாயிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் உண்மையான பிரச்சனைகள் உண்டு என்பதற்கு வாகைக்குளம் சம்பவம் எடுத்துக்காட்டு. அதுதான் இதற்கும் பிரச்சனையாக இருக்கிறது. விவசாயிகளின் பிரச்சனையைத் தீர்த்து வைக்க, ஏழை விவசாயிகள் நடுத்தர விவசாயிகள் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் நாராயணசாமி நாயுடு வகையறாக்களுக்கும் அவர்களைச் சேர்ந்த நிலப்பிரபுக்களுக்கும் அக்கரை இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டுக்கு நண்பர் நாராயணசாமி முதலைக் கண்ணீர் வடிக்கிறார் என்பதும் எங்களுக்குத் தெரியும். விவசாயிகள் கூலிப் பிரச்சனை, அதைப் போன்ற மற்ற பிரச்சனைகள் வரும்போது இதே நாராயணசாமி இதே போலீசைக் கொண்டு சுடச்சொல்லவும் தயங்கமாட்டார் என்பதும் எங்களுக்குத் தெரியும். இதையெல்லாம் நாங்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை புரிந்துகொண்டு, ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் பிரச்சனைகளை உணர்ந்துகொண்டு, அதற்கு தீர்வு காண அரசாங்கம் தவறி விட்டதால் அவர்களிடையே ஒரு வெடிப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக ஏழை விவசாயிகளை சுடுவது என்ற நிலைக்கு கொண்டு போய்விட்டிருக்கிறது. அதனால் நிலப்பிரபுக்களை ஏழை விவசாயிகளிடம் இருந்து தனிமைப்படுத்துவதற்குப் பதிலாக நிலப்பிரபுக்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் இடையே பிணைப்பு அதிகமாகியிருக்கிறது.

போராட்டங்கள் வரும்போது அதன் காரணத்தை உணர்ந்து, தகுந்த பரிகாரம் காணாமல், தடுப்புக்காவல் சட்டமும், குண்டாந் தடியடியும், கண்ணீர் புகையும், துப்பாக்கிச்சூடும், பிரயோகிக்கப் படுகின்ற நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அறைகூவல் விடுகிறவர்களையும் பிடிக்கிறார்கள்; அறைகூவல் விடாதவர்களையும் பிடிக்கிறார்கள்; பல்வேறு அரசியல் கட்சிக்

காரர்களையும் பிடிக்கிறார்கள். அரசாங்கம் இப்படி எல்லோரையும் பிடித்து உள்ளே போட்டுவிட்டால் எல்லாம் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறது Its reckless attitude towards human liberty and freedom என்றுதான் நான் அதைச் சொல்வேன் இந்த போக்கை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். சப் இன்ஸ்பெக்டர் கொலை நடைபெற்றது சமூகவிரோத சக்திகளின் செயல்தான் என்று நண்பர் நாராயணசாமி சொல்லி, அந்தப் பொறுப்பிலிருந்து தான் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் தன்னுடைய பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பல்வேறு இடங்களில் அவர் கூட்டம் போட்டு பேசவில்லையா? குத்து, வெட்டு, என்று கூட்டங்களிலே பேசவில்லையா? அந்தமாதிரி தூண்டக்கூடிய முறையில் நோட்டீஸ் வெளியிடவில்லையா? ஆகவே, தன்னுடைய பொறுப்பிலிருந்து தான் தப்பித்துக்கொள்ள முயற்சி செய்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்படிப்பட்ட சம்பவங்கள் மேலும் நடைபெறாத வகையில் இந்த அரசாங்கம் இனிமேலாவது ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் பிரச்சனைகளை உணர்ந்து, அந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண தக்க நடவடிக்கை எடுத்து, ஏழை, எளிய நடுத்தர விவசாயிகளையும் நிலப்பிரபுக்களையும் தனிமைப்படுத்த வேண்டும்; துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக நீதி விசாரணை நடத்த வேண்டும்; தடுப்புக்காவல் நடவடிக்கையால் சிறையில் அடைக்கப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் தெளிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சனை குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த விவசாயிகள் பிரச்சனை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் மாரிமுத்து அவர்களும், உமாநாத் அவர்களும் சொன்ன விஷயங்களோடு நானும் ஒருசில விஷயங்களைச் சொல்ல முன்வருகிறேன்.

இந்தப் பிரச்சனையை இவ்வளவு மோசமான நிலைமைக்கு முத்தவிட்டது இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைதான் என்று நான் முதலிலே குற்றஞ்சாட்டுகிறேன். இது தொடர்ந்து, நீண்ட நாட்களாக விவசாயிகள் மத்தியில் இருக்கிற ஒரு பிரச்சனை. விவசாயிகள் தங்களுடைய அதிருப்தியைக் காட்டும் வகையில் உண்ணாவிரதம், பொதுக்கூட்டம், மகஜர், நேரடியாக அமைச்சர்களைப் பார்ப்பது—அத்தனைக்கும் பிறகுதான் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக இத்தகைய நடவடிக்கை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

களை எல்லாம் மேற்கொண்ட பிறகும், கடன் நிவாரணம், விளை பொருளுக்கு நியாயமான விலை போன்ற முக்கியமான கோரிக்கைகள் கூட நிறைவேற்றப்படாத காரணத்தால் இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

விவசாயிகள் பிரச்சனையில் இப்படி காலம் கடத்திக்கொண்டு போவதால் அவர்களுக்கு ஒரு பயம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த அசம்பிளி முடிந்தவுடன் மின்சாரக் கட்டணம் வசூல் செய்தல், கடன் வசூல், ஜப்தி நடவடிக்கை போன்றவைகளில் அரசாங்கம் தீவிரம் காட்டும் என்ற மிகப்பெரும் பயம் அவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

கடந்த காலத்தில் அப்படித்தான் ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆகவே முதலில் ஜப்தி நடவடிக்கைகள் இருக்காது என்று சொல்லிவிட்டு அசெம்பிளி முடிந்த உடனே எல்லா இடங்களிலும் ஜப்தி நடவடிக்கைகள் நடந்தது. அப்போது சிறு சிறு விவசாயிகளின் வீட்டில் உள்ள பொருள்களை எல்லாம் எடுத்து ஏலம் விட்டு ஜப்தி நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகள் இன்றையதினம் பயத்திலே இருக்கின்றார்கள். ஆகவே இந்தமாதிரியான பிரச்சனைகளுக்கெல்லாம் அதாவது விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய நியாயமான நிலையில் அவர்களுடைய கடன் சுமை பற்றியும், அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு தக்க விலை கிடைக்க வேண்டியது பற்றியும் இன்றைக்கு மிகப்பெரிய அளவில் போராட வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே அதற்கெல்லாம் நிவாரணம் கொடுக்காமல் தொடர்ந்து அவர்கள் வைக்கின்ற கோரிக்கை கவனிக்கப்படாமல் இருக்கின்றது. உயர் மட்டக்குழு ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறதுஎன்று சொல்லி காலம் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே மிகப்பெரிய நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுவிடும் என்ற பயம் விவசாயிகளுக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதாவது அசெம்பிளி முடிந்த பிறகு 30-ம் தேதிக்குப் பின் என்ன நடவடிக்கை எடுக்கப்படுமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கின்றது. ஆகவே அரசாங்கத்தார் சரியான ஒரு பதிலைச் சொல்ல வேண்டும். நிவாரணம் சம்பந்தப்பட்ட வகையில் என்ன செய்யப்போகிறோம் என்பதைச் சொல்ல வேண்டும். அதுபோல் உற்பத்திப் பொருளுக்குத் தக்க விலை கிடைப்பதற்கு என்ன செய்யப்போகிறோம் என்பதையும் சொல்ல வேண்டும். முன்பு எதிர்க்கட்சிகள் மற்றும் எல்லோரும் சேர்ந்து கூடிப் பேசினோம். அப்படியும் அரசாங்கம் எந்தவிதமான தீர்வும் காணவில்லை. 3-ம் தேதி வரை மின்சாரத் துண்டிப்பு இருக்காது என்று சொல்லிவிட்டு இன்றைக்கு 30-ம் தேதி வரைக்கும் மின்சாரத் துண்டிப்பு செய்யாமல் இருக்கிறார்கள் என்றால்

1979 ஏப்ரல் 24] [திரு. சோ. அழகர்சாமி]

அதற்குக் காரணம் அசெம்பிளியிலே எதிர்கட்சிக்காரர்கள் ஆளுக்கொன்று கேட்பார்களே, அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டுமே என்பதுதான். ஆகவே அசெம்பிளி முடிந்த பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப்படுமோ என்கின்ற அச்சம் விவசாயிகளுக்கு இன்றையதினம் இருக்கிறது.

ஒவ்வொரு கட்சிக்கும் விவசாயிகள் சங்கம் இருக்கின்றது அவர்களும் கோரிக்கை வைக்கிறார்கள். ஆனால் அவைகளில் சற்று வித்தியாசம் இருக்கலாமே ஒழிய எப்படி இருந்தாலும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாக வேண்டும். ஆகவே அது சம்பந்தமாக தீர்வு காண்பதற்கும், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஒன்றும் கிடையாது. இன்றைக்கு விவசாயிகளுக்கு மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. தாங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொடர்ந்து பல ஆண்டுகளாக இருந்து வந்த கடன் சுமை இன்றைக்குப் பெரிய சுமையாக வந்துவிட்டிருக்கின்றது. கடனை அடைக்கவில்லை என்றால் தங்கள் உடமைகளை இழந்துவிட நேரிட்டுவிடுமோ, அத்தனையும் போய்விடுமோ என்ற பயம் அவர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கின்றது. இன்று விவசாயிகள் பிரச்சினையில் தக்க நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலை இருப்பதன் காரணமாக விவசாயிகள் தங்கள் கஷ்டத்தைப் போக்குகின்ற வழியினைத் தேடுகின்ற வகையில் இலட்சக்கானவர்கள் எங்கு பார்த்தாலும் கூடுகிறார்கள். அர்த்தால் செய்கிறார்கள். அவர்கள் அந்த அர்த்தாலை நடத்துவதற்கு அனுமதி கொடுத்துவிட்டால் என்ன? மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூடக் குறிப்பிட்டாரே. இன்றைக்கு மற்றவர்கள் எல்லாம் கோரிக்கை வைக்கிறார்கள், பஸ் ஓடாமல் இருக்கின்றது பல நிலைமைகள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு மட்டும் அர்த்தால் நடத்துவதற்கு ஏன் அனுமதி கொடுக்கக்கூடாது. மற்ற அர்த்தால்கள் எல்லாம் நடக்கவில்லையா? அதில் எல்லாம் அனுமதிக்கவில்லையா?

இந்திரா காந்தி அம்மையார் அவர்களைக் கைது பண்ணும் போது இங்கு ஏற்பட்ட நிலைமைகளைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தது இந்த அரசாங்கம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் வேறு பிரச்சினைகளுக்குப் போகக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசியதைப்போல் பிரச்சினையைப் பற்றிமட்டும் சுருக்கமாகப் பேசுங்கள்.

[1979 ஏப்ரல் 24

திரு சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் மற்ற அர்த்தால்களுக்கெல்லாம் அனுமதி கொடுக்கப்படுகிறதே என்பதைச் சொல்வதற்காகத்தான். அன்றையதினம் கூட நான் ஒரு மாநாட்டிற்குச் செல்ல வேண்டி இருந்தது. அப்போது ஒரு பஸ் கூட கிடையாது. எல்லா பஸ்களும் நின்றுவிட்டன. ஆகவே ஒருநாள் முழுக்க நான் அங்கேயே இருந்துவிட்டு மறுநாள் தான் வந்தேன். ஆகவே அர்த்தால் என்று வருகின்றபோது மக்களிடம் அர்த்தால் வேண்டாம் என்று வேண்டுக்கோள் விடுங்கள்.

அடுத்து இன்றைக்கு விவசாயிகள் போராட்டத்தின் விளைவு இந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கின்றது, இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதற்கெல்லாம் அவர்கள் மட்டும் பொறுப்பல்ல. அரசாங்கமும் பொறுப்புதான். விவசாயிகள் பிரச்சினையை ஏன் இன்னும் தீர்க்காமல் இருக்கிறீர்கள்? இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் வளர்வதற்குக் யார் காரணம்? பிரச்சினையை விரைவாகத் தீர்க்கவேண்டும். அவர்களை அழைத்துப்பேச வேண்டும் என்கின்ற நிலையை விட்டுவிட்டு போலீஸை வைத்து அடக்கிவிடலாம் என்ற எண்ணம் அரசிற்கு ஏற்பட்டிருக்கின்றது. விவசாயிகள் தானே, சுட்டுப்பொசுக்கி விட்டால் பேசாமல் இருப்பார் என்று எண்ணப்படுகிறது. அப்படிப்பட்ட எண்ணம் இல்லை என்றால் வாகைக்குளத்திலே 5 பேர் துப்பாக்கிப் பிரயோகத்தினால் இறந்திருப்பார்களா ? இரண்டு பெண்கள் உயிரிழந்திருக்க வேண்டுமா ?. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ள பிரச்சினைப் பற்றி மட்டும் சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: எப்படி இருந்தாலும் ஒத்தி வைக்கப் போவதில்லை. அதற்காகத்தான் இதை எல்லாம் சொல்ல வேண்டி இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இப்படிப் பேசுவது சரியல்ல.

.

திரு. சோ. அழகர்சாமி: வாகைக்குளத்திலே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதே. அதுமாதிரி எல்லாம் செய்ய வேண்டியது அவசியம்தானா ? அங்கே அந்த அளவுக்கு அவசியமே இல்லை என்று சொல்லப்படுகிறதே. அத்தனைக் கட்சிக்காரர்களும் சொல்கிறார்களே துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று.

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இப்படியே வேறு பிரச்சினைகளைக் குறித்து பேசி நேரத்தை அதிகமாக எடுத்துக் கொண்டிருந்தால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டி வரும். ஆகவே சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: ஆகவே இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தவறி இருக்கிறது. நேற்று நடந்த அர்த்தாலின் போது பலவிதமான இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்களும், கண்ணீர் புகைக் குண்டு வீச்சுகளும் நடைப்பெற்றிருக்கின்றன. இந்த நெருக்கடியை, 30ஆம் தேதி வரைக்கும் காத்திருக்காமல் உடனடியாகத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ள வேண்டும். பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் இதை விட மோசமான நிலைமை ஏற்பட்டுவிடக்கூடும்.

அங்கே போராட்டம் நடத்துவதற்கு......

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்—சொன்னதையே சொல்லிக்கொண்டு எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்கிறீர்கள் ?

திரு. சோ. அழகர்சாமி: ஆகவே, இந்தப் பிரச்னையை இந்த அசெம்பிளி கூட்டம் முடிவதற்குள்ளாக, 30ஆம் தேதிக் குள்ளாக, அந்த விவசாயிகளைக் கூட்டிப் பேசவேண்டும், ஆகவே, இதைப் பிரத்யேகமாக விவாதிக்க இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு.இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், அந்தச் சப்-இன்ஸ்பெக்டர் கொலைச் செய்யப்பட்டதை ஆதரிக்கிறார்களா, எதிர்க்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. மு. அம்பிகாபதி: அந்தச் சப்-இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டதை ஆதரிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் தேவையில்லை. திரு. ஜபமணி அவர்களை பேச அழைக்கிறேன்.

*திரு.ர.ஜெபமணி: சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையை ஒத்திவைத்து, இவ்வளவு பெரிய இந்தப் பிரச்னையை விவாதிக் வேண்டும் என்று எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்,

கள். நிச்சயமாக இந்தச் சபையை அதற்காக பூராவும் ஒத்தி வைத்து, இதைப்பற்றி விரிவாக பேசுவது, இந்த நாட்டுக்கும் நல்லது, இந்த அரசாங்கத்திற்கும் நல்லது. ஆனால், நான் இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டுகிறேன். இந்த அரசாங்கத்திற்கு பிரச்னைகள் வரும்போது, அந்தப் பிரச்னை களை கொண்டு வருபவர்களை தனக்கு எதிரியாக நினைக்கக் கூடிய எண்ணம் உங்களுக்கு இருக்கிறது. அரசை என்றைக்கு ஏற்றுக்கொண்டீர்களோ, அன்றைக்கே பிரச்னைகளையும் ஏற்றுக் கொண்டதாக அர்த்தம். நாட்டில் பல பிரச்னைகள் வருகின்றன. அந்தப் பிரச்னைகளை எதிர்த்து நிற்பதற்கு அரசாங்கம் தயா ராக இருக்கவேண்டும். எத்தனையோ பிரச்னைகள்—ஊர் வலம், அவர்களை கைது செய்தல், அவர்களுடைய சாத்வீகமான போராட்டம்—இந்த நிலையிலே ஒருவர் வன்முறையைத் தூண்டிக்கொண்டு அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு செயல் படுவதாகச் சொல்லிக் கொண்டு, அரசுக்கு விரோதமாகப் பேசு கின்ற குறிப்புகளை போலீஸ் ரிப்போர்ட்டர்கள் நிச்சயம் அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பியிருப்பார்கள். நாங்கள் பேசு வதை யெல்லாம் எழுதி அனுப்புகிறார்கள். எனவே, இவர்கள் பேசுவதை எழுதி அனுப்பாமல் இருக்க முடியாது. அப்படி யானால் அவரை ஏன் கைது செய்யவில்லை? அவர்மேல் ஏன் முறையாக கேஸ்கள் போடவில்லை? நான் சொல்வேன், மறை முகமாக நீங்கள் அவரை வளர்க்கின்றீர்களோ என்றே ஐயம் வருகிறது.

ஆகவேதான் மற்றவர்களை கைது செய்யும் போது அவர் பக்கத்திலே போகவில்லை. ஆகவே, காவலர் படுகொலை செய்யப்படுகின்றார். இனிமேல் காவலர்கள் துப்பாக்கியைத் தொடமாட்டார்கள். நாங்கள் வேலை பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் சம்பளம் கிடைத்து விடுகின்றது என்று வீட்டிலே ஒதுங்கிவிட்டால், நாட்டிலே அமைதி இருக்குமா? இருக்காது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபோது, காவலர்கள் பெட்ரோல் ஊற்றி கொளுத்தப்பட் டார்கள். அதுபோல் கூடலூர் சம்பவத்தின்போது எரிந்து கொண்டிருக்கும் லாரியில் காவலர்கள் இருவர் தூக்கி எறியப்பட் டார்கள். இவ்வளவு பெரிய காரியங்கள் நடந்ததை நாடு கண் கூடாகக் கண்டது.

ஆனால், இப்போது காவலர் கொல்லப்பட்டு 20,000 ரூபாய் கொடுத்துவிடுவதால், அவருடைய குடும்பத்திற்கு மன ஆறுதல் ஏற்படாது. இந்த நாட்டிலே வேலை பார்க்கின்ற அத்தனை பேர்களும், உண்ணாவிரதம், கலவரம் ஆகிய வைகளில் ஈடுபடுகிறார்கள், என்றால், அதற்குக் காரணம் பலாத்காரத்திலே அவர்கள் தூண்டப்படுகிறார்கள். அவர்களை நீங்கள் இந்த நாட்டிலே வாழ விடுகிறீர்களா என்று உங்கள் மீது குற்றம் சாட்டுகிறேன். ஒரு போராட்டம் என்றால், அந்தப் போராட்டத்தை அவர்கள் நடத்துவதற்கு அரசியல்

1979 ஏப்ரல் 24] [திரு. ர. ஜெபமணி]

கட்சிகள் யாரும் கேட்கவில்லை. நானே விவசாயிகளைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்லி, தான் தோன்றித் தனமாக நடந்துகொண்டிருக்கிறார். அந்த ஒரு மனிதனுக்காக நீங்கள் பணிந்து போகிறீர்களா? அரசியல் கட்சிகளைச் சந்தித்து, உடனடியாக பிரச்னைக்கு தீர்வு காணப்போகிறீர்களா? விவசாயிகள் என்றால் யார்? இந்த நாட்டின் முதுகெலும்பு. அவர்கள் மேல் ஏன் வரி போட வேண்டும்? சேல்ஸ்டாக்சில் எவ்வளவோ பணம் வருகிறது என்று சொல்லுகிறீர்கள். அதிலே அவ்வளவு வருமானம் வருகின்றது என்று சொன்னால், இந்த விவசாயிகளைத் தொடாமல்விட்டு விடுங்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் 67–லே சொன்னார்கள். என்னுடைய அரசு வந்தால், நிச்சயமாக விவசாயிகளுக்கு விரோதமாக இருக்காது, வரியும் போடாது என்று சொன்னார்கள். இத்தனை கோடி வரி வாங்குகிறீர்கள்.

பல நூறு கோடி வருமானம் வருகிறதே, 840 கோடிக்கு போயிருக்கிறீர்களே, இவர்களுடைய வருமானம் வந்துதானா காரியங்களை நடத்த வேண்டும்? விவசாயிகள் எந்த இடத்திலும் துன்பப்பட்டுக் கொண்டே தான் இருக்கிறார்கள். கரண்ட் கிடைப்பதில்லை. கரண்ட் எந்த நேரத்தில் வருகிறது என்று தெரியாமல் காட்டுக்குள் போய் தத்தளித்துக் கொண்டு இருக்கிறான். இரவு மூன்று மணிக்கு கரண்ட் வருகிறது. அவன் யாரைப் பற்றி நினைப்பான், அவன் இருக்கக்கூடிய நிலையில் மனைவி மக்களைப் பற்றி நினைக்க முடியாது, பாம்புகடிக்கும் பயந்து காட்டுக்குள் பயந்து செல்வான். இப்படி அவன் ஆத்திரப்பட்டுக்கொண்டிருக்கிறான். அங்கே ஜப்தி என்று வந்து தனது சாமான்கள் எல்லாம் போய் விடுமோ என்று கவலைப்படுகிறான். அவனிடத்தில் போய் ஒருவன் கை காட்டினால் அவன் பின்னால்தான் போவான். விவசாயிகள் தாங்கள் வளர்த்த மரங்களை வெட்டுவார்களா? குழந்தைகளைப் போல் வளர்த்த மரங்களை வெட்டி நடு ரோட்டில் போடுவார்களா? இந்த நாட்டில் பலாத்காரத்தை தூண்ட வேண்டும் என்ற எண்ணம் இப்படிப்பட்டவர்களுக்கு வருமா? அரசியல் வாதிகள் செய்திருந்தால் அந்த எண்ணம் வராது. நாங்கள் ஒரு வாரத்திற்கு முன்னால் மாவட்டந்தோறும் உண்ணாவிரதம் இருந்தோம், இந்தப் பிரச்சினையை விளக்குவதற்காக. அரசாங்கத்திற்கு எந்தப் பிரச்சினையை எடுத்துச் சொன்னாலும் காதில் ஏறுவதில்லை. ஏனென்றால் அவர்களுக்கு அதில் அதிக அக்கரையில்லை. விவசாயிகள் தானே இவர்கள், எப்படியும் நமக்கு ஓட்டு வந்து விடும் என்ற நினைப்பில். (மணியடிக்கப்பட்டது) ஐயா, நான் இன்னும் இரண்டு நிமிடம் கூட பேசவில்லையே.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : விளக்கமாக இப்போது பேசிக்கொண்டு இருக்கக் கூடாது. சுருக்கமாக நீங்கள் இந்தப் பிரச்னையை விளக்கிச் சொல்லுங்கள்,

திரு. ர. ஜெபமணி: கண்ணிலாக் குழந்தைகள் பிறர் காட்டிய வழியில் சென்று மாட்டிக் கொள்வார்.......... என்று சொல்வது போல், இப்படிப்பட்டவர்களை இதுவரை ஏன் விட்டுவைத்தீர்கள்? இந்தத் தவறுக்கு நீங்கள் தானே காரணம். எந்தப் பிரச்னையை நீங்கள் அணுகினீர்கள். 'பாடினால் ராகம், மூடினால் ரோகம்' என்று சொல்வதுபோல் எந்தப் பிரச்சினை வந்தாலும் உடனடியாகக் கூடிப் பேசுங்கள். கூடிப்பேச உங்களுக்குப் பயம்? ஏன் இந்தப் பயம் உங்களுக்கு? நிச்சயமாக நமது முதலமைச்சர் அவர்கள் யாரை சந்தித்தாலும் அவரை கன்வின்ஸ் பண்ணிவிடுவார். உங்களுக்குச் சந்திப்பதற்கு என்ன சங்கடம்?....

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்தப் பழமொழியை இன்னொரு முறை சொல்லுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ர. ஜெபமணி: பாரதியார் தான் சொன்னார். நீங்கள் செய்ததைத்தான் அவர் சொன்னார்.. கண்ணிலாக் குழந்தைகள் போல்....(குறுக்கீடு)......அதையா சொல்லுகிறேன...... 'பாடினால் ராகம், மூடினால் ரோகம்' பிரச்னையைத் தீர்க்காமல் மூடி மூடி வைத்துக்கொண்டிருப்பீர்களேயானால் புண் ரோகமாக மாறி பிளவையாக மாறி, அதற்குப் பின்னால் கட்டிலில் போக வேண்டிய நிமைமை ஏற்படும்.

அதுபோல் நீங்களும் பிரச்சினை களைமூடி மூடி வைத்துக் கொண்டு போவீர்களேயானால் சாதாரண புண், அது பெரிய பிளவையாக மாறி நம்மை அமுக்கி விடும். அதற்குத்தான் சொன்னேன், 'பாடினால் ராகம் மூடினால் ரோகம்' என்று.

தயவு செய்து எந்தப் பிரச்சினை வந்தாலும் அது உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். நீங்கள் ரொம்பவும் அசதியாக இருக்கிறீர்கள், அப்படி இல்லாமல் எதையும் சிந்தித்துப் பார்க்க முன் வாருங்கள். விவசாயிகளுடைய பிரச்சினை முதுகெலும்பான பிரச்சினை. யார் அவர்கள், அந்த ஏழை எளியவர்கள்? எந்தவிதமான அரசியலைப்பற்றியும் சிந்திக்காதவர்கள், எது நடந்தாலும் இந்த நாட்டுக்கு நல்லவை நடக்க வேண்டும் என்று நினைக்கின்றவர்கள், அப்படி தவறு எதுவும் இழைக்க நினைக்காத அந்த ஏழைகளை பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமையில்லையா? ஆகவே இதைப்பற்றி நாம் தீர்க்கமாக விசாரிக்க வேண்டும். இந்த நாட்டில் இப்பேர்பட்ட அராஜகங்கள் மீண்டும் நடக்காமல் இருப்பதற்கு அராஜகங்களை தூண்டிவிடக் கூடியவர்களை கண்டுபிடிக்காமல் இன்றைக்கு எல்லாக் கட்சிக் காரர்களையும் போய் உள்ளே பிடித்து போட்டிருக்கிறீர்கள். அவர்கள் என்ன போராடவா வந்தார்கள்? எதுவுமே தெரியதவர்கள் (குறுக்கீடு) ஆகவே இந்தச் சட்டசபை நடவடிக்கைகளை

1979 ஏப்ரல் 24]

ஒத்தி வைத்து இதைப்பற்றி விசாரித்தாக வேண்டும். நல்ல உள்ளம் படைத்திருந்தால் இதை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, சுமார் ஏறத்தாழ 10 ஆயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பலர் இன்றைக்கு காயமடைந்து குற்றுயிராக கிடக்கிறார்கள், பலர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். பலர் ஏறத்தாழ 6000 பேர்கள் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். சிலர் இந்தக் கூட்டுக்குள் இருக்கவேண்டாம் என்று நினைத்து இந்த உலகத்தை விட்டே சென்றிருக்கிறார்கள், சிலர் சென்று விடுவதற்கு அரசாங்கம் வழி வகுத்திருக்கிறது. நாட்டில் சட்ட ஒழுங்குப் பிரச்னை உருவானால் அரசாங்கம் காக்க வேண்டிய சட்ட ஒழுங்கினை நிலை நாட்ட வேண்டிய பொறுப்பில் அரசாங்கம் இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை யாரும் குறை சொல்ல முடியாது. நேற்றைய தினம் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற பல நடவடிக்கைகள் அரசாங்கத்தினுடைய கடமை என்று எடுத்துக் கொள்கிறேன. ஆனால் அரசாங்கத்தினுடைய அணுகுமுறை என்ன என்பதைத்தான் இன்றைக்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு உருவானது? இதற்கு யார் காரணம் என்பதை தயவு செய்து கொஞ்சம் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயப் பிரச்சினை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இந்தப் பிரச்சினை பூதாகரமானது. கடந்தமாதம் சர்வ கட்சி தலைவர்களையும் விவசாய பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசினார்கள். ஒரு நாள் முழுவதும் பேசப்பட்டது. முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் சர்வ கட்சித் தலைவர்களும் விவசாயப் பிரதிநிதிகளும் சேர்ந்து இருந்து மணிக்கணக்காகப் பேசின பின்னால் இதில் ஏற்பட்ட முடிவு என்ன என்று சொன்னால் ஒன்றுமே இல்லை.

(முற்பகல் 10–50)

நான் சொல்லுகிறேன். இந்த அரசு பதவி ஏற்றபிறகு. எடுத்த ஒரே ஒரு முடிவு என்னவென்று சொன்னால், எந்த முடிவையும் செய்ய மாட்டோம் என்ற அந்த ஒரு முடிவைத் தான் எடுத்திருக்கிறார்கள். Indecision is the dicision of this Government ஆகவே, எந்தப் பிரச்னையாக இருந்தாலும், முடிவு எடுக்க மாட்டோம் என்ற ஒரு முடிவைத் தான் செய்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிந்தவரையில் செய்திருக்கிறார்கள். தயவுசெய்து இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு நாம் பார்க்கிறோம், ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்; மிகவும் வேதனைக்குரியது. சாதாரண கொலையாக இருந்தாலே கண்டிக்கத் தக்கது. இது கண்டிக்கத் தக்கது மட்டுமல்ல; தண்டிக்கத் தக்கதுமாகும். போலீஸ்காரர் கொலை செய்யப்படுகிறார் என்றால், அது கொலை மட்டுமல்ல; காவல்துறையின் முயற்சிக்குக்கூட ஒரு சவாலாக மாற்றிவிடக் கூடும். அத்தகைய வன்முறை அங்கே ஊக்குவிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இத்தகைய நிலைமை

யிலே இந்தக் கிராமத்திற்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், 11 போலிஸ்காரர்கள் மட்டுமே அங்கே போயிருக்கிறார்கள். பத்திரிகையிலே எழுதுகிறார்கள், சுமார் 1,000 பேர்களுக்கு மேல் அங்கே கூடியிருந்தார்கள் என்று. அவர்களுக்கிடையே ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், 11 போலீஸ்காரர்களும் போகிறார்கள் என்று சொன்னால், என்ன நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? ஆயிரம் பேர்கள் வேகத்துடன் அங்கே கூடியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேகமான இடத்திலே, அவர்களை அடக்குவதற்காக 11 போலீஸ்காரர்களும், ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் துப்பாக்கி எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்று சொன்னால், அந்தக் கூட்டத்தினர் ஓவர்-பவர் செய்வார்கள் என்ற சாதாரண அறிவு இந்த நிர்வாகத்திற்கு இல்லாமல் போய்விட்டதா? இந்த ஆயிரம் பேர்கள் சேர்ந்த கூட்டத்தினர் துப்பாக்கியைப் பிடுங்கி, அந்தத் துப்பாக்கியாலேயே அந்தத் துப்பாக்கி பட்டாலேயே அடித்துக் கொன்றார்கள் என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. இப்படி ஆயிரம் பேர்கள் கூடியிருக்கக்கூடிய இடத்திற்கு, 12 போலீஸ்காரர்கள் மட்டும், துப்பாக்கியோடு அனுப்பப்பட்டார்கள் என்றால், துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டும் என்ற உத்தரவோடு அனுப்பப்பட்டார்களா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படி அனுப்பிய அந்த அதிகாரி யார் என்பதையும் கண்டுபிடித்து, அவர்மீது விசாரணை வைக்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் to தலைமை)

இன்னொன்று அடைப்பு. இது எப்போதும் நடைபெறுகின்ற ஒன்று. இந்த அடைப்பு, பந்த் என்பது ஜனநாயக முறைப்படி ஏதோ ஒரு குறிப்பிட்ட அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக நடைபெறுகின்றது. இந்த அடைப்பு நடக்கின்றபோது எல்லாம், நாங்களும் அடைப்போம் என்கிற முறையிலே எல்லாவற்றையும் தூக்கி, பல பேர்களை இன்றைக்கு அடைப்பீர்களானால், நீங்களும் அடைந்து போவீர்கள். தயவுசெய்து நீங்கள் அடைந்து போவதற்கு வழி வகுக்காதீர்கள். அடைப்பு என்பது ஜனநாயக உரிமை. ஆகவே, அடைப்பதால், அவர்கள் அடைப்பதற்கான உரிமைகளைப் பயன்படுத்தி வன்முறையில் இறங்கினால், வன்முறையைக் கடைப்பிடித்தால் அதை நீங்கள் சந்திக்கத் தயாராக இருங்கள். அந்த முறையில் நடப்பதற்கு, 10,000 பேர்களை நீங்கள் அடைக்க வேண்டுமா? சிந்தித்துப் பாருங்கள். அப்படி 10,000 பேர்களை உள்ளே அடைத்துப் போட்டால், அதுவே வன்முறையை உருவாக்குமே? என் மாமனை, மச்சானை, என் அண்ணனை போட்டு விட்டார்களே என்று அதுவே ஒரு வன்முறையை உருவாக்குமே? சமீபத்திலே, இரண்டு தினங்களுக்கு முன்பு நான் கிராமத்திற்கு சென்று வந்தேன். அப்போது கிராமத்திலே இருப்பவர்கள் சொன்னார்கள். என் பையனைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள், என் அண்ணனைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்ற நிலைமை அங்கே இருக்கிறது. அது சரியல்ல.

இன்னொன்று. இந்த நாராயணசாமி நாயுடு முதல் தடவை யாகவா இப்படிப் பேசுகிறார்? எப்போதும்தான் பேசுகின் றார்கள். என் கிராமத்திற்குக்கூட வந்து பேசியிருக்கின்றார். அவர் பேசும்போது சொல்கிறார். அதிகாரிகள் வந்தால் வெட் டுங்கள், யாராவது உங்களை வரி கேட்டால் குத்துங்கள் என்று பேசியதாகச் சொன்னார்கள். என்ன செய்து கொண்டிருக்கி றீர்கள்? இன்றைக்கு ஒரு சப் இன்ஸ்பெக்டர் கொல்லப்பட் டிருக்கிறார். வாகைக்குளம் பிரச்னை என்பது வேறு. நாராயண சாமி நாயுடு விவசாயிகள் பிரச்னைக்காக போராட்டம் துவங்கு கிறார்கள் என்றால் எல்லோரும் புரிந்து கொள்ள முடியும். வாகைக்குளம் என்பது ஒரு லோகலைஸ்ட் பிரச்னை. அந்த வட்டாரத்திற்குரிய பிரச்னை. இந்தப் பிரச்னையிலே அங்கே 5 பேர்கள் அல்லது சில பேர்கள் கொல்லப்பட்டார்கள். விவ சாயிகள் போராட்டம் நடத்துகிறார்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, விவசாயத் தலைவர் என்ற முறையில் இந்தப் போராட் டத்தை நடத்துவது புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே இது வேறு விஷயம்.

மின் கட்டணத்திற்காக விவசாயிகள் 9 கோடி ரூபாய் பாக்கி செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த மின் கட்டண பாக்கியைத் தள்ளினால்தான் என்ன? இந்தப் பிரச்னை மூன்று வருஷங்க ளாகத் தள்ளி போடப்பட்டுக் கொண்டு வருகிறது. பெரிய முதலாளிகள் எவ்வளவோ சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் கடனை பார்க்கும்போது, அந்த மலைப்பாம்பு அவனை முழுமையாக சாப்பிட்டுவிட்டு, தலையை மட்டும் வைத்திருக்கிறது.

தலை மட்டுந்தான் வெளியே இருக்கிறது. உடம்பு பூராவும் மலைப்பாம்பு சாப்பிட்டு விட்டது. மன்ற உறுப்பினர்களில் எத்தனை உறுப்பினர்கள் கடன்காரர்களாக இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் கணக்கெடுத்து வைத் திருக்கிறேன். மன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்வதை உணர்ந்து எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சிரிக்கிறார்கள்......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் அவரைப் பார்த்தேன், அவ்வளவுதான், அவரைப் பார்த்தாலே சிரிப்பு வரும் என்ற அளவுக்கு அவரும் இல்லை, நானும் இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: மகிழ்ச்சியோடு சிரிக்கிறார் என்று சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. இதற்கு உடனடியாகப் பேச்சு வார்த்தை நடத்துங்கள், சட்டசபை முடிவதற்குள் தீர்வு காணுங்கள். பிரச்சினையின் நிலையை உணர்ந்து செயல

படுங்கள். மேற்கொண்டு இந்தப் பிரச்சினை பற்றி விரிவாகப் பேச இந்தச் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இன்றைக்காவது ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு விவசாயிகள் போராட்டம் என்ற பெயரால் நடைபெற்ற அந்தப் போராட்டத்தின் விளைவு காரணமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூடுகள் பற்றியும், அதன் காரணமாக மாண்டவர்களைப் பற்றியும், அதற்கு என்னென்ன காரணங்கள் என்பவைகளையெல்லாம் எனக்கு முன்னாலே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணவேண்டுமென்ற தூய நோக்கத்தோடு எடுத்துக் கூறி இருக்கிறார்கள். பேசியவர்கள் அத்தனை பேருக்கும் எனக்கு ஏற்பட்டிருக்கிற மகிழ்ச்சியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருவர்கூட அதிலிருந்து தவறாமல் பேசிய ஒரு கருத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டு பலியான இன்ஸ்பெக்டரின் மரணத்தைக் குறித்து தங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். வழக்கமாக துப்பாக்கிச் சூடுகள் நடைபெறுகிறபோது அந்தச் சூட்டுக்கு பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவித்துவிட்டு, அதே நேரத்தில் அந்தத் துப்பாக்கிச் சூட்டினிடையே மாட்டிக்கொண்டு சாகிற காவல்துறையினரைப் பற்றிக் கனிவோடு பேசுகிற பக்குவத்தை எந்தக் காரணத்தாலோ நமது தமிழகம் பெறாமல் இருந்ததை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது, அவர்களும் மனிதர்கள் தானே என்றும், திரு. அம்பிகாபதி போன்ற உறுப்பினர்கள் அந்த சப் இன்ஸ்பெக்டர் நம் வீட்டுப் பிள்ளைதானே என்றும் கூறுகிற அளவுக்கு காவல் துறையைச் சேர்ந்தவர்களும் மனிதர்கள்தான் என்ற உணர்வு பெற்றிருப்பதற்கு இந்த மன்றத்தின் சார்பாக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். நாராயணசாமி நாயுடு என்பவர் ஒரு விவசாயச் சங்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார் என்றும், அந்த மனிதர் தன்னைத் தானே விவசாயிகளுக்கு ஒரு தனிப் பெரும் தலைவர் என்று பிரகடனப்படுத்திக் கொண்டு நடந்து கொண்டிருக்கிறார் என்றும், மற்றைய விவசாயச் சங்கங்களைச் சார்ந்த தலைவர்களைப் பற்றி அவர் ஏறிட்டுப் பார்ப்பதில்லையென்றும், அரசியல் கட்சிகளுக்கெல்லாம் என்ன தெரியும், நான் ஒருவன்தான் ஏழை விவசாய மக்களைக் காப்பதற்காக ஆண்டவனால் அனுப்பப்பட்ட புனித புத்திரன் என்றும் பேசிக் கொண்டிருக்கிறார் என்று இங்கே பேசிய அனைவரும் எடுத்துக் கூறினார்கள். ஆனால்

1979 ஏப்ரல் 24] [திரு. கி. மனோகரன்]

அவர் தனிமைப்படுத்தப்பட வேண்டிய சமூக விரோதி என்ற அளவுக்கு நாராயணசாமி நாயுடு அவர்கள் இங்கே வருணித்துக் காட்டப்பட்டார்கள். நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிற்கும், அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர் படுகொலை செய்யப்பட்டதற்கும் உடந்தையாக இருந்தவர், காரணமாக இருந்தவர் நிச்சயமாக நாராயணசாமி நாயுடுதான் என்ற தோரணையில், அந்த தோரணை தொனிக்கத்தக்க அளவு பெரியவர் ஜெபமணி அவர்கள் கூட இங்கே கனல் கக்கப் பேசியதையும் நான் கேட்டேன். ஆனால் அப்படிப் பேசிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் இதற்குக் காரணம் இந்த அரசு தான் என்று குறிப்பிட்டார்கள். அதிலும் குறிப்பாக, எவ்வளவு நெருக்கடியான பிரச்சினையானாலும் சரி அல்லது எவ்வளவு சாதாரணமான பிரச்சினையானாலும் சரி, சிரித்துக் கொண்டே பேசிப் பழக்கப்பட்ட லத்தீப் அவர்கள் பேசும்போது இந்த அரசு எடுத்து இருக்கிற ஒரே ஒரு முடிவு, முடிவே எடுப்பதில்லை என்ற முடிவு, அந்த முடிவுதான் இந்த அரசின் முடிவு என்று குறிப்பிட்டார்.

(முற்பகல் 11-00)

அப்படிப் பேசுவது என்ற ஒரே முடிவு தான் திரு. லத்தீப் அவர்களின் முடிவு என்று எங்களுக்குத் தெரியும் என்பதை நான் திரு. லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எதுவும் அவரிடம் நிரந்தரமாக இருக்காது என்ற காரணத்தால், மாறுதல் நிகழக் கூடும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது, பாசத்தின் காரணமாக என்பதை நான் அவருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே கூறியவர்கள் அரசாங்கத்தின் அணுகுமுறை சரியில்லை, அது துப்பாக்கியை நம்புகிறது, பெரும் கிளர்ச்சியை முற்ற வைத்ததற்குப் பிறகு அந்தக் கிளர்ச்சியைச் சந்திக்க அது முன் வருகிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

நீங்கள் ஆரம்ப காலத்திலே விவசாயிகளுக்குத் தேவையானவைகளைச் செய்திருப்பீர்களானால் இப்படிப்பட்ட ஒரு சமூக விரோதி தன்னை ஒரு பெரும் தலைவனாக விவசாயிகள் மத்தியில் உயர்த்திக் கொள்ள முடியுமா என்று கேட்டார்கள். பெரியவர் திரு. ஜபமணி அவர்கள் பேசும்பொழுது இந்த நாட்டின் விவசாயிதான் இந்தத் தாயகத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்றும், கதிரறுத்துப் பழக்கப்பட்ட அவனது கரங்கள் நிச்சயமாகத் தலையறுத்துப் பழக்கப்பட்டிருக்க முடியாது என்றும் சொன்னார்கள். காலையிலே கண் விழித்து கழனிக்குச்சென்று காலையிலேயிருந்து அங்கே பணியாற்றி இடைவேளையிலே உணவுக்காக பக்கத்திலே வளர்ந்திருக்கிற மரத்தின் நிழலடியிலே உட்கார்ந்து கொண்டு தனது இல்லத்தரசி கூழைக் கொண்டுவர அதைக் குடித்து விட்டு தென்றல் காற்று மெல்லென வீசும்

பொழுது அதை அனுபவித்துக்கொண்டிருக்கிற அந்த ஏழை விவசாயி, திடீரென்று அவனுக்கு சாமியாட்டம் ஏற்பட்டது போல் ஏற்பட்டு உடனடியாக கையிலே இருக்கிற கத்தியைத் தூக்கி மரத்திலே போட்டு அந்த மரத்தை வெட்டிச் சாய்த்துப் பாதையிலே போட்டு பஸ்கள் வந்துகொண்டிருக்கும் பொழுது அவைகளைத் தடுத்து நிறுத்தி, அந்த பஸ்ஸிலே இருக்கிற ஆண்களை வேறாக்கி, பெண்களைத் தனியாகப் பிரித்து, அந்தப் பெண்களிலே இளம் பெண்களைத் தனியாக்கி, முதிய பெண்களைத் தனியாக ஓட்டி விட்டு, இளம் பெண்களைக் காட்டிற்கு அழைத்துச் சென்று அந்தப் பெண்களைக் கற்பழிக்கின்ற கல்லாக் களி மகனாக இந்த நாட்டின் விவசாயி இருப்பான் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சமூக விரோதிகள் அதற்குக் காரணமாக அமைந்திருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டு சம்பந்தமாகச் சொல்கிறேன், இது முன்னால் நடந்த ஒரு போராட்டத்தின் போது சொல்லப்பட்ட குற்றச்சாட்டு. காரணம் என்னவென்று சொன்னால் நானே கூட அந்த இடத்திற்குப் போய் விசாரித்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் அதைப் பற்றியெல்லாம் நேரிலே விசாரித்து அது தவறான செய்தி, அபாண்டமானது என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திரு. அழகர்சாமி அவர்கள் தயவு செய்து நான் பேசும் பொழுது என்னைக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பெரியவர், நான் சொல்கிற கருத்தை நீங்கள் கவனிக்க வேண்டும், அந்தத் தகவல் வந்தது, அதற்கு நாம் எல்லாம் தெரிவித்த கருத்து அந்தக் காரியங்களை செய்தவன் நிச்சயமாக விவசாயியாக இருக்க முடியாது.

ஆக விவசாயியின் மேல் நான் ஏதோ அபாண்டமாகப் பழியைச் சுமத்துவது போலவும் அவர்கள் ஒருவர்தான் அவர்களைப் காப்பாற்ற வருவது போலவும் சொல்வது உங்களைப் போன்றவர்களுக்கு நல்லதல்ல.

திரு. சோ. அழகர்சாமி : நீங்கள் சொல்கிற தகவல் பொய்யான தகவல் என்று....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இல்லை, மன்னிக்க வேண்டும், தகவல் வந்தது. அப்படிப்பட்ட ஒரு தகவலை உருவாக்க வேண்டிய துர்ப்பாக்கியத்தில் இந்த அரசு இல்லை

1979 ஏப்ரல் 24] *[திரு. கி. மனோகரன்]*

என்பதை நான் பெரியவர் திரு. அழகர்சாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே சுட்டிக் காட்டப்பட்டவைகளுக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

எதையும் இந்த அரசு விவசாயிகளுக்குச் செய்யவில்லை என்று இங்கே பேசினார்கள், நான் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை, இங்கே முதலமைச்சர் அவர்கள் ரேடியோவிலே பேசிய பேச்சு பத்திரிகையிலே வெளியாகியிருக்கிறது. நீங்கள் வானொலி மூலமாக அந்தப் பேச்சைக் கேட்டிருப்பீர்கள். அதிலே விவசாயிகளுக்கு என்ன என்ன செய்தோம் என்பதை அவர்கள் பேசியிருக்கிறார்கள், கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். கழக அரசு தந்த ஒவ்வொரு சலுகையை பற்றியும் அவர்களே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். துணைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியைப்பெற்று சில பகுதிகளை மட்டும் நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

மின் கட்டணத்தை 100 யூனிட்டுகளுக்கு மேற்பட்ட மின் சாரத்திற்கு 11 பைசா என்று குறைத்தது, ஆனால் 1974 அக்டோபர் மாதத்தில் அன்றைக்கு இருந்த அரசாங்கம் மீண்டும் 14 பைசா ஆக உயர்த்தியது. 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலே அன்றைக்கு இருந்த தி.மு.க. அரசு மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 16 பைசாவாக உயர்த்தியது. இந்த அரசு பதவி ஏற்றவுடன் செய்த முதல் பணி யூனிட் ஒன்றிற்கு 16 பைசா ஆக உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 14 பைசா என்று குறைத்து பிறகு சிறு விவசாயிகளுக்கு 12 ஆகவும் குறைத்தது.

பம்ப் செட் மீட்டர் வாடகையை மாதம் 5 ரூபாயிலிருந்து 4 ரூபாயாகக் குறைத்தது. பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் ரூ. 100-க்கு ரூ. 12.60 ஆக இருந்தது, ரூ. 12 ஆகவும் சிறு விவசாயிகளுக்கு ரூ. 10.50 ஆகவும் குறைக்கப்பட்டது. இதை விடவும் சிறிய ஏழை விவசாயிகளுக்கு வட்டி விகிதத்தைக் குறைக்க விரும்பினாலும் பல்வேறு வகையான நிர்வாகச் செலவுகளைச் சமாளிக்க, சிறிய வட்டி விதிக்கப்பட வேண்டியிருந்தது. ஜப்தி நடவடிக்கையை நிறுத்தியது. சிறு விவசாயிகளின் மீது கூட்டுறவுக் கடனை வசூலிப்பதற்கு ஜப்தி நடவடிக்கை எடுப்பதில்லை என்று அரசு முடிவு செய்து நடை முறைப்படுத்துகிறது. மாநில அரசின் அதிகாரத்திற்கப்பாற்பட்டதென்றாலும் 16 கோடி ரூபாய் குறுகிய காலக் கடனை, மத்தியக் காலக்கடன்களாக மாற்ற முடிவெடுத்து, ரிசர்வ் வங்கிக்கு இந்த அரசு பரிந்துரை செய்து இருக்கிறது. மேலும் 14 கோடி ரூபாய் அளித்துள்ள மத்தியக் காலக் கடனுக்குத் திருப்பித் தரும் காலத்தை நீடிப்புச் செய்ய வேண்டுமென ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்துள்ளது.

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல் 24

அடுத்தாற்போல், திரு. அழகர்சாமி போன்றவர்களுக்கும் திரு. ஜெபமணி போன்றவர்களுக்கும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நிலவள வங்கியில் கடன் பெற்றுத் தோண்டிய கிணறுகள் தண்ணீர் வராமல் பொய்த்துப் போனால், ரூ. 10,000 வரை தள்ளுபடி செய்யப்பட்டது.

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இடங்களில் அரசு கடன் வசூல் ஒத்தி வைக்கப்பட்டது. மற்றைய பகுதிகளில் அரசு கடன் தொகை எத்தனை தவணைகள் பாக்கி இருந்தாலும் ஒரு தவணை மட்டும் இந்த ஆண்டு கொடுத்தால் போதும் என்று அறிவித்தது. சிறு விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சில பணப் பயிர்களுக்குக் குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது விதிக்கப்பட்ட வரி சென்ற ஆண்டு ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது வரி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. வெற்றிலை, திராட்சை, வாழை, கரும்பு, தென்னை, போன்ற சில பணப் பயிர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி ஏக்கருக்கு 20 ரூபாயிலிருந்து 15 ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

அது மட்டுமல்லாமல், 1387 பசலியிலேயிருந்து வரி வசூலிக்கப்பட மாட்டாது என்று அறிவித்தது.

புகையிலை, மிளகாய், பாசன வசதி பெற்ற பருத்தி, வேர்க்கடலை ஆகியவற்றின் மீதான வரி முழுமையாக நீக்கப்பட்டது. நெல்லின் கொள் முதல் விலையைக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. இதற்கிடையில், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கும் நெல்லுக்கு மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் அதிகமாக மோட்டா ரகம், குவிண்டாலுக்கு 90 என்றும், நடுத்தர ரகம் குவிண்டாலுக்கு 95 என்றும் உயர்த்தியிருக்கிறது. இவைகள் அத்தனையும் இந்த அரசு செய்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தனையும் செய்த அரசு அதோடு நிற்காமல், விவசாயச் சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகளை அழைத்துப் பேசியவைகளைப் பற்றியும் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். மகிழ்ச்சி.

அது மட்டுமல்லாமல், உயர் மட்டக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு, பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையிலே இயங்குகிற அந்தக் குழு தனது அறிக்கையை ஒரு இரண்டு வாரத்திற்

1979 ஏப்ரல் 24] **[திரு. கி. மனோகரன்]**

குள்ளாக அளிக்க இருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப் படையில் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுப் பதற்கும் இந்த அரசு தயார் நிலையில் இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே பேசிய நண்பர்கள் அனைவருக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள், எல்லோரும் சொன் னார்கள். இந்த நாராயணசாமி நாயுடு என்ன பேசுகிறார் என்பதைப் பற்றி பேசுகிறபோது, வரி கேட்க வருவான், குத்து, வெட்டு என்றெல்லாம் பேசினார்கள். அதிலே குறிப்பிட்ட சில அவரது பேச்சின் பகுதிகளைப் படித்தால் எப்பேர்ப்பட்ட மனிதர் இந்த மனிதர் என்பதை இந்த அவை புரிந்துகொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன்.

நிலக்கோட்டை—மதுரை வடக்குப் பகுதியிலே பேசும்போது பேசுகிறார், "காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய் தால், அவர்கள் தங்கள் மனைவிக்குக் கணவனாகவும், தங்கள் பிள்ளைகளுக்குத் தகப்பனாகவும் இருக்க முடியாது". இதைப் பேசிய நவீனகால புத்தன் நாராயணசாமி நாயுடு அவர்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். "ஜப்திக்கு வருகிற அதி காரிகள், ப்யூஸ் பிடுங்க வரும் அதிகாரிகள்தான், தற்பொழுது ஜாதகம் பார்த்துதான் வசூல் செய்யப் போனால் திரும்ப வர முடியுமா என்று பார்க்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்த வரை ஜப்தி நடவடிக்கையைக் கட்டாயமாக எதிர்த்தே தீரு வோம்" என்று பேசியிருக்கிறார், ஒரு கூட்டத்தில்.

(முற்பகல் 11-10.)

இன்னொரு கூட்டத்தில் "நீ ஒரு முடிவிற்கு வந்தால்தான் ஆட்சியில் இருப்பவன் வழிக்கு வருவான். உனக்கு பணம் கொடுக்கிறவரையில் விவசாயமே பண்ணாதே. அவன் சோற் றுக்கு என்ன பண்ணுகிறான் பார்ப்போம். நீ ஜெயிலுக்குப் போகத் தயாராக இரு. ஜெயில் என்றால் பயப்படாதே" அதோடுமட்டும் அல்லாமல் அந்தப் பெரிய மனிதர் ஒரு ஆசையை ஊட்டுகிறார். "அங்கே ரொம்ப வசதி. இங்கே சோற்றுக்கு இல்லாமல் கஷ்டப்படுவதைவிட உனக்கு அங்கே சௌகரியமாக இருக்கும். அங்கே போவதுதான் மேல். அதற்கு நீ தயாராக இருக்க வேண்டும். விவசாயிகளை யாரும் காப்பாற்ற முடியாது. நான் தான் காப்பாற்ற முடியும்".

இப்பேர்ப்பட்ட பேச்சுகளை பேசி ஒன்றும் தெரியாத ஏழை விவசாயிகளைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கிறார்கள். மாண்புமிகு லத்தீப் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். "அந்த நாராயணசாமி நாயுடு பேசியதை நானே கூட கேட்டேன்'' என்று சொன்னார்கள். "எப்படி அவரை வெளியே விட்டு வைத்திருக்கிறீர்கள்'' என்று ஜெபமணி அவர்கள் கேட்டார்கள். அப்படி விட்டு வைத்திருந்ததால்தானே இந்த அளவுக்கு அந்த ஆள் வளர்ந்தான் என்று ஜெபமணி அவர்கள் கேட்டார்கள். ஆனால் இதே லத்தீப் அவர்கள், இதே ஜெபமணி அவர்கள், நாங்கள் இந்த நாராயணசாமி நாயுவைடு கைது செய்து வைத்திருந்தால், இதேபோல ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவந்து, ஏன் அவரைக் கைது செய்தீர்கள், ஏன் அவரை அழைத்து வைத்து பேசியிருக்கக் கூடாது என்று கேட்டிருப்பார்கள் என்பதற்கு நிச்சயமாக எனக்கு ஆதாரங்கள் உண்டு. அப்படி கேட்பதுதான் எதிர்க்கட்சியினுடைய கடமை என்று அவர்கள் கருதுகிறார்கள் என்றும் நான் நம்புகிறேன். இதுவரை விட்டு வைத்திருப்பது அவர் திருந்த க்கூடும் என்று இந்த அரசு கருதியதால்தான். அவரது பேச்சுக்கள் எல்லாம் அரசுக்கு கிடைக்காமல் இல்லை. (குறுக்கீடு) இருங்கள் நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அவர் என்னென்ன பேசினார் என்று அத்தனை குறிப்புகளும் சர்க்காரிடம் இருக்கிறது.

நேற்றைக்கு இங்கே திரு.மாரிமுத்து அவர்கள் மிகத் தெளிவாக சொன்னார்கள். எப்போதோ நடந்த வாகை குளத்து துப்பாக்கிச் சூட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக இந்தப் பெரிய மனிதர் ஒரு அடையாள மறியல் நடத்துவதாக திட்டம் போட்டு, அது வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அதிலே ஈடுபட்டிருக்கிறார், வாகை குளம் துப்பாக்கி சூடு எப்போது, அதற்கு இப்பொழுது எதிர்ப்புத் தெரிவிப்பது என்ன காரணத்திற்காக?

ஆகையால்தான் முதல் அமைச்சர் அவர்கள் வானொலியிலே பேசுகிறபோது மிகத் தெளிவாகச் சொன்னார்கள். நாளை நடைபெறவிருக்கிற பந்த், ஹர்த்தாலில் இதுபோன்ற வன்முறைச் செயல்கள் நடைபெறும் என்பதைப் போன்ற செய்திகள் திட்டமிட்டு அவர்கள் செய்யப் போவதாக எனக்குத் தகவல் கிடைத்து உள்ளது என்று வானொலி செய்தியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக அப்படி திட்டமிட்டு செய்த செயல்களின் விளைவாகத்தான் அங்கே இருக்கிற ஒரு சப்-இன்ஸ்பெக்டர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இன்றைக்கு நீங்கள் எல்லோரும் கேட்டீர்கள் அந்த மனிதரை இன்னும் ஏன் வெளியே விட்டுவைத்திருக்கிறீர்கள் என்று.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நான் அதை இந்த அவைக் குறிப்பேட்டில் இடம்பெற வைக்க வேண்டும் என்பதற்காக திருப்பியும் மிகத் தெளிவாக வலியுறுத்து கிறேன். அந்த மனிதனின் நடவடிக்கைகளை இந்த அவை உறுப்பினர்கள், தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, அவரின் பேச்சுக்களை, வன்முறையைத் தூண்டிவிடுகின்ற பேச்சுக்களை இந்த அவை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசாங்கத்தைப் பயங்கர மாக சாடிய அத்தனை உறுப்பினர்களும் இறுதியிலே தங்களுடைய கருத்துக்களைக் கூறியபோது யார் அந்த நாராயணசாமி நாயுடு, அவர் என்ன விவசாயிகளின் பெரிய தலைவர் என்று கேட்கத் தவறவே இல்லை. குறிப்பேட்டில் இடம்பெற வேண்டும் என் பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். இத்தனையும் சொன்ன காரணத்திற்காக உங்களுக்குச் சொல்கிறேன். அந்த மனிதரை கைது செய்து இன்றைக்கு சிறையிலே போட்டிருக்கிறோம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு உங்கள் உறுதுணையும் ஒத்துழைப்பும் தேவை என்பதற்காக நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்றபடி நடந்த சம்பவங்களைப் பற்றி ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டீர்களே, அந்த சம்பவங்களைப் பற்றி இங்கே எனக்குத் தரப்பட்டிருக்கிற குறிப்புகளை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டு இடங் களிலே துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. சங்கரன் கோயில் பகுதி ஒன்று, இன்னொன்று உடுமலைப்பேட்டை.

சங்கரன் கோயில்—திருநெல்வேலி சாலையில் மிசையாபுரம் சந்திப்பில் பனவடலை காவல் நிலையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் சுமார் 1,000 பேர் 23-4-1979 அன்று காலை 7 மணி அளவில் கூடி சாலைப் போக்குவரத்தைத் தடை செய்து பெரிய கற்களைப் வைத்தனர். மிசையாபுரம் தெற்கு புத்தம்பட்டி, வடக்கு புத்தம்பட்டி பனவடலை வன்னிய கொண்டல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் வன்னியக் கொண்டல் ஊராட்சி மன்றத் தலைவரின் தலைமையில் இதனைச் செய்தனர். செய்தி அறிந்து அய்யாபழம் என்ற காவல்துறை துணை ஆய்வாளர், 12 காவலர்களுடன் அவ்விடத்திற்கு விரைந் தார். அங்கு ஐந்து பேருந்துகள், 2 லாரிகள், 1 டிராக்டர், 2 கார்கள் ஆகியவற்றின் டயர்கள் காற்றிறக்கம் செய்யப்பட்டு வண்டிகளும் சேதப்படுத்தப்பட்டிருந்தன. பயங்கர ஆயுதங் களுடன் கோஷமிட்டுக் கொண்டிருந்த கூட்டத்தை கலைந்து போகும்படி சுமார் ஒரு மணி நேரம் துணை ஆய்வாளரும் வேண்டு கோள் விட்டுப் பார்த்தார். நிலைமை கட்டுக்கடங்கவில்லை. கூட்டம் கல்லெறிய ஆரம்பித்ததில் இருகாவலர்கள் காயமுற்றனர். மேலும் கூட்டத்தினர் முன்னேறி வந்து காவல் துறையினரைத் தாக்கினர். பலமுறை எச்சரித்தும் தடியடி செய்தும் பயனற்றுப் போனதால் காவல் குழுவினர் தற்காப்பிற்குத் துப்பாக்கிச்

சூடு நடத்த வேண்டியதாயிற்று. இருப்பினும் கூட்டத்தினர் காவல்துறைக் குழுவினரைச் சூழ்ந்து கொண்டு துணை ஆய்வாளர் அய்யாபழத்தை பிடித்துத் தூக்கிக் கொண்டு போய் துப்பாக்கியைப் பிடுங்கி துப்பாக்கியினால் அடித்தும், அரிவாளால் வெட்டியும் கல்லால் இடித்தும் அந்த இடத்திலேயே கொன்று விட்டார்கள். ஒரு காவலரைத் தவிர மற்ற அனைத்துக் காவலரும் படுகாயமுற்றனர். ஒரு காவலருடைய நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால் அவரிடமிருந்து சங்கரன்கோவில் வட்ட துணை தாசில்தார், மரணவாக்குமூலம் பெற்றுள்ளார். புத்தம்பட்டி முத்துப்பாண்டியன், மேடுபாலம்குளம் சண்முகய்யா, செந்தூர் பாண்டி ஆகிய மூவரும் காயமுற்றுள்ளனர். வழக்குப் பதிவு செய்யப்பட்டு ஆய்வில் உள்ளது. 32 பேர் கைது செய்யப்பட்டு இருக்கின்றனர்.

உடுமலைப்பேட்டையைப் பொறுத்தவரையில் 23-4-79-அன்று நகரத்தில் விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 500 பேர் ஒரு லாரியை நிறுத்தி சக்கரத்தின் காற்றை இறக்கி எத்திராஜ் என்ற டிரைவரைத் தாக்கியுள்ளனர். செய்தியறிந்த ரோந்து சுற்றிக் கொண்டிருந்த காவல் துறையினர் லேசான தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.

கூட்டத்தினர் கல்லெறிந்ததில் 10 காவலர்கள் காயமுற்றனர். லாரி டிரைவர் புகாரின் பேரில் வழக்கொன்று உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். உடுமலைப்பேட்டையிலிருந்து பழனிக்குச் செல்லும் சாலையில் மரத்தை வெட்டிப் போட்டும், பெரிய கற்களை உருட்டி வைத்தும் சாலைப் போக்குவரத்தைத் தடை செய்கிறார்கள் என்றும் அவ்வழியே செல்கின்ற வண்டிகள் மீது கல்லெறிகின்றனர் என்றும் செய்தி கிடைத்தது. காவல் குழுவினர் தனியார் வண்டிகள், பேருந்துகள் ஆகியவற்றை ஒரே தொடராக அமைத்து முன்னும் பின்னும் பாதுகாப்பு அளித்து மதுரை எல்லை வரை செல்ல முயற்சிக்கும் போது கல்லெறிந்து தாக்கினார்கள்.

கோமங்கலம் காவல் நிலையத்திற்குள் புகுந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்க முயற்சித்தபோது காவல் துறையினர் அவர்களை துரத்தினர்.

23-4-1979 அன்று 13-15 மணிக்கு உடுமலைப்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த கிராமங்களில் இருந்து வந்திருந்த விவசாயிகள் கல்பனா திடலில் ஒன்று சேர்ந்து அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாட்சா என்பவருடைய பழக் கடையையும், பாஸ்கரன் என்பவருடைய்டீ கடையையும் தாக்கி சேதம் விளைவித்தனர். அங்கிருந்த பாட்சாவின் உதவியாளரையும் தாக்கி காயப்படுத்தினர். இதனை

1979 எப்ரல் 24] [திரு. கி. மனோகரன்]

அறிந்த காவல் துறைக்குழு நிலைமையைச் சமாளிக்க விரைந்த போது வன்முறைக் கூட்டம் அவர்களைத் தாக்கி ''போலீசை பழிவாங்குவோம்'' என்று குரல் எழுப்பினர். காவலர்கள் மீது கல்லெறிந்து அவர்களிடமிருந்து ஆயுதங்களைக்கைப்பற்றவும் முயற்சித்தனர். காவல் துறை குழு மூன்று பக்கங்களிலிருந்தும் தாக்கப்பட்டது. காவல் துறையினர் எச்சரிக்கை செய்தும் கலையாததால் தடியடி செய்தனர். கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்யப்பட்டது. ஆயினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் மேலும் மேலும் முன்னேறி தாக்கியதில் காவல் துறையைச் சார்ந்த ஐந்து அதிகாரிகள் படுகாயமுற்றனர். காவலரை நெருங்கிவரும் கூட்டத்தினரால் ஏற்படும் பேராபத்தைத் தடுக்கவும், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதைத்தடுக்கவும்காவல்துறை ஆய்வாளர் துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்டார். இதில் தாந்தோணி கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுக கவுண்டர் மகன் மகாலிங்கம், அவ்விடத்திலேயே இறந்தார். கணபதிபாளையம் அப்பாச்சி கவுண்டர் மகன் வேலுசாமி காயமுற்று மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மேலும் 13 பேர்கள் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர்.

வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஆய்வில் உள்ளன. நாலு பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது.

ஆக இந்த விளக்கத்திற்குப் பிறகு மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் நியாயமாகவே திருப்தி அடைந்து அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது பற்றி மேலும் விவாதிக்கக் கோரமாட்டார்கள் என்ற நம்பிக்கையில், அதற்காகத் ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் எங்களுக்குத் திருப்திகரமாக இல்லை. விவசாயிகளுடைய பிரச்னை சம்பந்தமாக.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் பேசியதற்குப் பிறகு நீங்கள் பேசக் கூடாது. நான் முடிவைச் சொல்லி விடுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: உங்கள் முடிவைப்பற்றி எங்களுக்குக் ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(முற்பகல் 11-20)

திரு ரா. உமாநாத்: துணைச் சபாநாயகர் அவர்களே, அரசாங்கத்தின் இந்த முடிவு எங்களுக்கு திருப்தி அளிக்க வில்லை. ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க எந்த நடவடிக்கையும் இல்லை. இத்தனை கட்சிகள் அதைப் பற்றி பேசிய பிறகும் பயனில்லை. அமைச்சரவர்கள் ஒரே ஒரு அம்சத்தை மட்டும் கோட்பண்ணி, தனக்கு சாதகமாகச் சொன்னார்கள். Self-justification போலீஸ் அடக்கு முறை பற்றியோ வேறு விவகாரங்கள் பற்றியோ எதுவும் கூறவில்லை.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அமைச்சர் விளக்கம் சொல்லிய பிறகு, அதில் விவாதம் கிடையாது.

திரு. ரா. உமாநாத்: ஆகவே, இந்தப் பிரச்சனையில் எங்களுடைய அதிருப்தியைக் காட்டும் வகையில் நாங்கள் 'டோக்கன் வாக் அவுட்' பண்ணுகிறோம் என்று சொல்லி, வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக அரசு உடனடியாக ஒரு முடிவு எடுத்து, தீர்வுகாண வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டோம்; எதிர்க்கட்சியினர் அத்தனைபேரும் கேட்டுக் கொண்டோம். அமைச்சர் பதில் சொல்லும்போது நாரா யணசாமி நாயுடுவைப் பிடித்து உள்ளே போட்டுவிட்டோம் என்பதை மகிழ்ச்சியாகச் சொன்னார்கள்.........

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பெருமதிப்பிற்குரிய மாரிமுத்து அவர்கள் நான் பேசும்போது கூர்ந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தேன். அதில் கொஞ்சம் ஏமாற்றம். நான் இந்த அரசு என்ன செய்திருக் கிறது என்ற சாதனைப் பட்டியலைப் படித்த பிறகு, இன்னும் 10 அல்லது 12 நாட்களில் உச்சமட்டக் குழுவின் அறிக்கை வருகிறது என்பதையும் அதன்மீது இந்த அரசு துரித நட வடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்திருக்கிறேன். அதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அமைச்சர் விளக்க மளித்த பிறகு, அந்த விளக்கம் திருப்தி அளிக்கவில்லை என்றால் ''அரசினுடைய முடிவு எங்களுக்குத் திருப்தி அளிக்க வில்லை; ஆகவே வெளிநடப்புச் செய்கிறோம்'' என்று சொல்லிவிட்டு வெளி நடப்புச் செய்யலாமே தவிர, ஒவ்வொரு கட்சியினரும் பேசி, தங்கள் கருத்துக்களைப் பதிய வைப்பதற்கு விதிமுறைகளில் இடமில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: விவசாயிகள் பிரச்சினையில் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். அதை வலியுறுத்தி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தம் விளக்கத்தில் விவசாயிகள் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் எந்த வாக்குறுதியையும் அளிக்க வில்லை. எங்களைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே, நேற்றைய தினம் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு விவசாயி இறந்திருக்கிறான்; ஒரு போலீஸ் அதிகாரி வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார். இதற்கு இந்த அரசு பொறுப்பு என்று சுட்டிக்காட்டி, அதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.

திரு. சோ. அழகர்சாமி: துணை சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சரின் பதில் இந்தச் சர்க்கார் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றாதது மட்டுமல்ல; அவர்களுடைய ஆத்திரத்தையும் கோபத்தையும் அடக்குவதற்குப் பதிலாக மேலும் அவர்களுக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் ஊட்டுகின்ற வகையில் அமைந்திருப்பதால் அதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளி நடப்புச் செய்தனர்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே இந்தப் பிரச்சனை இவ்வளவுதூரம் உருவான பிறகும், இவ்வளவு பாதகங்கள் ஏற்பட்ட பிறகும் நாராயணசாமி முதலியாரை மட்டும் கைது செய்து விட்டோம்—(குறுக்கீடு) மன்னிக்க வேண்டும்; அமைச்சருடைய பெயரைச் சொல்லி, சொல்லி பழக்கப்

பட்டுவிட்டதால் அப்படி சொல்லிவிட்டேன்.— நாராயணசாமி நாயுடுவை கைது செய்து மகிழ்ச்சியடைகின்ற நம்முடைய அரசு விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எந்த நடவடிக்கையும் எடுத்து மகிழ்ச்சியடையவில்லை. ஆகவே, அரசாங்கத்தின் போக்கு கண்டிக்கத்தக்கது என்று சொல்லி, அடையாள பூர்வமாக நானும் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. எம்.ஏ. லத்தீப் வெளிநடப்புச் செய்தார்.)

(5) கவன ஈர்ப்புகள்.

(அ) முகவை மாவட்டத்தில் வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்து.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்:

''இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரிசனங்களுக்கும், பின்தங்கிய ஏழை மக்களுக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்குவதைத் துரிதப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து.''

திரு. கே. சௌந்திரராசன்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை. அடையாளப்பூர்வமாகத் தான் வெளிநடப்புச் செய்தார்கள். அதனால் அவர்கள் மீண்டும் உள்ளே வரலாம்.

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

1949-ல் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் 26,159 மனைகள் கையகப்படுத்தப் பட்டன. அவற்றில் 24,446 மனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டன. மிஞ்சிய 1,713 மனைகளில் 1,202 மனைகளின் வீட்டுமனைப் பிரிவு வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிப்பது ஊரமைப்புத் துறையின் ஆய்வில் உள்ளது. 394 மனைகளுக்கு மனைப்பிரிவுகள் தயாரிக்கப்படவேண்டியுள்ளது. 117 மனைகளுக்கு நீதி மன்றத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 24] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

2. இம்மாவட்டத்தில் வீட்டுமனைகள், பாதைவசதி, இடுகாடு போன்றவற்றிற்கு நிலம் கையகப்படுத்துவதற்காக 1977 78-ல் ஒதுக்கப்பட்ட தொகை 4 இலட்சம் ரூபாய். செலவிடப்பட்ட தொகை 4·12 இலட்சம் ரூபாய். வீட்டு மனைகளுக்கு மட்டும் செலவிடப்பட்ட தொகை 3·62 இலட்சம் ரூபாய். 2,052 மனைகள் 3·62 இலட்சம் ரூபாய் செலவில் கையகப்படுத்தப்பட்டு 1,483 மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. 508 மனைகளின் வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிப்பது ஊரமைப்புத் துறையின் ஆய்விலுள்ளது. 61 மனைகளுக்கு நீதி மன்றத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

3. அதேபோல 1978–79-ல் வீட்டுமனைகள், பாதைவசதி, இடுகாடு போன்றவற்றிற்காக நில ஆர்ஜிதத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 6 இலட்சம் ரூபாய். இதில் 25–3–1979 வரை 4·80 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வீட்டுமனைகளுக்கு மட்டும் செலவிடப்பட்ட தொகை 4·62 இலட்சம் ரூபாயாகும். 1,431 மனைகள் கையகப்படுத்தப்பட்டு 287 மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதியுள்ள 1,144 மனைகளில், 694 மனைகளின் வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிப்பது ஊரமைப்புத்துறையின் ஆய்விலுள்ளது. 394 மனைகளுக்கு வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. மற்றுமுள்ள 56 மனைகளுக்கு நீதி மன்றத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

4. வீட்டு மனைக்காக நில கையகப்படுத்தலை துரிதப்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிமை வழங்கும் தமிழ்நாடு அரிசன நல திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான 1978-ம் ஆண்டின் சட்டம் இவ்வரசால் இயற்றப்பட்டுள்ளது. விரைவில் அச்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். மனைகள் துரிதமாக கையகப்படுத்தி தேவையானவர்களுக்கு அளிப்பதில் இவ்வரசு போதிய கவனம் செலுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிகமான வீட்டுமனைப் பட்டாக்கள் கேட்டு, இப்போது வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அரசினுடைய நிர்வாக இயந்திரம் ஓட்டை, உடைசலாக இருப்பதன் காரணமாக அது சரியாக அமல் நடத்தப்படாமல் இருக்கின்றது. கிட்டத்தட்ட 350 கிராமங்களுக்கு பட்டா வழங்கப்படவேண்டும் என்ற சூழ்நிலையில் அவைகளை வழங்குவதற்குத் தேவையான ஜீப்புகள் தாசில்தார்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதைத் துரிதப்படுத்துகின்ற வகையில் மே மாதம் 31-ம் தேதிக்குள்ளாவது அந்த வீட்டு மனைப்பட்டாக்களை பைசல் செய்ய முடியுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்தத் துறைக்கு இருக்கின்ற நிதியை வைத்துக்கொண்டு தான் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றுகின்ற அதிகாரிகளுக்கு வாகன வசதியையோ மற்ற வசதிகளையோ செய்து தர வேண்டி இருக்கிறது. நிதிநிலைமை கூடுகிறபோது வாகன வசதிகளைச் செய்து தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அடுத்து மே மாதம் 31-ம் தேதிக்குள் எல்லா வீட்டுமனைப் பட்டாக்களையும் வழங்க முடியுமா என்று கேட்டிருக்கிறார். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நடப்பு நிதியாண்டில் வீட்டு மனைக்காக நிலத்தைக் கையகப்படுத்த 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கினாலும் செலவழிக்கப்பட்ட தொகை 111 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய். ஆகவே வீட்டு மனைப் பட்டா வழங்குகின்ற பணியை வேகமாகத்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

தோல் ஏற்றுமதி பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திருவாளர்கள் வி. கே கோதண்டராமன், சி. கோவிந்தராசன், என். வரதராஜன், எம்.ஏ. லத்தீப், கே. பண்ணை சேதுராம் ஆகியோர் ஒரு அவசரப்பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்து மாண்புமிகு கிராமத்தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. வி.கே. கோதண்டராமன் அவர்கள் அதனை முன் மொழிவார்கள்.

திரு. வி.கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய துணைத்தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ''வெளிநாடுகளுக்கு தமிழ் நாட்டில் இருந்து ஏற்றுமதியாகும் பதனிடப்பட்ட தோல், சுகாதாரத் துப்புரவு சான்றிதழ்களைக் காட்டுமாறு வற்புறுத்துவதன் காரணமாக இத்தாலிய விமான நிலையத்தில் தேங்கிக் கிடப்பதால், தோல் பதனிடும் தொழிற்சாலை மூடப்படும் அபாயமான நிலை குறித்து.''

(முற் பகல் 11-30)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பதனிடப்பட்ட தோல்களுக்கு சுகாதாரச் சான்றிதழ்களை காட்டுமாறு இத்தாலி நாட்டு விமான நிலையச்

1979 ஏப்ரல் 24] [திரு. கே. இராஜா முகமது]

சுங்க அதிகாரிகள் வற்புறுத்துகிறார்களென தோல் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவிற்கு தகவல் வந்துள்ளது. சான்றிதழ்களின் தேவையால் ஏற்கனவே ஏற்றுமதி செய்யப்பட்டு இத்தாலி விமான நிலையத்தில் எடுப்பதற்காக உள்ள இந்த சரக்குகள் பதனிடப்பட்ட தோல் சரக்குகளைச் சார்ந்ததாகும். கால் நடைகளில் எவ்வித நோயின்றி அறவே நீக்கப்பட்டு, முழுவதும் பதனிடப்பட்ட தோல்களாகையால் சரக்குகளுடன் சான்றிதழ்களை இணைக்கப்படவில்லை. இத்தாலிய அதிகாரிகள், இது போன்ற சரக்குகளுக்கு சுகாதாரச் சான்றிதழ்கள் இல்லாமல் ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது திடீரென்று அவர்கள் சுகாதாரச் சான்றிதழ்கள் கேட்க ஆரம்பித்துள்ளனர். இச்சான்றிதழ்கள் முன்பு பச்சைத் தோல்கள் ஏற்றுமதிக்கு அனுமதி செய்யப்பட்ட பொழுது அனுப்பப்பட்டு வந்தன. ஓரளவு பதனிடப்பட்ட தோல்களுக்கும் இச்சான்றிதழ்கள் அவசியமாயிருந்தன. ஆனால் முழுவதும் பதனிடப்பட்ட தோல்களுக்கு இத்தாலிய அதிகாரிகள் சான்றிதழ்கள் கேட்பது சரியல்ல. தோல் ஏற்றுமதி மேம்பாட்டுக்குழு இந்திய அரசின் வணிக அமைச்சகத்தின் கவனத்திற்கு இதனை எடுத்து சென்றுள்ளது. ஏற்கனவே ஏற்றுமதி செய்யப்பட்டு இத்தாலிய விமான நிலையத்தில் இருக்கின்ற பதனிடப்பட்ட தோல் சரக்குகளுக்கு சுகாதாரச் சான்றிதழ்கள் ஏற்பாடு செய்யுமாறு 'ஏர் இந்தியா' நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பொழுது இத்தாலி நாட்டுக்குரிய பதனிடப்பட்ட தோல் சரக்குகளுக்கு சுகாதாரச் சான்றிதழ்கள் இணைக்கப்படுகின்றன.

2. சமீப மாதங்களில் தோல் ஏற்றுமதியிலுள்ள தாமதத்திற்குரிய காரணங்கள் (1) 'ஏர் இந்தியா' நிறுவனத்தில் சரக்குகள் தேங்கி இருத்தல் மற்றும் (2) சுங்க இலாக்காவினர் ஏற்றுமதி செய்ய ஒப்பந்தமாகியுள்ள ஒவ்வொரு சரக்குகளுக்கும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (Central Leather Research Institute) சான்றிதழ்கள் கேட்டல்.

3. இச்சான்றிதழ்கள் ஏற்றுமதி செய்ய இருக்கின்ற பொருள்கள் பதனிடப்பட்ட தோல்களா அல்லது இல்லையா என்பதைக் காட்டும். தற்பொழுது மேற்படி நிறுவனத்தில் குழு நாள் தோறும் கூடி ஏற்றுமதிக்குரிய சரக்குகள் பதனிடப்பட்டதா அல்லது இல்லையா என்று முடிவெடுப்பதால் பதனிடப்பட்ட தோல் ஏற்றுமதியில் இப்பொழுது தாமதமில்லை என்று தெரிகின்றது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பதனிடப்பட்ட தோலை ஏற்றுமதி செய்வது இந்தியாவில், 80 சதவீதம் நம் தமிழ்நாட்டில் தான் இருந்து வருகிறது. அதிலே குறிப்பாக, மைனாரிட்டியாக இருக்கக் கூடிய முஸ்லீம் மக்களால் நடத்தப்படுகிறது. இப்பேர்ப்பட்ட தொழில் தொடர்ந்து நடைபெற்றுக்

[திரு. வி.கே. கோதண்டராமன்] [1979 ஏப்ரல் 24

கொண்டு வரக் கூடிய வேளையில் இத்தாலிய நாட்டிலே இருந்து இப்பொழுது ஏன் எதிர்ப்பு வரவேண்டும் என்று தெரியவில்லை. அதாவது கற்பு உடையவர்களா, இல்லையா என்பதற்குச் சான்றிதழ் கேட்பது போல இதிலே சான்றிதழ் கேட்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. வருடத்திற்கு 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி பெற்றுத்தரக் கூடிய இப்பேர்ப்பட்ட ஒரு தொழில் இப்போது முடக்கப்பட்ட தன்மையில் இருக்கிறதே—அதற்கு காரணம் மத்திய அரசா அல்லது மாநில அரசா ? அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய இடர்பாடுகளுக்குக் காரணம் மத்திய அல்லது மாநில அரசோ அல்ல. இன்றைக்கு திடீரென்று இத்தாலிய நாட்டைச் சேர்ந்த சுங்க அதிகாரிகள் பதனிடப்பட்ட தோல்களுக்கு சான்றிதழ் அனுப்ப வேண்டும் என்று கேட்டார்கள். இதற்கு முன்பு அவர்கள் கேட்கவில்லை. ஆனால் பச்சைத் தோலுக்கு சுகாதார சான்றிதழை இணைத்து அனுப்புவது உண்டு. பதனிடப்பட்ட தோலுக்குத் தேவையில்லை. இப்போது பதனிடப்பெற்ற தோலுக்கும் சான்றிதழ் அனுப்பவேண்டும் என்று திடீரென்று சொன்னார்கள். ஏற்கனவே அனுப்பப்பட்டதில் இந்தப் பிரச்சினை வந்தவுடன் நான் ஏர் இந்தியா நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு, நீங்களே அந்தச் சான்றிதழை அனுப்பி விடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது பதனிடப்பட்ட தோல்களுக்கும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் சான்றிதழ்கள் இணைத்து அனுப்பப்படுகிறது. ஆகவே, இப்போது பிரச்சினை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலையின் வாயிலாக நம் மாநிலத்திற்கு கணிசமான வெளிச் செலாவணி கிடைக்கிறது. ஆனால் அண்மையில் இப்போது ஏற்றுமதிக்கு பல இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருகின்றன. அதில் ஒன்றுதான் கனிசமான அந்நியச் செலாவணி கிடைக்கிறது என்று சுட்டிக் காட்டிருக்கிறோம். மேலும் ஏர் இந்தியாவிலே பல கோடிக்கணக்கான ரூபாய்பெறுமானம் உள்ள சரக்கு தேங்கிக் கிடக்கிறது என்ற தகவல் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆக பதனிடப்பட்ட இந்தத் தோல்களை உடனுக்கு உடன் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் நம்முடைய ஏற்றுமதி நடைமுறைகளைப் பற்றி மத்திய அரசாங்கத்தோடு இந்த அரசு பேசி, அதைச் செம்மை படுத்துவதற்கும், இருக்கிற சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், முறையான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டால் நல்ல விளைவுகள் ஏற்படும். அந்த முயற்சிகளை இந்த அரசு உடனடியாக மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்றுமதியைப் பொறுத்த அளவிலே சில நேரங்களில் கப்பல்கள் கிடைக்கவில்லை, விமானங்கள் கிடைக்கவில்லை என்கின்ற நிலைமை இந்தத் தொழிலிலே இருந்து வருகிறது. ஆனாலும்கூட, ஒருநாள் இல்லாவிட்டாலும் மறுநாள் ஏற்றுமதி செய்து வந்திருக்கிறார்கள். திடீரென்று ஒரு பெரிய பிரச்சினை இப்படி சுங்க அதிகாரிகள் சான்றிதழ் கேட்டதால், ஏற்பட்டது. உடனே, ஏர் இந்தியா எடுத்துச் சென்ற தோல்களும் ஏற்கனவே எடுத்துச் சென்ற சரக்குகள் அங்கேயே, எந்த இடத்திற்கு கொண்டுபோய்ச் சேர்ப்பது என்ற நிலைமையெல்லாம் வந்தது. அதனால்தான், இந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்கு வந்தது. உடனே மத்திய அரசை அணுகி, துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அவர்களும் உடனடியாக ஏர் இந்தியாவிற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். சான்றிதழ்களை அங்கேயே வழங்க, அப்படியே அந்தப் பொருள்களை இத்தாலிய நாட்டிலேயே இறக்கி விடும்படி கேட்டிருக்கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய தோல் பொருட்களுக்கு இப்போது சான்றிதழ் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பதப்படுத்தப்பட்ட தோல் பொருட்களுக்கு சான்றிதழ் கொடுக்க வேண்டியதில்லை. இருந்தாலும்கூட, இப்போது இந்தப் பிரச்சினை வந்த காரணத்தாலே, கழகமே சான்றிதழ் கொடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறது. அந்தவகையிலே இப்போது ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல், நாம் தோல் பொருட்களை ஏற்றுமதி செய்வதால் அந்நியசெலாவணியை ஈட்டி வருகின்றோம். இந்தியாவிலேயே மிகப் பெரிய தொழிலாகவும், தமிழகத்திலேயே மிகப் பெரிய தொழிலாகவும் இது இருந்து வருகிறது. எனவே, ஏற்றுமதிக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கக்கூடிய வகையிலே எல்லாவிதமான முயற்சிகளும், நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, வருகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத்தோல் பதனிடும் தொழிலிலே 40,000 தொழிற்லாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட தொழில் இன்றைக்கு நொண்டிக்காரணம் காட்டப்பட்டு அந்நிய நாட்டில் தேங்கிக் கிடக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையிலே இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளை நான் வரவேற்கின்றபோது, கடிதப் போக்குவரத்தோடு மட்டும் நிற்காமல் மாண்புமிகு சிறு தொழில் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று பேசி, இந்தத் தொழிலிலே இன்னும் இருக்கின்ற ஏராளமான பிரச்சினைகளுக்கு நல்ல முறையிலே தீர்வுகாண வேண்டும். லட்சக்கணக்கான ரூபாய்களை மூலதனம் போட்டுவிட்டு, இன்றைக்குப் பல இடங்களிலே சிரமப்படுகிறார்கள். ஆகவே, இவைகளில் உடனடியாக கவனம் செலுத்தி, இந்த இடையூறுகளைக் களைவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு

கிறேன் ? மற்றொன்று, இத்தாலிய நாட்டிலேயும், மற்ற நாடு களிலேயும் தேங்கிக் கிடக்கின்ற சரக்குகளின் விவரம் குறித்தும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, இந்தப் பிரச்சினை வந்தவுடன் நான் ஏற்கனவே அதற் கான விவரங்களைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு என்ன நிலைமை ஏற்பட்டது என்பதற்கு என்னிடத்திலே குறிப்பு இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடிதப் போக்கு வரத்தோடு மட்டுமல்லாமல் நேரில், சென்று சில விஷயங்களைப் பார்க்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில், சில குறிப்பிட்ட தொழில் கள், குறிப்பாக, கயிறு தொழில், முந்திரிக் கொட்டையைப் பதப்படுத்துதல், தேயிலைத் தொழில், தோல் பதப்படுத்தும் தொழில் ஆகிய இந்த நான்கு தொழில்கள் குறித்து பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளை யெல்லாம் ஒட்டு மொத்தமாக விவா திக்க மே முதல் வாரத்தில் டெல்லி செல்ல இருக்கிறேன். அப்போது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும், மத்திய அரசோடு பேசுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைத் கண்டத்திலுள்ள பல மாநிலங்களின் தலைநகரங்களிலே இருந்து வெளிநாடுகளுக்கு திருந்திய தோலை ஏற்றுமதி செய்யும்போது எந்தவிதமான நோயும் இல்லை என்ற வகையிலே சுகாதார சர்டிபிகேட் அளிக் கப்பட்டு வந்திருக்கிறது. சென்னையிலிருந்து விமானம் மூலம் அனுப்பப்பட்ட தோல், குறிப்பாக இத்தாலி நாட்டிற்கு விமானம் மூலம் அனுப்பப்பட்ட 50 டன் தோல்கள் டெலிவரி எடுக்காமல், தேங்கியிருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் அளித்த விடைக்குப் பின்னால், இந்த 50 டன் தோலை டெலிவரி எடுத்துக் கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11–40]

இந்திய துணைக் கண்டத்தில் பல மாநிலங்களில் இருந்து குறிப்பாக கேரளாவிலிருந்து பல நாடுகளுக்கும் அனுப்பப்படு கிறது. அப்படி அனுப்பப்படுகின்ற தோல்களை அனைத்து நாடு களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தாலி நாடு மட்டும் தமிழ்நாட்டில் இருந்து வரக்கூடிய தோலை மட்டும் எடுக்க முடி யாது என்று சொன்னால் அதை மற்ற நாடுகளுக்கு அனுப்ப அரசு ஏற்பாடு செய்யுமா ?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தோல் ஏற்றுமதியைத் தனிப்பட்டவர்கள் அரசின் அனுமதியோடு செய்து வருகிறார்கள், இத்தாலி நாட்டுக்கு இதற்கு முன்பு அனுப்பப்பட்டபோது பிரச்சினை இருந்தது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துக் கொண்டதன் பேரில் இப்போது பிரச்சினை இல்லை. இப்போது சான்றிதழ்களோடு அனுப்பிக் கொண்டிருக்கிற காரணத்தால் பிரச்சினை இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(7) அறிவிப்புகள்.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது

(ஈ) உள்ளாட்சி அதிகாரமன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்; இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(7) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) 1972–73 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1972–73ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைளை பேரவையில் மொழிய ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

'In pursuance of Article 203, Clause (3). of the Constitution of India, I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Excess Expenditure for the year 1972-73'

(8) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்— 1972–73, வாக்கெடுப்பு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன். 1972–73ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் தேதியிட்ட அறிக்கையில் இரண்டாவது வரிசையில் 1 முதல் 47 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே நாலாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1972–73ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப் பெற்ற 1972–73ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் விவரம்.

(1)		(2)	(3) (ரூபாய்)
கோரிக்கை	1	நிலவரித் துறை	2,10,418
ஷை	4	முத்திரைத் தாள்கள்— நிர்வாகம்.	9,17,631

(1)	(2)	(3)	(4)
			(ரூபாய்)
ஷை	9	மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்.	,19,02,938
ஷை	10	நீதி நிர்வாகம்	5,54,648
ஷை	11	சிறைச்சாலைகள்	5,73,843
ஷை	12	காவல்துறை	38,16,657
ஷை	14	மருத்துவம்	53,85,659
ஷை	17	மீனளம்	9,42,505
ஷை	18	கால்நடை வளர்ப்பு ..	9,07,561
ஷை	19	கூட்டுறவு	4,74,387
ஷை	20	தொழில்கள்	10,44,783
ஷை	27	பொதுப் பணிகள்—பணிகள்.	75,83,326
ஷை	30	சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.	27,31,962
ஷை	32	ஓய்வூதியங்கள்	80,52,299
ஷை	34	எழுதுபொருள்-அச்சுத்துறை	23,14,873
	35	காட்டுவளத்துறை ..	11,74,578
ஷை	36	ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்...	3,17,899
ஷை	43	சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.	31,42,233
ஷை	44	காட்டுவள மூலதனச் செலவு	6,98,751
ஷை	45	ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்.	6,28,287

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 24]

(1)	(2)	(3)	(4)
			ரூபாய்
ஷ	46	அரசு வணிகத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.	4,24,45,985
ஷ	47	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.	65,56,153
		பெருமொத்தம் ..	9,23,77,383

(7) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) 1973–74 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1973–74 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் மொழிவதற்கு ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றிருக்கிறது.

'In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu, Legislative Assembly of the Demands for Grants for Excess Expenditure for the year 1973–74.'

(9) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்— 1973–74, வாக்கெடுப்பு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தைமொழிகிறேன்.

1973–74 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் தேதியிட்ட அறிக்கையில் இரண்டாவது வரிசையில் 6 முதல் 52 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே நாலாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1973–74 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக் சுணக்கில் அரக்குவழங்கப்பெற வேண்டும்,

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல் 24

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப் பெற்ற 1973-74 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் விவரம்,

(1)		(2)	(3) (ரூபாய்)
கோரிக்கை	6	பத்திரப்பதிவுத் துறை ..	63,096
ஷெ	13	நீதி நிர்வாகம்	1,43,163
ஷெ	14	சிறைச்சாலைகள்	4,35,660
ஷெ	17	மருத்துவம்	1,38,36,849
ஷெ	19	வேளாண்மை	46,13,517
ஷெ	23	தொழில்கள்	54,27,299
ஷெ	31	பாசனம்	67,22,733
ஷெ	32	பொதுப் பணிகள்—பணிகள்	1,18,87,554
ஷெ	35	சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்,	52,24,788
ஷெ	37	ஓய்வூதியங்கள்	91,18,323
ஷெ	48	சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.	39,78,302
ஷெ	50	ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்.	9,46,327
ஷெ	52	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.	13,44,747
		பெருமொத்தம் ..	6,37,42,358

(7) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(6) அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(7) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.5) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்து கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/79) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்பு கிறேன். நிதி ஒதுக்கல் மசோதாவிலே 1,236 கோடியே 64 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இந்தப் பெருந்தொகையின் பெரும்பாலான பணம் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்காக செலவழிக்கப் படுவதாக இல்லை. பொதுவாக நம்முடைய பொருளாதார அமைப்பு அப்படி இருக்கிறது. ஆகவே பெரும்பாலான பணம் பொருளாதார வளர்ச்சிக்கு செலவழிக்கப்படக்கூடிய ஒரு நிலை மையை நாம் ஏற்படுத்தி இருந்தோமென்றால் இப்போது ஏற் படுத்துவோமானால் நிச்சயம ஒரு நல்ல வளர்ச்சியைத் தமிழ கத்திலே இந்தத் தொகையை வைத்து இந்த ஆண்டு ஏற்படுத்த முடியும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதே

1979 ஏப்ரல் 24] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

நேரத்திலே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படக்கூடிய தொகைகளைப் பார்க்கிறபோது சில முக்கியமான விஷயங்களை நாம் மறந்துவிட முடியாது. பொருளாதார வளர்ச்சிக்காக ஒதுக்கப்படக்கூடிய தொகையின் பயன் அடித்தளத்திலே உள்ள மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும்.

(முற்பகல் 11–50)

அந்தப் பயன், அதனுடைய நன்மை, சமுதாயத்திலே ஏறக்குறைய பாதிக்கும் அதிகமாக, 45 சதவிகிதம், 50 சதவிகிதம் அதிகம் என்று சொல்லப்படுகிறது, வருமைக் கோட்டினுடைய எல்லைக் கோடுக்கும் கீழே இருக்கிறார்கள் என்று புள்ளி விவரக் கணக்குகளிலே இருந்து வருகிறது. அவர்களுடைய நன்மைக்காக, அவர்களுடைய வசதிக்காக, இந்தத் தொகையினுடைய பெரும் பகுதி போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், சேரவில்லை என்று தான் நாம் அறிகிறோம். இது புதிதாக அல்ல. ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஐந்தாண்டுத் திட்டங்களில், சிலவற்றை நிறைவேற்றிய நேரு பெருமகனார் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்; பெருந்தலைவர் காமராஜர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஐந்தாண்டு திட்டங்களாலே ஏற்பட்ட நன்மைகள் அடித்தளத்திலே இருக்கிற மக்களுக்குக் கிடைக்கவில்லை. அந்த நன்மைகள் எப்பொழுது கிடைக்கிறதோ அப்பொழுதுதான், உண்மையான சமதர்ம சமுதாயத்தை, சோஷலிச சமுதாயத்தை நாம் ஏற்படுத்தமுடியும், அதற்கு நாம் வழிவகை காண வேண்டுமென்று சொன்னார்.

அதைப் போலவே, இன்று ஆயிரத்துச் சொச்சம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய இருக்கிறார்கள். அதனுடைய, பொருளாதார திட்டங்களுக்கென செலவழிக்கக்கூடிய பெரும் தொகையை, வறுமைக் கோட்டினுடைய அந்த எல்லைக்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். பொதுவாக, விவசாயம், தொழில், இதுபோன்ற துறைகளுக்குச் செலவழிக்கப்படும் தொகை கூட, மத்திய தர வகுப்பினருக்குச் சிறிய தொகைதான் கிடைக்கிறது. ஆனால், யாருக்குக் கிடைக்கிறது என்றால், மேல், மத்திய தர வகுப்பினருக்கும் வசதி படைத்தவர்களுக்கும் தான் கிடைக்கிறது என்ற பொதுவான குற்றச் சாட்டைப் பொது மக்களிடத்திலேயிருந்து அவர்கள் சொல்வதை நாம் கேட்க முடிகிறது.

அதற்கடுத்தபடியாக, இந்தப் பொருளாதார வளர்ச்சி திட்டங்களுக்காக நாம் அதிகமான பணத்தை முதலீடு செய்யும்போது அந்தப் பணத்தை நாம் முதலீடு செய்யக்கூடிய திட்டங்களிலே

யிருந்து என்ன பிரதிபலன் நமக்குக் கிடைக்கிறது. என்ன லாபம் கிடைக்கிறது. மக்களுக்குக் கிடைக்கிறது என்று பார்த்தால். அதை ஒரு உதாரணம் மூலம் சொல்ல விரும்புகிறேன்,

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை, 'மைனர் இரிகேஷன் ஸ்கீம்ஸ்', அந்தத் திட்டங்களையெல்லாம் எடுத்துக் கொண்டால், அதிகமான பணம் செலவு செய்து குளங்களை வெட்டுகிறார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அங்கே எப் பொழுதும் வென்றான் என்ற ஊரிலே ஏறக்குறைய ரூ. 20 இலட்சம் செலவிலே, அங்கே ஒரு பெரிய ஓடையை மறித்து, பெரிய கண்மாயை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நெல்லை மாவட்ட வட பகுதியிலே இம்மாதிரி பல்வேறு கண்மாய்கள் ரூ. 10 இலட்சம், ரூ. 20 இலட்சம், ரூ. 6 இலட்சம் என்று செலவழிக்கப்பட்டு, அமைக்கப்பட்டிருக்கின்றன. கண்மாய்கள் அமைக்கப்படுகிறபொழுது, புல்டோசர் போன்ற கருவிகள் வைத்துத்தான் அமைக்கிறார்கள். கண்மாயை அமைத்த உடனே புல்டோசர் போன்ற இயந்திரங்களை எடுத்துச் சென்று விடுகிறார்கள். அதற்குப் பிறகு அங்கே தண்ணீர் தேங்குகிறது. ஆனால், நிலத்தைப் பண்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படு கிறது. 'ரெக்ளமேஷன் ஆஃப் லேண்ட்ஸ்' என்று சொல்லக் கூடிய நிலத்தைப் பண்படுத்தாத சூழ்நிலையிலே, அங்கேயிருக்கிற விவசாயிகள் தண்ணீரைப் பயன்படுத்த முடியாத நிலையிலே. நஞ்சைப் பயிரைச் செய்ய முடியாத நிலையிலே அல்லலுறு கிறார்கள். ஆகவே, எங்கள் நிலத்தைச் சரிபடுத்திக் கொடுங்கள், அப்படி கொடுத்தால்தான் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும். நஞ்சை நிலங்களாக ஆக்குங்கள் என்று சொல்லி, இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கண்மாயைப் பார்த்தால், தண்ணீர் இருக்கிறது, கண்மாய் இருக்கிறது. ஆனால், நஞ்சைப் பயிர் செய்ய முடிய வில்லை. புஞ்சைதான் பயிர் செய்கிறார்கள். எவ்வளவு பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது? எவ்வளவு வட்டி ஆகிறது? ஆனால், முதலீடு செய்யப்பட்ட பணத்தால், எவ்வளவு நன்மை அங்கே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற் பட்டிருக்கிறது என்று பார்த்தால், எந்தவிதமான நன்மையும் இல்லை. ஆகவே, இந்த விஷயத்திலே கவனம் செலுத்தி, எங்கெங்கே புதிய கண்மாய்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ, அங்கேயெல்லாம் இரண்டு மூன்று ஆண்டுகளாக புஞ்சைப் பயிர் செய்யக் கூடிய நிலையை மாற்றி, நஞ்சைப் பயிர் செய்யக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும், ஆகவே, 'ரெக்ளமேஷன் ஆஃப் லேண்ட்ஸ்' என்று சொல்லக்கூடிய நிலத்தைப் பண்படுத்திக் கொடுத்தால்தான் விவசாயிகளிடம் குறைந்த தொகையைப் பெற் றுக்கொண்டு, அவர்களுடைய நிலத்தைப் பண்படுத்திக் கொடுக் தால்தான், இந்த அதிகமான பணம் ஒதுக்கீடு செய்த பலனை, விவசாயப் பெருமக்கள், பொதுமக்கள் பெறமுடியும் என்ற கருத்தினை நான் வைக்கவிரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 24] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

அடுத்தபடியாக கண்மாய்கள். கண்மாய்கள் மானாவாரி பகுதிகளிலே ராமநாதபுரம், நெல்லை மாவட்டத்தினுடைய வடபகுதி போன்ற இடங்களிலே புதிதாக வெட்டப் படுகின்றன. ஆனால், இந்த கண்மாய்களைவிட விவசாயி களுக்கு அதிகமாகத் தேவை எது என்றால் ஏற்கெனவே இருக்கக் கூடிய கண்மாய்களை கால்வாய்களின் மூலமாக இணைப்பது தான். அதிகமாக ஓடைகள் அங்கே இருக்கின்றன, அந்த ஓடைகளில் ஏராளமான தண்ணீர், மழை காலங்களிலே ஓடி வீணாக கடலிலே சென்று விழுகின்றன. ஆகவே அந்த தண்ணீரை பல்வேறு கால்வாய்களின் வழியாக எடுத்துச் சென்று தண்ணீரே இல்லாத சூழ்நிலையில் காய்ந்துக்கிடக்கின்ற கண்மாய்களின் வழியே எடுத்துச் சென்றோம் என்றால் நிச்சயமாகப் பயன் உள்ளதாக இருக்கும். 5 லட்சம், 10 லட்சம் என்று செலவிட்டு இந்தமாதிரியான புதிய கண்மாய்களை வெட்டுவதைக் காட்டிலும் 10 லட்சம் செலவழிப்பதைக் காட்டிலும், குறைந்த செலவில் 2 லட்சம், 3 லட்சம் செலவழியக்கூடிய விதத்தில் ஏற்கெனவே இருக்கக்கூடிய கண்மாய்களை செப்பனிட்டு, கால்வாய்களை வெட்டி, நான்கு கண்மாய்கள், ஐந்து கண்மாய்கள் என்று இணைத்து செயல்படக் கூடிய பல்வேறு திட்டங்கள் இருந்தும் கூட. மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு இதை நாங்கள் எடுத்துச் சொல்லியும் கூட அந்த திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்பதை இந்த அரசுக்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே உண்மையிலேயே விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றால் தமிழகத்தில் இருக்கக்கூடிய, ஏன் இந்தியாவிலே எல்லா இடங்களிலேயும் இருக்கக்கூடிய கண்மாய்களை செப்பனிட்டு, அவைகளை கால்வாய்கள் மூலம் குறைந்த செலவில் இணைத்து, தண்ணீரை பயன்படுத்தி, அந்த தண்ணீர் வீணாக கடலிலே சென்று கலக்காமல் விவசாய பெருங்குடி மக்களுக்கு பயன் உள்ளதாக ஆக்க வேண்டும். இந்த திட்டம் மிக நன்மையான, சிக்கனமான திட்டமாகும் என்பதை இந்த அரசுக்கு நான் எடுத்துச் சொல்லவிரும்புகிறேன்.

விவசாயிகள் பிரச்னை என்பது மிகப் பெரிய பிரச்னை என்று கூட விவசாயிகளுடைய பிரச்னையைப் பற்றி இந்த மாமன்றத்திலே அதிகமாகப் பேசப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலும் சரி, ஆளும் கட்சியாக இருந்தகாலமானாலும் சரி அவர்களுக்கு முக்கியப் பிரச்னை, இந்த நாட்டு மக்களிடத்திலே

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1979 ஏப்ரல் 24

அவர்கள் எடுத்து வைத்தப் பிரச்னை இந்திப் பிரச்னை, மொழிப் பிரச்னை, பிராந்தியப் பிரச்னை, மொழி உணர்வை தூண்டி, பிராந்திய உணர்வை தூண்டி, மக்களை அதன் வழியிலேயே சிந்திக்க வைத்து. அதன் மூலமாகவே மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்தவர்கள் அவர்கள். ஆட்சிக்கு அவர்கள் வந்தபிறகு எதுவுமே செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. தனிப்பட்ட முறையில் தனிப்பட்டவர்கள் நன்மைஅடையவேண்டும் என்ற முறையில் பீஸ் மீல் ரெமடீஸ் என்று இருந்ததே தவிர ஒரு முழுமையான திட்டங்களாக Comprehensive Economic Schemes என்ற அளவில் அந்த திட்டங்கள் உருவாகவில்லை. முழுமையான பொருளாதார பிரச்னைகளை திராவிட முன்னேற்றக் கழகம் தீர்க்க தவறி விட்டது என்று சொல்லி கொள்ளும் நேரத்தில் உண்மையின் அடிப்படையிலேயே சொல்லவிரும்புகிறேன்.

அவர்கள் காலத்திலேகூட விவசாயிகள் பிரச்னை பெரிய பிரச்னையாக உருவெடுத்தது. மின்சாரத் துண்டிப்பு காரணமாக போராட்டம் நடைபெற்று 18, 19 விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். கோவில்பட்டியிலிருந்து கோயம்புத்தூர் வரை இத்தகைய போராட்டங்கள் அப்பொழுது நடைபெற்றன. இப்படி விவசாயிகள் பிரச்னை எப்பொழுதும் நடந்து வந்திருக்கிற ஒன்று. அதற்கு அடிப்படை காரணம் என்னவென்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற பிரச்னை என்பது மட்டும் இல்லை. காலம் காலமாக இந்தப் பிரச்னைகள் தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கின்றன.

காங்கிரஸ் கட்சியைப் பொருத்தவரையில் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் விவசாயப் பிரச்னைகளைப் பற்றி ஒரு முறை விளக்கமாகச் சொன்னார்கள். ''இந்த நாட்டிலே விவசாயிகளுடைய பிரச்னை தீர்க்கப்படவில்லை என்று சொன்னால், வேறு எந்தப் பிரச்னைகளை தீர்த்தாலும், இந்த நாட்டிலே பிரச்னைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாக சொல்லமுடியாது'' என்றுசொன்னார்கள் காந்தியடிகள் கூட சொன்னார்கள். ''நாட்டிலே ராமராஜ்யம் வரவேண்டும் என்றால் கிராமராஜ்யம் வரவேண்டும்'' என்று, ''உண்மையான இந்தியனைப் பார்க்க வேண்டும் என்றால் கிராமத்திலே தான் பார்க்க முடியும். கிராமத்திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களைத்தான் பார்க்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் அவர்களுடைய நிலைமை என்னவென்று பார்த்தோமானால், பெரிய அறிஞர்கள், பொருளாதார நிபுணர்கள் அவர்களுடைய நிலைமையைப்பற்றி நன்றாக படம் பிடித்து காட்டியிருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளைப்பற்றி சொல்கிறார்கள், தமிழகத்திலே இருக்கக் கூடிய விவசாயிகள் தமிழகத்திலே மாத்திரம் அல்ல. இந்தியாவிலேயே இருக்கக்கூடிய விவசாயிகள்

கடனில் பிறக்கிறார்கள். கடனில் வாழ்கிறார்கள். கடனில் இறக்கிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக விட்டுச் செல்லக்கூடிய சொத்து என்னவென்றால் அதுவும் கடன்தான். "A farmer is born in debt, lives in debt, dies in debt and leaves only debt". ஆகவே கடனிலே பிறந்து கடனிலே தவழ்ந்து கடனிலே இறக்கும் அவர்கள் தங்கள் மக்களுக்கு விட்டுச் செல்லக் கூடிய சொத்தும் கடன்தான். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

(நண்பகல் 12-00)

பிராந்திய உணர்வுகளை வைத்து மக்களைத் தன்பால் இழுத்து விடலாம் என்ற நினைப்பால் அவர்கள் நடத்தக்கூடிய காரியம் இது. ஆகவே, பொருளாதாரப் பிரச்னைகளை நாம் எப்போது தீர்க்கிறோமோ அப்போது தான் தமிழகத்திலே நிரந்தரமான அமைதி ஏற்படுத்த முடியும். அப்போது தான் நிரந்தரமாக நல்ல பொருளாதார அமைப்பு ஏற்படுத்த முடியும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகள் பிரச்னையை எப்படி அணுகுவது என்பதைப் பற்றி எல்லாம் இங்கே பேசினார்கள். இங்கே கூட பேசிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மதிப்பிற்குரிய பாலசுப்பிரமணியம் அவர்களை தலைவராகக் கொண்ட ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு இன்னும் 2 வாரத்தில் அறிக்கை கொடுத்துவிடும் என்று சொன்னார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில் பல்வேறு பிரச்னைகள் தீர்க்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இவ்வளவு கால தாமதமாக அந்த அறிக்கை தாக்கல் செய்யப்படும் சூழ்நிலையில் அதற்கு இடையில் பல்வேறு சம்பவங்கள் நடந்ததைப் பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அந்த அறிக்கை சமர்ப்பிக்க இவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது என்னுடைய கருத்து. ஆகவே, விவசாயிகளுடைய பிரச்னையைக் குறித்த அணுகுமுறையைப் பொறுத்த வரையில், ஜான் கென்னத் என்ற பொருளாதார நிபுணர் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த கருத்தை இந்த மன்றத்தில் சொல்வது என் கடமை என நான் கருதுகிறேன்.

John Kenneth Calbraith observes "Public intervention on behalf of agriculture-socialisation of agricultural technology support to agricultural prices to encourage and protect investment, co-operative procurement of fertiliser, petroleum and equipment, co-operative or public supply of electricity subsidy in support of new techiques is also essential for a balanced development."

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1979 ஏப்ரல் 24

விவசாயிகளின் பிரச்னையை அணுகும்போது என்னென்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பது அரசாங்கத்தின் கடமை. பப்ளிக் இன்டர்வென்ஷன் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். Support to Agricultural price to encourge and protect investment அவர்களை ஊக்குவிப்பதற்காக அவர்கள் முதலீடு செய்வதற்காக நல்ல விலைகள், நியாயமான விலைகள் கிடைக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் தான் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனெனில் விவசாயிகளே தங்களுடைய விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் Public intervention on behalf of agriculture is also essential for a balanced development என்று சொல்லியிருக்கிறார். எந்தெந்த வகையில் அரசாங்கம் தலையிட்டு அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது நியாயமான விலை கிடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். ஆனால் இப்போது இருக்கும் சூழ்நிலையில் நெல் விலை பற்றி அதிகமாகப் பேசியிருக்கிறார்கள். மானாவாரி விவசாயிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் பருத்தி விளைவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பருத்திக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. ஒரு குவிண்டால் பருத்தி லட்சுமி காட்டன் அல்லது வேறு எந்தப் பருத்தியாக இருந்தாலும் சரி, அதன் விலை ஒரு பவுன் விலைக்கு சரியாக இருந்தது. அதனுடைய விலை ஒரு குவிண்டால் ஒன்றுக்கு 300 முதல் 350 வரை இருந்தது. சில நேரங்களில் 400 வரை கூட இருந்து இருக்கிறது. ஆகவேதான் சொன்னேன் ஒரு பவுன் விலைக்கு சரியாக ஒரு குவிண்டால் பருத்தி விலை இருந்தது என்று. அந்த வகையில் அது பொருளாதாரத்தை செம்மை செய்கிற விதத்தில் இருந்தது. ஆனால் இப்போது பவுன் விலை ரூ. 1,000 போய்விட்டது. ஆனால் பருத்தி லட்சுமி காட்டனாக இருந்தாலும் வேறு எந்தப் பருத்தியாக இருந்தாலும் ரூ. 250 முதல் 300 அல்லது 350 வரைதான் இருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆகவே, விவசாயிகள் தங்களுடையகடனை அடைக்க முடியாத சூழ்நிலையில், ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதில் அரசாங்கம் தலையிட்டு ஏதாவது ஒரு நிரந்தரமான முறையில் தீர்வு காண முடியவில்லைஎன்றால், கால்பிரைட் அவர்கள் சொல்கிறார்கள்.

Had Agriculture been free from such public interference-had orthodox prinoiple been controlling the performance would unquestionably has been efficient and perhaps by now dangerously so.

1979 ஏப்ரல் 24] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

இது ஒரு பயங்கரமான சூழ்நிலைக்கு கொண்டு போய்விடும். அரசாங்கம் தலையிட்டு, இந்தப் பிரச்னைகளுக்கு ஒரு வழிவகை செய்யவில்லையென்றால் நிச்சயமாக ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகிவிடும் என்று பொருளாதார நிபுணர் கால்பிரைட் சொல்கிறார். அவர் சொல்கிறபோது, ''சோஷ்யலைசேஷன் ஆஃப் அக்ரிகல்சுரல் டெக்னாலஜி'' விவசாய விஞ்ஞானத்தை சமூக உடைமையாக்குதல் என்ற கருத்தைச் சொல்கிறார். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் விவசாய விஞ்ஞானத்தை பெரிய விவசாயிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். பெரிய விவசாயிகள்தான் டிராக்டர் போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்தி, விஞ்ஞான முறையில் விவசாயம் செய்கிறார்கள். பொருளாதார நிபுணர் கால்பிரைட் அவர்கள் சொல்லுகிறபடி, 'சோசியலைசேஷன் ஆஃப் அக்ரிகல்சுரல் டெக்னாலஜி' என்ற முறையில் அனைவரும் விவசாய விஞ்ஞானத்தை பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட வேண்டும்.

இப்போது வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பல்வேறு வகைகளில் இந்த விஞ்ஞான முறைகளை சாதாரண விவசாயிகளும் பெற வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். என்றாலும் கூட இன்று அவர்கள் நிலத்தில் உழவு போட வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு டிராக்டர் கிடைப்பதில்லை. ஆகவே, விஞ்ஞான முறையில் சாதாரண ஏழை விவசாயிகள் விவசாயம் செய்து பயன்படும் வகையில் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் வசதி, வாய்ப்புகள் அமையவில்லை என்று எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்,

அடுத்தபடியாக, இந்த நிலையிலே சிறு விவசாயிகளுடைய கடனையாவது, அவர்களுடைய கடனை முழுமையாக ரத்து செய்ய அரசு முன்வரவேண்டும். மற்ற விவசாயிகளுக்கு 'பினல் இன்டரஸ்ட்' என்று சொல்லுகிற தண்ட வட்டி இருக்கிறதே, அந்த தண்ட வட்டியை நீக்க அரசு ஆவன செய்யவேண்டும். சிறு விவசாயிகளுக்கு இருக்கிற எல்லா கடன்களையும் ரத்து செய்து, மற்ற விவசாயிகளுடைய தண்ட வட்டியை ரத்து செய்தால் ஓரளவுக்கு அவர்கள் முதலீடு செய்வதற்கு வசதியாக இருக்கும்; சேமிப்பு செய்வதற்கும் வசதி இருக்கும். கடன் சுமை இல்லாமல் தங்களுடைய அத்தனை உழைப்பும் விவசாயத் துறையில் பயன்பட அவர்களை ஊக்குவிப்பதாக இருக்கும் என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ மூன்று இடையூறுகள் அல்லது எதிர்ப்புகள் இருக்கின்றன. அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கின்றன. அதில் முதலாவதாக இருப்பது இடைத்தரகர். இடைத்தரகர்களைப் பொறுத்த

மட்டில் நம்முடைய தமிழ்நாடாக இருந்தாலும் சரி அல்லது இந்தியத் துணைக்கண்டமாக இருந்தாலும், சரி, இடைத்தரகர்கள் பெரும்பாலான பொருளாதாரத்தை எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். நாம் முதலீடு செய்யும் அந்த பணம் இருக்கிறதே, அது பெரும்பாலும் ஒப்பந்தக்காரர்களிடம் போய் சேருகிறது.

பல திட்டங்களை அரசு நிறைவேற்றுகிறது. அதில் ஏராளமான முதலீடும் செய்கிறது. குளம் வெட்ட, கட்டடம் கட்ட அல்லது சாலைகள் அமைக்க—இப்படிப்பட்ட பல்வேறு பணிகளில் ஏராளமான முதலீடு செய்யும் போது, 10 கோடி ரூபாய் முதலீடு செய்தால் ஏறத்தாழ 6 கோடி ரூபாய்க்குத்தான் வேலை நடக்கிறது. மீதமுள்ள 4 கோடி ரூபாய் ஒப்பந்தக்காரர் கையில் லாபமாக போய்ச் சேருகிறது. ஆகவே முதலீடு செய்யும் பணத்தில் பாதிக்குப் பாதிதான் திட்டங்களுக்குச் செலவிடப்படுகிறது; மீதமுள்ள பாதிப் பணம் இடைத்தரகர்களுக்கு, ஒப்பந்தக்காரர்களுக்கு போய் கிடைக்கிறது.

வியாபாரிகளைப்பற்றிச் சொல்லும்போது கமிஷன் ஏஜண்டுகளைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. முன்னாள் நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லும் போது, "The traders are making higher profits at the cost of the producer and consumer" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உற்பத்திச் செய்யக்கூடியவன், நுகர்கிறவன் இதற்கு இடையிலே வியாபாரிகள் பெரும் லாபத்தை சம்பாதிக்கிறார்கள். உற்பத்திச் செய்யக்கூடிய பொருள்கள், அதனால் ஏற்படும் லாபம் உற்பத்திச் செய்யக் கூடிய விவசாயிக்கும் கிடைப்பதில்லை; நுகரக் கூடிய பொது மக்களுக்கும் கிடைப்பதில்லை. ஆனால் இடையில் இருக்கிற இடைத்தரகர்களுக்கு, வியாபாரிகளுக்கு கிடைக்கிறது என்று சொல்கிறார். ஆகவே, ஒப்பந்தக்காரர்கள் ஒரு வகையில் முதலீடு செய்யும் பணத்தை எடுத்துச் செல்கிறார்கள்; உற்பத்தியாகும் பொருள்களில் கிடைக்கும் லாபத்தில் பெரும்பகுதியை 'டிரேடர்ஸ்'—வியாபாரிகள் எடுத்துச் சென்று விடுகிறார்கள். ஆகவேதான் இந்த மாமன்றத்தில், இந்த நிதிநிலை அறிக்கையில் பேசும்போது, காங்கிரஸ் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 'ஹோல்சேல் பிரைஸ் இண்டக்ஸ்'—மொத்த விலைப்புள்ளி ஸ்திரமாக இருக்கிறது ஆனால் 'கன்ஸ்யூமர்ஸ் பிரைஸ் இண்டக்ஸ்' நுகர்வோர் அல்லது வாங்குவோர் விலைப்புள்ளி கூடி, ஸ்திரமற்ற நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள்.

வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கி, சேமித்து வைத்து, 'ஹோல் சேல் பிரைஸை' நிரந்தரமாக இருக்கச்செய்து விடுகிறார்கள். அதே நேரத்தில் சாதாரண மக்கள் வாங்குகிற விலையை

ஏற்றிவிடுகிறார்கள். இடையிலே இந்த மாறுபாடு இருக்கிறது. இதற்கு இடையிலே இருக்கிற லாபத்தை பெரிய வியாபாரிகள் தட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள்.

(பிற்பகல் 12-10)

ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டினுடைய பொருளாதார நிலைமையை வெகுவாகப் பாதித்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இடைத்தரகர்களால் நம்முடைய பொருளாதாரம் ஒரு வகையில் பாதித்துக் கொண்டிருக்க, வியாபாரிகளாலும், கமிஷன் ஏஜெண்டுகளாலும் நம்முடைய பொருளாதாரம் பாதிக்கின்றது.

மூன்றாவதாக மத்திய அரசினுடைய தவறான பொருளாதார கொள்கையின் காரணமாகவும் அவர்களுடைய தவறான பொருளாதாரச் செயல்பாடுகளின் காரணமாகவும் நம்முடைய தமிழ்நாட்டில் பொருளாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று சொன்னால், உண்மையான அடிப்படையின் காரணமாகத்தான் அதைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கை தவறாக இருக்கின்றது, என்று நான் சொன்னால் ஒரு வேளை இங்கே இருக்கக்கூடிய ஜனதாக் கட்சி உறுப்பினர்கள் என் மீது வருத்தப்படக்கூடும். ஆனால் டாட்டா இன்ஸ்ட்டியூட் அப் சோசியல் சைன்ஸ், பாம்பே என்று சொல்லக்கூடிய அந்த இன்ஸ்ட்டிட்யூட்டிலே இருக்கக்கூடிய பேராசிரியர் திரு. எஸ். டி. புனேகர் அவர்களே சொல்கிறார்கள், நேஷனல் கவுன்சில் ஆப் அப்ளைட் எக்கனாமிக் ரிசர்ச் என்ற ஸ்தாபனம் ஒரு ஆராய்ச்சி செய்து 1978-79லே தேசிய பொருளாதார வளர்ச்சி எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதைக் காண்பித்திருக்கிறார்கள். அதாவது ஏறக்குறைய 3 பெர்சன்ட் என்றுதான் சொல்கிறார்கள் என்று சொல்கிறார் எஸ். டி. புனேகர்.

According to the latest proposal of the National Council of Applied Economic Research the Effort of economic growth reached in 1978-79 would be nearly 3%.

ஆகவே 1978-79ம் ஆண்டிலே நம்முடைய தேசியப் பொருளாதார வளர்ச்சி ஏறக்குறைய 3 சதவீதம்தான் என்று சொல்லப்படுகிறது. அதுவும் 3 சதவீதம் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது, மூன்று சதவீதத்தை அடுத்து இருக்கும் என்றுதான் சொல்கிறார்கள், ஆனால் கங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்தில்

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1979 ஏப்ரல் 24

நான்கைந்து ஆண்டுகளில் தேசிய பொருளாதார வளர்ச்சி 3.8 சதவீதம். 3.7 சதவீதம். 3.2 சதவீதம் 3.5 சதவீதம் என்ற அளவில் 3 சதவீதத்திற்கும் அதிகமாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால் ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்த பிற்பாடு அதன் வளர்ச்சி 3 சதவீதத்திற்கு கூட எட்டவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இந்த இரண்டாண்டு கால ஜனதா ஆட்சியில் தேசியப் பொருளாதார வளர்ச்சி குறைந்து கொண்டு தான் சென்றிருக்கின்றது என்பதை நான் சொல்லவில்லை, நேஷனல் கவுன்சில் ஆப் அப்ளைட் எக்கனாமிக் ரிசர்ச் என்று அந்த ஸ்தாபனம் சொல்கிறது, என்பதைப் பேராசிரியர் எஸ். டி, புனேகர் அவர்கள் சொல்கிறார்.

இவ்வாறு தேசியப் பொருளாதாரம் பின் தங்கிய நிலையில் சென்று கொண்டிருப்பதால் தமிழ்நாடும் நிச்சயமாகப் பாதிக்கப் படத்தானே செய்யும். ஜனதாக் கட்சியின் இந்தப் போக்கின் காரணமாக தமிழ்நாட்டின் பொருளாதாரம் மிக மிக அதிகமாக பாதிக்கப்படுகிறது. இந்த தமிழ்நாடு அரசு எவ்வளவுதான் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்று முயற்சி எடுத் தாலும் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையின் காரணத்தால் தமிழ்நாட்டினுடைய பொருளாதாரக் கொள்கை யும் மிகவும் பாதிக்கப்படுகிறது, என்று சொல்லி மத்திய அரசை நான் இந்தச் சூழ்நிலையில் கண்டனம் செய்யவும் விரும்புகிறேன்.

ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே 1977–78ம் ஆண்டில் தொழில் துறையை எடுத்துக் கொண்டாலும் கூட அதன் நிலைமை நன்கு தெரிகின்றது, 1976–77லே உள்ள நிலை யை பார்க்கின்றபோது, திரு. எஸ். டி. புனேகர் சொல்கிறார் As a result of the state of affairs of the Central Government the growth of financial aid to Industries has fallen என்று. ஆகவே தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையிலும்கூட, தொழில் வளர்ச்சிக்கு முதலீடு செய்திருக்கக்கூடிய நிலைமையைக் கணக் கிட்டுப் பார்த்தாலும்கூட மிக மிக குறைவாகத்தான் தொழில் வளர்ச்சிக்கென்று இன்றைய ஜனதாக் கட்சியின் மத்திய அரசு உதவி செய்து கொண்டிருக்கின்றது என்று சொல்கிறார். அப்படிச் சொல்கிறபோது அவர் ஒரு புள்ளி விவரத்தையும் கொடுக்கிறார் அதாவது தொழில் வளர்ச்சிக்கென்று இன்றைய மத்திய அரசு ஒதுக்கி இருப்பது 27 சதவீதம் தான். ஆனால் அதற்கு முன்பு இருந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இருந்த 1976–77லே தொழில் வளர்ச்சிக்கென்று ஒதுக்கிய தொகை 47.2 சதவீதம்.

1979 ஏப்ரல் 24] [திரு. ஓ சோ. வேலுச்சாமி]

பாதி அளவிற்குக் குறைந்து விட்டது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் 47.20 சதவீதம் 1976–77 காங்கிரஸ் ஆட்சி பொறுப்பில் இருந்த காலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கியது. இப்போது ஜனதா ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற இந்த ஆண்டு 1977–78ம் ஆண்டு 27 சதவீதம் எந்த அளவிற்கு இதனால் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதைப் பார்க்க வேண்டும் மத்திய தொழில் கொள்கை தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சியை பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிலக்கரி தொழில் எடுத்துக் கொண்டால் 14.5 கோடி ரூபாய் இந்த ஆண்டு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை திரு. புனேகர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்கள். ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா பொறுத்தவரையில் எல்லா வருடங்களிலும், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில் கடந்த எல்லா வருடங்களிலும் அதிக உற்பத்தி இருந்து வந்து, இப்போது 1977–78ல் ரூ14.75 கோடி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்று அவரே சொல்கிறார்.

Shipping Corporation of India which was still recently a profit making undertaking incurred a net loss of Rs.1474 crores during 1977–78.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவிலே நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டு அதனால் ரூ. 14.74 கோடி நஷ்டம் என்று சொல்லப்படுகிறது. அது மற்ற வட மாநிலங்களைப்போல நம்முடைய மாநிலத்தையும் பாதிக்கின்றது. வி. ஆர். பார்ட் ஆப் இந்தியா தமிழ்நாடு தொழில் வளர்ச்சியும் இந்தியாவின் ஒருமித்த வளர்ச்சியோடு ஒரு அங்கமாக இருக்கிறது. அங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டத்தினால், குறைபாடுகளினால், பிற்போக்கான நிலைமையினால், தமிழ்நாடு பொருளாதார நிலை பாதிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். தமிழ்நாடு பொறுத்த மட்டில் அதிகாரிகளுடைய விரும்பாத போக்கு நம்முடைய பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கிறது.

உதாரணமாகச் சொல்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் ஓட்டைப் பிடாரத்தில் கைலாசபுரத்தில் செல்லையா என்பவர் ஒரு ரைஸ் மில்லுக்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்தும் அவர்களுக்கு உரிமம் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்படாததற்குக் காரணம் அங்கே ஓட்டைப்பிடாரத்தில் இருக்கக் கூடிய வருவாய் ஆய்வாளரும் இன்னொருவரும் சேர்ந்து சென்று 500 ரூபாய்

கொடுத்தால்தான் உங்களுக்கு உரிமம் கிடைக்கும். இவர் ஒரு பெரிய அதிகாரி என்று சொல்லி, அவர் மீது வழக்குப் போடப் பட்டு அது விஜிலென்ஸ்ஸில் இருக்கிறது.

உரிமம் கேட்டால் நீங்கள் அந்தக் கேஸை வாபஸ் வாங்குங்கள் அப்போதுதான் கொடுப்போம் என்று திருநெல்வேலியில் இருக்கக் கூடிய டி.எஸ்.ஓ. நேர்முக உதவியாளர் அந்தச் செல்லையாவிடத் திலும் சொல்லியிருக்கிறார், என்னிடத்திலும் சொல்லியிருக் கிறார், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் எடுத்துச் சொல்லியும் ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம், அந்தப் பகுதியில் அதிகமாக நெல் அரைக்கும் மில் இல்லை. அங்குள்ள வர்கள் தங்கள் நெல்லை அரைக்க வேண்டும் என்று சொன்னால் 5 அல்லது 6 மைல் நடக்க வேண்டியிருக்கும். ஆகவே, அதிகாரி களுடைய இத்தகைய விரும்பாத போக்கு பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் இருந்து இப்போது விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இது எத்த வகையில் சிக்கன நடவடிக்கை யாகும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது) ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்த அரிசன வீட்டு வளர்ச்சி கழகத்தின் தலைமை அலுவலகத்தை சென்னைக்கு உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரோடுகளைப் பொறுத்தவரையில் முந்தைய ஆட்சியில் ஏராள மாக மணல் ரோடுகளைப் போட்டிருந்தார்கள், அதிலே தவறுகள் நடந்து அதிகமான பணம் வீண் செலவு செய்திருக்கிறார்கள். கிராமத்தில் உள்ள அந்த ரோடுகளை யெல்லாம் மெட்டல் ரோடுகளாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நெல்லை மாவட்டத்தில் ஒட்டைப் பிடாரத்தில் பஞ்சாலங் குறிச்சி யையும் கட்டபொம்மன் தூக்கில் இடப்பட்ட கயத்தாறு என்னும் இடத்தில் உள்ள ரோடையும் இணைத்து அங்கே கட்டபொம்மன் போக்குவரத்துப் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த இரண்டு மண் சாலைகளை கிரேவல் மேட்டல் ரோடுகளாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 12-20)

திரு. என். வரதராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்த நிதி ஒதுக்கீடு முன் வடிவின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை அரசுக்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன். இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை நாம்

1979 ஏப்ரல் 24] [திரு. என். வரதராஜன்]

விவாதிக்கின்ற நேரத்தில், பிரதான எதிர்க் கட்சி இங்கே இல்லை என்பதை நாம் நினைவிலே கொள்ளவேண்டும். ஆகவே, நான்கிலே ஒரு பகுதி உறுப்பினர்கள் இங்கே இல்லை என்பது வருத்தத்திற்குரியது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். எங்களைப் பொறுத்த வரையில் அரசியலிலே பெருத்த வித்தியாசம் இருந்தாலும்கூட, ஒரே கட்சியாக இருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகமும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழகத்தினுடைய இன்றைய பிரதான பிரச்னைகளிலே கூர்மையாக ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இன்று உங்களுக்கு அற்புதமான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. சில மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றும், மற்றும் சில பிரச்னைகளை மத்திய அரசாங்கத்தின் முன் வைத்தார்கள். இன்று மேற்கு வங்காளம், திரிபுரா அரசுகள் அதிகமாக நிதி ஒதுக்குகின்ற அதிகாரம் வேண்டுமென்று கூக்குரல் எழுப்பும் படியான நேரத்தில், இந்த மாநிலத்திலே பெருவாரியான மக்களைக் கவர்ந்திருக்கும்படியான கட்சி, ஜனநாயக ரீதியில் இன்று மத்தியஅரசாங்கத்தை அதிக நிதி ஒதுக்கவேண்டும் என்றுசொல்லக் கூடிய நிலையிலே இருக்கக்கூடிய கட்சி. துரதிருஷ்டவசமாக நீங்கள் பிரிந்து நிற்கின்றீர்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி அதற்கு முன் நிற்கின்றதே தவிர, தமிழ் மக்களின் நல் உணர்வுகளை நீங்கள் மதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்கிறேன்.

இந்தச் சட்ட மன்றத்தில் சில அமளிகள் நடைபெற்றதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அசிங்கம் என்று நினைக்கிறது. ஆனால், அதற்காக ஒரு பெரும் தண்டனை கொடுத்து, ஒரு பிரதான எதிர்க் கட்சியை வராமல் தடுத்து நிறுத்தியிருப்பது ஆளும் கட்சிக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு அரசின் சில அதிகாரங்களை அமுல் நடத்துகின்ற போது, மாற்றுநிலைமைகளைக் கவனிக்க வேண்டிய அரசாக இந்த அரசை நாங்கள் கவனிக்கிறோம். மாநிலத்தை ஆளுகின்ற கட்சியும் மத்திய அரசை ஆளுகின்ற கட்சியும் ஒரே கட்சியாக இந்த நாட்டிலே இருக்கின்ற வரலாறு முடிந்து விட்டது. பல்வேறு மாநில அரசுகள் தோன்றி புதிய புதிய உணர்வுகள் நாட்டிலே வளர்ந்து போய் இருக்கின்ற காலத்தில், புதுப் பார்வையோடு செயல்படாமல், அதற்கு மாறாக பழைய பாணியிலேயே இந்த அரசு செயலாற்றும் நிலை பரிதாபத்திற் குரியதாகும்.

பஞ்சாலைத் தொழிலாளர்கள் இந்த மாதம் 25-ஆம் தேதி வேலை நிறுத்தம் செய்வதாக இருக்கிறார்கள். இன்றைக்கு அந்தத்தொழிலிலே ஈடுபட்டிருக்கும் $1\frac{1}{2}$ லட்சம் தொழிலாளர்கள் இந்த முடிவைச் செய்திருக்கிறார்கள். அதேபோல், பொதுப் பணித் துறையிலே ஏற்கனவே பணியாற்றும் ஓர்ச்

[திரு. என். வரதராஜன்] [1979 ஏப்ரல் 24

சார்ஜ்ட் சிப்பந்திகள் தங்களுடைய உரிமைகளுக்காக கூக்குரல் எழுப்பும் வகையில் போராட்டம் நடத்தி சிறையிலே இருக்கிறார்கள், கிளர்ச்சியும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மதுரை யூனிவர்சிடியிலே பட்டதாரிகள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அத்தர் தொழிலில் ஓராண்டு காலமாக பணியாற்றிவிட்டு, இன்றைக்கு வேலையில்லை என்று அங்கிருந்து விரட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் போராட்டம் நடத்தி, 25 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்ற நிலைமையிருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் அரசு கவனிக்க வேண்டும்.

அடுத்து, மூன்றாவது சம்பளக் கமிஷன் அறிக்கையிலே இருக்கின்ற பல்வேறு தவறுகள் தங்களைப் பாதிக்கின்ற நிலைமையில், நூற்றுக்கணக்கான சங்கங்களைச் சேர்ந்தவர்கள், லட்சக்கணக்கான சிப்பந்திகள் அதிருப்தி அடைந்திருக்கும் நிலைமை தமிழகம் முழுவதும் பரவியிருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு நாம் இந்த அவையிலே விவாதித்தோம், சுற்றுலா வாரியத்தை சேர்ந்த சிப்பந்திகள் வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பேசினோம் அதற்கு முன்னாலே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் சிப்பந்திகள் ஆயிரக்கணக்கில் ஊர்வலமாக வந்து தங்கள் குரலை எழுப்பினார்கள். நேற்றைக்கும், இன்றைக்கும் சட்டமன்றத்திலே இந்த கூட்டுறவுத் துறைச் சிப்பந்திகள் சம்பள உயர்வு பற்றி கேள்வி மூலமாக கேட்டறிந்தோம். ஆகவே, இவைகள் எல்லாம் இந்த அரசுக்கு விரோதமாக வருகின்றன என்று பாவித்து, அவைகளை அடக்குவது என்ற ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து, தங்கள் தலையிலே அட்சதைப் போட்டுக்கொள்ளாமல், இன்றைக்கு அடக்குமுறை பாணங்கள் தொடருவதை கைவிடும்படி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அழுத்தமாக வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடிக்கு நீங்கள் காரணம் அல்ல, கடந்த 32 ஆண்டு காலமாக, நானும், நீயும் சேர்ந்து பொற்காலமாக ஆக்குகிறோம் என்று சொல்லிக்கொண்டு, இன்றைக்கு இருக்கக்கூடிய பொருளாதார சூழ்நிலைக்கு கொண்டுவரப்பட்டு, அப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலே தான் நீங்கள் ஆட்சிப் பொறுப்பை கடந்த இரண்டு ஆண்டுகளாக செயலாற்றுகின்றீர்கள். அப்படி ஆளுகின்றவர்கள் ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் சாதகமான கொள்கையைக் கடைபிடிப்பதற்குப் பதிலாக, நீங்கள் எடுத்தோம், தொடுத்தோம், கவிழ்த்தோம் என்ற வகையில் அடக்குமுறையை கைவிட்டு, இந்தச் சமுதாயத்தைப் பாதுகாக்கின்ற, உரிமைகளைப் பாதுகாக்கின்ற முறையில் செயல்பட்டால் ஒழிய, உங்களுக்கு நல்ல பெயர் ஏற்படாது.

1979 ஏப்ரல் 24] [திரு. என். வரதராஜன்]

நீங்கள் தேர்தல் அறிக்கையிலே கொடுத்த, உறுதியளித்ததைக் கூட அமல் நடத்த இயலாது என்பதை உங்கள் மேலான கவனத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

நேற்றையதினம் கூட மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடத்தில் கேட்டேன், மதுரை யூனிவர்சிடியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் அத்துக்கூலிகள் போன்று வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பது பற்றிக் கேட்டேன், அதற்கு அமைச்சர் அவர்கள் அது தனி அதிகாரம்பெற்ற ஸ்தாபனம் என்று சொன்னார்கள், பின்னால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்று வரும்போது நம்முடைய அரசு தலையிட வேண்டியிருக்கும். அது தனி அதிகாரம் படைத்தது என்று சொன்னாலும் மதுரை யூனிவர்சிடியில் பட்டதாரி ஆசிரியர்களாக, அத்துக்கூலிகளாக இருப்பவர்களை வெளியே விரட்டி விட்டு புதிதாக 50 பேரை வேலைக்குச் சேர்ப்பது என்ன நீதி? இதிலே அரசு தலையிட வேண்டும்,

சுற்றுலாத் துறையில் இருக்கக்கூடிய ஊழியர்கள் சில தவறுகள் செய்தார்கள் என்பதற்காக அனைவருக்கும் தண்டனை கொடுத்தது நியாயமாகத் தெரியவில்லை. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்காமல் இருப்பது நியாயமல்ல.

விவசாயிகள் பிரச்சினை சம்பந்தமாக இன்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. நேற்றைய தினம் ஏற்பட்ட பயங்கரமான துப்பாக்கிச் சூடு, படுகொலை பற்றி விவாதித்திருக்கிறோம். அரசு முக்கியமான நான்கு விஷயங்களைத் தன்னுடைய கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஒன்று, நில உச்ச வரம்பு சம்பந்தமாக இதுவரை எந்த விதமான கவனத்தையும் அரசு எடுத்துக்கொள்ளவில்லை. இது விவசாயிகள் மத்தியில் குறைபாடாக இருந்து கொண்டிருக்கிறது, இரண்டாவது விவசாயிகளின் விளை பொருளுக்கு நியாய விலை கொடுப்பதில் அரசாங்கம் தவறியிருக்கிறது என்பது—மூன்றாவது, அடித்தட்டில் இருக்கக்கூடிய சுமார் ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்கள் கூலிப்பிரச்சினை சம்பந்தமாக ஆமை வேகத்தில் அரசு இருந்து கொண்டிருக்கிறது. நான்காவது, கடன் தொல்லை என்பது விவசாயிகள் மத்தியில் ஒரு பெரிய குறைபாடாக இருந்து கொண்டிருக்கிறது.

இந்த நான்கிலும் அரசின் கொள்கை என்ன என்பதை சொல்ல வேண்டும். இன்றில்லாவிட்டாலும் இந்தச் சபை முடிந்த பிறகாவது அரசின் கொள்கையில் மாறுதலோடு விவசாயிகளை அணுகாவிட்டால் பல்வேறு துப்பாக்கிப் பிரயோகங்கள் வந்தே தீரும். நாங்கள் நாராயணசாமி நாயுடு வகையரா-

களை ஆதரிக்கவில்லை. அவரைச் சிறையில் அடைத்துவிட்ட தாகச் சொல்லிவிட்டீர்கள். அது மட்டும் விவசாயிகளுடைய பிரச்சினைகளை தீர்த்துவிட்டதாகச் சொல்ல முடியாது.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க உச்ச மட்டக் குழுவை அமைத்திருக்கிறீர்கள். அனுமார் வால் மாதிரி அது நீண்டு கொண்டே போகிறது. அதற்குக் காரணம் என்ன? அரசின் அலட்சியப் போக்குதான். நீங்கள் நினைத்தால் குழுவைக் கூட்டி ஒரு மாதத்திற்குள் முடிவை சபையின் முன்னால் அறிவித்திருக்க முடியும். சென்ற காலத்தில் கமிட்டி போட்டு பிரச்சினையைத் தட்டிக் கழிக்க முயற்சி செய்தது போல் அரசு இந்தப் பிரச்சினையில் நடந்து கொண்டது. இந்த மாதம் 26, 27 தேதிகளில் அந்தக் குழு கூடுவதாகச் சொல்லப்படுகிறது. இநதக் குழுவின் முடிவுகளை அரசு சபை முன்னால் கொண்டு வர வேண்டும்.

ஐந்து ஏக்கர் உள்ள விவசாயிகளுக்குப் பயிர்க் கடன்கள் தவிர வேறு கடன்கள் இல்லை. விவசாயத்திலே ஒருவிதமான முன்னேற்றத்தையும் காண முடியாமல் அவர்கள் பயங்கரமான இயற்கை உற்பாதங்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விலை வீழ்ச்சி அவர்களை வீழ்ச்சியடையச் செய்திருக்கிறது, ஐந்து ஏக்கர் வரை நஞ்சை, புஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்குப் பயிர்க் கடன்களை ரத்து செய்யவேண்டுமென்ற கணக்கைப் பார்த்தால் 60 கோடி ரூபாய் அளவுக்கு வரும். ஆறு ஆண்டு அல்லது ஏழாண்டுக் காலத்தில் இந்த 60 கோடியைப் பூர்த்தி செய்யப் போகிறார்கள். இந்த ஆண்டே அல்ல. அதனைச் செய்தால் பெருவாரியான கிராமத்திலுள்ள ஏழை நடுத்தர மக்கள் உங்கள் பக்கம் நிற்பார்கள், அதற்கு மாறாக தவறான நிலைமையில் மேலும் மேலும் மோசமான பாதையில் சென்று கொண்டிருக்கவேண்டாம்.

விவசாயத் தொழிலாளர்கள் கூலிப் பிரச்சினையில் கருத்துக் கூறும்போது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மொத்தத்தில் அப்படித் தவறாகச் சொல்லக்கூடாது. எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற முறையில் சொல்லக்கூடாது என்று சொன்னார்கள், வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்மீது ஆயிரம் மடங்கு நல்லெண்ணம் வைத்திருக்கிறோம். ஆனால் அதுஅல்ல பிரச்சினை. விவசாயத் தொழிலாளர்களுக்கு பல மாநிலங்களில் 8 ரூபாய் 10 ரூபாய் வரை கூலி கொடுத்து வருகிறார்கள். ஆகவே, தினக் கூலி 8 ரூபாய் என்ற அளவில் அது தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் சரி, மற்ற மாவட்டங்களாக இருந்தாலும் சரி கொடுப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல் விலையைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய சர்க்கார் என்ன விலை அறிவித்திருக்கிறதோ அந்த விலைக்காவது மாநில சர்க்கார் அந்த நெல் மார்க்கெட்டுக்கு வருகிறபோது கொள்முதல் செய்ய வேண்டும். மாநில சர்க்காருக்கு என்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நாங்கள் அறிவோம்.

(பிற்பகல் 12—30)

நாங்கள் இரண்டு மாநில அரசுகளில் அரசாட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். ஒரு பத்து முப்பது கோடி ரூபாய் கொள் முதல் செய்வதற்காகத் தேவைப்படலாம். அதற்கு அரசு வழி வகை காணவேண்டும். இன்றைக்கு லட்சக்கணக்கானவர்கள் ஒரு குவிண்டால் நெல்லை 70 ரூபாய், 60 ரூபாய்க்குத்தான் விற்கக் கூடிய அவல நிலைமை தஞ்சையிலே, தென்னாற்காடிலே, வடாற்காடிலே, மதுரையிலே ஏற்பட்டிருக்கிறது. நாம் நிர்ணயித் திருக்கிற 85 ரூபாய்க்குக் கீழே போகாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டாமா? விலைவாசியைத் தடுக்க வேண்டுமென் றால் மாநில அரசுக்கும் அதற்குப் பொறுப்பு இருக்கிறது. மத் திய அரசை மட்டும் சொல்லிவிட்டு தட்டிக் கழித்துவிடக்கூடாது. மாநில சர்க்கார் இதிலே முக்கியமான கவனம் செலுத்த வேண்டும்.

உச்சவரம்பு, பினாமி நிலங்கள் இன்றைக்குப் பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களை மேற்கு வங்காளத்திலே எடுத்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதை நாம் நம்ப வேண்டாம், ஒரு கட்சியின் சார்பாக நாம் நம்பவேண் டாம், நாம் ஒரு தூதுக்குழுவை அனுப்பி அல்லது அமைச்சர்கள் சென்று அறிந்து கொள்ளலாம். அது ஒன்றும் பாவமான காரிய மல்ல. அவர்கள் இந்தியாவிலேயே அதிகமான பினாமி நிலங் களை எடுத்துக் கொடுத்து இருக்கிறார்கள் என்று திட்டக் கமிஷன் சொல்லியிருக்கிறது. அந்த முறையிலே உச்சவரம்பு அடிப் படையிலேயும், பினாமி அடிப்படையிலேயும் உள்ள நிலங்களை நீங்கள் எடுக்க வேண்டும், எடுப்பது கடுமையான காரியம் தான், கடுமையான காரியம் என்பது எங்களுக்குத் தெரியும். அப்படி கடுமையானகாரியத்தை செய்தால் யாரை நீங்கள் சந்திக்கவேண்டு மென்று எல்லாம் எங்களுக்குத் தெரியும். கோடிக்கணக்கான ஏழை அரிசன மக்களுக்கு வருவாய் கொடுக்க வேண்டுமென்றால் நிலத்தைத்தான் எடுத்துக் கொடுக்க வேண்டும், வேறு வழி கிடை யாது. நஞ்சை என்றால் 5 ஏக்கரும் புஞ்சை என்றால் 15 ஏக்க ரும் தான் ஒரு குடும்பத்திற்கு ஐந்து பேர் கொண்ட ஒரு குடும் பத்திற்கு வைத்துக்கொள்ளலாம் என்ற முறையிலே உறுதியாக, அறுதியாக ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்தால் பல ஆயிரக்கணக்கான பெரியவர்கள் எவ்வளவு நிலங்களை வைத்திருக்கிறார்கள் என்பது தெரியும்.

இந்தச் சட்டத்திலே பல ஓட்டைகள் இருக்கின்றன என்பது தெரியும். பினாமி நிலங்களை எடுத்துக் கொடுத்து இந்த நான்கு பிரச்சினைகளையும் நீங்கள் நல்ல முறையிலே அணுகினால்தான் விவசாயிகளுடைய நல்லாதரவை நீங்கள் பெறமுடியும், ஜன நாயகவாதிகளின் வாழ்த்துக்களைப் பெற முடியும். மாறாகத் திரும்பிச் சென்றால் ஆபத்தான நிலையில் நீங்கள் மாட்டிக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசும்பொழுது எடுத்தோம் தொடுத்தோம் கவிழ்த்தோம் என்று வார்த்தை களைப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய அரசு வந்த பின்னர் எதை எடுத்தது, எதைத் தொடுத்தோம், எதைக் கவிழ்த்தோம் என்பதை விவரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகக் கொடுத்தால் அதிகமாகச் சொல்கிறேன். நான் அரசுக்குச் சொல்ல வேண்டிய ஆலோசனை என்ற அடிப் படையிலே சொல்ல வேண்டியிருக்கிறது. திண்டுக்கல்லிலே ஏ.ஓ. இருக்கிறார். அதிகமான அதிகாரத்தை நில உச்ச வரம்புக்கும் அதிகமான நிலத்தை, விநியோகிக்கின்ற அதிகாரத்தைக் கொடுத் திருக்கிறோம். அவர் பழனியிலே இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை ஏழைகளுக்கு விநியோகிக்கக்கூடிய பொறுப் பிலே இருக்கிறவர்; நிலச் சுவான்களுக்குக் கையாளாக இருந்து கொண்டு நிலப் பிரபுக்களின் நிலத்தை பினாமியாக மாற்றி பினாமி குத்தகைதாரர்களை உருவாக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார், மிக உஷாராக இருக்க வேண்டும். இன்றைக்கு உள்ள நிர்வாகத்தை நம்பி காரியத்தை செய்து விட முடியாது. அரசு உஷாராக இருந்து கொடுக்கப்படுகிற நிலங்கள் கொஞ்ச மாக இருந்தாலும் ஏழை எளியவர்களுக்கு விநியோகிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நிலச் சுவான்தார்கள் தாங் களே நிலங்களைப் பிரித்துக் கொண்டு பட்டாக்களை புதிய பெட்டிகளிலே பூட்டிவைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

வேலையில்லாதவர்களுக்கு நிவாரணம் வேண்டும். இந்தப் பிரச்சினை கிளர்ந்தெழுந்தபோது மிகப் பெரியவர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள், வேலையில்லாதவர்களுக்கா? நிவார ணமா? அது சோம்பேறித்தனத்தை ஊக்குவிப்பது ஆகாதா என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள், ஆனால் இன்றைக்கு அவைகள் எல்லாம் மண்ணோடு மண்ணாகச் சரிந்து விட்டன. மேற்கு வங்கத்திலே நிவாரணம் அளிக்கப்படுகிறது. அதை நாம் உண்டாக்கவில்லை, நாடு உண்டாக்குகிறது, வேலை

1979 ஏப்ரல் 24] [திரு. என். வரதராஜன்]

யில்லாதவர்களுக்கு நிவாரணம் என்ற முறையிலே நம்முடைய பட்ஜெட்டிலேயும் சிறிதளவாவது பணத்தை ஒதுக்கி நிவாரணம் அளித்தால் தான் கீழ் மட்டத்திலே உள்ள மக்கள் இன்றைக்கு வாழ்க்கையை நடத்தமுடியும்.

இன்றைக்கு தீப்பெட்டிக்காக வரியை உயர்த்தியிருக்கிறோம். அந்த வரியின் மூலமாக, நமக்கு சுமார் ரூ. 2 கோடி அல்லது ரூ. 1 கோடிதான் வரும் என்று சொல்கிறோம். கணக்கிலே எனக்கு வித்தியாசம் தெரிகிறது. ஆனால், அதுவல்ல பிரச்னை. தமிழ்நாட்டிலே, சிவகாசியைச் சுற்றியுள்ள சிறு தொழில்களிலே, தீப்பெட்டி தொழில் மிக முக்கியமானது. அந்தத்தொழில் அதிபர்கள் எல்லாம் சிறிய தொழில் அதிபர்கள், கடந்த ஒரு வார காலமாக உண்ணாவிரதம் போன்றவற்றிலே ஈடுபட்டிருக்கிறார்கள். உண்ணாவிரதத்திற்காக கவனம் செலுத்தும்படி நான் சொல்லவில்லை. அந்தத் தொழில் நசிந்து விடக்கூடாது என்ற காரணத்திற்காக நீங்கள் ஆலோசிக்க வேண்டும். இந்த வரி வசூலைக் கூட, இந்த இரண்டு பைசா உயர்வைக் கூட, ஒத்திப் போட்டாக வேண்டும். அதன் மூலமாக, ஒரு பெரிய அளவுக்குக் காரியங்களைச் செய்வதற்கு, அவர்களுக்கு உதவி செய்ததாகும்—சிறிய தொழிலிலே என்பதனால் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்று மது விலக்குச் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக என்று சட்டத்தை மிக முறுக்காக நாம் திருத்தி அமைத்திருக்கிறோம். இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும்போது பலவிதமான இடர்பாடுகளை அரசாட்சி பார்க்க வேண்டியிருக்கும் என்பதை நாம் இந்தச் சட்டசபை முடிவதற்கு முன்னாலேயே, நேற்றைய தினம் தகவலைப் பத்திரிகைகளிலே படிக்கிறோம். காஞ்சிபுரத்திலே ஒரு 24 வயதுள்ள வாலிபன் மது விலக்குக்காக கைது செய்யப்பட்டு, போலீஸ் கஸ்டடியிலே மரணம் அடைந்தான். ஆனால், போலீசார் சொல்கிறார்கள், அவன் தற்கொலை செய்து கொண்டான் என்று. எப்போதுமே அப்படித்தான் சொல்வது வழக்கம். ஆகவே, போலீசாருடைய நிலை என்ன என்பது அரசாட்சிக்குத் தெரியும். ஆகவேதான், வற்புறுத்துகின்றேன். கடந்த 13-2-1979லே, மதுரை மாவட்டத்திலே, வேடசந்தூரிலே, பஸ்ஸிலே பாசஞ்சர்கள் ஏற்றுவது சம்பந்தமாக, கண்டக்டர்களுக்கும் அவர்களுக்கும் சிறு தகராறு வந்தது. அதிலே அங்கேயிருந்த போலீஸ்காரன் தலையிட்டு, அந்த பஸ் இரண்டிலேயும் இருந்த பாசஞ்சர்களை அடித்து நொறுக்கி, போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் அடித்து நொறுக்கி, அதிலேயிருந்த இராணுவ வீரர்களை அடித்து நொறுக்கி, அதிலேயிருந்த கிராமப்புறத்தினுடைய கணக்குப் பிள்ளை, நாட்டாண்மை ஆகியோரை அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். அவர்களுடைய புகார்கள் எல்லாம் சர்க்காருக்கு வந்திருக்கிறது. இவர்களை, வைத்துத்தான் நீங்கள் இந்தச்

சட்டத்தை அமுல் நடத்திபாகவேண்டும். நீங்கள் உஷாராக இல்லாவிட்டால், மதுவிலக்கே தமிழ் நாட்டிலே மிகப் பெரிய அளவுக்கு ஏழைகளை பாதிக்கக்கூடிய ஒரு நிலைமையிலே வந்து சேரும். ஆகவே இது பற்றி, இவ்வளவு சிக்கலான, கஷ்டமான, ஒரு சட்டத்தை அமுல் நடத்தித்தான் தீரவேண்டுமென்ற ஒரு பிடிவாதத்தைக் கொண்டிருப்பது சரியா என்று பார்க்கவேண்டும். அன்றைக்குக் கூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், பஞ்சமா பாதகங்களிலே மதுவும் சேரும் என்று. அந்தப் பஞ்சமா பாதங்களிலே இப்படி ஒரு போலீஸ் கஸ்டடியிலே சாதாரணமான ஒரு மனிதன் நிரபராதியாகச் சென்று அவன் உயிர்பறிக்கப்படுவதும் சேருமா, சேராதா என்பதை நீங்கள் ஆலோசிக்க வேண்டும். ஆகவே, இந்தக் கொடுமை மிக முக்கியமானதாக இருக்கும். நீங்கள் எந்த நிர்வாகத்தை வைத்து அமுல் நடத்துகிறீர்களோ அது கோளாறு. அடுத்து, லஞ்சமும் ஊழலும் தலை விரித்தாடுவதற்கு ஒரு உதவி செய்யும். மதுவிலக்குச் சட்டத்தை, மிக திருத்தமாக, அழுத்தமாக அமுல் நடத்துவதிலே வளர்ச்சியைக் காட்ட வேண்டும் என்றால், மறு சிந்தனை தேவை அமுல் நடத்துவதிலே என்று உங்களிடத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், 1977-ஆம் ஆண்டு, மதுரை மாவட்டத்திலுள்ள, சின்னமனூர் காவல் நிலையத்திலே மதுவிலக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட ஒச்சா தேவர் என்பவரை அடித்துக் கொன்று விட்டார்கள். இந்த மாமன்றத்திலே விவாதித்தோம். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களே, வருவாய் வாரிய உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்களை அனுப்பி விசாரணை நடத்தினார்கள். அந்த விசாரணை அறிக்கை என்ன ஆனது என்று தெரியவில்லை. அடிபட்டு செத்துப்போன, ஒச்சாத் தேவர் மனைவி வேலையிழந்து எந்தவிதமான வருமானமுமின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குடும்பங்களை நீங்கள் கவனித்து, இது சம்பந்தமான நடவடிக்கைகளை, நீங்கள் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் அதனை இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கவேண்டும்.

அடுத்து, நம்முடைய சட்டமன்றத் துறையைப் பற்றி நேற்றைய தினம் பேசலாம் என்று சொன்னோம். பேரவைத் தலைவர் நேரம் இல்லாததால், இன்றைக்குப் பேசலாம் என்று சொன்னார்கள். ஆகவே, ஒன்றிரண்டு நான் சொல்ல வேண்டியது, இந்தத் துறையை தமிழ் மொழியிலேயே மேலும் சிறப்பாக நடத்துவதற்கும் சட்டமன்ற நடவடிக்கைகளை, மேலும் சட்ட முன் வடிவுகள் போன்ற பல்வேறுவிதமானவைகளை, தமிழிலே கொண்டு வர நாம் முயற்சி செய்ய வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய சட்டசபையினுடைய விதிகளை இன்றையதினம் நாம் ஆங்கிலத்தில்தான்

வைத்திருக்கிறோம். இது ஏன்? இந்த நாட்டில் தமிழ் வளர்ச்சி உயர்ந்து வருகிறபொழுது, இந்தத் தமிழிலேயே நம்முடைய சட்டசபை விதிகளைக் கொண்டு வரமுடியாதா என்று நான் அறிய விரும்புகிறேன். ஆகவே, மிக அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

காகிதங்கள் தமிழில் இல்லை என்று கிழித்தெறிவது என் பதல்ல முக்கியம். அதைவிட முக்கியமானது, அழுத்தமாக இந்தத் துறையிலே இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்தத் துறையிலே, பழைய பழக்கத்தில் இருக்கும்படியான அதிகாரிகள், மற்றவர்களுக்கு மேலோட்டமாக அவர்களுக்கு அந்தக் கண்ணோட்டம்தான் இருக்கும். புதிய சிந்தனைகள் அவர்களுக்கு வருவது சிரமமாக இருக்கும். அரசுத் தரப்பில் தான் அதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் இங்கே இருக்கும்போது பார்க்கிறேன். சட்டமன்றத்தில் இருக்கும்படியான கடை நிலை ஊழியர்கள் 180 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்தால், நிரந்தரமாக்குவோம் என்று சொல்கிறார்கள். நம்முடைய சட்டமன்றமே (வருடத்திற்கு) 90 நாட்கள் நடக்கிறது. அதிர்ஷ்டவசமாக இந்த ஆண்டு 3 மாதம் தொடர்ச்சியாக நடத்துகிறோம். அவர்கள் 60 நாட்கள் வேலை செய்யலாம். பிறகு சர்வீஸ் விடுபடுகிறது. 180 நாட்களுக்குத் தொடர்ச்சியாக சர்வீஸ் இல்லாத காரணத்தாலே, அவர்கள் நிரந்தரமாக இல்லை என்று சொல்கிறோம். நம்முடைய சட்டமன்றத்திலேயே இப்படிப்பட்ட அத்துக் கூலிகளை வைத்திருப்பது நல்லதா என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும்.

(பிற்பகல் 12-40)

ஆகவே, விடுதியிலே இருக்கிற ஊழியர்களையும் சரி, இங்கே இருக்கிற ஊழியர்களையும் சரி, அந்த கடைநிலை ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது போலவே தான் சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய தொலைபேசிகள். இங்கே இருப்பது மிகச் சிறிய எக்சேஞ்சு. நாங்கள் இங்குள்ள அமைச்சர்கள் செயலாளர்களுடனோ, அதிகாரிகளுடனோ தொடர்பு கொள்ளவேண்டும் என்றால், அது உடனே முடிவதில்லை. நாங்கள் உங்களோடு, இங்கே இருப்பவர்களோடு தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறதே. இந்த ஆட்சியில் உள்ளவர்களுடன் நாங்கள் அடிக்கடி தொடர்புகொள்ளத்தான் வேண்டியிருக்கிறது இந்த சட்டசபை கட்சிகளுக்கான அறைகள் இங்கே இருக்கின்றன. அந்த அறைகளிலும் தொலைபேசி வசதிகள் இல்லை. இப்பொழுது இரண்டு மூன்று நாட்களாக துப்பாக்கிச் சூடு நடைபெற்றது என்று சொன்னால் அதைப்பற்றி நாங்கள் பல்வேறு இடங்களில் தொடர்

புக் கொண்டு விவரங்களைச் சேகரிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால், இந்த தொலைபேசி பிரிவை விரிவு படுத்த வேண்டும் என்றும், சட்டசபைக் கட்சிகளுடைய அறைகளில் தொலைபேசி வசதி செய்து தரப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றை கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு அதைப்பற்றித் தகவல் வந்திருக்கிறது. 1979 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27 ஆம் நாள் அன்று திண்டுக்கல்லில் 24 வயதுள்ள புத்தி சுவாதீனமில்லாத உத்தண்ட ராஜன் என்கிற திருமணமாகாத ஒருவருக்கு குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கிறது. அதை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை தீவிரமாக அமுல் செய்ய வேண்டும் என்பதற்காக யாரை வேண்டுமானாலும் பிடித்து, திருமணம் ஆகாதவர்களையும் பிடித்து அறுத்துவிடுவதா ?

அடுத்து 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்று திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் நாகலிங்கம் ஆசாரி என்று ஒருவர். அவர் உடல் நலமில்லை என்று சிகிச்சைக்காகப் போயிருக்கிறார். அவருக்கு பென்சிலின் இன்ஜெக்ஷன் போட்டு அவர் அந்த இடத்திலேயே மரணம் அடைந்துவிட்டார். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது அவைகளை பெரிய பிரச்னையாக கொண்டு வந்தால், அடிபட்டால் 5 ஆயிரம், இறந்துவிட்டால் 10 ஆயிரம் என்று அவர்களுடைய குடும்பங்களுக்கு கொடுக்கப்படுகிறது. ஆனால், அப்படி எல்லாவற்றிற்கும் கொடுக்கப்படுகிறதா ? தவறுகள் நடைபெறுகிறபோது, தவற்றின் காரணமாக இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது அவர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. என். வரதராஜன் : இன்னும் ஒன்றிரண்டு பாயின்டுகள்தான். சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். மதுரை திருச்சி அரசு மருத்துவமனைகளில் கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகக் கேள்விப்பட்டேன்.

அடுத்து, நான் எக்மோர் வழியாகத்தான் அடிக்கடி போய் வரவேண்டியிருக்கிறது. அங்கே இருக்கிற ஆம்னி பஸ்காரர்கள் விடமாட்டேன் என்கிறார்கள். கையைப் பிடித்து இழுத்துவிடுவார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. ஏன் இந்த நிலைமை ஏன் அவர்களை அரசு விட்டுவைத்திருக்கிறது என்று தெரியவில்லை.

இன்னொரு கருத்தையும் இங்கே நான் சொல்லியாக வேண்டும். திருவண்ணாமலையில் கலசப்பாக்கம் பக்கத்தில் பி.ஆர்.சி. பஸ், பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியது. அதில் 30 பேர்கள் மரணம் அடைந்தார்கள் என்று சொல்லப்பட்டது. அங்கே அந்த இடத்திற்கு நம்முடைய டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் கூடச் சென்று பார்வையிட்டதாகவும், பாதை மிக குறுகலாக இருக்கிறது, அந்த இடத்திலே பஸ் செல்லக்கூடிய அளவிற்கு பாதை அகலமாக இல்லாததுடன் செப்பனிடப்படாமலும் இருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்.

முப்பது பேர்கள் ஒரு பஸ்ஸில் சென்று இறந்துவிட்டார்கள் என்று வந்தால்தான் அந்தப் பகுதியை அகலப்படுத்த வேண்டும் என்ற எண்ணமா? அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருக்க முடியாது. அப்படி எல்லாம் எண்ணம் இல்லை என்றும் தெரியும். ஆனாலும் அங்கே ஓடிக் கொண்டிருக்கிற அந்தப் பஸ் மினி பஸ், அதில் 30பேர்களைத்தான் ஏற்ற முடியும். அதில் 100 பேர்களை ஏற்றிக்கொண்டு பாதை அகலமில்லாத, சுத்தம் செய்யப்படாத மலைப்பாதையில் அடிக்கடி போய் வந்துகொண்டிருந்ததால்தானே இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டது. அந்தப் பாதையை அகலப்படுத்தி, பஸ்ஸையும் அடிக்கடி ரிப்பேர் செய்து வைத்துக் கொண்டிருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாமே..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள் உங்களுக்குப் பிறகு இன்னும் நிறையப் பேர்கள் பேச வேண்டியிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : முடித்துவிடுகிறேன், இன்னும் ஒரு நிமிஷம்தான். நான் மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கூட ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நான் முதன் முதலில் அதைப்பற்றி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்த காலத்தில் இந்த கூட்டம் முடிவதற்குள் அதற்கான விவர அறிக்கையை இந்த அவையில் அளிப்பதாக கூறினார், கொண்டுவருவார் என்றும் நம்புகிறேன்.

திரு. ராஜா சுப்பிரமணியம் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதை சபை முன் வைக்கலாம். அது தவறான காரியம் அல்ல. அவர்கள் எவ்வளவு சிபாரிசு வேண்டுமானாலும் கொடுத்து இருக்கலாம். அதையெல்லாம் ஏற்றுக்கொள்வது ஏற்றுக்கொள்ளாதது அரசைப் பொறுத்த விஷயம். ஆகவே, அந்த ராஜா சுப்பிரமணியம் அறிக்கையை சபை முன் வைக்க வேண்டும்.

இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கைத்தறி கண்காட்சி நடத்திக்கொண்டு இருக்கிறோம். அங்கே ரிபேட் கொடுக்கப்படுவது, அந்த கைத்தறி கண்காட்சியில் எந்தச் சங்கங்கள் துணியைக் கொண்டு வந்து போட்டு இருக்கின்றனவோ அவற்றிற்குத்தான் உண்டு என்று சொல்லப்படுகிறது. இதை எதிர்த்து, பரமக்குடியில் பெருத்த ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் கைத்தறி நெசவாளர் பிரச்னையை உடனடியாக தீர்க்க வேண்டும், அந்த அறிக்கையை அவை முன் வைக்க வேண்டும், அந்த ரிபேட் எல்லோருக்கும் நீடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் பேரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். விவசாயிகள் சம்பந்தமாக இந்த அரசு நீண்ட நாட்களாக எடுத்த நடவடிக்கை ஓரளவிற்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு சாதகமாக இருந்தாலும்கூட மிகப்பெரிய பாதகங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

விவசாயிகளைப் பொறுத்த வரையில், நீர்ப்பாசனம் மிகவும் முக்கியமானது. நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும். நீண்டகாலமாக நான் கேட்டு வருகிறேன். பல கண்மாய்கள் ரிப்பேர் செய்யப்படவில்லை, குளங்கள், கால்வாய்கள் ரிப்பேர் செய்யப்படவில்லை. அதனால் நீண்ட நாட்களுக்கு பாசனத்திற்குப் பயன்பெறும் தண்ணீர் கூட வீணாகப் போய் இருக்கிறது. இதை அரசுக்கு எடுத்துச் சொல்லியும் அரசு தலையிட்டு சரியாக கவனிக்காததால் விவசாயிகளுக்கு மிகவும் பாதகம் ஏற்பட்டு இருக்கிறது.

விவசாயிகள் இன்று கடன் பளுவால் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். கடன் தொல்லையின் காரணமாக பல கோரிக்கைகளை அரசுக்கு வைத்து இருக்கிறார்கள். ஆனால், இன்று வரையில் அரசானது அந்தக் கோரிக்கையை சரியாகச் செய்யவில்லை. அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நிவாரணம் அளிக்கவில்லை. கடன்கள் தள்ளுபடி செய்ய வேண்டும், கூட்டுறவுக் கடன்களுக்கு வட்டி நீக்கப்பட வேண்டும் என்று பல முறைகளை விவசாயச் சங்கத்தின் மூலமாகவும், ஆர்ப்பாட்டத்தின் மூலமாகவும் எடுத்துச் சொல்லியும் கூட அவர்களுக்கு எந்தவிதமான திருப்திகரமான முறையில் அரசாங்கமானது நம்பிக்கை தந்து இருந்தால் இன்றைக்கு ஷூட்டிங் வரை போய் நின்று இருக்காது. தனிப்பட்டவர்களை நம்பி அவர்கள் பக்கம் விவசாயிகள் போய் இருக்க மாட்டார்கள். ஆயிரக்கணக்கான பேர் பலியாகி இருக்க மாட்டார்கள். அதற்கு அரசுதான்

காரணம் என்ற முறையிலே இன்றைக்கு தமிழக அரசை நான் குற்றஞ் சாட்டுகிறேன். இன்றைக்கு தமிழகம் முழுவதும் விவசாயப் பிரச்னை பெருகி, கடன் தொல்லைகள் பெருகி, விவசாய பொருள்களின் விலைகள் வீழ்ந்து இருக்கின்றன. அவற்றைத் தடுப்பதற்கு எந்தெந்த வகையில் அரசு செய்ய வேண்டுமோ அவை அத்தனையும் கிரமமான முறையில் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று 5 மாதங்கள் ஆகியும் நிவாரணம் செய்யப்படவில்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். கிழக்குக் கடற்கரை ஓரத்தில் 32 ஊர்கள் புயலால் கண்மாய்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவர்கள் நிவாரணம் வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அங்கே இருக்கும் மண்ணை அள்ளிப் போடுங்கள் என்று சொல்கிறார்கள். அது இன்னும் கவனிக்கப்படவில்லை. ஆனால், அது மட்டுமல்ல, 1,116 ஏக்கர் 22 செண்ட்டில் அங்கே கடல் நீரால் இன்று நிரப்பப்பட்டுவிட்டது. அதன் காரணமாக அந்த விவசாயிகள் நிவாரணம் வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் அங்கேயுள்ள கண்மாய் கரம்புகளை அள்ளிப்போடுங்கள் என்று சொல்கிறார்கள். கண்மாய் கரம்புகள் சும்மாவா வந்து விடும். விவசாய அமைச்சர் இதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கண்மாய் கரம்புகளை அள்ளிப்போடுங்கள் என்று சொன்னால், எப்படி அது வயலுக்கு வரும் என்று தெரியவில்லை. அதற்கு ஓரளவு செலவு செய்ய வேண்டும். செலவு செய்தால் தான் வயலுக்கு வரும். வயலுக்கு வந்து சேர்ந்த பின்னாலே அடித்தளத்தில் இருக்கும் உப்பு நீரை மாற்றி அந்த நிலத்தை நல்வகையில் எப்படிச் செய்வது? இப்படி அங்கே கஷ்டம் இருக்கிறது. இதை நல்ல முறையில் செய்து அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-50)

அதுமட்டுமல்ல. உரம் பற்றி கேட்டோம். திடீரென்று உரம் விலை ஏறியதன் காரணமாக விவசாயிகளுக்கு பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய உற்பத்திச் செலவு அதிகமாகிறது. அதன் காரணமாக அவர்களுடைய பொருளாதாரம் குறைந்திருக்கிறது. இதைக் கவனித்து, மத்திய சர்க்கார் உரத்தின் விலையைக் குறைப்பதற்கு ஒரு போராட்டத்தை நடத்த தயாராக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது எந்தப் போராட்டமாக இருந்தாலும் நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து, உர விலையைக் குறைக்க ஆதரவாக இருப்போம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில் கிட்டத்தட்ட இப்போது பொருளாதாரம் முழுவதுமே பாதிக்கப் பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய பட்டினம் பகுதியில் முன்னூற்றிச் சொச்சம் மனுக்கள் வந்தன. அதில் 117 மனுக்கள் பரிசீலனைக்குப் பிறகு ஏற்றுக் கொள்ளப் பட்டன. சரியான மனுக்கள்தான், கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டது. ஆனால் இன்றுவரையில் அவை பைசல் செய்யப்படாமல், பட்டா கொடுப்பதில் காலதாமதம் ஏற்படு கிறதே அதேமாதிரி இந்த 117 மனுக்களும் லோன் கொடுக் காமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, சங்கு குளித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் கடலிலே 30 அடி, 35 அடி ஆழத்தில் போய் சங்குகளை எடுத்து வருகிறார்கள். அவர் களுக்கு இன்றைக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. அவர்கள் முன்னால் ஒரு சங்கை 3 ரூபாய், $3\frac{1}{4}$ ரூபாய்க்கு விற்று வந்தார்கள். இன்றைக்கு அந்த சங்குகள் 'நேஷனலைசேஷன்' என்ற முறை யின் காரணமாக ரூ. 2-25, ரூ. 2-45, ரூ. 2-50-க்கு மேல் விலை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சங்கு குளி தொழிலாளர்களுக்கு மிகப் பெரும் பாதகம் ஏற் பட்டிருக்கிறது; வாழ்க்கையில் சரிவு ஏற்பட்டிருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டும்.

அதே நேரத்தில், இன்னொன்றையும் குறிப்பிட விரும்பு கிறேன். தூத்துக்குடியில் சங்குகள் காணாமல் போனதைப் போல, கிடங்கில் இருக்கிற சங்குகள் ஓடிவிடாமல் பாதுகாப்பாக வைக்க வேண்டும். அந்த சங்குகளை இங்கேயே பயன்படுத்த ஒரு சங்குத் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன். இது கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக, மூன்று பட்ஜெட் கூட்டங்களில் தமிழ்நாட்டில் சங்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். கல்கத்தாவில் இருப்பதைப் போல இங்கும் ஆரம்பிக்க வேண்டும். இப்போது அவர்கள் இங்குள்ள சங்குகளை சீப்பாக வாங்கிச் சென்று, அதிலே வளையல் செய்து, ஒரு ஜோடி வளையலை 25 ரூபாய், 30 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்கிறார்கள். ஒரு சங்கிலிருந்து 2 ஜோடி, 3 ஜோடி வளையல்கள் செய்யலாம். அப்படிப் பார்க்கும்போது 65 ரூபாய்க்குமேல் ஒரு சங்கின் விலை வருகிறது. இதை ஏன் தமிழ்நாட்டில் செய்யக் கூடாது? இங்கே செய்தால் சங்கு குளி தொழிலாளர்களை நம்பியிருக்கிற தொழிலாளர்கள் வாழ்க்கை உயரும். தமிழ்நாட்டுக்கு வருவாய் அதிகமாக வரும்; பொருளாதாரம் மேம்படும். இதை நன்கு உணர்ந்து இங்கே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு உங்களால் முடியாவிட்டால் தமிழ்நாட்டின் சார்பிலே

1979 ஏப்ரல் 24] [திரு. செ. சிவசாமி]

கல்கத்தாவில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து, நல்ல விலை கொடுத்து சங்குகளை வாங்கி, பயன்படுத்த வேண்டு மென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. சின்னமுட்டம் மீன் பிடித் துறைமுகத் திற்கு எஸ்டிமேட் கொடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட இரண் டாண்டுகள் ஆன பின்னாலும் இன்றுவரையில் வேலை ஆரம்பிக் கப்படவில்லை. அங்கே எஸ்டிமேட் கமிட்டி போயிருந்தபோது புள்ளி விவரங்களை எல்லாம் கொடுத்தார்கள். இன்றுவரையில் ஏன் இந்த சின்னமுட்டம் மீன் பிடித் துறைமுகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை ? ஏற்கனவே எஸ்டிமேட் போட்டு சாங்ஷனும் ஆகிவிட்டது. ஆனால் வேலை ஆரம்பிக்கப்பட வில்லை. அதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று, கேட்டுக் கொள்கிறேன்.

குளச்சலில் மீன் பிடித் தொழிலாளர்களுக்கு ஒரு பயிற்சிப் பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கு பயிற்சி காலத்தில் ஒருவருக்கு மாதம் 50 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். அதை 100 ரூபாயாக்க வேண்டுமென்று பயிற்சி பெறும் அந்த மாணவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். டிரெயினிங் காலத்தில் மாதம் 100 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு டிரெயினிங் முடிந்த பிறகு அவர்களுக்கு தொழில் உத்தரவாதம் கிடையாது. ஏற்கெனவே தொழில் உத்தரவாதம் இருந்தது. டிரெயினிங் முடிந்த பிறகு போட் சிப்பாகக் கொடுக்க கடலிலே மீன் பிடிக்க வசதி செய்யப்பட்டிருந்தது. தற்போது அந்த வசதிகள் நீக்கப்பட்டு, டிரெயினிங் முடிந்த பிறகு அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை எதிர்நோக்க வேண்டியிருக் கிறது. அந்த டிரெயினிங் சென்டரில் யார், யார் படிக்கிறார் களோ அவர்களை எல்லாம் ஊக்குவிக்கின்ற வகையில் அவர் களுக்கு போட் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு ரோடுகளை எடுத்துக் கொண்டால் எங்கே பார்த்தாலும் குண்டும் குழியுமாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக கிழக்கு இராமநாதபுரம் பகுதி யிலே ரோடுகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. கடல் கொந்தளிப்பால் கிட்டத்தட்ட 30 மைலுக்கு கிழக்குக் கடற்கரை ரோடு முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தூத்துக் குடி வரைக்கும் உள்ள ரோடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரோடு இன்றைக்கு சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக திருப்பாலக்குடி கடந்த மூன்று புயல்களால் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே உள்ள அந்தப் பகுதி ரோடு களை எல்லாம் சீர் செய்ய வேண்டும் என்று பல முறை எடுத்துச்

சொன்னேன். முதலில் புயல் ஏற்பட்டது. அப்போது எடுத்துச் சொன்னேன். செய்ய வில்லை. இரண்டாவது புயல் வந்தது. மேலும் பழுதடைந்தது. அப்போதும் எடுத்துச் சொன்னேன். செய்யவில்லை. மூன்றாவது புயல் அடித்தது, அப்போதும் எடுத்துச் சொன்னேன், செய்யவில்லை. ஆகவே இந்தப் பகுதியிலே நான்காவது புயல் வருவதற்குள்ளாகவாவது அங்குள்ள நிலைமைகளைச் சீர் செய்யுமா இந்த அரசாங்கம் என்பது தெரியவில்லை.

அடுத்து அந்தப் பகுதியிலே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று பலமுறை சொன்னேன். அங்கே புயல், மழை வந்துவிட்டால் அது ஒரு தீவு போன்று ஆகிவிடுகிறது. ஆகவே அந்த இடத்திலே ஏதாவது பாலங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற காலங்களிலே எந்தப் பொருட்களும் கிடைப்பதில்லை.

தற்போது மண்ணெண்ணெய் கிடைக்காமல் எப்படி எல்லா மக்களும் கஷ்டப்படுகிறார்களோ அது மாதிரி அங்கே புயல் வெள்ளக் காலங்களில் ஒரு தனித் தீவு போல் ஏற்பட்டு எந்த விதமான பொருட்களுமே கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட நிலைமை 10 ஆண்டுகளாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த மக்கள் தீவில் இருப்பது போல் இருந்தார்கள்.

அடுத்து மாடுகள் தமிழகத்திலிருந்து கேரளாவுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. இதனைப் பல முறை இந்தச் சபையிலே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆகவே மாடுகள் கேரளாவுக்குப் போவதைக் கண்டிப்பாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சாலைக் கிராமம் பகுதியில் கிட்டத்தட்ட ஒரு இலட்ச ரூபாய் எஸ்டிமேட்டில் ஒரு பள்ளிக்கூடம் கட்டப்பட்டு வருகிறது. அதிலே முக்கால்வாசி வேலைகள் நடந்து விட்ட பிறகு ஓராண்டுக் காலம் ஆகியும் அந்தப் பள்ளிக்கூடம் சும்மா கிடக்கின்றது. இதற்குக் காரணம் கேட்டால் அதைச் செய்ய வேண்டியது வேறு டிப்பார்ட்மெண்ட் என்று சொல்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்களிடம் சென்று சொன்னாலும் கூட அந்தப் பள்ளிக்கூடம் இன்னும் அப்படியேதான் இருக்கின்றது.

அடுத்து ஆர். எஸ். மங்கலத்தில் ஐ.பி. இருக்கின்றது. அதன் வேலையும் பாதியில் நிற்கின்றது. ஒரு பகுதி வேலைதான் நடந்திருக்கின்றது. இன்னொரு பகுதி வேலை நடக்க வேண்டி இருக்கின்றது. அந்த பங்களாவைப் பொறுத்தவரையில் பாதிக்

1979 ஏப்ரல் 24] [திரு. செ. சிவசாமி]

கட்டிடங்களை மட்டும் கட்டிவிட்டு மீதியைக் கட்டாமல் போட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட டிவிஷன் இன்ஜினியரிடம் சொன்னால் அவர், அதற்கு வேண்டிய நடைமுறைகளைச் செய்து கொண்டிருக்கிறோம், எஸ்டிமேட்டுகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்று மூன்று ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைய வரையில் அந்த வேலை நடைபெறவில்லை. ஆகவே இந்த மாதிரியான நிலைமைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி பிரச்சினை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த கைத்தறிப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. நேற்றைக்கு முன்தினம் கூட பெரிய போராட்டம் நடந்தது. இந்த அரசினுடைய கொள்கை சரியானபடி அமல் நடத்தப்படாததன் காரணத்தால் மிகப் பெரிய போராட்டங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் பல போராட்டங்களை நடத்துவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே அந்தப் போராட்டங்களை எல்லாம் நிறுத்துவதற்குரிய வழியில் அங்குள்ளவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வழியில் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்து விவசாயிகள் பிரச்சினை. விவசாயிகள் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அரசு சரியான முறையிலே செயல்படாததன் காரணத்தால் பல பிரச்சினைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் இந்த அரசையே மாற்றியமைக்கக் கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே இதை எல்லாம் கணக்கில் எடுத்து விவசாயிகள் பிரச்சினைகளை அப்போதைக்கப்போதே தீர்த்து வைக்க வேண்டும். இல்லாவிட்டால் மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–00)

(7) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1979-ம் ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் தேதி (புதன்கிழமை)	நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும். 1 தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு. 2 தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு. 3 தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு. 4 தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.
1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ஆம் தேதி (வியாழக்கிழமை). 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை).	1979–80-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம்.
1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் தேதி (சனிக்கிழமை).	அரசினர் சட்ட முன்வடிவுகளும், அரிசினர் தீர்மானங்களும்.

தேவையிருப்பின் பேரவை மாலையிலும் கூடும்.

பேரவை வழக்கப்போல் காலை 9 மணிக்கு கூடும்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்-தொடர்ச்சி.

(எ) நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவு, 1979 (தொடர்ச்சி)

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க சட்டமுனவடிவுகள் மீது என்னுடைய கருத்துக் களை இங்கே இணைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1979 ஏப்ரல் 24] [திரு. எம். ஏ. லத்தீப்]

அதோடு சம்பளம் சட்டத்தைப் பொறுத்த வரையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அப்ரோபிரியேஷன் என்று சொல்லப்படுவது ஒதுக்கப்படுகிற நிதியை அப்ரோரியேட்டாக செலவு செய்யவேண்டும் என்பதற்காக, அப்ரோப்பியேஷன் என்று சொல்லப்பட்டது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக எந்த நோக்கத்திற்காக பணம் ஒதுக்கப்படுகிறதோ, அதற்குச் செலவு செய்யாமல், எந்த நோக்கத்திற்காக நிதி ஒதுக்கப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேறாமல், அந்த நோக்கத்திற்குச் செலவு செய்யாமல் நிதி நிர்வாகத்தில் வரம்பு மீறி செலவு செய்வதும் மாறாகச் செலவு செய்வதும் ஒரு பழக்கமாக இருந்து வந்திருக்கிறது. அதைத்தான் கடந்த சில ஆண்டுகளாக பொது கணக்கு ஆய்வுக் குழு சுட்டிக் காட்டி வந்திருக்கிறது. பல்லாண்டுகளாக பொதுக் குழு அதனுடைய ஆய்வு அடிப் படையில் எடுத்துச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் முக்கியமான குற்றச்சாட்டுக்கள். நிதி நிர்வாகத்தில் செம்மை யும் இல்லை; அதே நேரத்தில் ஒழுங்கும் இல்லை என்று சொல்லப் படுவதாகும். நிதி ஒழுங்கீனம் என்பது இன்றைக்கு நடைமுறை என்ற அளவிற்கு வந்து விடுமேயானால் எந்த நோக்கத்திற்கு நாம் செலவு செய் கிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாத நிலைமை உருவாகும், ஏற்கனவே உருவாகி விட்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எக்சஸ் எக்ஸ்பென் டிசர் என்று சொல்லக்கூடிய அதிகமான செலவினங்களுக்கு நேற்றையதினம் இங்கே தன்னுடைய குறிப்புகளை வைத்தார் கள். அதுவும் ஒரு குறிப்பு இல்லாமல் இரண்டு குறிப்பு களை அவர் வைத்திருப்பதில் இருந்து நான் எடுத்துக் சொன்ன குற்றச்சாட்டுகளும், பொதுக் கணக்குக் குழு ஏற்கனவே 1973–74, 1974–75, மேலும் 1977–78 ஆகிய ஆண்டுகளில் சுட்டிக்காட்டிய குற்றச்சாட்டுக்கள் உண்மை என்று விளங்குகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசு முறை யாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் சில முக்கியமான மான்யங்கள் ஏறக்குறைய 200 கோடி ரூபாய் அளவிற்கான மான்யங்கள் கில்லட்டின் என்று சொல்லி, மன்ற உறுப்பினர்களுடைய கருத்தை அறியாமல் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதை திட்டமிட்டு செய்யவில்லை என்பது உண்மையாக இருந் தாலும் இந்தப் போக்கு சரியான போக்கு இல்லை. ஆக, முறையாக நம்முடைய திட்டங்களை நாம் செயல் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னாலும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்தைப் பெற்று இந்த மான்யங்கள் மீது மன்றத்தில் விவாதிக்கப்படவில்லை. இன்றைக்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கான சம்பளம், அவர்களுடைய அலவன்ஸ்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 24

ஆகியவைகள் விவாதிக்கப்படவில்லை. உதாரணத்திற்காகச் சொல்கிறேன், கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டசபையில் வாக்குறுதியை தந்தார்கள். ஒரு அரசு அதுவும் நிதிஅமைச்சர் அவர்கள் தந்த வாக்குறுதி ஓராண்டு காலம் நிறைவேறாத நிலைமை உருவாகுமானால் அதைப் பற்றி என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து இத்தகைய போக்குகளை அரசு தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற எங்களுக்கு செலவினங்கள் அதிகமாகிறது, விலைவாசி ஏற்றத்தின் காரணமாக பல்வேறு காரணங்களுக்காக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது காரியங்களை செம்மையாக செயல் படுத்தவேண்டும் என்ற கட்டாயத்தின் காரணமாக அவர் களுக்கு ஓரளவு சம்பளத்தை அதிகமாக ஆக்கவேண்டும் என்று ஏற்பட்ட உணர்வின் அடிப்படையில் சொல்லப்பட்டது. அது சென்ற ஆண்டிலேயே உயர்த்தப்படும் என்று சொல்லப் பட்டது, இவ்வளவு கட்டாயங்களின் அடிப்படையில் சம்பளத்தை அல்லது அலவன்சை உயத்தவேண்டும் என்று கேட்டு உயர்த்தப்படும் என்று சொல்லப்பட்டும் இதுவரை மன்ற உறுப்பினர்களுக்கு வந்து சேரவில்லை என்றால் இந்த நிர்வாகத்தின் தரம் முறையாக இல்லை, அல்லது சுறுசுறுப்பான நிலைமை இல்லாத ஒரு நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. ஆகவே இவையெல்லாம் ஏற்புடையதல்ல, மறுதளிக்கக் கூடியதாக உள்ளது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு 35 ரூபாய் கொடுக்கிறார்கள். இந்த 35 ரூபாயில் இந்த சென்னைப் பட்டினத்தில், சட்டமன்ற உறுப்பினர் சாதாரணமாக அங்குள்ள சாப்பாட்டை சாப்பிட முடியாவிட்டாலும் அங்கிருந்து விடுதியிலிருந்து மௌன்ட்ரோடுக்கு போகவேண்டும், டாக்ஸியில் போகவேண்டும். அல்லது ஏதாவது வாகனங்களில் போக வேண்டும், வாகனங்களில் இப்போது எவ்வளவு வாடகை உயர்த்தியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். சட்ட மன்ற உறுப்பினர்கள் மட்டும் சாப்பிட போய்விட முடியாது, கூட இருக்கும் நண்பர்களையும் அழைத்துக்கொண்டு சாப்பிட போகவேண்டும். இப்படி பல்வேறு இனங்களுக்காக செலவு அதிகமாகிக்கொண்டு போகிறது. என்னவோ மற்ற மாநில களில் எல்லாம் கர்நாடகா மாநிலத்தில், கேரள மாநிலத்தில் அருகாமையிலுள்ள ஆந்திரா மாநிலத்தில் எல்லாம் சட்டன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படும் அலவன்ஸை எல்லாம் உயர்த்தியிருக்கிறார்கள். என்ன காணத்தினாலோ தெரியவில்லை, மேற்கு வங்காளமும், தமிழகமும் பழங்கால

1979 ஏப்ரல் 24] **[திரு. எம். ஏ. லத்தீப்]**

நிலைமையிலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள், இவர்களுடைய உணர்வுகளை மாற்றுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இங்கே யார் வந்து உட்கார்ந்தாலும் நிலைமை இப்படிதான் இருக்கிறது. என்னவோ இந்தக் கோட்டையின் தன்மையோ என்னவோ இங்கே இருக்கின்றபோது எல்லோரும் சரியாகத்தான் பேசுகிறார்கள், ஆனால் காரியத்தில் ஒன்றும் நடைபெறாமல் தான் இருக்கிறது. மேற்கு வங்காளத்திலும் தமிழகத்திலும் தான் இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. என்ன கணக்கைப் போட்டு பார்த்தோ 35 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். என்ன கேட்டுவிட்டோம், எங்களுக்குக் கொடுக்கப்படும் இந்த 35 ரூபாய் போதாது, இதை 50 ரூபாயாக உயர்த்தவேண்டும் என்று கேட்டோம். எல்லா மாநிலங்களிலும் உயத்தியிருக்கிறார்கள், ஏன் நீங்கள் மட்டும் உயர்த்தாமல் இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. மேகாலயாவை எடுத்துக்கொண்டாலும் சரி, அருணாச்சல பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, மற்றும் காஷ்மீரை எடுத்துக்கொண்டாலும் சரி, அங்கெல்லாம் 75 ரூபாய் என்பதை 100 ரூபாய் வரை உயர்த்தியிருக்கிறார்கள். இங்கு மட்டும் ஏதோ எப்போதோ கணக்கிட்டு 35 ரூபாய் என்று சாதாரணமாக 'பாட்டா' கம்பெனி விலை போடுவார்கள், 99 ரூபாய் 99 பைசா என்று போட்டிருப்பார்கள், ஒரு பைசா கூடுதலாக போட்டால் 100 ரூபாய் என்று வந்துவிடும் என்பதற்காக இப்படி போடுவார்கள், அது போல் என்ன கணக்கு போட்டு 35 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கு சரியல்ல, உண்மையில் எங்களுக்கு இதைவிட பல மடங்கு செலவாகிறது, என்னைப் போன்றவர்களுக்கு 100 ரூபாய் செலவாகிறது. எந்தவிதமான ஊதாரித்தனமான செலவும் கிடையாது. அப்படியெல்லாம் செலவு செய்யக்கூடியவர்கள் அல்ல நாங்கள். நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பணிகளின் காரணமாக சில செலவுகளை நாங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அதை எல்லாம் உணர்ந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் செம்மையாகச் செயல்பட வேண்டுமென்றால் ஒரு செக்ரட்டேரியேட் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட செக்ரட்டேரியேட் அந்தந்த உறுப்பினர்களின் தொகுதியில் இருக்கவேண்டும் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். அப்போதுதான் உறுப்பினர்கள் செம்மையாக செயல்பட முடியும். வெளிநாடுகளில் சென்று பார்த்தால், தூரக் கிழக்கு நாடுகளில் போய் பார்த்தால், அவர்கள் எல்லாம் முன்னேறிக் கொண்டிருக்கின்ற நாடுகள் என்று சொல்லமுடியாது. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் எல்லாம் போய் பார்ப்போமேயானால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தனியாக செக்ரட்டேரியேட் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கென்று

[திரு. எம். ஏ.லத்தீப்] [1979 ஏப்ரல் 24

தட்டெழுத்தர், எழுத்தர், பணியாளர், அவர்களுக்கு வேண்டிய தளவாடங்கள் இவைகளை எல்லாம் அங்கே கொடுத்திருக்கிறார்கள்.

சாதாரணமாக இங்கே அவசரமாக சட்டமன்ற விடுதியில் ஒரு விஷயம் குறித்து டைப் செய்யவேண்டுமென்றால், இங்கே ஆர். ஆர். செக்ஷனுக்குத்தான் ஓடி வரவேண்டும். இங்கே வந்தாலோ, அந்த குறுகிய இடத்திற்குள் அந்த தட்டெழுத்தர் இருந்து கொண்டு டைப் செய்ய முடியாமல் திண்டாடுவார். காரணம் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு நின்று கொண்டுதான் இருக்கவேண்டி யிருக்கிறது. நாம் எல்லாம் அங்கே நின்று கொண்டுருக்கும்போது, அவர்கள் உட்கார்ந்து கொண்டு வேலை செய்வதற்கு வெட்கப்படுகிறார்கள். வேலையை செய்ய முடிவதில்லை. அவசரமாக ஒன்றை டைப் செய்யவேண்டும் என்றால், ஆர். ஆர் செக்ஷனுக்குத்தான் ஓடி வரவேண்டுமென்றால் எப்படி சட்டமன்ற உறுப்பினர் செம்மையாக செயல்பட முடியும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று சட்டமன்ற விடுதியிலேயே ஒரு டைப்பிஸ்டை நியமித்தால் என்ன? காலையில் எழுந்தவுடன் ஏதாவது டைப் செய்யவேண்டுமென்றால் டைப் செய்து கொள்ளலாம். இல்லையென்றால் மறுநாள் எது தேவைப்படும் என்பதை பார்த்து முந்தின நாள் மாலையிலேயே டைப் செய்து வைத்துக்கொள்ளலாம். ஆகவே அங்கேயே டைப்பிஸ்டுகளை நியமித்து போட்டு வைக்கலாம், வேண்டுமென்றால் லேடி டைபிஸ்டுகளை நியமிக்க வேண்டாம். ஆண் டைபிஸ்டுகளை நியமியுங்கள்.

(பிற்பகல் 1-10)

ஆகவே, இந்த டைப்பிஸ்டுகளை சட்டமன்ற விடுதியிலேயே நியமனம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய கட்டிடத்தை இங்கே கட்டியிருக்கிறார்கள். பெரிய கட்டிடம் கட்டிய பிறகும், சில ஆபீசுகள் இன்னும் காலி செய்யப்படாமல் இருக்கின்றன. இன்னும் இந்த இடத்திலே மற்ற ஆபீசுகளை ஏன் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்? தயவுசெய்து அந்த ஆபீசுகள் எல்லாம் இங்கே இருந்து காலி செய்யப்பட வேண்டும். அப்படி காலி செய்யப்பட வேண்டும் என்று நீங்கள் நோட்டீஸ் கொடுக்கச் சொன்னால், சபாநாயகர் சார்பிலே நான் நோட்டீஸ் கொடுக்கிறேன்.

"Under instructions from my client, the Hon. Speaker of the Legislative Assembly, I hereby give the following notice;"

1979 ஏப்ரல் 24] [திரு. எம். ஏ. லத்தீப்]

அத்தனைபேருக்கும் நான் நோட்டீஸ் கொடுக்கிறேன். தேவை யானால்,

I put the Ministers under notice that all these Officers other than the officers belonging to the Legislature Department should be forthwith removed from the main building of this Secretariat.

என்ற வேண்டுகோளை எல்லா மெம்பர்கள் சார்பிலேயும் நான் கேட்டுக் கொள்கிறேன். மெஜாரிட்டி என் பக்கம். நான் சொல்வதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். எனவே, அதைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பார்லிமெண்டிலே சில சமயங்களில் மாலை நேரங்களிலே கூட்டத்தை நடத்துகிறார்கள். அப்போது அங்கே சப்சிடைஸ்ட் மீல்ஸ் கொடுக்கிறார்கள். அதற்குக்கூட இங்கே உரிமை இல்லை' வழியில்லை. சப்சிடைஸ்ட் மீல்ஸ் என்றால், உறுப்பினர்களுடமிருந்து அதற்கான பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். சும்மா யாரும் கொடுக்க வேண்டாம். இதைப்போல் இன்னும் பல சட்ட மன்றங்களிலே இருக்கிறது. பாராளு மன்றத்திலே செய்கிறார்கள். இப்படி எல்லா இடங்களிலும் செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே தான் இந்த நிலைமை இருக்கிறது.

இங்கே உ கொடுக்கிறார்கள். ஸ்நாக்சும் கொடுக்கிறார்கள் அதை இங்கே ஒரு அறையிலே கொடுக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினர்களும் முண்டியடித்துக் கொண்டு போகவேண்டும். அப்படிப் போனால் அங்கே நின்று கைநீட்டி வாங்க வேண்டியிருக்கிறது. அதற்குத் தேவையான, வசதியான இடமில்லை. இந்த மாதிரியான நிலைமைகள் இருக்கின்றது. எனவே நான் சபா நாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து இங்கே இருக்கின்ற ஆபீசுகளையெல்லாம், புதிய கட்டிடத்திற்குப் போகச் சொல்லுங்கள் நாங்கள் எல்லாம் உட்கார்ந்து ஓய்வெடுப்பதற்கு குறைந்தபட்ச வசதிகூட இல்லாமல் இருக்கிறது.

லைப்ரரி வைத்திருக்கிறார்கள். என்னமோ கிரேதாயுகத்திலும், துவாபரயுகத்திலும் வாங்கப்பட்ட புஸ்தகங்கள் அங்கே இருக்கிறதே தவிர, ஒரு புத்தகமாவது நாம் வாங்கிப் படிக்கக் கூடிய நிலையிலே இல்லை. லைப்ரரி என்றால் ஒருவருக்கு என்ன தேவையோ, அந்தப் புத்தகங்கள் அங்கே இருக்கவேண்டும். அப்படிப்பட்ட புத்தகங்கள் அங்கே இல்லை. (லேபாரட்டரியா என்று குறுக்கீடு) லேபாரடரி வைக்கக்கூடிய காலம் வரலாம். கம்பியூட்டரைஸ் வரும்போது, லேபரடரி வைக்கும்படியும் வரலாம். உறுப்பினர்களையும் லேபாரடரியில் டெஸ்ட் செய்யக் கூடிய நிலை வரலாம். நான் இப்போது என்று சொல்லவில்லை.

இப்போது நமக்குத் தேவைப்படுவது நல்ல லைப்ரரி. ஆனால் அங்கே நல்ல புத்தகங்கள் இல்லை. இளைவ் காலத்திலே வாங்கப் பட்ட புத்தகங்கள்தான் அங்கே இருக்கின்றன. அங்கே படிக்கக் கூடிய ரெபரென்ஸ் புத்தகங்கள் எதுவும் இல்லை. இந்த நிலைமை இருக்கிறது. தயவுசெய்து அதை மாற்றவேண்டுமென் றும், மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்றேன்.

அதே நேரத்தில் இங்கே பணியாளர்கள் இருக்கின்றார்கள். சட்டமன்ற விடுதியிலும் இருக்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், அந்தப் பணியாளர்களை எல்லாம் நிரந்தர மாக்குங்கள். தேவையான அளவுக்காவது அவர்களை நிரந்தர மாக்குங்கள். மற்றவர்களுக்கு சம்பளம் சற்றுக் கூடுதலாக கொடுங்கள். தற்காலிகமாக வேலை செய்யக்கூடியவர்களுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுங்கள். அவர்கள் தற்காலிகமாக 1 மாதம் அல்லது 2 மாதங்கள் வேலை செய்கிறார்கள். இப்படி இரண்டு மாதங்களுக்கு வேலை செய்கின்றவர்களுக்கு, குறைந்த பட்ச ஊதியமாக நாள் ஒன்றுக்கு 10 ரூபாயாவது சம்பளம் கொடுங்கள். அப்போதுதான் அவர்கள் கவுரவமாக, தொப்பி யும், டிரஸ்ஸும் போட்டுக்கொண்டு, யாரையும் உள்ளே நுழைய விடாமல் பணிபுரிவார்கள். ஒவ்வொரு பணியாளருக்கும் குறைந்தபட்சம் இந்த அளவுக்கு நாம் சம்பளம் தராவிட்டால், எப்படி அவர்களாலே சிறந்த முறையில் பணியாற்ற முடியும்?

பத்து ரூபாய், பதினைந்து ரூபாய், அதிகமாகக் கொடுத்தால் என்ன? எத்தனை நாள் அவர்கள் வேலை செய்யப் போகிறார் கள்? பட்ஜட் கூட்டமாக இருந்தால் இரண்டு மாதம், வேறு கூட்டமாக இருந்தால் பத்து அல்லது பதினைந்து நாட்கள். ஆகவே, அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் ஒரு குழுக் கூட்டத்திற்காக குற்றாலத்திற்குச் சென் றிருந்தோம். அங்கு ஒரு ரூமுக்கு ஒரு நாளைக்கு வாடகையே 25 ரூபாய் சார்ஜ் பண்ணினார்கள். எங்களுக்குக் கிடைப்பது 35 ரூபாய். அதிலே 25 ரூபாய வாடகை கொடுத்துவிட்டால் என்ன செய்ய முடியும் அதைப் பற்றி நாங்கள் சபாநாயகருக்கு எழுதிக் கொடுத்து இப்போது அந்தத் தொகையை துறையிலிருந்து ரூ. 46.65 பைசா என்று உயர்த்தியிருக்கிறார் கள். அதாவது ரூ. 11.65 காசு அதிகமாகக் கொடுத்திருக்கிறார் கள். இப்படிச் செய்யும்போது இது எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இங்கிருப்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 24] [திரு. எம். ஏ. லத்தீப்]

பென்ஷனர்கள் பிரச்சினை வந்தது. பாவம், சட்டமன்ற உறுப்பினர் ரிடையர் ஆகிவிட்டார் 'ஹி இஸ் நாட் ஃபிட் ஃபார் எனி ஜாப்' என்ற நிலைமை இருக்கிறது. மன்னிக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் வேறு காரியங்களைச் செய்ய முடியாது. ஆண்டிப்பட்டியிலிருந்து ஒரு பெண்மணி இங்கு உறுப்பினராக இருந்தார்கள். அவர்கள் இன்றைக்கு வயக்காட்டிலே சாதாரணமாக தொழிலாளர்கள் வேலை செய்வார்களே, களையெடுக்கிற வேலை அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் ஆண்டிப்பட்டியில் களையெடுத்துக் கொண்டு ஜீவிக்கிறார்கள். திருநெல்வேலியில் இன்னொரு எம்.எல்.ஏ. சாதாரண கூலியாக வேலை செய்துகொண்டிருக்கிறார். சென்ற தடவை எம்.எல்.ஏ.வாக இருந்த புலவர் பழனிச்சாமி. அவர் நிலைமை என்ன? அரசனை நம்பி புருஷனை விட்ட கதைதான். இந்த எம்.எல்.ஏ. வேலையை நம்பி அந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டார். எம்.எல்.ஏ.வாக ஐந்து வருஷம் முடிந்தது. அதுவும் இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே அனுப்பிவிட்டார்கள். கடைசியில் அவர் வேலை இல்லாமல் பசியால் வாடினார். திடீரென்று அவருடைய சடலம் மதுரை தெருவில் கிடந்தது. அவர் ஒரு கடிதம் வைத்திருந்தார். 'வாழ்க்கைக்கு வழி இல்லை, சட்டமன்ற உறுப்பினர் பதவிக்காக இருந்த வேலையை ராஜினாமாச் செய்துவிட்டுச் சென்றேன். இப்போது வேறு வேலை இல்லை, தேடியும் கிடைக்கவில்லை, வீட்டில் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை'. இதன் காரணமாக மதுரை தெருக்களில் பிச்சையெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு மனம் ஒடிந்து தெருவில் பிணமாகக் கிடந்தார். அந்தப் பிணத்தை எடுத்துக் கொண்டு போக பல மணி நேரம் ஆயிற்று. முனிசிபாலிடியிலிருந்து எடுத்தார்கள். அதற்குப் பிறகுதான் இன்னார் என்று தெரிந்தது.

எல்லா மாநிலங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் ரிடையர் ஆகிவிட்டால் பென்ஷன் கொடுக்கிறார்கள். அதை நாம் கொடுக்கக்கூடாதா? 250 ரூபாய் கொடுக்கலாம். இரண்டு டர்ம் இருந்தால் 500 ரூபாய் என்று சொல்லுகிறார்கள். ரிடையர் ஆகி மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால் ஒரு முறை உறுப்பினராக இருந்தாலே ஏன் பென்ஷன் கொடுக்கக்கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் ஓர் உறுப்பினர், ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பேசவேண்டியிருக்கிறது..

திரு. எம். ஏ. லத்தீப்: நான் ஒன்றரை மணி வரை பேசிவிடுகிறேன்............(பல உறுப்பினர்கள் அவர் பேசட்டும் என்றனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு நிறைய ஆதரவு இருக்கிறது. தாராளமாகப் பேசுங்கள்.

திரு. எம். ஏல். லத்தீப் : இன்று எனக்குத்தான் மெஜாரிட்டி.

(பிற்பகல் 1-20)

இன்னொன்று, ரிடையர்டு ஆன எம்.எல்.ஏ.க்கள், அவர்களுக்கு வேறு வசதிகள் தேவையில்லை. ஒரு பஸ் பாஸ் கொடுங்கள். எம் எல்.ஏ. ஆக ஒரு தொகுதியில் இருந்தவர். எம்.எல்.ஏ.வாக இருக்கிறபோது பஸ்ஸிலே இடம் கொடுப்பார்கள் எம்.எல்.ஏ. ஆயிற்றே என்று. ஆனால் ரிடையர் ஆகிவிட்டால் போ வெளியே என்று சொல்கிறார்கள். உங்களுக்குத் தெரியாது. இப்போது என்னிடம் எத்தனை எம்.எல்.ஏ.க்கள் கூறுகிறார்கள் தெரியுமா ? பலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். நான் பெயரைச் சொல்லத் தயாராக இல்லை. அவ்வளவு ஏழைகளாக இன்றைக்கு அவர்கள் இருக்கிறார்கள். எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் வருங்காலம் எப்படி இருக்கும் என்று யாருக்குத் தெரியும் ? ஆகவே மக்களுக்காக உழைத்த அந்த எம்.எல்.ஏ.க்களுக்கு பஸ் பாஸைக் கொடுங்கள்.

இன்னொன்று, மெடிக்கல் பெஸிலிட்டிஸ் அவர்களுக்கும் கொடுங்கள். இந்த மூன்று தான் கேட்கிறோம், வேறு கேட்கவில்லை. எம்.எல்.ஏ. வாக இருக்கிறவர்களுக்குத்தான் ஹார்ட் டிரபிள், டயபெடிக்ஸ் என்ன என்னமோ எல்லாம் வருகிறது, பிரஷர், லோ பிரஷர், ஹை பிரஷர் எல்லாம் இருக்கும். ஊருக்கு உழைத்தவனாயிற்றே, இல்லாதது எது என்பதுதான் ரிசர்ச் பண்ணப்படவேண்டும். எல்லாமே இருக்கும். ஆகவே தான் அவர்களுக்கு பஸ் பாஸ் வேண்டும், மெடிக்கல் பெஸிலிட்டிஸ் கொடுக்கப்படவேண்டும்.

சில மாநிலங்களிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இறந்துவிட்டால் அவருடைய மனைவி அநாதையாக இருந்தால், குழந்தைகள் சிறிய வயதிலே இருந்தால், மனைவி எந்தவிதமான வேலையும் செய்யமுடியாத நிலையில் இருந்தால் அவருக்குக் கிடைக்க வேண்டிய பென்ஷன் அவருடைய மனைவிக்குக் கொடுக்கப்படுறது, ஏற்கெனவே சில மாநிலங்களில அப்படிக் கொடுக்கிறார்கள். கேரளாவிலே இன்றைக்குக் கொடுக்கிறார்கள், அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஸ்ஸிலே நாம் போகிறோம். நம்முடன் கூட கட்டாயம் யாராவது, நம்முடைய மனைவிதான் வருகிறார்கள் என்பதல்ல, நாம் எல்லாம் நம்முடைய மனைவியை விட நம்முடைய

1979 எப்ரல் 24] [திரு. எம். ஏ. லத்தீப்]

தொகுதி மக்களுக்குத்தான் அதிகமான கவனம் செலுத்துகிறோம். மனைவியிடம் பேசுவதற்குக்கூட நேரம் எடுத்துக்கொள்வதில்லை. தொகுதி மக்களுக்குத்தான் இரவு நேரமாக இருந்தாலும் எந்த நேரமாக இருந்தாலும் அவன் ராக்காலத்திலே தான் வந்து கதவைத் தட்டுவான், அன்றைக்கு ஓட்டு வாங்க வந்தபோது இரவு 12 மணியானாலும் கதவைத் தட்டு நான் தயார் என்று சொன்னீர்களே என்று சொல்வான்—பலர் வருவார்கள், இருந்தாலும் ஒரு கம்பேனியன் என்ற முறையிலே

'It will enhance the prestige of the State, so, the members are called 'Hon. Members'.

இந்த நாட்டிற்கு சட்டம் இயற்றுகின்ற, அரசாங்கத்திற்கு நிதிகள் ஒதுக்குகின்ற அதிகாரம் படைத்த சட்ட மன்ற உறுப்பினர்கள் ரொம்ப ஹானரபிள். அதனால் தான் ஹானரபிள் மெம்பர்ஸ் என்று சொல்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் என்று சொல்கிறோம், மாண்புமிகு எங்கே இருக்கிறது ஒன்றையும் காணோமே. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் என்ற வகையிலே அவர்களோடு போவதற்கு ஒரு அஸிஸ்டெண்ட் கொடுங்கள். அந்த அஸிஸ்டெண்ட் அவரோடு பிரயாணம் செயவதற்கு பாஸாவது கொடுக்க வேண்டும். டிரெயினிலே அஸிஸ்டெண்டைக் கூப்பிட்டுப் போங்கள் என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே 2 ஆயிரம் ரூபாய்க்கு சீலிங். அதற்குள் வேண்டுமானால் கூப்பிட்டுப்போங்கள் என்று சொன்னால் என்ன பிரயோசனம் ஏன் அதை 3 ஆயிரமாக ஆக்கக்கூடாது? அவர்களும் கூட போகலாம என்று இருந்தால்தான் செம்மையாகச் செயல் பட முடியும். டிரெயினில் போனால் பஸ்ஸிலே போகமாட்டோம், பஸ்ஸிலே போனால் டிரெயினிலே போகமாட்டோம். இதிலே அதிகமான நிதி நெருக்கடி, அதிகமான செலவுகள் ஏற்படும் என்று கூற முடியாது. கணக்கு எடுத்துப் பாருங்கள். ஆகவே, கம்பேனியன் கூடப்போவற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே ஒரு ரெக்ரியேஷன் வேண்டாமா? அங்கே என்ன இருக்கிறது? ஒரு மெம்பர் ஒரு அறையிலே அடைபட்டுக் கிடந்தால் ஆறாவது மாடியிலே இருக்கிறார் என்றால் பக்கத்து அறையிலே இருக்கிறவருக்குக்கூடத் தெரியாது. சாதாரணமாக கல்லூரி மாணவர்களுக்கு எவ்வளவு சோஷியல் கேதரிங் எல்லாம் இருக்கிறது. இங்கே இளைஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள், துடிப்புள்ள இளைஞர்கள். மாண்புமிகு இளைய உறுப்பினர்கள் என்று தான் சொன்னேன் வேறு ஒன்றும் இல்லை. அந்த முறையிலே எல்லோரும் சேர்ந்து ஒரு கேதரிங் ஏதாவது ரெக்ரியேஷன் என்ற முறையிலே தான் இருக்க வேண்டுமே தவிர வேறு

தவறான் காரியங்கள் அங்கே இருக்கக்கூடாது. அவர்களுக்கு ஒரு வாலிபால், பேஸ்கட் பால இந்தமாதிரியான நிலைமையில் இன்டோர் கேம்ஸ் என்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ரீடிங் ரூம் இங்கேயே இருக்கிறது. அது சமையல் கூடம் மாதிரிதான் இருக்கிறது. அதையும் செய்ய வேண்டும் நல்லவேளையாக பைனானஸ் மினிஸ்டர் வந்துவிட்டார்கள். ரிப்பீட் பண்ண வேண்டும் போல் இருக்கிறது.

ஆகையினாலே, இப்பொழுது இந்த நிலைமை. அங்கே என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால் ஒரு ரெக்ரியேஷனுக் குக்கூட அங்கே வழியில்லை. நல்ல ஒரு தோட்டத்தையும் அங்கே வையுங்கள். ஏன் வைக்கக்கூடாது? கடந்த ஆண்டுகளிலே எல்லாம், நமது பேரவைத் தலைவருக்குத் தெரியும். ஒவ்வொரு ஆண்டும் ஹாஸ்டல் டே கொண்டாடுவோம் இல்லையா? அந்த ஹாஸ்டல் டே, அதைக் கூட்வா விட்டு விட வேண்டும். ஹாஸ்டல் டே நடத்தினால், நம்முடைய உறுப் பினர்களிலே பலர், பல கலைகளிலே, வல்லவர்களாக இருக் கிறார்கள். நான் கேள்விப்படுகிறேன். திரைப்படத்திலே கூட தம்முடைய கலைத் திறமையைக் காட்டிக் கொண்டிருக்கிற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தம்முடைய திறமையைக் காட்டுவார்கள், விளையாட்டிலே காட்டுவார்கள். ஒரு நாளைக்கு எல்லோருக்கும், 'காலேஜ் அட்மாஸ்ஃபியர்' வரும், நன்றாக இருக்கும், சும்மா அடைபட்டு அதனாலேதான் இங்கே வேகம் வருகிறது என்று சொல்கிறேன். வேகம் வருவதற்குக் காரணம், நம்முடைய ஃபினான்ஸ் மினிஸ் டர், இதையெல்லாம் குறைக்க வேண்டுமென்றால், தயவு செய்து கொஞ்சம் அந்த மாதிரி 'ரெக்ரியேடிங் ஆக்டிவிட்டீஸ்' வேண்டும். மனமகிழ் மன்றம் என்று எதற்காகச் சொன் னார்கள்? ஆகவே, அந்த மாதிரியான வேலைகளுக்கு, அங்கே சட்டமன்ற விடுதியிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒன்று கேட்கிறேன், நாங்கள் எல்லாம், அடிக்கடி சொல்கிறோம். எங்கள் பேரிலே, உங்களுக்கு என்ன என்று தெரியவில்லை. எத்தனையோ உறுப்பினர்கள் வெளியே போய் சாப்பிட்டு விட்டு வருகிறோம். அங்கே இருக்கக்கூடிய உணவகத்திலே சாப்பிடக்கூடிய உறுப்பினர்கள் எத்தனை பேர்கள்? நாங்கள் எல்லாம் சாப்பிடுகிற மாதிரி ஒரு கான்டீன் நீங்கள் ஏற்படுத்தினால் என்ன? நான் இன்னும் சொல்கிறேன், பல உறுப்பினர்கள் வெளியே போகிறார்கள். யாரும் அங்கே சாப்பிடுவதில்லை. உறுப்பினர்கள் சாப்பிடு வது மிகவும் குறைவு. நாங்கள் எல்லாம் நன்றாகச் சாப்பிட் டால்தானே, கொஞ்ச நாளைக்கு உயிரோடு இருப்போம். ஆகையினாலே நாங்கள் எல்லோரும் விரும்பிச் சாப்பிடுகிற மாதிரி ஒரு கான்டீன் வைத்தால் என்ன? எத்தனை நாளைக்குச்

சொல்வது ? பல ஆண்டுகளாகச் சொல்லி, சொல்லி, சொல்லக் கூடாது என்று விட்டுவிட்டேன். ஃபைனான்ஸ் மினிஸ்டர் வராமல் இருந்திருந்தால், அதைக் கூட நான் சொல்லியிருக்க மாட்டேன். அவர் வந்ததால் தான் கேட்கிறேன். அவர் கேட்பார் என்ற நம்பிக்கையில். அவர்தான் 'லீடர் ஆஃப் தி ஹவுஸ்' என்பதால் சொல்கிறேன். அவர் கொஞ்சம் கவனம் வைக்க வேண்டுமென்பதால் சொல்கிறேன். ரொம்ப மோசமாக இருக்கிறது. எங்களாலே, சாப்பிடக்கூட முடியவில்லை. அந்த மாதிரி இருந்தால், நிலைமை சரியல்ல. கொஞ்சம் நல்ல சாப்பாடுக்கு வழி செய்ய வேண்டும்.

இன்னொன்று, இந்த ஓல்ட் ஹாஸ்டலில், ரூம் வாங்கி இருக்கிறார்கள், பாவம்; சீனியர் மெம்பர்ஸ் அங்கே தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற ரூமிலேயே டெலிஃபோன் கொடுக்க வேண்டாமா ? உறுப்பினர்களுக்கு, ரூமிலேயே டெலிஃபோன் கொடுக்கக்கூட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், என்ன இது ? அதற்காக, எத்தனை ஆண்டுகளாகச் சொல்வது ? டெலிஃபோன் வந்தால், வேண்டுமென்றால், வெளியே போக வேண்டும். நம் ரூமிலே இருக்கிற போர்டின் கப்பாசிட்டியை அதிகப்படுத்த வேண்டும், அதாவது, நியூ ஹாஸ்டலிலே, ஒரு டெலிஃபோன் செய்ய வேண்டுமென்றால். பகீரதப் பிரயத்னம் செய்ய வேண்டும். பகீரதன் கூட கங்கா தேவியைச் சுலபமாகக் கீழே அழைத்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், எக்ஸ்சேஞ்சிலே கண்டு பிடிக்கிற வரையிலே கையே போகிறது. காரணம் என்னவென்றால் 50 தான் அங்கே ? அவன் என்ன செய்வான் ? எக்சேஞ்சிலே என்ன செய்வார்கள் அவர்கள் ? இதை ஏன் உயர்த்தி கொஞ்சம் செம்மைப்படுத்தக்கூடாது என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

நான் இன்னொன்றும் சொல்கிறேன், கடைசியாக. இந்த விடுதியிலே மற்ற மாநிலங்களிலே கடைப்பிடிக்கிற முறையை நீங்கள் கடைடபிடிக்க வேண்டும். எல்லோரும் வரலாம், எல்லோரும் போகலாம் என்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி அதனுடைய முக்கியத்துவத்தை இழந்துவிடுகிறது. கேரளாவிலே கூட நான் சொல்கிறேன், யாராவது ஒரு உறுப்பினர், ஒரு உறுப்பினரைப் பார்க்க வேண்டுமென்றால் 'கேட்'டிலே ரிசப்ஷன் இருக்கிறது. அங்கே உட்கார வைத்து அந்த மெம்பருக்கு போன் பண்ணி இந்தப் பெயர் உடையவர் உங்களைப் பார்க்க விரும்புகிறார் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். அதற்கு ரிசப்ஷன் ரூம் இருக்கிறது. அங்கே உட்கார வைக்கிறார்கள். உறுப்பினர் வந்து கீழே பார்த்துவிட்டுப் போகிறார். ரொம்ப முக்கியமானது என்று சொன்னால் அவரே வந்து அழைத்துக் கொண்டு பேசிவிட்டு அனுப்பி விடுகிறார்கள். இந்த முறை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே கூட வேண்டாமா ? அவர்கள் எல்லோரும்

வருகிறார்கள், எல்லோரும் போகிறார்கள்' வராண்டாவிலே படுக்கிறார்கள். இப்படி என்று சொன்னால் ரொம்ப மோச மாக இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற உங்களுக்கு அதி காரம் இல்லையா ? தயவு செய்து எல்லோருக்கும்

free accessibility to all in the Legislators' hostel

என்கிற முறையை நிச்சயம் மாற்றியாக வேண்டும். நான் சொல்கிறேன், இந்தியாவிலே வேறு எந்தச் சட்டமன்ற விடுதி யிலும் இப்படி இல்லை. ஒரு ஒழுங்கு வேண்டும் அந்த ஒழுங்கை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு மாறாக அங்கே காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தால், அதை சீர் செய்ய வேண்டுமென்று கேட்டு,

To refresh the mind of the Hon'ble Minister, who is amenable to the requests and demands of the hon'ble Members of the House, I would ike to repeat,

(குறுக்கீடு) புரியவில்லையா ? ஆகையினாலே, புரியும்படி சொல்கிறேன், இந்த ரூ. 35 ஐ. ரூ. 50 ஆக உயர்த்த வேண் டும். அப்புறம், பஸ் பாஸோடு, கம்பானியன் கூப்பிட்டுக் கொண்டு போக நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்று நினைக் கிறேன், அதைச் செய்ய வேண்டும், கம்பானியன் கொடுத் திருக்கிறேன், இரண்டாயிரம் ரூபாய் என்று சொல்கிறீர்கள். சட்டியிலே 2 பேருக்குச் சாப்பாடு இருக்கிறது. 3 பேரும் சாப்பிடலாம் என்று சொல்லிவிட்டு, சாப்பாடு அவ்வளவு தான் என்று சொன்னால் எப்படி ? இரண்டு பேருக்கு சாப்பாடு அனுப்பி இருக்கிறேன், 3 பேர் சாப்பிடுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை என்று சொல்கிறீர்கள், என்ன இது? ஆகையினாலே, 2.000 ரூபாய் என்பதே குறைந்த பட்சம். அது கூடக் குறைவுதான், அதை 3.000 ரூபாயாக ஆக்க வேண்டும்.

இந்த பென்ஷன் பற்றிச் சொன்னார்கள், நிதி அமைச்சர் வந்திருப்பதால் சொல்கிறேன், உடனடியாக அதை உயர்த்த வேண்டும், ரூ, 250 என்று வைத்து, சிலாப் சீஸ்டத்திலே. வருஷத்திற்கு ரூ, 50 என்று சொல்கிறார்களே, அப்படி கொடுக்க வேண்டும், பென்ஷனர்சுக்குக்கூட, மெடிகல் ஃபெசிலிட்டீஸ் கொடுக்க வேண்டும், பஸ் பாஸ் கொடுக்க வேண்டும், எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் ? ஆகவே. இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அப்ரோபிரியேஷன் பில்லிலே........

1979 ஏப்ரல் 24] [திரு. எம். ஏ. லத்தீப்]

(பிற்பகல் 1–30)

Appropriation will become appropriate only appropriate amount for the appropriate body which gives appropriate power to appropriate is given. They are the persons who gives power to the House to appropriate at the appropriate time.

THE HON. THIRU K. MANOHARAN: Sir, in the name of 'appropriation' the Hon'ble Member should not misappropriate.

THIRU M. A. LATHEEF: I do not want to misappropriate. This is the opportune time to appropriate. Only with this appropriate demand, it will become an appropriation. Do not change from the path to appropriate for the reasonable demand? Is it not so?

(The Hon'ble Members belonging to both sides thumped the desks.)

Therefore, the whole house has voted for it. What I say is this? I request the Hon'ble Finance Minister to accept them. It is his bounden duty to fulfil the desires—the reasonable desires—of the Hon'ble Members of the House.

THE HON. THIRU. K. MANOHARAN: This is an indirect way of corrupting the minds of the hon'ble Members of the House.

THIRU M. A. LATHEEF: I am not telling anything indirectly. I am telling this open House.

THE HON. THIRU. K. MANOHARAN: The Hon'ble Member is indirectly corrupting the minds of the Legislators!

THIRU M. A. LATHEEF: So, I have said what is in the minds of the Hon'ble Members. They have revealed the same by thumping their desks. Therefore, I have directly said that their direct demand has been totally accepted by the House. As such, I request the Hon'ble Finance Minister to accept them. It is his bounden duty under the Constitution and under the Laws to accept the demands of the Member. I also thank the Hon'ble Speaker for being generous towards me in giving more time. With these words, I conclude my speech.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(10) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

151. தேசிய வேலைவாய்ப்புப் பணியிலுள்ள 'காம்டிஸ்ட்' பணியை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பு எல்லைக்குள் கொண்டு வருவதன் பொருட்டு தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வணைக் கழக விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் நிர்வாகச் சீர் திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு M) 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8-ந் தேதியிடப்பெற்ற அரசாணை எண், 256-ல் வெளியான அறிவிப்பு.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*185. பொதுப்பணித் துறை (கட்டிடப் பிரிவு) பணிகள் பற்றிய ஆய்வுரை, 1978-79 (தமிழ், ஆங்கிலம்).

**186. கோரிக்கை எண். 43—சிறு சேமிப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்)

***187. 1972-73 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

***188. 1972-73 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

***189. 1973-74 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

1979 ஏப்ரல் 24]

***190, 1973–74 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்),

@191, மாண்புமிகு திரு, கி, மனோகரன். நிதி அமைச்சர், 1972–73 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகளைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

@192. மாண்புமிகு திரு, கி, மனோகரன். நிதி அமைச்சர் 1973–74 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகளைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

*20.3.1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
**21.3.1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
***23.3.1979 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றன.
@ 23.3.1979 அன்று உறுப்பினர்களுக்கு அவையில் வழங்கப்பெற்றன.

இணைப்பு I.

[..149ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண், 799-க்கான விடையைக் காண்க,]

தமிழ்நாடு சட்டப்பேரவைமுன் வைக்கப்படும் விவர அறிக்கை,

(திரு. வ. மு. சுப்பிரமணியன், எம். எல். ஏ., அவர்களின் வினா எண், 5,337 க்கான விடையைக் காண்க.)

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(2) இராமநாதபுரம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் ஆகும். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி நிவாரணத் திட்டத்தின்கீழ் 2,450 பனைத் தொழில் வல்லுநர்களுக்கு நிவாரணமளிக்க, ரூபாய் 22.08 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு இத்திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு 1977-78-ல் ரூபாய் 9·58 இலட்சம் மானியமாகவும், ரூபாய் 12·50 இலட்சம் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறவும் அனுமதித்துள்ளது :—

திட்டங்களின் விவரம் வருமாறு :—

	வங்கிக் கடன் உதவி (இலட்சத்தில்.)	அரசு மானியம் (இலட்சத்தில்.)
1. 1,000 பனைத் தொழில் வல்லுநர்களுக்கு தலா ரூபாய் 1,100 கடனாகவும், ரூபாய் 367 மானியமாகவும் (மர வாடகை)	11·00	3·67
2. பனைப்பாய் முடைவோர் 100 நபர்களுக்கு தலா ரூபாய் 150 கடனாகவும் ரூபாய் 50 மானியமாகவும்	1·50	0·50

1979 ஏப்ரல் 24]

திட்டங்களின் விபரம் வருமாறு—தொடர்ச்சி,

—	வங்கிக் கடன் உதவி (இலட்சத்தில்,)	அரசு மானியம் (இலட்சத்தில்.)
3. நிர்வாக மானியம் 36 சங்கங்களுக்குத் தலா ரூபாய் 2,690 வீதம்		0·87
4. பயிற்சி—		
(1) பனை ஓலைப் பயிற்சி நிலையங்கள் 10 (1 நிலையத்துக்கு ரூபாய் 8,100 வீதம்) 200 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க		0·81
(2) நவீன முறை பயிற்சி நிலையங்கள் 7. 140 பேர்களுக்கு பயிற்சி அளிக்க 1 நிலையத்துக்கு ரூபாய் 1,200 வீதம் ..		0·84
5. புதிய பனந்தோப்பு அமைத்தல் 5 இலட்சம் பனங்கொட்டைகள் நடுதல்		2·25
6. வாரக் கடன் பொறுப்பு நிதி		0·54
மொத்தம்	12·50	9·58

இதற்குண்டான மானியத் தொகையை தமிழக அரசு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கி உள்ளது.

இதைத் தவிர 1977–78 ஆம் ஆண்டில் கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ்நாடு மாநில பனை வெல்ல கூட்டுறவு இணையத்தின் மூலமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராம மக்களுக்குப் பனைத் தொழில் மூலம் வேலை வாய்ப்புக்கள் அளிக்க, பனைத் தொழில் வல்லுநர்களுக்கும், பாய், பெட்டி, முடைவோர்களுக்கும், தும்பு சேகரிப்பவர்களுக்கும், கிட்டங்கி கட்டுவதற்கும், பதநீர் விற்பனை செய்யவும் ரூபாய் 54,600 மானியமாகவும் ரூபாய் 6,25,000 கடனாகவும் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் அளிக்கப்பட்ட நிதி உதவி

யிலிருந்து வழங்கியுள்ளது. இதனால் 1,050 பனைத் தொழில் வல்லுநர்கள் பயன்பெறுவார்கள், இராமநாதபுரம், மதுரை ஆகிய இரு மாவட்டங்களுக்கும் ஒரு மாவட்ட சம்மேளனம் மதுரையில் இயங்குகிறது.

இணைப்பு II.

[..151ம் பக்கத்தில் உள்ள உடுக்குறியிட்ட வினா எண், 800-க்கான விடையைக் காண்க,]

(அ) ஆம்,

(ஆ) மத்திய அரசு பால் பெருக்குப் பகுதிகளில் அமுல் படுத்துவதற்கான பலவகைப்பட்ட பால் பெருக்குத் திட்டங்களை அங்கீகரித்துள்ளது. அவைகளில் சில புதிய திட்டங்காளகும். மற்றவை பழையனவற்றின் தொடர்ச்சியாகும். அத் திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

1, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நீலகிரி மாவட்டம்):

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1975-76 ஆம் ஆண்டு முதல் அமுல் செய்யப்பட்டு வருகிறது. வேறு பல திட்டங்களுக்குள் பால் பெருக்குத் திட்டத்திற்காக முதலில் ரூபாய் 84 இலட்சம் ஒதுக்கப்பட்டு, இப்பணி தமிழ்நாடு பால்வள நிறுவனத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பால் பெருக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் 70 பால் வழங்கும் சங்கங்கள் அமைத்தலும், 30,000 கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதும். 25,000 விவசாயிகளுக்கு பயனளிப்பதும் ஆகும்.

பல்வேறு பால் பெருக்கு திட்டங்களுக்காக 1978 ஜூலை மாத கடைசி வரை தமிழக அரசு ரூபாய் 67·96 இலட்சங்கள் அனுமதி அளித்தது, 66 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தேவையான சாதனங்கள் உடையனவாக அமைக்கப் பட்டன. போத்தகிரி, கூடலூர், மசினகுடி, நடுவட்டம் போன்ற இடங்களில் கால்நடை பராமரிப்பு நிலையங்கள் அமைத்துக் கால் நடை விவசாயிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளையும். செயற்கை முறை கருவூட்டலையும் அருகிலேயேயிருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரண்டு குளிரூட்டும் நிலையங்கள் கோத்தகிரியிலும். கூடலூரிலும் அமைக்கப்பட்டு வரு

1979 ஏப்ரல் 24]

கின்றன, 15,000 லிட்டர் பால் தேக்கம் செய்யக்கூடிய எஸ்.எஸ். டாங்க் ஒன்று ஊட்டி கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் பால் கேன்கள் வாங்கப்பட்டு, பாலை பல சங்கங்களிலிருந்து ஊட்டியிலுள்ள பால் பண்ணைக்கு அனுப்பும் வகையில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன.

முப்பத்து எட்டாயிரம் லிட்டர் பாலை கொண்டு செல்லக் கூடிய நான்கு பால் வாகனங்கள் ஊட்டியிலிருந்து ஈரோட்டிற்கும், சென்னைக்கும் பால் கொண்டு செல்ல உபயோகிக்கப்படுகின்றன. எட்டு ஊர்திகள் பல்வேறு பாகங்களிலுள்ள கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் அளிக்கவும், எட்டு பால் சேகரிக்கும் வாகனங்கள் பாலைக் கொண்டு செல்லவும் உபயோகப்படுகின்றன. சோதனைச் சாலைக்காக ஒரு கட்டிடம் கட்டப்பட்டும் மண்டல மேலாளரின் அலுவலகத்திற்காக வாங்கப்பட்டும் உள்ளன. பழைய சங்கங்கள் ஆனந்த் பாணி சங்கங்களாக மாற்றப்படுகின்றன.

மேற்சொன்ன துணைத் திட்டங்களைத் தொடர்ந்து செயல் படுத்தவும், தீவன உதவித் தொகைத் திட்டம், கன்று உதவித் தொகைத் திட்டம், உறைந்த விந்து திட்டம் போன்ற புதியத் திட்டங்களைச் செயல்படுத்தவும் 1978—79-ல் ரூபாய் 185·72 இலட்சங்களுக்கான செயல் திட்டங்கள் உள்ளன, அரசு ஆணை எண். 1377/விவசாயத்துறை, 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் அன்று ரூபாய் 41·809 இலட்சங்களை குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளன.

2, ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டம் (தருமபுரி மாவட்டம்).

மத்திய அரசு நிலம் மேம்பாடு, பயிர் வளர்ச்சி, கால்நடை பராமரிப்பு, பால் வளர்ச்சி போன்ற பல்வேறு திட்டங்களுக்கு ரூபாய் 80·53 இலட்சங்கள் வழங்கியுள்ளது. பால் வளர்ச்சித் திட்டத்திற்கு ரூபாய் 48·925 இலட்சங்கள் தருமபுரி மாவட்டத்திற்காக தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடம் தமிழ்நாடு அரசும் தருமபுரி மாவட்ட வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் திட்டங்களை அமுல்படுத்த வழங்கப்பட்டுள்ளது. அதற்கான நிதி 1978 ஜூலை மாதம் கிடைக்கப்பெற்றது. இத்திட்டங்கள் 1978 டிசம்பர் மாதத்திற்குள் செயல்படுத்தப்படும்.

1978 டிசம்பர் மாதத்திற்குள்ளாக 50 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் 9 பால் கேன்கள் தரப்படும். அதே சமயம் அதிகப்படியாகும் பாலைச்

சேகரம் செய்வதற்காக இரண்டு பால் குளிர்விக்கும் நிலையங்களின் திறனை 50,000 லிட்டர்களாக உயர்த்தப்படுகின்றன. உறைக்கப்பட்ட விந்துவினால் செயற்கை முறை கருவூட்டுதல் இம்மாவட்டத்தில் மற்ற பால் வளர்ச்சி திட்டங்களுடன் செயல் படுத்தவிருக்கிறது.

3. வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (தருமபுரி மாவட்டம்):

தருமபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வறட்சி பகுதித் திட்டத்தின் கீழ் 1977-78 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 16.27 இலட்சங்கள் அரசு ஆணை எண். 1989 விவசாயத் துறை 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் நாள் மூலம் வழங்கப்பட்டது. அந்த தொகை முழுவதும் பயன்படுத்தப் பட்டது. 75 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த மாவட்டத்தில் நிறுவப்பட்டு, அதற்கான தொழில் நுட்ப வசதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. பால் கேன்களும், பால் பரிசோதனைக் கருவிகளும் எல்லா பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் வழங்கப்பட்டன. 1978–79 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதற்காக ரூபாய 32.87 இலட்சங்கள் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

4. வறட்சிப் பாதித்த பகுதி மேம்பாட்டுத் திட்டம் (இராமநாதபுரம்):

1976-77 வருடாந்திர திட்டத்தில் இந்திய அரசாங்கம் இரமாநாதபுரம் ஜில்லாவில் வறட்சிப் பகுதிகளின் சீரமைப்புக்காக கால்நடைத் திட்டங்களை செயல்படுத்த ரூபாய் 16.81 இலட்சங்கள் ஒப்புதல் செய்துள்ளது. அதில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல் பால் வழங்கும் சங்கங்களுக்கு கேன் மற்றும் பால் பரிசோதனைச் செய்யும் பொருட்கள் வழங்குதல் ஆகிய பண்ணை சம்பந்தப்பட்டசெயல்களை நடைமுறைப்படுத்த தமிழ் நாடு பால்வள நிறுவனத்திற்கு அரசு ஆணை 641 வருவாய்த் துறை 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாள் மற்றும் 452 வருவாயத்துறை 1977 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ஆம் நாள் மூலம் ரூபாய் 1.89 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

அதில் கேன் மற்றும் பரிசோதனைக்கருவிகள் ரூபாய் 53,000-க்கு வாங்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து மானியமாக ஒதுக்கிய ரூபாய் 36,000 முழுமையாக செலவிடப்பட்டது' பரமக்குடியில் அமைக்கவிருக்கும் குளிரூட்டும் நிலையத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம், மேற்கண்ட அரசு ஆணைகள் படி (மீதமுள்ளது) போர்துமானதாக இல்லாததால், மீண்டும் அரசு ஆணை எண் 327 வேளாண்மைத் துறை 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்கள்

1979 ஏப்ரல் 24]

1 ஆம் நாள் மூலம் ஒப்புதல் செய்துள்ளது. ஆக, இரண்டு இலட்ச ரூபாய் செலவில் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் 2,000 லிட்டர் கொள்ளளவில் அமைக்கவும், மானாமதுரை பால் குளிரூட்டும் நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட பால் குளிரூட்டும் சாதனத்தையும், பரமக்குடியில் பொருத்துவதற்கான ஆக்கப் பணிகள் நடைமுறையில் இருந்து வருகின்றன.

மேற்படி திட்டத்தை 1977–78-ல் தொடர்ந்து செயலாற்ற அரசு அதன் உத்தரவு எண். 1998 வேளாண்மைத்துறை, 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் நாள் மூலம் ரூபாய் 88,000 பால்வள நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. இத்தொகை மூலம் கேன் மற்றும் பால் பரிசோதனைப் பொருட்கள் வாங்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

1978–79-க்காக அரசு, இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 5.925 இலட்சம் ஒதுக்க உத்தேசித்துள்ளது.

5. சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டம் (கன்று வளர்ப்புத் திட்டம்).—

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகள், மிகச்சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் வசமுள்ள கலப்பின கிடேரி பசுங்கன்றுகளை வளர்த்து உயர் ஜாதிப் பசுக்களாக்கி பால் வளத்தை பெருக்குவதுடன் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேற்குறிப்பிட்டவர்களுக்கு தொழில் நுட்ப உள்ளீடு மற்றும் பசுங்கன்று முதல் கன்று ஈனும் வரை மானியமும் அரசாங்க உதவியும் கிடைக்கிறது.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் தொழில் நுட்ப வசதிகள் மற்றும் பால் விற்பனை வசதிகள் அடங்கியுள்ளதால் அரசாங்கம் இத்திட்டத்தை இந்நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோவை மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 3 வருட காலத்தில் கன்று வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூபாய் 237.97 இலட்சம் நிதியுதவி அளிக்க இந்திய அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

இதன் மூலம் மேற்கூறிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், 5,000 சிறுவிவசாயிகள், மிகச்சிறு விவசாயிகள் மற்றும் நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்கள் என மொத்தம் 25,000 விவசாயிகள் பயன் பெறுவர்.

இதுவரைக்கும் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட விவரம் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

1976–77	5.00
1977–78	38.60
1978–79	12.35
மொத்தம் ..	55.98

மேலும், இத்திட்டத்தின் கீழ் இதுவரை 6,358 கலப்பினக் கன்றுகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

6. பால் பெருக்குத் திட்டம்.—1.

உணவு மற்றும் வேளாண்மை நிறுவன உதவியுடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்திய பால்பண்ணை நிறுவனம் உருவாக்கிய அமைப்பே பால் பெருக்கு திட்டமாகும். மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்த இம்மாநிலத்தில் தமிழ்நாடு பால்வள நிறுவனம் செயலாக்கம் மேற்கொண்டுள்ளது. இதற்காக எட்டு மாவட்டங்களான செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தருமபுரி, சேலம், கோவை, நீலகிரி மற்றும் மதுரை போன்ற இடங்களில் இந்திய பால் பண்ணை/தேசிய பால் பண்ணை/மேம்பாட்டு கழக உதவியுடன் செயல்படுத்த தமிழ்நாடு பால்வள நிறுவனம் முனைந்துள்ளது.

2. தமிழ்நாடு பால்வள நிறுவனம் இச்செயற்பாட்டுக்காக 1,463 பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களை பால் மிகுந்த பகுதிகளில் அமைத்தது. அவைகளை ஆனந்த் பாணி சங்கங்களாக முறைப்படி பாலின் தரத்தை ஆய்வு கொண்டு மேற்காணும் திட்டத்தை பாலின் தரத்தின் அடிப்படையில் செயல்படுத்துகிறது. மேற் குறித்த திட்ட செயல்பாட்டிற்கு இந்திய பால் பண்ணை நிறுவனம் முதல் முறையாக ரூபாய் 8.87 கோடிகளை ஒதுக்கியது. பின்னர் அதை ரூபாய் 11.49 கோடி என மாற்றி அமைத்தது. ஐந்து குளிரூட்டும் நிலையங்களை விரிவுப்படுத்துவதற்காகவும், மேலும் 1.362 கோடி ரூபாய்களை தர ஒத்துக் கொண்டுள்ளது. மேலும், இந்திய பால்பண்ணை நிறுவனம் கொள்கையளவில் மேலே ஒதுக்கப்பட்ட தொகையில் 2 சதவிகிதம் திட்ட அமைப்பு (project cell) ஏற்படுத்தவும் சேலத்தில்

1979 ஏப்ரல் 24]

ஒரு தன்னிறைவு பால் பண்ணையும், இரண்டு குளிரூட்டும் நிலையங்களையும் அமைப்பதற்கு ரூபாய் 305 இலட்சங்கள் கூடுதல் நிதி ஒதுக்க ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாறு தமிழ்நாட்டிற்கு மட்டும் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 16.5 கோடிகளாகும். இத்திட்டத்தை 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளுக்குள் முடிக்க கால ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளாக நீடிக்கச் செய்யப்பட்டது. பின்னர் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரை நீடிப்பு செய்ய இந்திய பால்வள நிறுவனம் கருதியுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் இந்திய பால் பண்ணை நிறுவனம்/தேசிய பால்பண்ணை மேம்பாட்டுக் கழகம் ஆகிய நிறுவனங்கள் சுமார் ரூபாய் 40 கோடியை தமிழ்நாட்டிற்கு ஒதுக்க முன் வந்துள்ளது.

7. தருமபுரி மாவட்டத்தில் பால்பொடி தயாரிக்கும் நிறுவனம்.

தருமபுரி மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டு திட்டம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 28 இலட்சத்தை தருமபுரியிலும் கிருஷ்ணகிரியிலும், இரண்டு குளிர்விக்கும் நிலையங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. தருமபுரியில் உள்ள குளிர்விக்கும் நிலையம் முன்னரே நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் பால் திறன் கொண்டதாய் செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரியில் குளிரூட்டு நிலையக் கட்டிடம் வேலை நடந்து வருகிறது. கிருஷ்ணகிரியில் ஒரு பால் பொடி தயாரிக்கும் நிறுவனம் ஏற்படுத்த இந்திய அரசை நிவாரண பாதிப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 1.75 கோடி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே இந்திய அரசு மேற்படி திட்டத்தின் கீழ் ரூபாய் 1.75 கோடி அளித்துள்ளது.

இணைப்பு—III

[180-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 794-க்கான விடையைக் காண்க.]

அலுவலரின் பெயர்.	பதவியின் பெயர்.	பயிற்சி பற்றிய விவரங்கள்.	பயிற்சியின் காலம்.	பயிற்சியைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பெற்ற நடவடிக்கைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1 திரு. ஏ. வெங்கட்ராமன்.	முன்னாள் வேளாண்மை இயக்குநர்.	அமெரிக்காவிலுள்ள ஜார்ஜ்டவுன் பல்கலைக் கழகத்தில் புகுமுக பட்டறைப் பயிற்சியில் சான்றிதழ் பெற்றுள்ளார். அமெரிக்காவிலுள்ள இல்லிணய்ஸ் பல்கலைக் கழகத்தில் இருந்து ''குழுத் தொடர்பு மற்றும் அறிதல்'' சம்பந்தமான கருத்தரங்கில் கலந்து அதற்கான சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளார். 10-வது சர்வதேச வேளாண்மைத் திட்டமிடுதல் மற்றும் மாதிரி நிலையத்திலும் வீட்டுப் பொருளாதார விரிவாக்கத்திலும் (நெதர்லாந்து) சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளார்.		இவர் 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ம் நாள் வரை வேளாண்மை இயக்குநராக இருந்தார். இவர் பெற்றுள்ள பலவிதமான பயிற்சிகளும் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் எல்லாத் திட்டங்களையும் நிர்வகிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப் பட்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

		அமெரிக்காவில் தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டத்திற்கான விரிவாக்கக் கல்வி பற்றிய திட்டத்தில் பங்கேற்று அதை முடித்ததற்கான சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளார்.		
2 திரு. பி. கே. இராதா காந்த்.	தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்.)	கொழும்புத் திட்டத்தின்கீழ் ஜப்பானில் வேளாண்மை இயந்திரத் தளவாட உற்பத்தி மற்றும் வேளாண்மை இயந்திரங்கள் முறைப்படுத்துதல் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	ஏப்ரல் 1963 முதல் செப்டம்பர் 1963 வரை.	இவர் நில வளமை மற்றும் பிற பாசனத் திட்டங்கள் ஆகியவற்றில் வேளாண்மை இயந்திரங்களைப் பயன்படுத்தும் திட்டங்களுக்குப் பொறுப்பாளராக இருந்தார். தற்போது வேளாண்மைத்துறை தலைமைப் பொறியாளராக உள்ளார்.
3 திரு. சி. சங்கர MBO நாராயணன்.	இணை வேளாண்மை இயக்குநர் (MBO).	அரசின் சார்பில் தொழில் நுட்ப கூட்டுறவு பணித் திட்டத்தின் கீழ் வேளாண்மை விரிவாக்கப் பயிற்சிப் பெறுவதற்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். அமெரிக்காவில் டென்னசி பல்கலைக் கழகத்தில் இருந்து வேளாண்மை விரிவாக்க விஞ்ஞானத்தில்முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.	ஆகஸ்டு 1960 முதல் செப்டம்பர் 1961 வரை.	கோவை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு வேளாண்மை விரிவாக்கம் பற்றி விரிவுரை செய்வதற்கு இவருடைய பணி பயன்படுத்தப்பட்டது. மேலும் அது தொடர்பாக தமிழ்நாடு வேளாண்மை உற்பத்திக் குழுவில் நிர்வாக இயக்குநராகவும் தற்போது வேளாண்மை இணை இயக்குநராகவும் அவருடைய பணி பயன்படுத்தப்படுறது.

அலுவலரின் பெயர்.	பதவியின் பெயர்.	பயிற்சி பற்றிய விபரங்கள்.	பயிற்சியின் காலம்.	பயிற்சியைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப் பெற்ற நடவடிக்கைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
4 திரு. சி. நாராயணன்.	இணை வேளாண்மை இயக்குநர் (விரிவாக்கம்).	1. மேற்கு ஜெர்மனியிலும் ஹாலந்திலும் வேளாண்மை இயல், விதை உற்பத்தி, பரிசோதனை மற்றும் விதை சான்றிதழ் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	ஒரு வருடம்.	பயிற்சி பூர்த்தி செய்தபின் நீலகிரி மாவட்டத்தில் உருளைக் கிழங்கு அபிவிருத்தியில் விசேஷ கவனம் செலுத்துவதற்காகவும், காய்கறி விதை உற்பத்தி வழங்குதல் ஆகியவற்றிற்கு இவருடைய பணி பயன்படுத்தப்பட்டது.
		2. பிலிப்பைன்ஸில் உள்ள லகுனாவில் இரண்டாவது வட்டாரப் பயிற்சித் திட்டத்தில் வேளாண்மை நிர்வாகத்தில் பயிற்சி பெற்றுள்ளார்.	14 நவம்பர் முதல் டிசம்பர் 10, 1977 வரை.	இவருடைய பணியானது தலைமை இடத்திலிருந்து எல்லாவிதமான திட்டம் மற்றும் வளர்ச்சிக்கு பயன்படுத்துவதோடு இவர் உரம் மற்றும் பயிர் பாதுகாப்புத் திட்டத்திற்கும் பொறுப்பாக உள்ளார்.
5 திரு. என். ராமதாஸ்.	மாவட்ட வேளாண்மை அதிகாரி (விதைகள்).	மேற்கு ஜெர்மனியில் பண்ணை நிர்வாகம் மற்றும் காய்கறி விதை உற்பத்தி ஆகியவற்றில் முன்னேற்றப் பயிற்சி பெற்றுள்ளார்.	ஜனவரி 5 முதல் டிசம்பர் 20, 1970.	பயிற்சிக்குப்பின் இவர் உதவி தோட்டக் கலைஞராகப் பணிபுரிந்து காய்கறி விதை உற்பத்திப் பொறுப்பாளராக இருந்தார். தற்போது இவருடைய பயிற்சிக்குப் பயன் உள்ளதான அரசு விதைக் கழகத்தின் பொறுப்பாளராக உள்ளார்.
5 திரு. கே. எம். இராமாநுஜம்.	துணை வேளாண்மை இயக்குநர்.	அமெரிக்காவில் வேளாண்மை விரிவாக்கப் பொதுத் தொடர்பு கருத்தரங்கு, முதியோர் கல்வி வேளாண்மை தகவல்	15 மாதம்.	பயிற்சிக்குப்பின் அவர் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் பணி வேறு வழிகளில் தேவைப்படும்

		மற்றும் உணவு பொது மக்கள் கருத்தரங்கு ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.		வரை அவர் பயிற்சி பெற்ற திட்டத்தில் அவர்கள் பணி பயன்படுத்தப்பட்டது.
7 திரு. எஸ். கோபாலன்.	தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையகத்தில் தொழில் நுட்ப இயக்குநராக இருக்கிறார்.	அமெரிக்காவில் தானியங்களை பதப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் சம்பந்தமாக பட்ட மேற்படிப்பு பயிற்சி பெற்றுள்ளார்.	ஒரு வருடம்.	பயிற்சிக்குப் பின் அவர் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன் படுத்தப்பட்டது.
8 திரு. கே. பெருமாள்.	தற்போது துணை வேளாண்மை இயக்குநர்.	அமெரிக்க உதவி மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் பூச்சி இயல், காளான் இயல், சேமிப்பு மற்றும் இளைஞர் நடவடிக்கைகள் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	13 மாதங்கள்.	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும்வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன் படுத்தப்பட்டது.
9 திரு. எம்.சி. அப்பையன்.	தோட்டக் கலைஞர்.	கானாவில் புறாம் டாபோ, தேகோரோடி ஆகிய இடங்களில் கோகோ பயிர் செய்வது சம்பந்தமாகப் பயிற்சி பெற்றுள்ளார்.	6 மாதங்கள்.	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும்வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.

அலுவலரின் பெயர்.	பதவியின் பெயர்.	பயிற்சி பற்றிய விவரங்கள்.	பயிற்சியின் காலம்.	பயிற்சியைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பெற்ற நடவடிக்கைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
10 திரு. என். பினாக பாணி.	தற்பபாது கூடுதல் வேளாண்மை இயக்குநர் (பருத்தி).	ஜப்பானில் விவசாயிகள் பயிற்சி மற்றும் அடிப் படைக் கல்வி ஆகியவற் றில் பயிற்சி பெற்றுள் ளார்.	3 மாதங்கள்.	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன் படுத்தப்பட்டது.
11 திரு. ஏ. எம். மகபூப் அலிகான்.	உதவி தாவர அறிஞர்.	ஜெர்மனியில் தீவனம் மற் றும் உணவுப் பெருக்கம் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	12 மாதங்கள்.	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன் படுத்தப்பட்டது.
12 திரு கே. முத்துசாமி.	தற்போது இணை வேளாண்மை இயக்குநர்.	கொழும்புத் திட்டத்தின்கீழ் ஆஸ்திரேலியாவில் சர்வதேச பயிற்சித் திட்டத்தில் விதைப் பெருக்கு பற்றிய சான்றித ழில் பயிற்சி பெற்றுள்ளார்.	12 வாரங்கள்.	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன் படுத்தப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

13. திரு எஸ். சவடமுத்து.	தற்போது இணை வேளாண்மை இயக்குநர் (பொறியியல்).	அமெரிக்காவில் மண்வளப் பாதுகாப்பு வேளாண்மை நீர்ப்பாசனப் பிரச்சினைகள் மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	6 மாதங்கள்.	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
14. திரு ஆர். குப்புராஜ்.	கோட்டப் பொறியாளர்.	அமெரிக்காவில் டர்குவில் வேளாண்மை இயந்திர வளர்ச்சியில் பயிற்சி பெற்றுள்ளார்.	5 மாதங்கள்.	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
15. திரு ஜே. வில்லியம்பால்	துணை வேளாண்மை இயக்குநர், தூடியலூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோவை.	அமெரிக்காவில் வெளிநாட்டு தொண்டர் அணி பயிற்சி பெற்றுள்ளார்.	3 மாதங்கள்	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
16. திரு வி. துரைராஜ் ..	கோட்டப் பொறியாளர்.	அமெரிக்காவில் மண் மற்றும் நீர் மேலாண்மையில் பயிற்சி பெற்றுள்ளார்.	3 மாதங்கள்	பயிற்சிக்குப் பின் அவர்களின் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அலுவலரின் பெயர்.	பதவியின் பெயர்.	பயிற்சி பற்றிய விவரங்கள்.	பயிற்சியின் காலம்.	பயிற்சியைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பெற்ற நடவடிக்கைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
			மாதங்கள்.	
17. திரு. எஸ். விஜயராகவன்	உதவி பூச்சி இயல் நிபுணர்.	ஜெர்மனியில் பூச்சியியல் விஷம் பற்றிய மற்றும் மித சீதோஷ்ண பூச்சிகள் சம்பந்தமாகப் பயிற்சி பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப் பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
18. திரு. கே. கே. மதன்.	துணை வேளாண்மை அலுவலர்.	மேற்கு ஜெர்மனியில் மண் மற்றும் பயிர் சோதனை நுட்பத்தோடு ஜெர்மன் மொழிப் பயிற்சியும் பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப் பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
19. திரு. எம். ஏ. ஹிரியன்	உதவி தோட்டக் கலைஞர்.	மேற்கு ஜெர்மனியில் மலர்களை சிப்பம் செய்து ஏற்றுமதி செய்வது பற்றியும் ஜெர்மனி மொழிப் பயிற்சியும் பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப்பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

20. திரு. பி. இராமன் ..	துணை வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்).	மேற்கு ஜெர்மனியில் பண்ணை மேலாண்மை மற்றும் ஜெர்மன் மொழி பயிற்சி பெற்றுள்ளார்.	12மாதங்கள்	பயிற்சிக்குப் பின்னர் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது, நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
21. திரு. எம். ஜெயராமன்	உதவி வேளாண்மை வேதியியல் அறிஞர்.	நெதர்லாண்டில் உள்ள சர்வதேச நிறுவனத்தில் வான வெளி நில அளவை மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றில் முன்னேற்றப் பயிற்சி பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப் பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் பணி வேறுவழிகளில் தேவைபடும் வரை அவர் பயிற்சி பெற்ற திட்டத்தில் அவர்களின் பணிபயன்படுத்தப் பட்டது.
22 திரு. பி. நிக்கோலஸ்	உதவி வேளாண்மைப் பொறியாளர்.	ஜெர்மனியில் F.R.G. பயிற்சி பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப் பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
23 திரு. மகாலிங்கம் சஞ்சையா.	துணை வேளாண்மை அலுவலர்.	குளிர்பதன மேலாண்மை நுட்பம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் முன்னேற்றப் பயிற்சி பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப் பின் அவர் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் பணி வேறு வழிகளில் தேவைபடும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப் பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அலுவலரின் பெயர்.	பதவியின் பெயர்.	பயிற்சி பற்றிய விவரங்கள்.	பயிற்சியின் காலம்.	பயிற்சியைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பெற்ற நடவடிக்கைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
			மாதங்கள்.	
24. திரு. பு. அரசமணி	துணை வேளாண்மை இயக்குநர்.	பிலிப்பைன்சிலும் கொரியாவிலும் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் மற்றும் உணவு வேளாண்மை நிறுவனம் ஆகிய திட்டங்களின் கீழ் பயிற்சி பெற்றுள்ளார்.	2	பயிற்சிக்குப் பின் அவர் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப் பட்டது.
25. திரு டி. இராமசாமி	கோட்டப் பொறியாளர்.	ஜப்பானில் வேளாண்மை நிலம் மற்றும் நீர்ப் பெருக்கம் சம்பந்தமாக பயிற்சி பெற்றுள்ளார்.	2	பயிற்சிக்குப் பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறுவழிகளில்தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத்திட்டத்தில் அவர்களின்பணி பயன்படுத்தப் பட்டது.
26. திரு டி.எஸ். பெல்லான்	துணை வேளாண்மை அலுவலர்.	மேற்கு ஜெர்மனியில் வேளாண்மை விரிவாக்க நுட்பம் மற்றும் உருளைக் கிழங்கு விதை சான்றிதழ் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	9	பயிற்சிக்குப் பின் அவர் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின்பணி பயன்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Name	Post	Training	Months	Remarks
27. திரு எஸ். பொன்னையா	துணை வேளாண்மை அலுவலர்.	மேற்கு ஜெர்மனியில் பயிர் நோய் இயல் மற்றும் கிருமி இயல், பயிர் பாதுகாப்பு ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	9	பயிற்சிக்குப் பின் அவர் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறுவழிகளில் தேவைப்படும் வரை அவர்கள் பயிற்சி பெற்றத்திட்டத்தில்அவர்கள் பணி பயன்படுத்தப்பட்டது.
28. திரு. ஆர். இராம கிருஷ்ணன்.	துணை வேளாண்மை அலுவலர்.	மேற்குஜெர்மனியில் பண்ணை மேலாண்மை பயிர் பண்ணை மற்றும் விதை சான்றிதழ் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப் பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும் வரை அவர் பயிற்ஞ பெற்றத் திட்டத்தில் அவர்களின பணி பயன்படுத்தப்பட்டது.
29. திரு ஆர். கேசவன்..	துணை வேளாண்மை இயக்குநர்.	மேற்கு ஜெர்மனியில் விதை பெருக்கு மற்றும் விதை சான்றிதழ் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப் பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாக காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளில் தேவைப்படும்வரை அவர் பயிற்சி பெற்றத்திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
30. திரு என். இராமதாஸ்	உதவி பயிர் நோயியல் நிபுணர், திட்ட அலுவலர் (நீலகிரி வேளாண்மை வளர்ச்சி திட்டம்), ஊட்டி.	மேற்கு ஜெர்மனியில் பயிர் கிருமி இயல் பற்றியும் சிறப்பாக நுண்ணிய வைரஸ் நோய் கண்டுபிடிப்புப் பற்றியும் பயிற்சி பெற்றுள்ளார்.	9	பயிற்சிக்குப் பின் அவர்கள் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறு வழிகளிள் தேவைப் படும் வரை அவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்ககன் பணி பயன்படுத்தப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

அலுவலரின் பெயர்.	யதவியின் பெயர்.	பயிற்சி பற்றிய விவரங்க்ள்.	பயிற்சியின் காலம்.	பயிற்சியைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பெற்ற நடவடிக்கைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
			மாதங்கள்	
31, திரு எம். பாலசுப்பிரமணியன்.	துணை வேளாண்மை அலுவலர் 0/0 திட்ட அலுவலர் (நீலகிரி வேளாண்மை வளர்ச்சித் திட்டம்) ஊட்டி.	மேற்கு ஜெர்மனியில் உர உற்பத்தி, சிக்கனமாகப் பயன்படுத்துதல் உற்பத்தி அதிகப்படுத்துதல் மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.	12	பயிற்சிக்குப் பின்அவர்கள்பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர்களின் பணி வேறுவழிகளில்தேவைப்படும் வரைஅவர் பயிற்சி பெற்றத் திட்டத்தில் அவர்களின் பணி பயன்படுத்தப்பட்டது.
32. திரு. ஓ.எஸ். சுசீந்திரன்	உதவிப் பொறியாளர், வேளான்மைப் பொறியியல் c/o திட்ட அலுவலர், (நீலகிரி வேளாண்மை (வளர்ச்சித்திட்டம்) ஊட்டி.	மேற்கு ஜெர்மனியில் இலுவை இயந்திரம் மற்றும் அதுவோடு சம்பந்தப்பட்ட இயந்திரங்களைப் பழுது பார்த்தல், பராமரித்தல் ஆகியவற்றோடு ஜெர்மன் மொழிப் பயிற்சியும் பெற்றுள்ளார்.	9 மாதங்கள்	பயிற்சிக் குப்பின் அவர் பதவி உயர்வு பெறும் வரையிலோ அல்லது நிர்வாகக் காரணங்களினால் அவர் பணி வேறு வழிகளில் தேவைப்ப்டும் வரை அவர் பயிற்சி பெற்றுத் திட்டத்தில் அவர் பணி பயன் படுத்தப்பட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS